# நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள்

(அமெரிக்க நூலக வரலாறு)

அ. திருமலைமுத்துசுவாமி
M.A., M. Litt., B.T., D. Lib.
நூலகவியல் விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1

முதற் பதிப்பு—1967.

அருணாசலம் திருமலைமுத்துசுவாமி (1928).
(c) அ. திருமலைமுத்துசுவாமி.

2v73'N6
N67

விலை ரூ. 4-50

மங்கை வெளியீடு-6.

MEENAKSHI PUTHAKA NILAYAM
0, West Tower St., Madurai-1.

அச்சிட்டோர்:
ஈஸ்வரி பிரிண்டர்ஸ், சென்னை-14.



சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்

**டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார்**

## கல்வி மேதைக்குக் காணிக்கை

கல்வியெனும் செல்வத்தை இந்த நாட்டில்
கணக்கின்றி வழங்குவதால் அகிலமெங்கும்
[illegible]று பெரும்புகழைப் பெற்ற நந்தம்
ஏற்றமிகு திருநகராம் சென்னை தந்த
பல்கலைகள் பயிலுகின்ற கழகம் தன்னைப்
பாங்குறவே ஆட்சிசெய்யும் ஆற்றல் மிக்க
நல்லவராம் துணைவேந்தர் இலக்குமண
சாமியென்னும் சான்றோரைப் போற்றுகின்றேன்.

பெருமைமிக்க அரசியலில் அறிஞர்; மக்கள்
பிணிதீர்க்கும் மருத்துவத்தில் கலைஞர்; செய்த
அரும்பெரும் தொண்டுகளால் மக்கள் நெஞ்சில்
அரசோச்சும் பண்பாளர்; தொடர்ந்து அன்னார்
திருப்பெறும் வெள்ளிவிழாத் தலைவ ராகத்
திகழ்கின்றார் துணைவேந்தர் பதவிதன்னில்.
பெருமைமிக்க நல்லறிஞர் இவரைப் போலே
பாரினிலே வேறெவரும் இல்லை! இல்லை!

பெருமைதனைப் பெற்றிடவே எண்ணி மாந்தர்
பட்டங்கள் பலபெறவே விழைவார்; ஆனால்
பெருமைமிக்க பட்டங்கள் எல்லாம் நல்ல
பெருமகனார் இவரடியைத் தேடிவந்து
பெருமைமிகப் பெற்றிடுதல் கண்டோம்; தூயர்
பெருமைதனைக் கண்டுமிக மகிழ்ந்து அன்னார்
திருவடிக்குக் காணிக்கையாய் எளியேன் செய்த
சிறுநூலைப் படைக்கின்றேன்; சான்றோர் வாழ்க!

அ. திருமலைமுத்துசுவாமி

# நூலைப்பற்றி

'நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள்' என்னும் இந்நூல் எனது அமெரிக்கக் குடியரசுப் பிரயாண அனுபவங்களைப் பற்றிக் கூறுவதோடு அமெரிக்க நூலக வரலாற்றினையும் சிறப்பாக, விரிவாக எடுத்துக் கூறுகின்றது. 1965-ஆம் ஆண்டு அமெரிக்க அரசாங்க அழைப்பின் பேரில் அந்நாட்டிற்குச் செல்வதற்கு உரிய வாய்ப்பைப் பெற்று அங்கு சென்றிருந்தகால், நான் பார்த்தவற்றை, கேட்டவற்றை, அறிந்தவற்றை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது. நான் அங்குப் பலரைச் சந்தித்தேன். சிறப்பாக, பேராசிரியர் லுபெட்ஸ்கி (*Lubetzky*), டாக்டர். வாஸ்பர் (*Vosper*), டாக்டர் பவல் (*Powell*), டாக்டர் சுவாங் (*Swank*), டாக்டர் ஆஷைம் (*Asheim*) முதலிய தலைசிறந்த நூலகவியல் அறிஞர்களையும் ஏனைய நூலகர்களையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றுப் பெரிதும் மகிழ்ந்தேன். அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் அவர்களது நாட்டைப் பற்றியும், அவர்களது நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றியும் நான் பெரிதும் அறிந்து கொள்வதற்குத் துணை புரிந்தனர். சில நல்ல நூல்களையும் எனக்கு வழங்கினர். எனவே, அவர்களுக்கும் அவர்களைக் காணுவதற்குரிய பேற்றினைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த அமெரிக்க அரசாங்கத்திற்கும் நான் என்றென்றும் கடப்பாடுடையேன்.

இந்நூலில் காணுகின்ற பன்னிரண்டு கட்டுரைகளில் ஒரு சில ஏற்கெனவே, நூலகம், நித்திலக் குவியல் என்னும் மாத இதழ்களில் வெளிவந்தனவாகும். அவற்றை வெளியிட்டு உதவிய அவ்விதழாசிரியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்நூல் உருவாகுங்கால் எனக்கு உறுதுணையாக விளங்கிய தம்பி திரு. இரா. நடராசன் *M. A.* (துணையாசிரியர், தமிழ்க் கலைக் களஞ்சியம்) அவர்களுக்கும், சில கருத்துரைகள் வழங்கியும் உற்சாகமூட்டியும் ஊக்கமளித்த எனது பேராசிரியர் டாக்டர் டி. பி. கிருஷ்ணராவ் M. *A.*, M. Sc., *Ph. D.* (நூலகவியல் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை) அவர்களுக்கும், கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், பெற்ற அனுபவங்களை நூலாக எழுதி வெளியிடுவதற்கும் அனுமதி வழங்கிய சென்னைப் பல்கலைக்

கழக ஆட்சியாளர்க்கும், சிறப்பாக அதன் துணைவேந்தர், மருத்துவ விற்பன்னர், கல்விப் பேரறிஞர், அரசியல் மாமேதை டாக்டர். ஏ. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்களுக்கும் நான் எனது இதயங் கனிந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன். மேலும் இந்நூல் நல்ல முறையில் வெளிவருவதற்குத் துணைபுரிந்த எனது நண்பர்கள் திரு. கண. முத்தையா, திரு. செல்லப்பா ஆகியவர்களுக்கு என் நன்றி உரியது.

இந்நூலின் இறுதியில் காணுகின்ற நூலகவியல் சொற்பட்டி, நான் இதுவரை எழுதிவந்த கட்டுரைகளிலும் நூல்களிலும் பயன்படுத்தப்பட்ட நூலகவியற் சொற்களைக் கொண்டிலங்குகின்றது. என் வழியிலே நின்று நூலகவியலைத் தமிழ் மொழியிலே ஆக்கித் தருவதற்கு விரும்புகின்ற நூலகவியல் துறையினர்க்கு இது நன்கு பயன்படும் என்று கருதி, இதனைத் தொகுத்துத் தந்துள்ளேன். இச்சொற்களைப் பற்றி ஏதேனும் திருத்தம் இருப்பின் எனக்கு அதனை அறிவிப்பின் நான் பெரிதும் மகிழ்வேன்.

இந்நூலைப்பற்றி மூன்று பெரியார்கள் தங்களது கருத்துமணிகளைத் தந்துள்ளனர். அவர்களிலே ஒருவர் தமிழக அரசின் கல்வி—தொழில்துறை அமைச்சரும், மக்களால் நாவலர் என்றும் நடமாடும் நூலகம் என்றும், போற்றப்படுகின்றவருமாகிய மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் M. A., ஆவார்கள். இரண்டாமவர் நூலகவியலுக்காகவே உயிர் வாழ்கின்ற உலகப் பேரறிஞர், தேசிய நூலகவியல் ஆராய்ச்சிப் பேராசிரியர் டாக்டர் சி. ரா. ரங்கநாதன் M. A., L T., D. Litt., F. L. A., ஆவார்கள். மூன்றாவது பெரியார் என் நலனில் பெரிதும் அக்கறை காட்டும் எனது பேராசிரியரும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமாகிய வித்துவான் அன்பு கணபதி ஆவார்கள். இம்மூவர்க்கும் நான் என்றென்றும் கடப்பாடுடையேன்.

| | |
|---|---|
| 8-4-67,<br>நூலகவியல் துறை,<br>சென்னைப் பல்கலைக்கழகம்,<br>சென்னை-5. | அ. திருமலைமுத்துசுவாமி |

# அணிந்துரை

**இரா. நெடுஞ்செழியன் M.A.,**
கல்வி - தொழில் அமைச்சர்,
தமிழக அரசு.

சென்னை,
8-4-'67.

"நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள்" என்னும் இந்நூல், நூற்றிருபது மணித் துளிகளில் நம்மை அமெரிக்க நாட்டிற்கு அழைத்துச் சென்று அங்குள்ள நூலகங்களின் அருமைகளையும், பெருமைகளையும், சிறப்புக்களையும், செம்மைகளையும், தனித் தன்மைகளையும், பயன் வகைகளையும் நமக்குக் காட்டி, அமெரிக்க மக்களின் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள் ஆகியவற்றையும் நமக்கு உணர்த்திவிட்டு மீண்டும் அழைத்துக்கொண்டு வந்து இங்கு சேர்த்து விடுவதைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூலகவியல் துறையில் பணியாற்றும் திரு. அ. திருமலைமுத்துசுவாமி அவர்கள் அமெரிக்க அரசாங்க அழைப்பின் பேரில் அமெரிக்க நாடு சென்று அங்குள்ள நூலகங்களின் இயல்புகளையெல்லாம் அறிந்து, அவற்றோடு அங்கு வாழ்கின்ற மக்களின் அகங்களையெல்லாம் உணர்ந்து, தாம் பெற்ற பட்டறிவின் துணைகொண்டு இந்த நூலைச் சிறப்பாக உருவாக்கித் தந்துள்ளார். மிக எளிய, இனிய, அழகிய, நல்ல தமிழில் இந்நூல் எழுதப்பட்டிருப்பது கருத்தைப் பெரிதும் கவருவதாகும்.

தமிழகத்தில் ஊர்தோறும், நகரந்தோறும் நூலகங்களை எழுப்ப வேண்டும் என்ற உணர்வு தோன்றியிருக்கின்ற இந்நாளில், அந்த நோக்கத்தைச் சிறப்பாகவும், செம்மையாகவும், நிறைவேற்றி வைக்க இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது திண்ணம். இந்நூலின் பயனைப் பெற்றுத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் மேம்பாடு அடைவார்களாக!

**இரா. நெடுஞ்செழியன்**

# வாழ்த்துரை

**அன்பு கணபதி,**
பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி.

சென்னை,
**31-3-67.**

நம் நாட்டில் நூலகத்துறை அண்மைக் காலத்தில் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளது என்றாலும் முழு நிறைவு பெற்றுள்ளதாகச் சொல்ல இயலாது.

அமெரிக்காவின் அழைப்பினைப் பெற்று, அந் நாடு சென்று வந்த இந்நூலாசிரியரின் அனுபவவுரைகளைப் படித்துப் பார்க்கும்போது, நாம் இன்னும் இத்துறையில் எவ்வளவு முன்னேற வேண்டியிருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது.

அழைப்பு வந்தது என்பது தொடங்கிப் பிரயாண அனுபவங்கள் என்பது முடியப் பன்னிரண்டு கட்டுரைகளில் அமெரிக்க நாட்டின் தலைசிறந்த நூலகங்கள், குழந்தை நூலகங்கள், பள்ளி நூலகங்கள், சிறப்பு நூலகங்கள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் நுட்பமாகவும் விளக்கமாகவும் எழுதியுள்ளார்.

கல்விக்கும் நூலகங்களுக்கும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாதது; மிகவும் நெருங்கியது. 'கல்வியில் எந்த ஒரு புதியமுறை தோன்றினாலும், முன்னேற்றம் ஏற்பட்டாலும் அதற்கான வசதிகளை உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டியது நூலகங்களின் முதற் கடமையாகிறது.

நூலக அமைப்பு முறையில் நாம் பின்பற்றி வரும் பழைய முறையினைக் கைவிட்டுக் காலத்துக்கேற்றாற் போல நவீன 'பெரும் பொருட் பிரிவு அமைப்பு முறை' யினைப் பின்பற்றுவது சிறந்தது என்பதைத் தெளிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

நூலகங்களுக்கென நியமிக்கப் பெறும் நூலகர் களும், உயர் நூலாக அதிகாரிகளும் நூலகவியலில் பயிற்சி பெற்றோராக இருக்க வேண்டுவதன் இன்றி யமையாமையை இவர் நன்கு வலியுறுத்தியுள்ளார். நூலக ஊழியர்களின் ஊதியம்-பள்ளியானாலும், கல்லூரி யானாலும் அல்லது பொது நூலகமானாலும்-இன்று எவ் வளவு குறைவாக உள்ளது என்பதைக் காரண காரியங் களுடன் எடுத்து விளக்கியுள்ளார்.

தமிழில் கலைச் சொற்கள் எந்த அளவு பெருகி யுள்ளன என்பதற்கும், ஆட்சியில் கொண்டுவர முடியும் என்பதற்கும் எடுத்துக்காட்டாக நூல் முழுதும் ஆசிரி யர் கையாண்டுள்ள அழகிய தமிழ் நடை விளங்கு கிறது. தமிழில் கலைச் சொற்கள் இல்லை என்பார்க்கு விடை யாக நூலின் இறுதியில் ஆசிரியர் 'நூலகவியற் சொற்பட்டி' ஒன்று அமைத்துத் தந்துள்ளார்.

ஆசிரியர் திரு. அ. திருமலைமுத்துசுவாமி அவர்கள் பண்பட்ட தமிழ்க் குடும்பத்தில் வந்தவர். தமிழை முறையே பயின்று உயர்பட்டம் பெற்றவர். நூலகவியல் பயிற்சியொடு பட்டமும் பெற்றவர். நீண்ட பல ஆண்டு கள் கல்லூரி நூலகராகவும், பல்கலைக்கழக நூலகவியல் ஆசிரியராகவும் இருந்தவர்; இருப்பவர். சிறந்த பேச் சாளர்; நல்ல எழுத்தாளர்; அரிய செயலாளர். இவ ருடைய பட்டறிவால் பெற்ற பயனும் தொண்டும் நாட் டுக்குப் பெரிதும் பயன்பெற வேண்டும். நூலக வளர்ச்சி

யில் கருத்துள்ளார் அனைவர்க்கும் இந்நூல் பெருந் துணை செய்யும்.

இந்நூலைப் படித்து முடித்தவுடன் எனக்குத் தோன்றியன: பொது நூலக வளர்ச்சிக்குரிய தொடக்கப் பணிகள் நம் தமிழகத்தில் நல்ல வகையில் செய்யப் பெற்றுள்ளன. அதாவது நிலம் நன்கு பண்படுத்தப் பெற்றுள்ளது; வித்தே இடவேண்டும். தமிழக ஆட்சி யினர் பொது நூலகத்திற்கு எனத் தனித்துறை ஒன்று அமைப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்; அமைக்க வேண்டுமென விரும்புகிறேன். இது, எனது அன்பு வேண்டுகோளுமாகும்.

**அன்பு கணபதி**

# சிறப்புரை

டாக்டர் சி. ரா. ரங்கனாதன்
*M. A., L. T., D. Litt., F. L A.*
தேசிய நூலகவியல் ஆராய்ச்சிப் பேராசிரியர்.

பெங்களூர்,
27-3-67.

1. இந்த நூலின் மூலம்

உத்தம ஞானி இராமகிருஷ்ணர் முதல் படிப்பில்லாத பாமரர் வரை, ஒவ்வொரு மனிதனும் தான் கண்ட தத்துவங்களையும், அதிசயங்களையும், பிறர்க்குச் சொல்லி அனுபவிப்பதே மனித இயற்கை. இந்த நூல் அந்த வழியில் எழுதப்பட்டுள்ளது. இந்த இயற்கை முறையில் இந்த நூலின் ஆசிரியர் சிற்சில கூட்டங்களில் தான் அமெரிக்காவில் கண்ட நூலக அதிசயங்களைப் பற்றி உரை ஆற்றினார். தமிழ் மக்கள் எல்லோருக்கும் உதவும்படி, அச்சொற்பொழிவுகளுடன் இன்னும் சில விஷயங்களைச் சேர்த்து, இந்த நூலை இயற்றியுள்ளார். இதில் 12 அத்தியாயங்கள் உள்ளன. அவற்றில் ஏழு அத்தியாயங்களில் நூலின் ஆசிரியர் நேரில் கண்ட அமெரிக்க நூலகங்களை விவரிக்கிறார்.

2. அமெரிக்க நூலகங்களின் விவரம்

குழந்தை நூலகங்கள் முதல் முதியோர் நூலகங்கள் வரை, பள்ளி நூலகங்கள் முதல் பல்கலைக் கழக நூலகங்கள் வரை, பாமர மக்கள் நூலகங்கள் முதல், தனித் தனி அறிவு இயலிலும், தொழில் முறையிலும், நுட்ப ஆராய்ச்சி செய்யும் நிபுணர்களுக்கு உதவும் நிபுணர் நூலகங்கள் வரை பலவித நூலகங்களின் சேவை முறைகள், ஐந்து அத்தியாயங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. ஒரு அத்தியாயத்

தில் சில புகழ்பெற்ற நூலகங்களின் விவரங்கள் உரைக்கப் பட்டுள்ளன.

3. அமெரிக்க நூலகக் கழகம்

அமெரிக்க நூலகக் கழகத்தின் வர்ணனை மற்றொரு அத்தியாயத்தில் அமைந்துள்ளது. சென்னை நூலகக் கழக மும் ஓங்கி, வளர்ந்து. நூலகங்களுக்கும் நூலகர்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்பது இந்த நூலின் ஆசிரிய ருடைய விருப்பம். இது நல்ல விருப்பம். அமெரிக்க நாட் டில் உள்ள நூலகர்கள் எல்லோரும் அமெரிக்க நூலகக் கழகத்தின் உறுப்பினர்கள். நான் 1950-ஆம் ஆண்டில், அந்தக் கழகத்தின் ஆண்டுக் கூட்டத்தில் சொற் பொழிவு செய்ய ஏற்பட்டது. கூட்டத்திற்கு வந்த அங் கத்தினர்கள் சுமார் 10,000. அதுபோலவே, சென்னை நூலகக் கழகமும் செவ்வனே சேவை செய்வதற்கு, தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு நூலகரும், ஒவ்வொரு நூலக மும், அதன் உறுப்பினராதல் இன்றியமையாததாகும்.

4. நம் நாட்டு நூலக முறைகள்:

நம் நாட்டில் நூலக முறைகள் எப்படி இருக்க வேண் டும் என்ற கருத்தை இந்த நூலாசிரியர் ஓர் அத்தியாயத் தில் வெளியிடுகிறார். அவை அனைத்தும் மிகவும் முக்கியமா னவை. அவற்றில் ஐந்து முறைகள் 30 ஆண்டுகளுக்கு முன் னரே நம் நாட்டில் ஆரம்பமாகி, இப்பொழுது மிகவும் மேலும் முன்னேறி வருகின்றன.
அவை பின்வருமாறு:

1. நூலகப் பணிப்பகுதி (*Job Analysis*);
2. பணிநிலை வகுப்பு (*Classification of Positions*);
3. நூலக நூற்பட்டி தயாரித்தல் (*Cataloguing*);
4. நூல்களைப் பகுத்து வைத்தல் (*Classification*);

5. நூலக நிர்வாகத் தரம் (*Standards for Library Organisation and Administration*).

இந்த இந்திய முறைகள் பல நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. முன் நோக்கு உள்ள மேல்நாட்டு இளம் நூலகர்கள் இந்த இந்திய முறைகளைப் படித்து, அறிந்து, கையாளவும் முயன்று வருகிறார்கள். நூலக நிர்வாகத் தரங்களையும், நூலகக் கட்டிடத் தளவாடத் தரங்களையும், பின் சொன்ன மூன்று ஸ்தாபனங்கள் நிறுவி இருக்கின்றன.

1. சென்னை நூலகக் கழகம்;

2. இந்தியத் தர நிருணய நிறுவனம் (*Indian Standards Institution*);

3 பல்கலைக்கழக மானியக் குழு (*University Grants Commission*).

இந்தத் தரங்களை நம் நாட்டு நூலகங்களும், அவற்றின் அதிகாரிகளும், நூலகர்களும், சரிவரக் கையாளாதது குறை. இப்படி இருக்கும்போது "இந்தியாவில் கையாளப்படும் முறைகள் தரமானவைகளாக இல்லை" என்று இந்த நூலில் அமைந்துள்ள வாக்கியம் நம் நாட்டு இளம் நூலகர்களின் மனதில் தப்பு எண்ணத்தை உண்டு பண்ணாமல் இருக்க வேண்டும்.

5. பொது நூலகச் சட்டத் திருத்தம்

1948-இல் கொண்டு வரப்பட்ட சென்னை மாநிலப் பொது நூலகச் சட்டத்தைப் பற்றிச் சில முக்கியமான ஆலோசனைகள் ஒரு அத்தியாயத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றன அவை பின்வருமாறு;

1. மாவட்ட நூலக ஆணைக் குழுவின் செயலாளராக மாவட்டத் தலைமை நூலகரே இருக்க வேண்டும்;

2. மாநில நூலக ஆணைத்துறையானது, மாநிலக் கல்வி ஆணைத்துறையிலிருந்து பிரிக்கப்பட வேண்டும்;

3. மாநில நூலகத்துறையின் தலைவர் நூலக இயல் கல்வியும் அனுபவமும் பெற்றவராக இருப்பதோடு, அவரே மாநிலத் தலைமை நூலகராகவும் இருக்க வேண்டும்;

4. மாவட்டங்களில் கிளை நூலகங்களைப் பெருவாரியாக ஏற்படுத்திச் சரியான சேவை நடக்காததை நிறுத்த வேண்டும்;

5. இந்த விஷயங்களை எல்லாம் ஆராய்ந்து, மாநிலப் பொது நூலகச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும்.

ஏற்கெனவே ஆந்திரப்பிரதேசத்திலும் மைசூர் மாநிலத்திலும் நான் கேட்டுக்கொண்டபடி, இந்தச் சீர் திருத்தங்களை எல்லாம் செய்து இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருந்த தமிழ் நாடு இப்பொழுது பின்தங்குவது தவறு. இந்த விஷயத்தை நமது அரசாங்கத்தார்—முக்கியமாகக் கல்வி அமைச்சர்—கவனிக்க வேண்டும். திரு. காமராஜ் முதல் அமைச்சராகவும், திரு. சுப்பிரமணியம் கல்வி அமைச்சராகவும் இருந்த நாள் முதல் இதை நான் அமைச்சர்களிடம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறேன். 1957-ஆம் ஆண்டில் மறைமலை அடிகள் நூல் நிலையத் திறப்பு விழா நடந்த பொழுது, இப்பொழுது முதல் அமைச்சராக இருக்கும் திரு. அண்ணாதுரையிடமும் இதைச் சொல்லியிருக்கிறேன்

6. கல்லூரி நூலகர் ஊதியம்

இப்பொழுது அரசாங்கத்தால் அமுலுக்குக் கொண்டு வரப்படும் மற்றொரு விஷயமும் இந்த நூலில் குறிக்கப்பட்டு உள்ளது. அது கல்லூரி நூலகர்களின் ஊதியத்தைப் பற்றியது. 1958-ஆம் ஆண்டில் பல்கலைக் கழக மானியக் குழுவினால் என் தலைமையில் நியமிக்கப்பட்ட நூலகக்குழு, சாதாரண கல்லூரி நூலகர்களுக்குக் கல்லூரி விரிவுரையாளர் ஊதியமும், பெரிய கல்லூரி நூலகருக்கு துணைப் பேராசிரியர் ஊதியமும் கொடுக்கவேண்டும் என்று சொன்

வதை, பல்கலைக் கழக மானியக் குழு ஒத்துக்கொண்டது. தவிர, அதை அமுலுக்குக் கொண்டு வரப் பண உதவியும் செய்ய ஒத்துக்கொண்டது. அப்படி இருந்தும் சில மாதங் களுக்கு முன் அரசாங்கத்தார் வெளியிட்ட உத்தரவின்படி ஏற்பட்டுள்ள ஊதியம் பின் வருமாறு :—

1. விரிவுரையாளர் ரூ. 300—25—600

2. நூலகர் ரூ. 200—10—300

இதை அரசாங்கம் உடனே மாற்ற வேண்டும் என்று சென்னை நூலகக் கழகத்தின் சார்பாக நான கேட்டுக் கொள்கின்றேன்.

"சாரதா",
100, மெயின் ரோடு 4,
மல்லேஸ்வரம்,
பெங்களூர்.

சி. ரா. ரங்கநாதன்
சென்னை நூலகக் கழகத் தலைவர்.

# *1. அழைப்பு வந்தது!

பல ஆண்டுகளுக்கு முன்பு, திருநெல்வேலி ம. தி. தா. இந்துக் கல்லூரியில் நான் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது 'சோமலெ' அவர்கள் எழுதிய "அமெரிக்காவைப் பார்" என்னும் துணைப் பாட நூலை பி. ஏ. வகுப்புக்கு நான் நடத்தினேன். அன்று, அமெரிக்காவை நான் நேரில் பார்க்கும் பேறு பெற்றிருக்கவில்லை. என்றாலும், அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறைமையையும், அமெரிக்கக் கண்டத்தின் உள்ளமைப்புக்களையும் மாணவர்களின் கண்முன் கொண்டுவந்து நிறுத்தி அந்த இள உள்ளங்களைக் கவர்வதில் நான் ஓரளவு வெற்றி பெற்றேன் என்றே சொல்லவேண்டும். எனினும் அமெரிக்கா சென்று அக்காட்சிகளையெல்லாம் நேரில் கண்டு களித்தால் மேலும் சிறந்த பயனைப் பெறலாம் என்ற எண்ணம் அன்று என் உள்ளத்தில் முகிழ்த்தது.

பின்னர் 1958-இல் "அமெரிக்க நூலகங்கள்" என்னும் நூலைத் தமிழில் நான் எழுதினேன். இந்நூலுக்கான தகவல்களையும், குறிப்புக்களையும் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த பொழுது, அமெரிக்க நூலகங்களைப் பற்றி பெயர்பெற்ற

---

*30-11-1965 அன்று சென்னை அமெரிக்கத் தகவல் நிலையத்தில் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவின் ஒரு பகுதி.

அமெரிக்க நூலகவியல் அறிஞர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள், ஆராய்ச்சிகள் முதலானவற்றைப் படித்தறியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவைகளையெல்லாம் அமெரிக்கத் தகவல் நிலையத்தார் அன்புடன் வழங்கியதுடன் சில நல்ல புகைப் படங்களையும் நூலில் வெளியிடுவதற்காகக் கொடுத்து உதவினார்கள்.

இந்த நூல் எழுதுவதற்கு நான் மேற்கொண்ட பெரும் முயற்சிகளைக் கவனித்து வந்த என் தந்தையார் ஒருநாள் சிரித்துக்கொண்டே "அமெரிக்காவைப் பார்க்காமல் அமெரிக்க நூலகங்களைப் பற்றி நூல் எழுத இத்தனை பாடுபடுகிறாய்! அமெரிக்கா சென்று நூலகங்களையும் அவற்றின் செயல் முறைகளையும் நேரில் காணும் பேறு உனக்குக் கிட்டும்! அப்படி அருள் பாலிக்க ஆண்டவனை வேண்டுகிறேன்" என்று சொன்னார்கள்.

பிறகு 1960-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக நூலகவியல் துறைக்குப் பணிபுரிய வந்தேன். என்மீது அளவிலா அன்பும், என் நலனில் நாட்டமும் கொண்டவரும் நூலகவியல்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் டாக்டர் டி. பி. கிருஷ்ணராவ் அவர்கள், "நீங்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும்; நூலகவியல் பற்றிய அறிவை மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டும்" என்று அடிக்கடி கூறி எனக்கு ஊக்கமளித்து வந்தார்கள்.

"வெளிநாடு செல்வது நம் கையிலா இருக்கிறது? எல்லாம் இறைவன் செயல். ஆண்டவன் அருளிருந்தால் எல்லா வாய்ப்பும் வந்து கைகூடும்" என்ற நம்பிக்கையுடனிருந்தேன். இருந்தாலும் அமெரிக்கா செல்வதற்கு எனக்கு இவ்வளவு விரைவில் வாய்ப்புக் கிட்டும் என நான் கனவிலும் கருதவில்லை. அமெரிக்கா வரும்படி அழைப்பு விடுத்து அந்நாட்டு அரசாங்கத்தின் சார்பில் தில்லியிலுள்ள அமெரிக்கத் தூதர் செஸ்டர் பௌல்ஸ் (*Chester Bowles*) அவர்களிடமிருந்து எனக்குத் திடீரென ஒருநாள்

கடிதம் வந்தபொழுது, நானே சற்று அயர்ந்து போனேன். "பாலும் தேனும் பாய்ந்தோடும் நாடு எனப் பார்த்தவர் போற்றும் அமெரிக்க நாட்டை நேரில் காணும் பேறு நமக்குக் கிடைத்துவிட்டதா?" என்று திகைத்தேன். 'நாளும் தொழும் உழுவலன்பரின் உட்கிடக்கையை ஈடேற்ற இறைவன் என்றும் தவறான்' என்று எண்ணி மகிழ்ந்தேன். அவனருளுக்கு நன்றியும் செலுத்தினேன்.

எனது ஐந்து மாத கால அமெரிக்கப் பயணத்திற்கு உரிய அனுமதியினைப் பெருமதிப்பிற்குரிய துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் மனமுவந்து அளித்து ஆசியும் நல்கினார்கள். சென்னையிலுள்ள அமெரிக்க நூலக இயக்குநர் திருமதி எவ்லின் மெக்கேப் (*Evelyn Mccabe*), மற்றும் அமெரிக்கத் தகவல் நிலைய அன்பர்களின் உதவியோடு எனது பயணத் திட்டம் நல்ல முறையில் உருப் பெற்றது.

அமெரிக்க நூலகக் கழகத்தின் (*American Library Association*) அனைத்து நாட்டு நல்லுறவுக் குழு ஏற்பாடு செய்திருந்த பல வட்டார நூலகர் குழுவிற்கென (*Multi-area Group Librarian Programme*) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கக் கல்வி, பண்பாட்டுத் திட்டத்தின்கீழ் (*Educational and cultural Programme*) அமெரிக்கா வரும்படி 1965-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்க அரசாங்கத்தின் வெளிநாட்டுத் துறையினர் (*States Department*) எனக்கு அழைப்பு விடுத்தனர். இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்வதற்கு மொத்தம் 16 நூலகவியல் அறிஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் என்னோடு நால்வர் இந்தியர் ஆவர். ஏனைய இந்திய நண்பர்களின் பெயர்கள் வருமாறு:

1. திரு. சிங்கர் (நூலகர், சபல்பூர் பல்கலைக் கழகம்).
2. திரு. ஆனந்த் பி.ஸ்ரீ.வத்சவா (நூலகவியல் துறைத் தலைவர், இராசஸ்தான் பல்கலைக் கழகம்).

3. திரு. கோசாமி (மாநில நூலகர், அசாம்).

ஆங்காங்கிலிருந்து (*Honkong*) இருவர் வந்தனர். மற்ற வர்கள் பிரிட்டிசு மேற்கு இந்தியத் தீவுகள், கொலம்பியா, ஹைட்டி (*Haiti*), ஐஸ்லாந்து (*Iceland*), இந்தோனேசியா, ஜமேக்கா, ஜப்பான், ஸ்பெயின் (*Spain*), தைவான், யூகோசுலேவியா முதலான நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

நாங்கள் எல்லோரும் முதலில் நாட்டு அறிமுக நிகழ்ச்சி யில் (*Orientation Programme*) கலந்து கொண்டோம். வாசிங்டனிலுள்ள அனைத்து நாட்டு நிலையத்தில் (*International Centre*) இந்நிகழ்ச்சி மூன்று நாட்களுக்கு நடை பெற்றது. அமெரிக்க நாட்டு இயற்கை அமைப்பு, அரசிய லமைப்பு, பொருளாதார நிலை, பண்பாடு, கல்விமுறை முதலியன பற்றிப் பல அறிஞர்கள் மூன்று நாட்களும் சொற் பொழிவாற்றினர்கள். மேலும் நடனம், இசை, படக்காட்சி நிகழ்ச்சிகளும் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தன. தேநீர் விருந்தும் தலைநகர்ச் சுற்றுலாவும் என்றும் மனதிற் பசுமையாக விளங்கும் வண்ணம் அந்நிலைய மக்களிர் உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் கருத் தரங்கும் (*Seminar*) ஒன்று. அமெரிக்க நூலகக் கல்வியின் (*Library Education*) பல்வேறு அம்சங்கள் பற்றியும், மற்றும் பல பொதுவான பொருள்கள் குறித்தும் இக்கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டன.

அமெரிக்க நூலகக் கழகத்தின் அனைத்து நாட்டு நல் லுறவுக் குழுவின் சார்பில், இலாஸ்ஏஞ்சல்ஸிலுள்ள (*Los Angeles*) கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நூலகப் பணிப்பள்ளி (*School of Library Service*) இந்தக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தது. கருத்தரங்கு ஏராளமான நிகழ்ச்சிகளைக் கொண்டிருந்தது. அமெரிக்கா வின் தலைசிறந்த நூலகவியல் அறிஞர்களும் பிற வல்லுநர்

களும் இக்கருத்தரங்கில் பங்குகொண்டு அரிய சொற்பொழி வாற்றினர்கள். நூலகத் துறையில் பழுத்த அனுபவம் வாய்ந்த பல அறிஞர்களின் கருத்துரைகளையும், அறிவுரை களையும் கேட்பது, பயன் தரும் பாடமாகவும் உணர்ச்சி யூட்டும் அனுபவமாகவும் அமைந்தது. இந்தக் கருத்தரங்கு மாபெரும் வெற்றியாக அமைந்ததற்கு மூன்று பேரறிஞர் களின் சலியா முயற்சிகளை முக்கியமாகக் குறிப்பிட வேண் டும். அவர்கள்:

1. டீன் லாரென்ஸ் கிளார்க் பவல் (*Dean Lawrence clark Powell*), முதல்வர் நூலகப் பணிப்பள்ளி, கலி போர்னியாப் பல்கலைக்கழகம். அவர் ஒரு பெயர் பெற்ற கவிஞர்; அறிவும் அனுபவமும் வாய்ந்த அறிஞர். பல அரிய நூல்களை எழுதியிருக்கிருர்.

2. பேராசிரியர் செய்மூர் லூபெட்ஸ்கி (*Seymour Lubetzky*), நூலகப் பணிப்பள்ளி, கலிபோர்னி யாப் பல்கலைக் கழகம். பல வட்டார நூலகர் குழுத்திட்டத்தின் இயக்குநர் இவர்தான். அள வற்ற சுறுசுறுப்பும், அதிசயிக்கும் செயலாற்றலும் அமைந்த 70 வயது 'இளைஞர்' இவர்! நூலக நூற் பட்டியலில் (*Cataloguing*) இவர் ஓர் இமயம் இந்தியாவில் ஓர் உன்னதமான ஆசிரியருக்கு அமைந்துள்ள உயர்ந்த பண்புகள் அனைத்தையும் இவரிடம் கண்டு வியந்தேன். நூலகவியலில் மிகச் சிறந்த பேராசிரியருக்கான விருதை வழங்க அண் மையில் இவரை அமெரிக்க நூலகக் கழகம் தேர்ந் தெடுத்திருப்பதே இவரது பெருமைக்குச் சான்று.

3. டாக்டர் ராபர்ட் வாஸ்பர் (*Robert Vosper*), இயக்குநர், கலிபோர்னியாப் பல்கலைக்கழக நூலகம். இவர் கருத்தரங்கின் பொறுப்பாளராக இருந்தார். அமெரிக்க நூலகக்கழகத்தின் தலை வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர் எந்த

நேரமும் சிரித்த முகமும், அன்புள்ளமும் கொண்ட பெருந்தகையாளர்.

கருத்தரங்கில் கீழ்க்கண்ட பொருள்கள்பற்றி விவாதம் நடந்தது.

1. அமெரிக்காவில் பொதுநிருவாக அமைப்புமுறை (*Levels of public Administration in the U. S.*).
2. காங்கிரசு நூலகம்.
3. தேசிய மருத்துவ நூலகம்.
4. மாநில நூலகங்கள்.
5. மாவட்ட, வட்டார நூலகங்கள் (*County and Regional Libraries*).
6. நகராட்சி நூலகங்கள்.
7. அமெரிக்காவில் உயர்நிலைக் கல்வி.
8. கல்லூரி நூலகங்கள்.
9. பல்கலைக் கழக நூலகங்கள்.
10. அமெரிக்கப் பள்ளி அமைப்புமுறை (*American School System*).
11. பள்ளி நூலகங்கள்.
12. குழந்தை நூலகப் பணி.
13. தானியக்கமும் நூலகங்களும் (*Automation and Libraries*).
14. சிறப்பு நூலகங்கள் (*Special Libraries*).
15. ஆய்வு உதவும் பணி (*Reference Service*).
16. நூலக நூற்பட்டியியல் (*Cataloguing*).

17. நூலகக் கல்வி (*Library Education*).

18. நூலகத் தொழில் நிறுவனங்கள் (*Professional Organizations*).

19. எழுத்து—பேச்சு உரிமை (*Free Access to ideas*).

மேற்கூறிய 19 பொருள்களையும் 10 நாட்களில் விவாதித்தோம். விவாதங்கள் எல்லாம் சுவையானவையாகவும் மகிழ்வூட்டுவனவாகவும் விளங்கின. உலகத்தின் பல பாகங்களிலிருந்து வந்திருந்த நூலகவியல் அறிஞர்கள் பலருடன் நூலகவியல் பற்றிய கருத்துக்களையும் எண்ணங்களையும் பரிமாறிக்கொள்ளும் அரிய வாய்ப்பை எங்களுக்கு இக்கருத்தரங்கு ஏற்படுத்தித் தந்தது.

லாஸ்ஏஞ்சல்ஸில், அங்கே இங்கே அசைய முடியாதபடி அமைக்கப் பட்டிருந்த தொடர்ச்சியான நிகழ்ச்சிகளுக்கிடையிலும், டிஸ்னிலாண்டு (*Disneyland*) என்னும் அற்புத உலகத்தைப் பார்க்கும் வாய்ப்பை மாநில அரசாங்கம் ஏற்படுத்தித் தந்தது. இருபதாம் நூற்றாண்டின் மாயாவி எனக் கருதப்படும் வால்ட் டிஸ்னி உருவாக்கியுள்ள இந்தக் கற்பனை உலகைக் கண்ட போது 'இதைக் காணாத கண்ணும் கண்ணோ' என்று உள்ளம் துள்ளிக் களித்தது. இளம் உள்ளங்களின் கனவுலகில் இன்பக் கிளர்ச்சியூட்டும், திரையுலக நட்சத்திரங்களின் சொர்க்கம் எனக் கருதப்படும் ஆலிவுட்டையும் (*Hollywood*) கண்டு களித்தோம். இயற்கை அன்னை எழிற்கோலம் பூண்டு அழகு நடமாடும் தேசியப் பூங்காக்கள் சிலவற்றையும் பார்த்தோம். கண் கவரும் வண்ண மலர்களின் கூட்டமும், பசு மரங்களின் கூட்டமும், ஆதிமனிதன் ஆதாமுக்கும், அவன் மனைவி ஏவாளுக்கும் ஆண்டவன் உருவாக்கித் தந்த 'ஈடன் தோட்டம், இப்படித்தான் இருந்திருக்குமோ என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தன. மேலும் நியுயார்க்கில் "உலகக் கண்காட்சி"யைக் (*World Fair*) காணும் பெரும் பேறும் எனக்குக் கிடைத்தது.

மேற்கூறிய கருத்தரங்கு எல்லோருக்கும் பொதுவானது. அது முடிந்ததும் ஒவ்வொருவருக்கும் தனித் தனித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இத்திட்டம் வெவ்வேறு இடங்களில் ஏழுவார காலம் நடந்தது. நானும், ராஜஸ்தான் பல்கலைக் கழக நூலகத்துறைத் தலைவர் திரு. ஆனந்த் பி. ஸ்ரீவத்சவாவும் கீழ்க்கண்ட மூன்று நூலகவியல் பள்ளிகளில் பணியாற்றி, சிறந்த பயிற்சியினையும் அனுபவத்தையும் பெற்றோம்.

1. நூலகப் பணிப் பள்ளி, கலிபோர்னியாப் பல்கலைக் கழகம், இலாஸ்ஏஞ்சல்ஸ். இந்தப் பள்ளிக்குப் பழமைச் சிறப்பில்லை. எனினும் இந்நாட்டிலேயே மிகச்சிறந்த நூலகவியல் பள்ளிகளில் ஒன்றாக இது திகழ்கிறது.

2. கலிபோர்னியா மாநிலக் கல்லூரி, சான் ஒசே (*San Jose*). இங்குப் பள்ளி நூலகர்களுக்கு முக்கியமாகப் பயிற்சியளிக்கப் படுகிறது.

3. நூரகலவியல் பள்ளி, கலிபோர்னியாப் பல்கலைக் கழகம், பெர்க்லே (*Berkeley*). இது அமெரிக்காவிலேயே மிகத் தொன்மையான, பெயர்பெற்ற நூலகவியல் பள்ளிகளில் ஒன்று.

இம்மூன்று இடங்களிலும் பணியாற்றிய நாட்களில் ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் தனித்தனியே விவாதங்கள் நடத்தினேன். சில வகுப்புகளுக்குச் சென்றேன்; கருத்தரங்குகளில் பங்குகொண்டேன். சில வகுப்புகளுக்கு நூற்பட்டியியல் பற்றிப் பாடம் நடத்தினேன். பின்வரும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவுகளும் ஆற்றினேன்:

1. இந்தியாவில் உயர்நிலைக் கல்வி.
2. சென்னைப் பல்கலைக் கழகமும், நூலகவியல் துறையும்.

3. டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதனின் 'கோலன்' நூல் வகிப்பீடுமுறை.

4. சென்னைப் பொது நூலகச் சட்டம்.

5. தமிழில் நாட்டுப் பாடல்கள்.

6. தமிழ் இலக்கியமும் பண்பாடும்.

7. இந்தியாவில் நூலகக் கல்வி.

சுருக்கமாகச் சொன்னால், மேற்கூறிய மூன்று பள்ளிகளிலும் நான் கழித்த நாட்களில், அமெரிக்காவில் நூலகவியல் கல்வி வளர்ந்துள்ள அளவைத் தெளிவாக அறிந்து கொண்டேன்.

அமெரிக்காவில் 120 நாட்கள் தங்கியிருந்தேன். அப்பொழுது 6 மாநிலங்களுக்குச்சென்றேன். சுமார் 11 பெரிய நகரங்களைப் பார்த்தேன். வாசிங்டன், இலாஸ்ஏஞ்சல்ஸ், சான் ஓசே, பெர்க்லே, சாக்ரமெண்டோ, பால்டிமோர், சான்பிரான்சிஸ்கோ, டென்வர், அர்பானு, பாஸ்டன், நியுயார்க் ஆகிய நகரங்கள் குறிப்பிடத்தக்கவை.

குறுகிய காலத்தில் இவ்வளவு அதிக இடங்களை யாரும் பார்த்ததில்லை என்று எல்லோரும் கூறினார்கள். எனது அமெரிக்க நண்பர் ஒருவர், "அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்தும்கூட, நீங்கள் பார்த்த இடங்கள் சிலவற்றிற்கு நாங்கள் இதுவரைச் சென்றதில்லை. இவ்வளவு குறுகிய காலத்தில் இந்தக் கண்டத்தின் பாதிக்குமேல் சுற்றிவிட்டீர்களே! உங்களைப் பார்க்க எனக்குப் பொறாமையாய் இருக்கிறது" என்று சொல்லி அதிசயப்பட்டார். இத்தனை இடங்களையும் பார்க்க எனக்கு வாய்ப்பு ஏற்படும் வகையில் அத்தனை திறமையாக வெளிநாட்டுத் துறையினரும், திட்ட இயக்குநர் பேராசிரியர் செய்மூர் லுபெட்ஸ்கியும் எனது பயணத் திட்டத்தை வகுத்திருந்தார்கள்.

எனது சுற்றுப்பயணத்தின்பொழுது 57 நூலகங்களைப் பார்வையிட்டேன். அவைகளாவன: தேசிய நூலகங்கள் 2; பல்கலைக்கழக நூலகங்கள் 12; நூலகவியல் பள்ளிகள் நடத்தும் நூலகங்கள் 10; சிறப்பு நூலகங்கள் 6; கல்லூரி நூலகங்கள் 3; பள்ளி நூலகங்கள் 3; தொடக்கப் பள்ளி நூலகங்கள் 3; மாநில நூலகங்கள் 2; நகர நூலகங்கள் 6; மாவட்ட (கவுண்டி) நூலகங்கள் 10.

இதையெல்லாம் பார்த்தபின், அமெரிக்காவில் நூலகங்கள் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றம் என் உள்ளத்தில் வியப்பை உண்டாக்கியது. 'இந்த நிலை நம் நாட்டில் ஏற்படும் நாள் என்றுளோ?' என்று மனம் ஏங்கியது.

# 2. பொன் விளையும் பூமி

அமெரிக்க நாடு செல்வம் கொழிக்கும் சீமை என்பதை நாமனைவரும் அறிவோம். அதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, மக்கள் சலியாது உழைப்பதாகும்; மற்றொன்று அந்நாடு பொன் விளையும் பூமியைக் கொண்டிருப்பதாகும். நான் அமெரிக்காவில் தங்கியிருக்குங்கால், பல நாட்களை, பொன் விளையும் பூமியாகிய கலிபோர்னியா மாநிலத்திலேயே கழிக்க நேர்ந்தது. எனவே அம்மாநிலம் பற்றிய பொதுவான செய்திகளை இங்கு கூறுதல் பொருத்தமுடைத்தே. எல்லா மாநிலங்களும் பெரும்பான்மையாக இவ்வடிப்படையில்தான் விளங்குகின்றன. எனவே, இம் மாநிலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல், ஓரளவுக்கு அமெரிக்க நாட்டின் அமைப்பைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளுதலே ஆகும்.

அமெரிக்காவில் மூன்றாவது மிகப்பெரிய மாநிலமாகத் திகழ்வது கலிபோர்னியா மாநிலம். ரபப்பளவில் மூன்றாவதாக இருந்தாலும், மக்கள் தொகையில் இம்மாநிலம்தான் நாட்டில் மிகப்பெரியது. பசிபிக் கடலின் ஓரத்தில் 1000 மைல் நெடுகிலும் இம்மாநிலம் பரந்திருக்கிறது. தெற்கில் மெக்சிகோ முதல் வடக்கில் ஆரிகோன் வரையிலும் இந்த மாநிலத்தின் எல்லை நீண்டிருக்கிறது. கிழக்குக் கலிபோர்னியாவில் இன்யோ (*Inyo*) கவுண்டியில் பானமிண்டு (*Panam-*

*int)* மலைகளுக்கும், ஆமார் கோசா *(Amargosa)* மலைகளுக்கு மிடையில் இம்மாநிலம் அமைந்திருக்கிறது. மாநிலத்தின் குறுக்கு நீளம் **150** மைலிலிருந்து **365** மைல்வரை வேறு படுகிறது.

அலாஸ்கா தவிர, அமெரிக்காவின் கடற்கரைப்பகுதி யின் ஐந்தில் மூன்று பாகம் கலிபோர்னியா மாநிலத்தி லேயே அமைந்திருக்கிறது. இம்மாநிலக் கடற்கரையின் நீளம் **1000** மைல். கடற்கரையோரமாகப் பல மைல் தூரத் திற்குக் கடற்கரை மலைத்தொடர் *(Coast Range)* இருக் கிறது. மாநிலத்தின் மையப் பகுதியில் அகலமான மத் தியப் பள்ளத்தாக்கு *(Central Valley)* உள்ளது. சாக்ர மெண்டோ, சான்ஜோக்வின் முதலிய ஆறுகள் இப்பள்ளத் தாக்கில் பாய்ந்து, சாக்ரமெண்டோ நகரின் அருகில் ஒன்றாகக் கலந்து, பிறகு மேற்காக ஓடி, சான்பிரான் சிஸ்கோ துறைமுகத்தின் வழியாகக் கடலோடு கலக்கிறது. இப்பள்ளத்தாக்கிற்குக் கிழக்கில் நெடிதுயர்ந்த சியெரா நெவடா *(Sierra Neveda)* மலைத்தொடர் தென் வடலாக அமைந்துள்ளது. இம்மலைத் தொடர், அமெரிக்காவின் பிற பகுதிகளையும் இம்மாநிலத்தையும் பிரிக்கும் நெடுமலைச் சுவராக அமைந்திருக்கிறது. சின்னஞ் சிறு ஏரிகளும், பயங்கர நீரோட்டமுடைய நீரோடைகளும் உயர்ந்த மலைச் சரிவுகளில் மிக அடர்ந்த பைன் மரக்காடுகளும் நிறைய உள்ளன. சியெரா நெவடா மலைத்தொடரில் **14,000** அடிக்குமேல் உயரமுள்ள **11** சிகரங்கள் இருக்கின் றன. அமெரிக்காவிலேயே அதிக உயரமான விட்னி சிகரம் *(Mount Whitney)* இங்குதான் இருக்கிறது. இதன் உயரம் **14, 495** அடி.

**உயர்வும் தாழ்வும்**

சியெரா நெவடா மலைக்குத் தெற்கிலும் கிழக்கிலும் மோஜாவ் பாலைவனம் உள்ளது. இப்பாலைவனத்தில்தான், மரணப் பள்ளத்தாக்கு *(Death Valley)* இருக்கிறது. இது

விட்னி சிகரத்திலிருந்து 60 மைல் கிழக்கில் உள்ளது. இந்த மரணப் பள்ளத்தாக்குத்தான் அமெரிக்காவிலும், மேற்குக் கோளத்திலும் மிகவும் ஆழமான இடம் என்று கருதப்படுகிறது. இதன் ஒரு பகுதி கடல் மட்டத்திலிருந்து 282 அடி ஆழத்திலுள்ளது. இதன் நீளம் 120 மைல். அகலம் 25—35 மைல். இதன் அடிப்பாகம் மணற்பாங்கானது. 1849-இல் 30 பேர் இப்பள்ளத்தாக்கின் வழியாக கலிபோர்னியாவின் பொன்வயல்களை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில், அவர்களில் 18 பேர் தாகத்தால் மடிந்தனர். தப்பிப் பிழைத்தவர்கள் நீரில்லா இப்பள்ளத்தாக்கிற்கு "மரணப் பள்ளத்தாக்கு" எனப் பெயரிட்டனர். அமெரிக்காவில் மிகவும் ஆழமான பகுதி மட்டுமின்றி, வெப்பம் மிகுந்த இடமும் இதுதான். இந்தப் பள்ளத்தாக்கிற்குத் தெற்கில் கொலராடோ பாலைவனம் அமைந்திருக்கிறது.

மரணப் பள்ளத்தாக்கின் மலைச் சரிவுகள் தாதுவளம் பொருந்தியவை. முன்னர் பொன், வெள்ளி, செம்பு, காரீயம் முதலிய உலோகங்களும் கோல்மனைட்டு என்ற தாதுப் பொருளும் எடுக்கப்பட்டன. பழைய குடியேற்றங்களின் சிதைவுகள் இதன் பழம்பெருமைக்குச் சான்ருக விளங்குகின்றன. இது 1933 முதல் தேசிய நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## தட்ப வெப்பம்

இம்மாநிலத்தின் தட்ப வெப்பம் பொதுவாக மிதமாக உள்ளது. அதே சமயத்தில் வெப்பநிலையின் இருதுருவங்களையும் இங்கு காண முடிகிறது. கடும் வெப்பம் நிலவும் பாலைவனமும், ஆண்டு முழுவதும் பனிமூடிக் கிடக்கும் உயர்ந்த மலைகளும் இந்த மாநிலத்திலேயே அருகருகே இருப்பது இயற்கையின் அதிசயங்களில் ஒன்ருகக் கருதப்படுகிறது. கலிபோர்னியாவில் பெரும்பாலான தாழ்நிலப் பகுதிகளில் கோடைக் காலத்தில் வெப்பமும் வறட்சியும் அதிகம்; குளிர்காலத்தில் மிதமான, உடலுக்கு இதமான

குளிர் நிலவுகிறது. பசிபிக் கடலிலிருந்து உள்நாட்டை நோக்கி வீசும் ஈரக் காற்றை, இம்மாநிலத்திலுள்ள சியெரா மத்ரே மலைத் தொடர் (*Sierra Madre*) தடுப்பதால், இம்மாநிலத்தின் சராசரி மழை அளவு ஆண்டுக்கு 3 அங்குலத்திலிருந்து 100 அங்குலம் வரை மாறுபடுகிறது. தெற்கிலுள்ள பாலைப் பகுதிகளில் ஆண்டு மழை 3 அங்குலம்; வடமேற்குப் பகுதியில் 100 அங்குலம். விவசாயச் செழிப்புள்ள பகுதியில் ஆண்டு மழை 30 அங்குலம்.

**தொன்மையான மரங்கள்**

பருத்து உயர்ந்த மரங்களுக்குக் கலிபோர்னியா பெயர் பெற்று விளங்குகிறது. உலகிலேயே மிகப் பழமையும் உயர்ந்தவையுமான சிக்குவாயா என்ற செம்மரங்கள் இங்குதான் உள்ளன. இந்த மரம் இம்மாநிலத்தின் தேசிய மரம் என மதிக்கப்படுகிறது. இம்மாநிலத்தின் தேசிய மிருகம் கரடி; தேசியப் பறவை குயில்; தேசிய மலர் கோல்டன் பாப்பி (*Golden Poppy*).

அமெரிக்காவிலேயே இயற்கைக் காட்சிகள் நிறைந்த எழில் வாய்ந்த மாநிலம் கலிபோர்னியா. 12,865 அடி உயரத்திலுள்ள தாஹோ (*Tahoe*) ஏரி மிகவும் அழகானது; படிகம்போல் தெளிந்த நீருடையது. இறால் மட்டுமே காணப்படும் மோனோ ஏரி இம்மாநிலத்தில்தான் இருக்கிறது. இந்த ஏரியை அமெரிக்காவின் சாக்கடல் (*Death Sea*) என்பர். உலகில் காணும் எல்லா விலங்குகளும், பறவை இனங்களும் இம்மாநிலத்திலுள்ள காடுகளில் வாழ்கின்றன. இவற்றில் கரடி, ஓநாய், மான், மலையாடு, செம்மறியாடு, முயல் முதலிய மிருகங்களும், மரக்கொத்தி, பலவிதக் கடற் பறவைகளும், சங்கிலிக்கறுப்பன் என்னும் நச்சுப்பாம்பு, காட்டுப்பல்லி ஆகிய பிராணிகளும் குறிப்பிடத்தக்கன. இம்மாநிலத்தில் 18 தேசியக் காடுகள் உள்ளன. மாநில அரசாங்கம் 172 பூங்காக்களை அமைத்துப் பாதுகாத்து வருகிறது.

**விவசாய மாநிலம்**

அமெரிக்காவில் பெரும் அளவில் விவசாயம் நடைபெறும் மாநிலங்களில் கலிபோர்னியா முன்னணியில் திகழ்கிறது. மிதவெப்ப மண்டலத்தில் பயிராகும் எல்லாப் பயிர்களும், வெப்ப மண்டலத்தில் பயிராகும் ஒருசில பயிர்களும் இம்மாநிலத்தில் பயிராகின்றன. எல்லாவகையான பழங்களும், காய்கறிகளும், தானியங்களும் இங்குச் சாகுபடியாகின்றன. பீச், வாதுமைப் பழவகைகளும், அவரை, ஒலிவ், பட்டாணி, திராட்சை முதலியனவும் பருத்தியும் கரிசல் மண் நிறைந்த வளம் மிகுந்த சான் ஜோக்குவின் பள்ளத்தாக்கில் பயிராகின்றன. ஆரஞ்சு, எலுமிச்சை, அத்தி ஆகியவையும் சாகுபடியாகின்றன. 1963-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 98,000 பண்ணைகளில் அடங்கிய 3·88 கோடி ஏக்கர் நிலப் பரப்பில் விவசாயம் நடைபெறுகிறது. மலைத்தொடர்களில் அடிவாரக் குன்றுகளிலும், வடக்கிலுள்ள மலைப்பள்ளத்தாக்குகளிலும் ஆடுமாடுகளும், பன்றிகளும் நிறைய வளர்க்கப்படுகின்றன. இப்பகுதிகளில் பால் பண்ணைத் தொழில் செழித்தோங்கியிருக்கிறது. விளையும் திராட்சையில் பெரும் பகுதியை ஒயின் தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள்.

**பொன் விளையும் பூமி**

அமெரிக்காவில் கனிவளம் மிகுந்த மாநிலங்களில் கலிபோர்னியாவும் ஒன்று. இங்குக் கிடைக்கும் கனியங்களில் மிக முக்கியமானது தங்கம். உலகிலேயே மிகப் பெரிய தங்கச் சுரங்கங்கள் காணப்படும் இடங்களில் ஒன்றாக இருப்பதால், இம்மாநிலத்தைப் "பொன் விளையும் பூமி" *(Golden State)* என்கிறார்கள். கலிபோர்னியாவின் துரிதமான முன்னேற்றத்திற்கு இங்குக் கிடைக்கும் தங்கமே முக்கிய காரணமாகும். முதன் முதலில் 1848-இல் இங்குத் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. அது முதல் 1962-வரையில் இம்மாநிலத்தில் மட்டும் 241,52,90,861 டாலர் பெறுமுள்ள தங்கம்

வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, இரும்பு, வெள்ளி, செம்பு, காரீயம், குரோமைட், மாங்கனீஸ் முதலிய தாதுக்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன. உலகில் எண்ணெய் வளம் நிறைந்த இடங்களில் கலிபோர்னியாவும் ஒன்றெனக் கருதப்படுகிறது. இம்மாநிலத்தில் 20,000-க்கும் அதிகமான எண்ணெய்க் கிணறுகள் உள்ளன.

திரைப்படத் தயாரிப்பு, கப்பல் கட்டுதல், விமானத் தயாரிப்பு, மோட்டார்கார் டயர் தயாரிப்பு, மீன் பக்குவப்படுத்துதல், வெட்டுமர உற்பத்தி ஆகியவை இம்மாநிலத்தில் மிக முக்கியமான தொழில்களாக வளர்ந்துள்ளன. இம்மாநிலத்திலுள்ள லாஸ் ஏஞ்சலிஸ் நகருக்கருகிலுள்ள ஹாலிவுட், உலகின் திரைப்படத் தொழிலின் மையமாக அமைந்திருக்கிறது. திரைப்படத் தயாரிப்பில் உலகிலேயே கலிபோர்னியாதான் முதலிடம் வகிக்கிறது.

இம்மாநில மக்கள் கல்வித் தரத்தில் சிறந்து விளங்குகிறார்கள். மெக்ஸிகர்கள், இந்தியர்கள், நீக்ரோக்கள், ஜப்பானியர், பிலிப்பைனியர், சீனர் முதலானோரும் ஏராளமாக உள்ளனர். ஸ்பானியர் செல்வாக்கும் பரவலாக இருக்கிறது. கலிபோர்னியாவின் ஆதிக்குடிகள் செவ்விந்தியர்கள். இவர்கள், தனித்தனியே பிரிந்து கூட்டமாக வெவ்வேறு மொழிகளைப் பேசிக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

**மக்கள் தொகையில் முதலிடம்**

கலிபோர்னியா மாநில மக்களில் பெரும்பாலோர் நகரங்களில் வாழ்கிறார்கள். லாஸ் ஏஞ்சலிஸ் உலகிலேயே பரப்பளவில் மிகப் பெரிய நகரமாகும். அடுத்துப் பெரிய நகரம் சான்பிரான்ஸிஸ்கோ. சான்டீகோ ஆகிய நகரங்களும் குறிப்பிடத்தக்கவை. இந்நகரங்கள் அனைத்தும் கடற்கரையில் அமைந்திருக்கின்றன. மாநிலத் தலைநகரான சாக்ரமெண்டோ, சாக்ரமெண்டோ ஆற்றங்கரையில் அமைந்திருக்கிறது. மாநிலத்தின் மொத்தப் பரப்பளவு 1,56,573 சதுர மைல். இம்மாநிலத்தின் மக்கள் தொகை

மிகவும் துரிதமாகப் பெருகி இருக்கிறது. அமெரிக்காவிலேயே இம்மாநிலத்தில்தான் மக்கள் தொகை அதிகம். 1964 கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தில் **1,82,34 000** பேர் வசிக்கிறார்கள். இம்மாநிலத்தின் மக்கள் தொகை இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை இருமடங்காகப் பெருகி வருகிறது. இதன்படி கடந்த 20 ஆண்டுகளில் மக்கள் தொகை 92,50,000-க்குமேல் உயர்ந்திருக்கிறது.

**கல்வி முறை**

அமெரிக்காவிலேயே கலிபோர்னியாவின் 'கல்விமுறை' தான் மிகச் சிறந்ததெனக் கருதப்படுகிறது. வேறு எந்த மாநிலத்தையும்விட இங்குதான் கல்விக்கு அதிகப் பணம் செலவிடுகிறார்கள். கிண்டர்கார்டன் முதல் பல்கலைக் கழகம்வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பாட நூல்களும், சீருடைகளும், மதிய உணவும்கூட இலவசமாக வழங்கப்படுகின்றன. 8 முதல் 16 வயது வரையுள்ள குழந்தைகள் அனைத்தையும் கட்டாயமாகப் பள்ளிக்கு அனுப்பவேண்டுமெனச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. எல்லா மாணவர்களுக்கும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயமாகும். விவசாயம், வாணிகம், குடும்பக்கலைப் பாடங்கள் எல்லோரும் படிக்கவேண்டும். இலயோலா பல்கலைக்கழகம் (இலாஸ்ஏஞ்சல்ஸ்), ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம், கலிபோர்னியாப் பல்கலைக்கழகம், சான்பிரான்சிஸ்கோ பல்கலைக்கழகம், சாந்தா கிளாரா பல்கலைக்கழகம், தென் கலிபோர்னியாப் பல்கலைக்கழகம், முதலியன இம்மாநிலத்திலுள்ளன. இவற்றில் மிகப் பெரியது கலிபோர்னியாப் பல்கலைக்கழகம். இங்கு அமெரிக்காவிலேயே அதிக மாணவர்கள் படிக்கிறார்கள்.

**நூலகங்கள்**

இந்நாட்டிலேயே அதிகமான நூலகங்கள் உடைய மாநிலம் கலிபோர்னியா. சான்பிரான்சிஸ்கோ, இலாஸ்

ஏஞ்சல்ஸ், சாக்ரமெண்டோ ஆகிய நகரங்களிலுள்ள நூலகங்கள் மிகப் பெரியவை. சாக்ரமெண்டோவிலிருக்கும் அரசாங்க மாநில நூலகத்தில் பல அரிய. விலை உயர்ந்த நூல்கள் இருக்கின்றன. 200-க்கும் அதிகமான பொது நூலக அமைப்புக்கள் (*Public Library Systems*) இம்மாநிலத்தில் அமுலில் உள்ளன. 1911-இல் நிறுவப்பட்ட மாவட்ட (கவுண்டி) நூலக முறையின்படி, திரைப்படங்கள், இசைத் தட்டுகள், ஒலிப்பதிவுகள். ஓவியங்கள், படங்கள் முதலியன ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. ஊர்தி நூலகங்களின் (*Mobile Libraries*) மூலமாக ஒதுக்குப் புறமாக உள்ள சின்னஞ்சிறு கிராமங்களில் வாழும் மக்களுக்கும் நூலக வசதி கிடைக்கிறது. பல்கலைக்கழக நூலகங்களில், கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் நூலகம்தான் மிகப்பெரியது. இங்கு 15 00,000 நூல்கள் இருக்கின்றன.

**வரலாறு**

ஸ்பானிய நில ஆய்வாளர்கள் 16-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் முதன் முதலாகக் கடல் வழியே கலிபோர்னியாவுக்கு வந்தார்கள். 1534-இல் அவர்கள்தான் கலிபோர்னியா என்ற பெயரையும் சூட்டினார்கள். 1579-இல் சர் பிரான்சிஸ் டிரேக் (*Sir Francis Drake*) என்பவர், இன்று டிரேக் விரிகுடா என அழைக்கப்படும் இடத்தில் வந்து கரை இறங்கினர். ஆனால், அவர் இங்கு யாரையும் குடியமர்த்தவில்லை. 1770-இல் கிறிஸ்தவச் சமயப் பிரசாரகர்கள் சமயப் பிரசாரத்திற்காக ஸ்பெயினிலிருந்து இங்கு வந்தார்கள். அவர்கள் இங்கு நிரந்தரமாகக் குடியேறியதன் காரணமாக இந்நிலப்பகுதி ஸ்பெயினுக்குச் சொந்தமாகியது. அண்டை நாடான மெக்சிகோவும் அப்போது ஸ்பானிய ஆட்சியிலிருந்தது. 1811-இல் மெக்சிகோ புரட்சி செய்து சுதந்திரம் பெற்ற பின்னரும் சிறிது காலம் கலிபோர்னியா, ஸ்பெயின் ஆதிக்கத்தின்கீழேயே இருந்தது. 1822-இல் ஸ்பெயின் ஆதிக்கத்திலிருந்து கலிபோர்னியா

விட்டு மெக்சிகோவின் ஒரு மாநிலமாக இணைந்தது. 1840 இலிருந்து இம்மாநில மக்களுக்கும் அமெரிக்க மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஏராளமான அமெரிக்கர்கள் இங்கு வந்து குடியேறத் தொடங்கினார்கள். ஆனால், சில ஆண்டுகளில் இங்கிருந்த அமெரிக்கர்களுக்கும் மெக்சிகோ குடிகளுக்குமிடையே பகைமை மூண்டது. 1844-இல் அமெரிக்கக் குடிகளைப் பாதுகாப்பதற்காகக் கலிபோர்னியா சென்ற அமெரிக்கப்படை, மெக்சிகோப் படையைத் தோற்கடித்தது. 1848-இல் இருதரப்பினருக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கலிபோர்னியா, அமெரிக்காவுடன் இணைந்தது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு, 1850-இல் கலிபோர்னியா அமெரிக்காவின் 31-வது மாநிலமாக ஆகியது. இதற்கிடையில், 1849 இல் இம்மாநிலத்தில் தங்கப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பிற பகுதிகளிலிருந்து ஏராளமானவர்கள் இங்கு வந்து குடியேறத் தொடங்கினார்கள். 1906-இல் ஏற்பட்ட பயங்கரப் பூகம்பத்தில் சான்பிரான்சிஸ்கோ நகரம் பெரும்பாலும் நாசமாகிவிட்டது. அந்நகர் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. 1900-க்குப் பிறகு இம்மாநிலத்தில் தொழில் துரிதமாகப் பெருகியது. மக்கள் எண்ணிக்கையும் 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை இருமடங்காகப் பெருகிக்கொண்டே வந்தது. இன்று, அமெரிக்காவில் பல்வளம் கொழிக்கும் முக்கிய மாநிலங்களில் ஒன்ருக இது திகழ்கிறது.

**அரசியலமைப்பு**

அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனி அரசியலமைப்பு (*Constitution*) உண்டு. கலிபோர்னியாவுக்கும் தனி அரசியலமைப்பு இருந்து வருகிறது. இதன்படி, 80 உறுப்பினர்களைக் கொண்ட மாநிலச் சட்ட சபையும் (*State Assembly*), 40 உறுப்பினர்கள் கொண்ட மாநில மேல்சபையும் (*Senate*) இயங்கி வருகின்றன. சட்டசபை

உறுப்பினர்கள் ஈராண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறுர்கள். மேல்சபை உறுப்பினர்களில் பாதிப்பேர் ஈராண்டுகளுக்கு ஒருமுறை 4 ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறுர்கள். சட்டசபைக்கான தேர்தல் இரட்டைப்படை எண்ணுள்ள ஆண்டுகளில் நடைபெறுகிறது. அதாவது சென்ற தேர்தல் 1964-இல் நடந்தது. அடுத்த தேர்தல் 1966-இல் நடக்கும். அதற்கு அடுத்து 1968-இல் தேர்தல் நடைபெறும்.

**சட்டசபை**

சட்டசபைக் கூட்டம் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. தேர்தல் நடந்து முடிந்தபின் பிறக்கும் புத்தாண்டில் சனவரி முதல் தேதிக்குப் பிறகு வரும் முதலாவது திங்கட்கிழமையன்று சட்டசபைக் கூட்டம் தொடங்கி, சனி, ஞாயிறு தவிர்த்த 120 நாட்களுக்கு அதிகப்படாமல், கூட்டம் நடைபெறும். சட்டசபையின் வரவு-செலவுத் திட்டத் தொடர்கூட்டம் (*Budget session*) ஒற்றைப்படை எண்ணுள்ள ஆண்டுகளில் (1965, 1967, 1969) நடைபெறுகிறது. இத்தொடர் கூட்டத்தில் நிதி பற்றிய விவகாரங்கள்தான் விவாதிக்கப்படுகின்றன. இத்தொடர் கூட்டம் 30 நாட்கள் வரை தொடர்ந்து நடக்கும். நெருக்கடியான சமயங்களில் சட்டசபையின் அவசரக் கூட்டத்தை ஆளுநர் கூட்டுகிறுர்.

**பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்**

அமெரிக்கப் பாராளுமன்றத்தின் (*Congress*) இரு சபைகளுக்கும் 1928-ஆம் ஆண்டிலிருந்தே இம்மாநிலத்திலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறுர்கள். பிரதிநிதிகள் சபைக்கு (*House of Representatives*) மக்கள் தொகையின் அடிப்படையில் 38 பிரதிநிதிகளும், மேல் சபைக்கு (*Senate*) இரண்டு உறுப்பினர்களும் இம்மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறுர்கள். மத்திய மேல் சபையில் மாநிலத்திற்கு இரு உறுப்பினர்கள் வீதம் 100

உறுப்பினர்கள் உள்ளனர். பெரிய மாநிலமானாலும் இரு உறுப்பினர்கள்தான்; சிறிய மாநிலமானாலும் இரண்டு உறுப்பினர்கள்தான். இந்த முறையை மாற்றி, மேல் சபைக்கும் மாநில மக்கள் தொகையின் அடிப்படையிலேயே உறுப்பினர்கள் எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டுமென அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் (*Supreme Court*) அண்மையில் கருத்துத் தெரிவித்துள்ளது. வருகிற தேர்தலில் இந்த ஆலோசனைப்படி மேல்சபை உறுப்பினர்கள் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆளுநர்**

இம்மாநிலத்தின் ஆட்சித் தலைவரும் (*Head of the State*), நிருவாகத் தலைவரும் (*Executive Head*) மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆளுநரே (*Governor*) ஆவார். ஆளுநரை வாக்காளர்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர் நான்கு ஆண்டுகள் பதவி வகிக்கிறார். கலிபோர்னியா மாநில ஆளுநர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒருவர் 25 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்; அமெரிக்காவின் குடிமகனாகவும், இம்மாநிலத்தில் குறைந்தது 5 ஆண்டுகள் வாழ்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

மாநிலத்தின் தலைமை ஆட்சி அதிகாரி என்ற முறையில் நிருவாகத்திற்கான எல்லா அதிகாரங்களும் ஆளுநருக்கு உண்டு. மாநில அரசாங்கத்தின் பல்வேறு துறைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்தவும், அவற்றின் செயல் முறைகளைத் திட்டமிட்டுத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. மாநில இராணுவத்தின் தலைமைத் தளபதியும் (*Commander-in-chief*) அவரே. பல்வேறு உயர் அதிகாரிகளையும், அரசாங்கக் குழுக்கள், கழகங்களின் உறுப்பினர்களையும் நியமிக்கவும், தண்டனைகளைக் குறைக்கவும், குற்றவாளிகளை மன்னிக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

சட்டங்களை இயற்றுவதிலும் ஆளுநருக்கு முக்கியப் பங்கு உண்டு. சட்டசபைக் கூட்டம் தொடங்கும்பொழுது மாநிலத்தின் நிலைமை குறித்துச் சட்டசபையில் அறிக்கை அளிக்கிறார். என்னென்ன சட்டங்களை இயற்ற வேண்டுமெனப் பரிந்துரைக்கிறார். மாநில வரவு செலவுத் திட்டத்தையும் சட்டசபையில் அளிக்கிறார். சட்டசபையில் நிறைவேறும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்துச் சட்டமாக்குகிறார். சட்டசபையில் நிறைவேறிய மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநர் மறுக்கலாம். அந்த மசோதாவை இருசபைகளும் மூன்றில் இருமடங்குப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றிச் சட்டமாக்கலாம்.

மாநில அரசியலமைப்பின்படி லெப்டினண்ட் ஆளுநர் ஒருவரும் இருக்கிறார். இவர் மாநில மேல்சபையின் அவைத் தலைவர் (*President*). ஆளுநர் இல்லாத சமயங்களில் இவர்தான் ஆளுநரின் பொறுப்புக்களைக் கவனிக்கிறார்.

இந்தியாவில் உள்ளது போன்று மாநில முதலமைச்சர் பதவி அமெரிக்காவில் எந்த மாநிலத்திலும் கிடையாது. கலிபோர்னியாவிலும் முதலமைச்சர் யாரும் இல்லை. முதலமைச்சரின் அலுவல்களில் பெரும்பாலானவற்றை ஆளுநரே கவனித்துக் கொள்கிறார். அரசாங்க அமைச்சர் (*Secretary of State*) என அழைக்கப்படுபவர், சட்டசபை இயற்றும் சட்டங்களைச் சரியான முறையில் பதிவு செய்வதுடன், அரசாங்கத்தின் நிருவாகத் துறைகளையும் சீராக வைத்துக் கொள்கிறார். அரசியலமைப்புச் சட்டங்கள் ஆகியவற்றின் நகல்களையும் இருசபைகளின் சான்றுகளையும் பத்திரமாகப் பேணுவதும், அரசாங்க முத்திரையைப் (*Great Seal*) பாதுகாப்பதும் அவரது பொறுப்பாகும். தேர்தல் சட்டங்களை முறையாகச் செயல்படுத்துவதும், தேர்தல் நேர்மையாகவும் நியாயமாகவும் நடைபெறும்படிச் செய்வதும் அரசாங்க அமைச்சரின் பொறுப்பு.

அரசாங்கக் கணக்குத் தணிக்கையாளர் (*Controller*), அரசாங்கப் பொருளாளர் (*Treasurer*), மாநிலப் பொதுக்

கல்வித் தலைமை அதிகாரி (*Superintendent of Public Instruction*). அரசாங்கத் தலைமை வழக்குரைஞர் (*Attorney General*) ஆகியோர் மாநில நிருவாகத்தில் முக்கியப் பொறுப்பேற்றுள்ள மற்ற உயர்தர அதிகாரிகளாகும்.

**நீதி நிருவாகம்**

மாநில நீதி நிருவாகத்திற்கான அதிகாரங்கள் மேல் [illegible] உள்ளன. மாநிலத் தலைமை நீதிமன்றம் (*Supreme Court*) ஒன்றும் மாவட்ட நீதிமன்றங்களும், [illegible] நகர நீதிமன்றங்களும் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் (*County*) குறைந்தது ஒரு நீதிமன்றம் உண்டு. அதில் ஒரு நீதிபதி இருக்கிறார்.

மாநிலத் தலைமை நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும் (*Chief Justice*), மற்றும் ஆறு இணை நீதிபதிகளும் (*Associate Justices*) உள்ளனர். நீதிபதிகளை ஆளுநர் நியமிக்கிறார். நீதிபதிகளின் முழுப் பதவிக்காலம் 12 ஆண்டுகள். அவர்கள் தொடர்ந்து பதவியில் நீடிக்க வேண்டுமா என்பதை வாக்காளர்கள் நிர்ணயிக்கிறார்கள். மாவட்ட நீதிபதிகளை 6 ஆண்டுக் காலத்திற்கு மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

# 3. உழைப்பால் உயர்ந்த மக்கள்

உலகத்திலுள்ள பிறநாட்டு மக்களைப்போலன்றி, அமெரிக்க மக்கள், தாங்கள் வாழும் நாட்டின் ஆதிக்குடிகள் அல்லர். அமெரிக்கரின் பண்பிலுள்ள பல அம்சங்களுக்கு இது அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கிறது. பெயர் பெற்ற அமெரிக்க வரலாற்றறிஞர் டேவிட் போட்டர் *(Davi Potter)* இதைத் தெளிவாகப் பின்வருமாறு விளக்குகிறார்:

"உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் தொல் குடிமரபு *(Ethnic root)* என்று ஒன்று உண்டு. காலிக் *(Gallic)* என்ற ஆதி மரபைச் சேர்ந்தவர்கள் பிரெஞ்சுக் காரர்கள். டியூடோனிக் *(Teutonic)* மரபின் வழி வந்தவர்கள் செர்மானியர்கள்; ஆங்கிலேயர்களோ ஆங்கிலோ-சாக்சன் என்ற தொன்மை மரபைச் சேர்ந்தவர்கள். உரோமன் மரபு இத்தாலியர்களுடையது. ஐரிசு மக்கள் செல்டிக் *(Celtic)* இனத்தைச் சேர்ந்தவர்கள். இதைப் போன்று தங்களின் ஆதி இனம் என்று சொல்லிக்கொள்வதற்கு அமெரிக்க மக்களுக்கு ஓர் இனம் ஏதும் கிடையாது. அமெரிக்காவின் ஆதிவாசிகள் என்று சிவப்பிந்தியர்களை *(Red Indians)* ஓரளவுக்குச் சொல்லலாம். மற்ற அமெரிக்கர்கள், இந்நாட்டில் ஆதியிலிருந்து வாழ்பவர்கள் அல்லர்; பாதியில் இங்கு வந்து குடியேறியவர்கள்".

## கலப்பு இனம்

அமெரிக்க மக்களின் பண்பை (*Character*) எளிமையான தொல்குடி மரபுச் சொல் (*Ethnic term*) கொண்டு விளக்க முயல்வது, இன்றைய அமெரிக்கச் சமுதாயத்தின் பலதிறப்பட்ட கட்டுக்கோப்பைப் புறக்கணிக்கும் செயலாகும். 1790-ஆம் ஆண்டில், அமெரிக்காவில் முதன் முதலாக மக்கள் தொகைக் கணிப்பு (*Census*) நடத்தியபோது, அந்நாட்டின் மக்கள் தொகை மொத்தம் 40 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டது. இதில் ஏறத்தாழ ஏழரை இலட்சம் பேர் நீக்ரோ அடிமைகள். ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களில் ஐந்தில் நால்வர் விதம் இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள். செர்மனி, ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்களும் கணிசமாக இருந்தார்கள். மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்தவர்களும் ஓரளவுக்கு இருந்தார்கள். இந்தக் கலப்புச் சமுதாய அமைப்பைக் கருத்தில் கொண்டுதான், 1782-இல் கிரீவ்கூவர் (*Crevecoeur*) என்ற வரலாற்று ஆசிரியர், "அமெரிக்கர் பண்பு" பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "ஆங்கிலேயர், ஸ்காட்லாந்துக்காரர்கள், ஐரிசுக் காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், செர்மானியர், சுவீடானியர் ஆகிய பல்வேறு மக்களைக் கொண்ட கலப்பு இனமே இன்றைய அமெரிக்கச் சமுதாயம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இதன் பின்னர் கடந்த 150 ஆண்டுகளில், மேலும் 4 கோடி மக்கள், அயல் நாடுகளிலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறினார்கள். இதனால் அமெரிக்க மக்களின் தொல்குடி அமைப்பு (*Ethnic Composition*) மேலும் கலப்பாகியது. வெளிநாடுகளிலிருந்து வந்து புதிதாகக் குடியேறிய 4 கோடிப் பேரின் புள்ளி விவரங்கள் வருமாறு: செர்மனி 60 இலட்சம்; இத்தாலி 50 இலட்சம்; அயர்லாந்து 45 இலட்சம்; பிரிட்டன் 45 இலட்சம்; ஆஸ்திரியா ஹங்கேரி 40 இலட்சம்; இரசியா 35 இலட்சம்; கனடா 30 இலட்சம்; சுவீடன் 10 இலட்சத்திற்குச் சற்று அதிகம்.

ஐரோப்பாவிலும், மற்ற மேலை நாடுகளிலுமிருந்துதான் அதிகமானவர்கள்' இங்குவந்து குடியேறினார்கள் என்பதை மேற்கூறிய புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. ஆசிய நாடுகளிலிருந்தும் இங்கு ஓரளவுக்கு மக்கள் வந்து குடியேறினார்கள். இப்படியாக, 1930-இல் அமெரிக்க மக்களில் குறைந்தது 10% பேர் அயல் நாடுகளில் பிறந்தவர்களாக இருந்தார்கள். எனவே, அமெரிக்க மக்களை எந்த ஒரு தனிப்பட்ட தொல்குடி மரபின் வழி வந்தவர்கள் என்று திட்டவட்டமாகக் கூறுவது இயலாத காரியமாகவே இருந்து வருகிறது.

**பிரிட்டிசு சாயல்**

அமெரிக்காவை "ஆங்கிலோ-சாக்சன் நாடு" என்றே அழைக்கலாம் எனச் சிலர் கருதுகிறார்கள். அமெரிக்க மக்களில், பிரிட்டிசார் தனிப்பெரும் இனமாக இருந்த போதிலும், பல்வேறு நாடுகளையும் பலதிறப்பட்ட இனங்களையும் சேர்ந்த மக்களின் கலப்புத்திருமணங்களினால் உருவானதுதான் இன்றைய அமெரிக்கச் சமுதாயம் என்பதை மனதிற் கொள்வோமானால் அமெரிக்காவை "ஆங்கிலோ—சாக்சன் நாடு" என அழைப்பது எத்தனை பொருத்தமற்றது என்பது தெளிவாகும். ஆயினும் பண்பாடு, நிறுவனங்கள் (*institutions*) ஆகியவற்றைப் பொருத்த மட்டில் இந்நாட்டை "ஆங்கிலோ—சாக்சன் நாடு" என ஓரளவுக்கு அழைக்காலம். சமூகஇயல் அறிஞரான வில் எர்பெர்க் (*Will Herberg*) என்பவர்,

"நமது (அமெரிக்கர்) பண்பாடு முழுவடிவம் பெற்றது 'கொதிகல'னில் (*Melting pot*) அன்று; உருமாற்றுக் கலனில்தான் (*Transmuting pot*). இந்த உருமாற்றுக்கலனில் தான் நமது பண்பாட்டு சமயக் கூறுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து இரண்டறக் கலந்து ஆங்கிலோ—சாக்சன் சாயலுடன் முழுவடிவம் பெற்று வெளிவந்திருக்கிறது. நம்முடைய பண்பாட்டு உறவுகள் பிரிட்டிசு மரபுகளிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கின்றன. எனினும், அமெரிக்காவில் குடி

...ரி. இன்று அமெரிக்க மக்களில் பெரும்பான்மையின ராக உள்ள மற்ற இனத்தவர்களின் பண்பாட்டுடன் ஒப் பிடும் பொழுது, பிரிட்டிசு மரபோடு அமெரிக்கப் பண் பாடு சற்று நெருக்கமானதாகத் தோன்றுகிறது'' என்று கூறியுள்ளார்.

மொழி

ஆங்கிலத்தையே தங்கள் நாட்டு மொழியாக (National language) அமெரிக்க மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பதி லிருந்து, அமெரிக்கப்பண்பை உருவாக்குவதில் பிரிட்டிசு மரபு எவ்வளவு மேலாதிக்கம் செலுத்தியுள்ளது என்பது தெளிவாகும். இந்தியாவையோ, கனடாவையோ அல்லது சுவிட்சர்லாந்தையோ போன்று அமெரிக்கா, பலமொழி களைப் பேசும் சமூகப் பிரிவுகளைக் கொண்ட நாடு அன்று. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் மக்களின் தாய்மொழி யாகவும் நாட்டு மொழியாகவும் ஆங்கிலமே இருந்து வரு கின்ற காரணத்தால், பிரிட்டிசு இலக்கியக் கருவூலம் முழு வதும் அமெரிக்கருக்கு உதவுகின்றது. கோதே (Goethe) அல்லது தாந்தேயை (Dante)விட சேக்சுபியருடன் தனக்கு நெருக்கமான உறவு இருப்பதாக ஒவ்வொரு அமெரிக்கனும் கருதுகிறான். ஆனால், மொழி ஒன்றாக இருப்பினும், சொற் களை உச்சரிப்பதிலும், பேசுவதிலும், எழுதுவதிலும் அமெரிக்கருக்கும் பிரிட்டிசாருக்குமிடையே நிறைய வேறு பாடுகள் இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

அமெரிக்கர்கள், 1776-இல் சுதந்திரப் பிரகடனம் செய்யும் வரையில், சுமார் ஐந்து தலைமுறைக் காலம் பிரிட்டிசு ஆட்சியின் கீழ் இருந்து வந்தார்கள். இக்காலத் தில் அவர்கள் தங்களைப் பிரிட்டிசு குடிகள் என்றே கருதினார் கள். இங்கிலாந்துப் பொதுச்சட்டத்தின் (Common law of England) மரபுகளையே அமெரிக்க நீதிமன்றங்களிலும் கடைப்பிடித்து வந்தார்கள். அமெரிக்கப் புரட்சி நடந்த சமயத்தில், இச்சட்ட மரபுகளை அமெரிக்க மக்கள் அப்

படியே தூக்கி எறிந்து விடவில்லை. மாறுக, அமெரிக்கா வில் சீரான நீதிநிருவாக முறையை (*American Judicial System*) உருவாக்குவதற்கு முன் மாதிரியாக வைத்துக் கொண்டார்கள். இவ்விதமாக, அமெரிக்க வழக்கறிஞர் கள், இங்கிலாந்துப் பொதுச்சட்டத்தை ஆழமாகப் படித் தறிந்தார்கள்; அதை நீதிமன்றங்களில் பயன்படுத்துவதில் பயிற்சி பெற்ருர்கள்; ஆங்கிலோ—அமெரிக்கச் சட்டப் பரம்பரையில் (*Anglo-American legal tradition*) தாங் களும் ஓர் அங்கம் என எண்ணிஞர்கள்.

**உரிமைக்குப் பாதுகாப்பு**

அரசியல் நிறுவனங்களை (*Political institutions*) நிறுவு வதிலும், பிரிட்டிசு மரபையே அமெரிக்கர்கள் முன் மாதிரி யாகக் கொண்டார்கள். அமெரிக்கர்கள் சுதந்திரப் பிர கடனம் செய்தது, அரசியலமைப்பின் (*Constitution*) படி முற்றிலும் சரியே என்பதை வலியுறுத்த சான் லாக் (*John Locke*) எழுதிய பிரிட்டிசு அரசியலமைப்பு மரபு விளக்கத் திலிருந்து ஆணித்தரமான ஆதாரங்களை மூன்ரும் ஜார்ஜ் மன்னரிடம் எடுத்துக்கூறி ஜெபர்சன் (*Jefferson*) வாதாடி ஞர். குடிகளின் அடிப்படை உரிமைகளுக்கு உறுதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அமெரிக்கர்கள் எழுப்பி யதற்கு, பிரிட்டிசாரின் அனுபவ வாயிலாக ஏற்பட்ட தூண்டுதலே காரணம். 1787-இல் தங்களின் சொந்த அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள அமெரிக்கர்கள் முனைந்தபோது, தேசிய அரசாங்கத்தின் (*National Government*) பல்வேறு பிரிவுகளிடையே அதிகாரங்களைப் பகிர்ந் தளிக்கும் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். பிரிட்டிசு அரசியல் சிந்தனையாளர்களின் கருத்துரைகளி லிருந்தும், பல்வேறு அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் (*Colonies*) அரசாங்கங்கள் இயங்கிவந்த முறையின் மூலம் பெற்ற அனுபவத்திலிருந்தும், அதிகாரங்களைப் பரவலாக் கும் கொள்கையின் சிறப்பினை அமெரிக்கர்கள் உணர்ந்து கொண்டார்கள். ‘அமெரிக்கர்கள் யாராயிருந்தாலும்,

அவர்கள் எந்த நாட்டிலிருந்து வந்திருப்பினும், எந்தத் தொல்குடிமரபைச் சேர்ந்தவராயினும், அவர்கள் ஒவ் வொருவரின் தனி உரிமைகளும் முற்றிலும் பாதுகாக்கப்பட வேண்டும்; அரசியலமைப்பின்படி அமைந்த அரசாங்கத்தை ஒவ்வொருவரும் மதித்து நடக்க வேண்டும்' என்னும் உன் னதமான அடிப்படைத் தத்துவத்தை எல்லா அமெரிக் கரும் உயிர் மூச்சாகக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா வின் இன்றையத் தலை சிறந்த சட்டப் பள்ளிகளில் ஒன்றின் (ஹார்வார்டு) தலைவாசலில் பொறிக்கப்பட்டிருக்கும்,

''நாம் அடிபணிவது மனிதனுக்கு அன்று;
ஆண்டவனுக்கு; சட்டத்திற்கு!''

என்ற பொன்மொழி, அமெரிக்க மக்களின் மனப்பான் மையை எதிரொலிக்கிறது.

**உயர் தனிப்பண்பு**

எல்லாத் துறைகளிலும் உன்னத நிலையை எட்டவேண் டும் என்பதே அமெரிக்கரின் குறிக்கோளாக இருந்து வரு கிறது. அரசியலா? விஞ்ஞானமா? விளையாட்டா? எதிலும் அமெரிக்காவே முன்னணியில் திகழவேண்டும் என அவர் கள் விரும்புகிறார்கள். எனவே, உலக விளையாட்டுக்களில் உடல் வலிமையை—திறமையைக் காட்டி வெற்றி பெறு வதில் அவர்கள் பேரார்வம் காட்டுகிறார்கள். வெற்றி, தோல்வி இரண்டையும் சரிசமமாகப் பாவிக்கும் பண்பு எந்த விளையாட்டிற்கும் இன்றியமையாத ஒன்று. இந்தப் பண்பு அவர்களுக்குக் கைவரப் பெற்றிருக்கிறது. விளை யாட்டுப்பந்தயங்களில் விதி முறைகளுக்குக் கட்டுப்பட்டு வெற்றிவாகை சூடுவதற்கு அவர்கள் படாதபாடு படுவார் கள். பந்தயத்தில் தோல்வி கண்டால் மனக்கவலை கொண்டு மயங்கிக் கிடப்பதில்லை. தோல்வியை அக்கணமே மறந்து விட்டு, அடுத்த வெற்றிக்கு ஆயத்தமாவார்கள். தோல்வி யால் துவள்வதும், வெற்றியால் செருக்கடைவதும் அவர்

களிடம் காணமுடியாத பண்பு. விளையாட்டில் மட்டுமின்றி வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலுமே இப்பண்பை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

வெற்றி — தோல்வியைச் சரிசமமாகக் கருதும் அமெரிக்க மக்களின் அரிய பண்பு என்னை மிகவும் கவர்ந்தது. விளையாட்டிலாகட்டும், வேலையிலாகட்டும், விளையாட்டின் விதிமுறையினையே (*Rule of game*) அமெரிக்கர்கள் கடைப்பிடிக்கிறார்கள். அதாவது எதிராளிக்கும் நியாயமான வாய்ப்பை வழங்குகிறார்கள். ஒரு போட்டியில் அமெரிக்கர் தோற்றால் தோல்வியை அவர் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்கிறார். தோற்கடித்தவர் மீது அவர் கடுகளவும் பகைமை பாராட்டுவதில்லை. மாறாக வெற்றி வீரரைக் கட்டித் தழுவிப் பாராட்டுகிறார். அவருக்கு ஈடாக நன்கு விளையாடியதற்காகத் தன்னைத்தானே பாராட்டி ஆறுதலடைகிறார். தேர்தல்களைப் பாருங்கள்! தேர்தலின்போது வேட்பாளர்கள் கடுமையாகப் போட்டியிடுகிறார்கள். ஒருவரை யொருவர் தாக்குவதையும், வாக்குவாதம் புரிவதையும் வசைமாரி பொழிவதையும் காணும்போது எலி-பூனைச் சண்டை கூடக் கெட்டது கேடு என்று எண்ணத் தோன்றும். ஆனால், தேர்தல் முடிந்தவுடன், வெற்றிபெற்றவரை நேரில் சந்தித்து அவரை வாயாரப் புகழ்ந்து பாராட்டி வாழ்த்துக்கூறும் முதல் ஆளாக அவரை எதிர்த்துப் போட்டியிட்டவரே நிற்பார். இத்தகைய உயர்ந்த பண்பு மற்ற நாட்டவரிடம் இல்லாமலில்லை. ஆனால், அமெரிக்கரிடம் இது உயர்தனிப்பண்பாகச் செழித்தோங்கி இருக்கிறது.

1952-இல் நடந்த குடியரசுத்தலைவர் தேர்தலில் தோல்வியுற்ற அட்லாய் ஸ்டீவன்சன், வெற்றி கண்ட ஐசனோவரைப் பாராட்டி வெளியிட்ட அறிக்கையில்,

"தேர்தலுக்கு முன்பு கடுமையாகப் போட்டியிடுவது அமெரிக்கரின் பரம்பரைப் பண்பு; அதேபோல், தேர்தல்

முடிந்து மக்களின் தீர்ப்புத் தெரிந்ததும் வெற்றி வீரரைத் தோற்றவரே போற்றிப்புகழ்வதும் அமெரிக்கருக்கே உரித்தான சிறப்பான பண்பு''

—என்று குறிப்பிட்டிருந்தார். மேற்கூறிய கருத்தை மெய்ப்பிக்க இதைவிடத் தக்க சான்று வேறு வேண்டுமா?

## நேர்மையான போட்டி

விதிமுறைகளுக்கு முரணாகச் செல்லாமல், தீவிரமான போட்டா போட்டியில் இறங்குவதில் அமெரிக்க வணிக சமுதாயத்தினரும் சிறிதும் சளைத்தவர்கள் அல்லர். நாட்டின் பொருளாதாரம் சீராகவும் செம்மையாகவும் துரிதமாகவும் முன்னேறுவதற்கு வணிகர்களிடையே நிலவும் நேர்மையான போட்டியுணர்வு பேருதவியாக இருக்கின்றது. வணிகத்துறையில் இந்தப் பந்தயம், அரசாங்கத்தின் தலையீடின்றி நடைபெறவேண்டுமென அமெரிக்க வணிகர்கள் விரும்புகின்றார்கள். ஆனால் அரசினர் இதிலிருந்து ஒரேயடியாக விலகி இருக்க வேண்டுமெனவும் அவர்கள் கூறவில்லை. இப்போட்டிக்கான சீரிய விதிமுறைகளை வகுக்கவும் அந்த விதிமுறைகளை மீறுபவர்களைத் தட்டிக் கேட்டு நேரிய வழியில் செலுத்தவும் அரசாங்கம் உதவ வேண்டும்; ஆனால் தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டாலின்றி, இப்போட்டியில் அரசாங்கமும் நேரடியாக இறங்கிவிடக் கூடாது; சுருங்கச் சொன்னால், பந்தயத்தில் நடுவரைப் போல் அரசாங்கம் பணியாற்ற வேண்டுமேயன்றி எந்தக் கட்சியிலும் சேர்ந்துவிடக் கூடாது என்பது அவர்கள் எண்ணம்.

## சுதந்திர உணர்வு

அமெரிக்கரும் பிரிட்டிசாரும் பேசும் மொழி ஒன்றுதான். தனி மனித உரிமைகளைக் காப்பதிலும், சட்ட ஆட்சியை (*Rule of law*) மதிப்பதிலும் இருவரும் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் என்பதும் உண்மைதான்.

ஆனால், இதைக் கொண்டு, மாபெரும் பிரிட்டனின் ஒரு கூறுதான் அமெரிக்கா எனக் கருதுவது தவறு. 1893-இல் பிரடரிக் ஜேக்சன் டர்னர் (*Frederick Jackson Turner*) எழுதிய கட்டுரையில் கூறியிருப்பதுபோல், அமெரிக்கரின் முரட்டுத்தன்மையிலும், வலிமையிலும், துல்லியமும், எதையும் அறிந்துகொள்ள வேண்டும் என்றஆர்வமும் மிளிர் கின்றன. எண்ணிய எண்ணியாங்கு எய்தும்திண்மையும், புத்தம்புதிய கருவிகளைக் கண்டுபிடிக்கும் நுண்ணறிவும் அவர்களின் உடன்பிறப்பு; உலகாயதப் பொருள்களை உடனுக்குடன் மனதில் பதித்துக்கொள்ளும் தனிப்பேராற்றல் அவர்களுக்கு உண்டு. அதில் அவர்களுக்குக் கலையுணர்வு குன்றியிருப்பினும், அதனினும் மேன்மையான குறிக்கோளையடைய அதைப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை போற்றுதற்குரியது. எந்நேரமும் பம்பரம்போல் சுற்றிச் சுழன்று சுறுசுறுப்பாக இயங்குவதில்அவர்கள் எறும்புக்கு நிகர். நல்லதற்காயினும், தீயதற்காயினும், எதிலும் தங்களின் தனித்துவத்தின் முத்திரையைப் பதிப்பார்கள். அவர்களுடைய நடவடிக்கைகளில் ஒருவித அகங்காரம் காணப்படுகிறது என்றால், அதற்குக் காரணம், மனிதனுக்கு மனிதன் அடிமை அல்லன் என்ற சுதந்திர உணர்வாகும்.

**உண்மை அமெரிக்கன் உழவன்**

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றார் வள்ளுவர். "வேளாண்மை வாழ்க்கையே வாழ்க்கை" என்பது அமெரிக்கர்கள் கருத்து. ஆரம்பக்கால அமெரிக்கர்கள், பிறரைத் தொழுதுண்டு பின்செல்லாமல், சுதந்திரமாக உழுதுண்டு வாழ்ந்து வந்த காரணத்தினால், எதிலும் அவர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியே மேலோங்கி நிற்கிறது. இன்றைய அமெரிக்கரின் தனி மனிதச் சுதந்திர உணர்வுக்கு, ஆதியில் அமெரிக்க விவசாயிகளிடம் குடிகொண்டிருந்த சுதந்திர உணர்வு வாழையடி வாழையாக வளர்ந்தோங்கி வந்திருப்பதே காரணம் எனலாம். ஆகவேதான், "சின்னஞ் சிறு பண்ணையில் சுதந்திரமாக உழுதொழில்

புரியும் விவசாயிதான் உண்மையான அமெரிக்கன்'' என்ற கருத்து உருவாகியது. இக்கருத்தை உலகெலாம் பரப்பியவர் தாமஸ் ஜெபர்சன் (*Thomas Jefferson*) ஆவார். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'' என்றது போல், உழவர் உற்பத்தி செய்யும் விளைபொருள்களையே சமுதாயத்தின் ஏனைய மக்கள் எதிர்பார்க்க வேண்டியிருந்த காரணத்தினால், அமெரிக்க வரலாற்றின் ஆரம்பக் காலத்தில், விவசாயிகள் தான் பெரிதும் மதிக்கப்பட்டார்கள். உழவர்கள், கைம் மாறு கருதாமல், இயற்கையோடிணைந்து கடுமையாக உழைக்கிறார்கள்; நகர வாழ்க்கையின் ஆடம்பரங்களிலும், குழப்பங்களிலும் கவனம் செலுத்தாமல், உணவுப் பொருள் களை விளைவித்துக் குவிப்பதிலேயே கண்ணாக இருக்கிறார் கள். இதனால், உழவர்கள் மற்றவர்களின் மரியாதைக் குரியவர்களாகிறார்கள். ஒரு நாட்டில் மக்களாட்சி தழைத் தோங்குவதற்குத் தனித்துவமும், சமவாய்ப்பும் அடிப் படைத் தேவைகளாகும் என்பது ஜெபர்சனின் கொள்கை. தனித்துவம், சமவாய்ப்பு—இவ்விரண்டின் முழு வடிவமாக அவர் கண்ணுக்குக் காட்சி தந்தவன் அமெரிக்க விவசாயி தான். எனவே, "உண்மையான அமெரிக்கன் பண்ணை வாழ் உழவனே'' என்று அவர் ஆணித்தரமாக எடுத்து ரைத்தார்.

**தனித்துவம்**

மேற்கூறியவாறு தனித்துவமும், சமத்துவமும் அமெ ரிக்கரின் உயர்தனிப் பண்புகளாக வளர்ந்தன. அமெரிக்க நாடு வளர வளர, இத்தனித்துவமும் மேலும் வலிவும் பொலிவும் பெற்று வளர்ந்தது. தன்முயற்சியும், உள்ளத் தில் ஊக்கமும் கொண்ட சுதந்திரமான முதலாளித்துவ வணிகர்கள் (*Capitalist Businessmen*) வளர்ந்தார்கள். மேலும், ஆதியில் குடியேறியவர்களில் பெரும்பான் மையினரான புராடஸ்டண்டு சமயப்பிரிவினரின் வழி வழிமரபும், தனித்துவம் தழைத்தோங்க உறுதுணையாக

இருந்தது. "பிறர் தலையீடின்றி ஆண்டவனுடன் மனித மனச்சாட்சி நேரடியாக உறவாடவேண்டும்" என்ற சமயக் கொள்கையில் நம்பிக்கையுடைய புராடஸ்டண்டுகள் "தனித்துவம்" வளர உதவியது இயற்கையே.

## இளமைத் துடிப்பு

சில முக்கியமான பண்புகள், பிரிட்டிசாருக்கும் அமெரிக்கருக்குமிடையே பொதுவானதாக அமைந்திருப்பினும், பிற பண்புகளைப் பொறுத்த வரையில் இரு நாட்டு மக்களும் வெகு தொலைவில் தனித்தே நிற்கிறார்கள். "பண்பாட்டில் அமெரிக்கரும் பிரிட்டிசாரும் வேறுபட்டவர்களே" என்று ஹங்கேரியப் பிரயாணிகளான பிரான்சிசும் *(Francis)* தெரசா புல்ஸ்கியும் *(Theresa Pulszky)* கூறியுள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்க—பிரிட்டிச பண்பாடுகளை ஒப்பிட்டுநோக்கி இவர்கள் கூறியுள்ள கருத்து வருமாறு :—

"ஆங்கிலேயன் தன்னைப் பற்றிப் பெரிதாக எண்ணுகின்றான். பிற நாட்டவர் தன்னை நேசிக்கிறார்களா, வெறுக்கிறார்களா என்பதைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. எல்லோரும் தன்னை மதித்து நடக்க வேண்டுமென அவன் விரும்புகிறான். தன்னுடைய சொந்தப்பழக்க வழக்கங்கள், பண்பாடு, வாழ்க்கை முறை, சிந்தனைப் போக்கு ஆகியவற்றுடன் ஆங்கிலேயன் என்றும் ஒட்டிக்கொண்டிருக்கின்றான். பழைமையை விரும்பும் மிதவாதியாக *(Conservative)* தனித்து வாழவே அவன் ஆசைப்படுகின்றான். அவனது தன்னம்பிக்கை மலையினும் மாணப் பெரிது. அதை யாராலும் அசைக்க முடியாது. தன்னைப் பிறர் ஏளனமாகப் பேசுவது கண்டு ஆங்கிலேயன் சிறிதும் கவலை கொள்வதில்லை. மாறாக அவர்களுடன் சேர்ந்து தானும் வாய் விட்டுச் சிரித்து மகிழ்வான். மொத்தத்தில் ஆங்கிலேயனின் நடவடிக்கையில் வயதின் முதிர்ச்சியைக் காணலாம்.

அமெரிக்கனோ இதற்கு நேர் மாறானவன். தனிமையில் இனிமை காண்பது அவனுக்குப் பழக்கமில்லை. வளர்ந்து வரும் ஒரு நாட்டின் குடிமகன் என்பதை ஒவ்வொரு அமெரிக்கனும் தெளிவாக உணர்ந்துள்ள காரணத்தால், உலக அரங்கில், செல்வச் செழிப்பிலும் புகழிலும் தாய் நாட்டை முன்னணிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற பெருவேட்கையுடன் அமெரிக்கன் அரும்பாடுபடுகிறான். தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு அதிகாரத்தையும்—அது யாரிடமிருந்து கிடைத்தாலும்—அதை மனதார வரவேற்று ஏற்றுக்கொள்கிறான். அமெரிக்காவில் வந்து குடியேறும் அயல் நாட்டினருடன் விரைவாகவும் அன்பாகவும் நெருங்கிப் பழகி அவர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறான். சுருக்கமாகச் சொன்னால் அமெரிக்கனிடம் இளமைத் துடிப்பைக் காணலாம். அமெரிக்கனின் இந்த இளமைத் துடிப்புத்தான் வெளி நாட்டினரைத் திறந்த மனதுடன் வரவேற்று அரவணைத்துக் கொள்ள உதவுகிறது. அதே சமயத்தில், இதே இளமைத் துடிப்புத்தான் கண்டனக் கணைகளைக் கண்டால் கடுங்கோபங் கொள்ளச் செய்கிறது.

அமெரிக்கன் எளிதில் உணர்ச்சி வயப்படுகிறான். அவன் செய்யும் தவற்றைக் காரண காரியங்களுடன் விளக்கிக் கூறினால், தவற்றைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்கிறான். ஆனால், பிறர் எள்ளிநகையாடுவதை அவன் சிறிதும் பொறுக்கமாட்டான். எனவேதான், ஆங்கிலேயரை எள்ளி நகையாடும் "பஞ்ச்" *(Punch)* என்ற பத்திரிகையைப் போன்று அமெரிக்காவில் ஒரு பத்திரிகையைக் கூடக் காண முடிவதில்லை."

## இளைய சமுதாயம்

அமெரிக்க நாடு காலத்தால் இளமையானது. அமெரிக்கர்கள் இளைய சமுதாயத்தினர். வேரூன்றிய பண்டை மரபுகள் அவர்களுக்கு மிகச் சிலவே. பிரிட்டனோ காலத்தால் தொன்மையானது. பிரிட்டிசார் தொல்குடி மர

பினர். உலகுக்கே எடுத்துக் காட்டாக விளங்கும் ஆழ்ந்து வேரூன்றிய எண்ணிறந்த மரபுகள் அவர்களுக்கு உண்டு. இந்த அடிப்படை வேறுபாடுதான், இரு சமுதாயத்தினரின் கண்ணோட்டமும் வேறுபடக் காரணமாக அமைகிறது. இவ்வேறுபாட்டுக்கு இன்னொரு காரணமும் கூறுகிறார் புல்ஸ்கி :

"ஆங்கிலச் சமுதாயத்தின் நிலையான தன்மை (*Steadiness*), அதனால் உருவான பிரபுத்துவ ஆட்சி நிறுவனங்கள் (*Aristocratic institutions*), பழக்கவழக்கங்கள் ஆகியவை ஆங்கிலேயர்களைப் பொதுவாக நிதானமுள்ளவர்களாகவும், எளிதில் ஆத்திரமடையாதவர்களாகவும் ஆக்கியிருக்கின்றன. அவர்களின் கருத்துக்களிலும், விருப்புக்களிலும் ஓர் உறுதிதென்படக் காரணம் இதுவே".

### சமத்துவ நோக்கம்

ஐரோப்பிய சமுதாயம் பரம்பரை வர்க்கபேதக் கட்டுக் கோப்பில் வளர்ந்தது. வர்க்கபேதத்திற்கு அப்பாற்பட்ட முறையில் அமெரிக்கச் சமுதாயம் உருவாகியது. இதை, பிரான்சைச் சேர்ந்த அலக்சி-டி-டோக்வில் (*Alexi de Tocqueville*) என்ற பிரபு 1830-இல் எழுதிய "அமெரிக்காவில் குடியாட்சி" (*Democracy in America*) என்ற நூலில் தெளிவாகக் கூறியுள்ளார். மக்களாட்சி, சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவான அமெரிக்கச் சமுதாயம்—பிரபுத்துவ ஆட்சி (*Aristocracy*), பரம்பரையாட்சி (*Hierarchy*) இவற்றின் அடிப்படையில் வளர்ந்த மரபுவழி ஐரோப்பிய சமுதாயம்—இவ்விரண்டையும் ஊடுருவி ஆராய்ந்து ஒப்பிட்டுநோக்கி, அந்த ஆய்வின் மூலம் கண்ட தெளிவின் அடிப்படையில் அமெரிக்க மக்களின் தனிப்பண்பை அறுதியிட்டுக் கூறினார் டோக்வில். அவரது கருத்தை, பேராசிரியர் ஹென்றி ஸ்டீல் கமேகர் (*Henry Steele Commager*) அண்மையில் எழுத்துக்குஎழுத்து அப்படியே உறுதி செய்திருக்கிறார் :

''அமெரிக்கரின் பண்புகள் அனைத்தையும் அரவணைத்துக் கொண்டிருப்பது அவர்களின் சமத்துவ நோக்கமே என 1830-ஆம் ஆண்டில் டோக்வில் கூறியிருப்பது, இந்த 1960-ஆம் ஆண்டிலும் நூற்றுக்கு நூறு பொருத்தமாக உள்ளது. நீக்ரோக்களுக்குச் சம உரிமை வழங்க மறுப்பது ஒருபுறமிருப்பினும், பொதுவாகப் பார்க்குமிடத்துச் சமத்துவம்தான் அமெரிக்கப் பண்பின் ஆணிவேராக அமைந்துள்ளது. பள்ளியா? கல்லூரியா? வாணிபமா? அரசியலா? சமயமா? இராணுவமா? எதிலும் நீக்கமற நிறைந்திருப்பது சமத்துவமே. எனினும் இந்தச் சமத்துவத்திலும் ஏற்றத் தாழ்ச்சி காணப்படுவது உண்மைதான். ஆனால், இந்த ஏற்றத் தாழ்ச்சி தற்காலிகமானதே: எந்த நேரத்திலும் இதை நீக்கிவிடலாம். ஆனால் சமத்துவத் தத்துவமோ ஆதியும் அந்தமும் இல்லாதது; நிலையானது''.

'சமத்துவம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? மரபுவழிச் சமுதாயத்திலிருப்பதுபோன்ற வர்க்கபேதம், அமெரிக்கச் சமுதாயத்தில் இல்லை. இதைவிடச் சிறப்பான சமத்துவம் வேறு என்னவேண்டும்? நாட்டின் செல்வத்தை நுகர்வதில் சமத்துவம்; சட்டத்தின் முன்பு எல்லோரும் சமம். அமெரிக்காவில் எங்கும் எதிலும் காணப்படும் இந்த உன்னதச் சமத்துவத்தைத்தான் பேராசிரியர் கமேகர் போற்றிப் புகழ்கிறார்.

**பேதமற்ற சமுதாயம்**

அமெரிக்காவில் வர்க்கபேதமற்ற சமுதாயம் அமைந்திருப்பது ஏன்? பேராசிரியர் லூயிஸ் ஹார்ட்ஸ் (*Louis Hartz*) இதற்கு மிகப் பொருத்தமான காரணம் கூறுகிறார்:

''அதிகாரங்களைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்து வந்த பிரபுக்களை எதிர்த்து, அடித்தளத்திலிருந்த மக்களும், நடுத்தரவகுப்பு மக்களும் இடைவிடாது போராட்டம் நடத்தி வந்ததன் விளைவாக ஐரோப்பாவில் வர்க்கபேதமுள்ள

சமுதாயம் அமைந்தது. அமெரிக்காவில் பரம்பரையான உயர் குடிகள் *(Upper class)* என்று யாருமே இருந்த தில்லை. எனவே அங்கு வர்க்கப்போராட்டத்திற்கு இடமே ஏற்படவில்லை. அமெரிக்காவிலும் புரட்சி ஏற்பட்டது உண்மை. அப்புரட்சி, அன்னியர் ஆதிக்கத்தை ஒழித்துச் சுதந்திரம் பெற நடந்த அரசியல் புரட்சி. 1789-இல் பிரான்சிலோ, 1917-இல் இரசியாவிலோ நடந்ததுபோன்ற சமுதாயப் புரட்சி அல்ல. ஐரோப்பிய நாடுகளில், வர்க்க பேதமும் அதனால் எழுந்த உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற ஏற்றத் தாழ்வும் தலைவிரித்தாடிய காரணத்தால் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் பிறந்த மார்க்சிசக் கொள்கை அந்நாடுகளில் எளிதில் ஊடுருவிச் செல்வாக்குப் பெற ஏதுவாகியது. ஆனால், அமெரிக்காவில் தொழிலாளர் சமுதாயத்தில்கூட வர்க்கபேதம் இல்லாமையால், பொதுவுடைமைத் தத்துவம் *(Communism)* நுழைவதற்கு இடமே ஏற்படவில்லை. எனவே பொதுவுடைமை இயக்கம் வலுவான அரசியல் கட்சியாக உருவாக இயலவில்லை''.

தொழிலாளர் இயக்கம்

"முதலாளித்துவத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கு மிடையே போராட்டம் தவிர்க்கமுடியாத ஒன்று'' என்ற கொள்கையை வற்புறுத்திவரும் அனைத்து நாட்டுத் தொழிலாளர்இயக்கத்திற்கு *(International workers of the world)*, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் அமெரிக்காவில் ஓரளவு ஆதரவு ஏற்பட்டது. ஆயினும், அவ்வியக்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 75,000-க்கு மேல் எட்டவில்லை. சிறிது காலத்திற்குப்பின், அந்த இயக்கமே இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது. பின்னர் தோன்றிய பொதுவுடைமை இயக்கமும் இன்றுவரை அங்கு வேரூன்ற முடியவில்லை. மாறாக, அமெரிக்கத் தொழிலாளர் இயக்கமானது, தனித்தன்மையுடன் ஆக்கத்திற்கு ஊக்கமளிக்கும் உருவான சக்தியாக உருப்பெற்றுத் தழைத்தோங்கி வளர்ந்திருக்கிறது. இவ்வியக்கம், மற்ற

உலக நாடுகளின் தொழிலாளர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்கிறது. அமெரிக்கத் தொழிலாளர் இயக்கச் சிற்பிகளில் ஒருவராகிய அடால்ப் ஸ்டிரேசர் (*Adolph Strasser*) 1883-இல் தொழிலாளர் இயக்கத்தின் நோக்கம் பற்றிக் குறிப்பிடுகையில், "எங்கள் தொழிலாளர் குறிக்கோளுக்கு இறுதி எல்லை (*Ultimate ends*) எதுவும் கிடையாது. அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதே எங்கள் நோக்கம். உடனடியாக, அதாவது சில ஆண்டுகளுக்குள் கிடைக்கக்கூடிய பலன்களுக்காகவே நாங்கள் போராடுகிறோம்" என்று கூறியுள்ளார்.

அதிக ஊதியம், குறைந்தநேரவேலை, மேலான வேலை நிலைமைகள், வேலைக்கு அதிகமான பாதுகாப்பு—இவையே அன்றும் இன்றும் அமெரிக்கத் தொழிலாளர்களின் முக்கிய நோக்கங்களாக இருந்துவருகின்றன. அரசியலமைப்பின் கீழ் தனிமனித உரிமைகளுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதையும் இந்த இயக்கம் வலியுறுத்தி வருகிறது. இந்நோக்கங்களைத் தவிர அவர்களுக்கு அரசியல் நோக்கம் ஏதும் கிடையாது. "முதலாளிகளை ஒழித்துக்கட்டித் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதிக்கத்தை அரசாங்கம் நிறுவவேண்டும்" என்ற பொதுவுடைமைத் தொழிலாளர் இயக்கத்தின் கொள்கைகளை அமெரிக்கத் தொழிலாளர்கள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

**அரசியல் கட்சிகள்**

வெளியிலிருந்து பார்ப்போருக்கு அமெரிக்க அரசியல் கட்சிகளின் போக்கு புரியாத புதிராக இருந்துவருகின்றது. டோக்வில், ஹார்ட்ஜ் இருவரும் இப்புதிருக்கு ஓரளவு விளக்கம் தந்திருக்கிறார்கள். இந்நாட்டில் மிகப்பெரிய அரசியல் கட்சிகளாக விளங்குபவை இரண்டுதான். ஒன்று குடியரசுக் கட்சி (*Republican Party*); மற்றொன்று ஜனநாயகக் கட்சி (*Democratic Party*). இவை இரண்டும் தேசியக் கட்சிகள். அரசியலமைப்பிற்குக் கட்டுப்பட்டு

தனிமனித உரிமைகளைப் பாதுகாத்து அரசாங்கம் இயங்க வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையில் இருகட்சிகளுமே ஆழமான நம்பிக்கை கொண்டவை. முற்போக்குக் கொள்கைகளைச் செயல்படுத்தப் போவதாகக் கூறிக் கொண்டு புரட்சியைத் தூண்டும் அதி தீவிர இடதுசாரிக் கட்சியோ (*Extreme left*), அரசியலமைப்பின் கீழ் அமைந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டுப் பழைய பத்தாம் பசலிப் பிரபுத்துவ ஆட்சியை ஏற்படுத்த எண்ணும் அதி தீவிர வலதுசாரிக் கட்சியோ (*Extreme Right*) அமெரிக்காவில் கிடையாது.

இன்று செல்வாக்குப் பெற்றிருக்கும் இரண்டு கட்சிகளும், ஆட்சியைக் கைப்பற்றத் தேர்தலில் கடுமையாகப் போட்டியிடுகின்றன. கொள்கைகளைப் பொறுத்த வரையில் இரு கட்சிகளுக்குமிடையே அதிக வேறுபாடு இருப்பதாகக் கூறமுடியாது. சம உரிமை—தனிமனித சுதந்திரம்—மக்கள் வாழ்க்கைத்தரஉயர்வு—இம்மூன்றும்தான் இரு கட்சிகளின் அடிப்படைக்கொள்கைகள். குறிக்கோள் ஒன்றுதான். அதை அடையும் வழிமுறைகள்தான் வேறுபட்டிருக்கின்றன. எனவே, அங்கு தேர்தல் போட்டி அழிவுமுறையில் இல்லாமல், ஆக்கமுறையில் நடைபெறுவதைக் காண்கிறோம்.

**நடுத்தர வர்க்கம்—சமுதாயத்தின் முதுகெலும்பு!**

19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அமெரிக்காவில் தொழில் வளர்ச்சி வேகமடைந்தது. அதைத்தொடர்ந்து, செல்வம் சிலரிடம் குவியத்தொடங்கியது. இதனால், ஏற்றத்தாழ்ச்சியற்ற, ஒரே சீரான நடுத்தரவர்க்கச் சமுதாயமாக இயங்கி வந்த அமெரிக்கச் சமுதாயம், ஏழை—பணக்காரர் என்று இரு பிரிவாகப் பிரிந்துவிடுமோ என்ற அச்சம் தோன்றியது. "இந்தச் சமயத்தில் பெயர்பெற்ற எஃகுத் தொழிலதிபராக விளங்கிய ஆண்ட்ரூ கார்னீகியின் (*Andrew*

*Carnegie)* சராசரி ஆண்டு வருமானம், ஒரு சராசரித் தொழிலாளியின் ஆண்டு வருமானத்தைப்போல் 20,000 மடங்காக இருந்தது'' என பிரடரிக் லெவிஸ் அலென் *(Frederick Lewis Allen)* கணக்கிட்டிருக்கிருர். பொருளாதார சமுதாயக் கட்டுக்கோப்பில் ஏற்படும் இத்தகைய பெரும்ஏற்றத்தாழ்ச்சியினுல் மக்களாட்சிமரபே சீரழிந்து விடுமோ என்று கூடச் சிலர் பயந்தார்கள். ஆனுல், இந்த அச்சம் நெடுநாள் நீடிக்கவில்லை. அமெரிக்காவின் மத்திய தர வர்க்கம் தக்க தருணத்தில் அபாயத்தை உணர்ந்து, தனது வலிமையைப் பெருக்கி, மேலாதிக்க உரிமையை அசைக்கமுடியாத அளவுக்கு நிலைநாட்டிக்கொண்டது.

அமெரிக்காவில் மக்களாட்சி நெறி *(Democratic ideal)* வேரூன்றிவிட்ட காரணத்தால், அங்கு தேர்தல்கள் சுதந்திரமாக நடந்தன. இந்தச் சுதந்திரமான தேர்தல்களின் மூலமாக ஒரு சில பழமைவாதிகள் வெற்றிபெற்று அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, எவ்விதக் கட்டுப்பாடுகளுக்கும் உட்படாமல் விரிந்து வளர்ந்துவிட்ட நாட்டின் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் *(Capitalist economy)* ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தவும் அந்தப் பழமைவாதிகள் முனைந்தார்கள். இந்த அபாயத்தை உணர்ந்த உட்ரோ வில்சன் *(Woodrow Wilson)* போன்ற அரசியல் தலைவர்கள் பழமைவாதிகளின் இந்த முயற்சிகளுக்கு அணைபோட்டுத் தடுத்து நிறுத்தி, நிலைமையைச் சீராக்கப் பாடுபட்டார்கள். 1913-முதல் 1921 வரைக் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சன், 1912-இல் நடந்த தேர்தலின்போது, ஒவ்வொரு பிரசாரக்கூட்டத்திலும், "அமெரிக்கச் சமுதாயத்தின் முதுகெலும்பாக—புதிய புதிய நிறுவனங்களை உருவாக்கும் சிற்பிகளாக—தொழில் நிறுவனங்களை ஆக்கி, அழிவுகளிலிருந்து காத்து அவற்றை நாட்டின் சொத்துக்களாக உருமாற்றும் காவலர்களாக—நாட்டின் முன்னேற்றத்திற்கு உயிரைக்கொடுத்துப் பாடுபடும் உழைப்பாளி

களாக விளங்கும் நடுத்தரமக்கள் இன்று மேன்மேலும் சுரண்டப்படுகிறார்கள்...'' என்று எடுத்துக் கூறினார்.

''தனியுடைமையைத் தகர்த்தெறிவோம்; மனிதனின் அடிமைத் தனத்தை ஒழித்துக் கட்டுவோம்; எல்லா மனிதனின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் மதிப்புக் கொடுத்து அவர்களுக்குச் சமஉரிமையும் சமவாய்ப்பும் அளிப்போம் என்று உலகுக்கு நாம் பறைசாற்றினோம். வாய்வீச்சில் மட்டுமின்றி, செயலிலும் நாம் வீரர்கள்தான் என்பதை மெய்ப்பிப்போம்''—என்ற உட்ரோ வில்சனின் முழக்கம் பழைமைவாதிகளின் முயற்சிகளைத் தரைமட்டமாக்கும் வேட்டாக அமைந்தது.

## சீர்திருத்தம்

சமத்துவத்துக்கு ஏற்பட்ட அபாயத்தை நீக்கவும், அமெரிக்கரின் வாழ்க்கை முறையை மேலும் வலுவான மக்களாட்சி நெறி அடிப்படையில் அமைக்கவும், உட்ரோ வில்சனும் அவருக்குப் பின்வந்த சீர்திருத்த நோக்கங் கொண்ட தலைவர்களும் பல திறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இவற்றில் மிக முற்போக்கானது, 1913-இல் முதன் முதலாக நிறைவேறிய வருமானவரிச் சட்டம் ஆகும். இது தவிர, தொழிலாளர் நலன் பேணுவதற்கான பல்வேறு சட்டங்களும், பொருளாதாரத்தின் ஒரு பிரிவான வாணிபத் துறையில் ஆக்க முறையிலான தீவிரப் போட்டாப் போட்டியை ஊக்குவிக்கும் சட்டங்களும் இயற்றப்பட்டன. உற்பத்தி பெருகிய அளவுக்கு மக்களின் தேவை பெருகாத காரணத்தால் 1929-இல் பொருளாதார வீழ்ச்சி (*Depression*) ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, நாட்டின் செல்வத்தை மேலும் சீரான முறையில் பகிர்ந்தளிப்பதற்கும், மக்களின் வாங்கும் திறனை (*Purchasing power*) உயர் மட்டத்தில் நிலையாக வைத்திருப்பதற்கும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விவசாய வருமானம் வீழ்ச்சியடையாமல் காப்பதற்கு உதவிநிதி (*Subsi-*

பட்டன) வழங்கப்பட்டது. நிருவாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே பேரம் பேசுவதில் சமத்துவத்தை நிலை நாட்ட மேலும் பல சட்டங்கள் வந்தன. வயது முதிர்ந்தோர், வேலை செய்ய இயலாதோர், வேலையற்றோர் ஆகியோருக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. சமவாய்ப்பை ஏற்படுத்த மேற்கொண்ட இந்நடவடிக்கைகளினால், நாட்டின் மொத்த வருமானம் மேலும் துரிதமாகப் பெருகியது. 1955-இல் 4000 கோடி டாலராக இருந்த தேசிய வருமானம், 5 ஆண்டுகளில் 5000 கோடி டாலராகப் பெருகியது. காலஞ்சென்ற கென்னடி, அமெரிக்கக் குடியரசுத் தலைவராகப் பணிபுரிந்த 3 ஆண்டுகளில் மட்டும், பிரிட்டனின் மொத்தத் தேசிய வருமானத்திற்குச் சமமான அளவுக்கு, அமெரிக்கத் தேசிய வருமானம் அதிகரித்திருக்கிறது. உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில், உலக மக்கள் தொகையில் 6 சதவிகிதம்தான் அமெரிக்கர்கள். ஆயினும், உலகின் விளைபொருள்கள், மற்றும் உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றில் ஏறத்தாழப் பாதி அமெரிக்காவில் உற்பத்தியாகின்றன. எனினும், அமெரிக்க மக்களில் பெரும்பாலோர் நடுத்தர வருமானப் பிரிவைச் சேர்ந்தவர்களே. 1959-ஆம் ஆண்டு எடுத்த புள்ளிவிவரப்படி, அமெரிக்கக் குடும்பங்களில் 49% குடும்பங்களின் ஆண்டுவருமானம் 5000 டாலருக்கும் 10,000 டாலருக்கு மிடைப்பட்டதாகவே இருந்தது. தனிநபர் வருமானமும் (*Per capita income*) படிப்படியாக உயர்கிறது. அமெரிக்கச் சமுதாயத்தின் நடுத்தர அடிப்படை மேன்மேலும் விரிவடைந்து வலுப்பெற்று வருகிறது.

**தேவைக்கு மேல் உற்பத்தி**

அமெரிக்கச் சமுதாயத்தில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், அத்தனையும் மக்களாட்சி நெறியிலும் சமத்துவத்திலும் அவர்களுக்குள்ள நம்பிக்கை மேலும் உறுதிப்படுவதற்கு வகை செய்தன. இந்த மாறுதல்கள்,

சில முக்கியமான விளைவுகளைத் தோற்றுவித்திருக்கின்றன. எளிமையான பொருளாதாரம் (*Simpler economy*) நிலவிய காலத்தில், அமெரிக்கரின் பண்பில் குடிகொண்டிருந்த தனித்துவம் (*individuality*) இன்று ஓரளவு மங்கிவிட்டது எனலாம். 150 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அமெரிக்கன் உழுதொழில் செய்து பிறரை எதிர்பாராமல் தன்னிறைவுடன் வாழ்ந்தான். ஆனால், இன்றைய அமெரிக்கர்களில் பெரும்பாலோர், மக்கள் நெருக்கடி மிகுந்த நகரங்களிலும் மாநகர்களிலும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வாழ்க்கைக்கு வருவாய் தேடுகிறார்கள். தேவையான அளவு வருவாய் வந்தாலும், உணவுக்கு உழுதொழில் செய்யும் சிறுபான்மையினரின் கையை அவர்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

அமெரிக்க மக்களின் தேவைகளும் இன்று அபரிமிதமாகப் பெருகிவிட்டன. நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தும் வீணாகாமல், பயனுள்ள முறையில் செலவழிய வேண்டும் எனக் கருதி அமெரிக்கர்கள் தங்களின் தேவைகளையும் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்றவாறு மேலும் மேலும் பெருக்கிக்கொண்டு போகிறார்கள். இது குறித்து டேவிட் போட்டர், "செல்வச் செழிப்பில் மிதக்கும் இன்றைய அமெரிக்கரின் பொருளாதாரத்தில் எழுந்துள்ள சிக்கல், உற்பத்தியை எப்படி அதிகரிப்பது என்பதல்ல; கட்டுக் கடங்காமல் பெருகிக்கொண்டு போகும் உற்பத்திக்கு இணங்கத் தங்கள் தேவைகளை எவ்விதம் உயர்த்திக் கொள்வது என்பதே அவர்களை அலைக்கழிக்கும் சிக்கல்" என்று கூறுகிறார்.

தேவைக்கு மீறி உற்பத்தி பெருகும்பொழுது உற்பத்திப் பொருள்களின் விற்பனையை அதிகரிக்க விளம்பரத் தந்திரங்களைப் பெருமளவில் கையாளவேண்டியிருக்கிறது. எனவே, மக்கள் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகிக் குவியும் பொருள்கள்மீது மக்களுக்கு மோகம் ஏற்படச்

செய்வதற்கு அமெரிக்காவில் விதவிதமான விளம்பர உத்திகள் கையாளப்படுவது இயற்கையே. டேவிட் போட்டர் இதை விளக்குகையில், "பொருள் பஞ்சம் நிலவும் பொருளாதாரத்தில், விளம்பரத்திற்குத் தேவையே இராது. ஏனெனில், தேவையான அளவுக்கு அல்லது தேவைக்குக் குறைவாக பொருள்கள் உற்பத்தியாகும்பொழுது, அப்பொருள்கள் எல்லாமே எளிதில் விற்பனையாகி விடுகின்றன. உற்பத்தியை விடத் தேவையின் அளவு குறைகின்றபோது தான் பொருளாதார இயக்கத்திற்கு விளம்பரம் இன்றியமையாத சாதனமாகப் பயன்படுகிறது. எனவே, அமெரிக்க மக்களின் தேவைகள் வெகுவாகப் பெருகியதற்கு விளம்பரக்கலை முக்கியக் காரணம்" என்கிறார்.

அரசாங்க அமைப்பைப் பற்றியும், இன்றைய அமெரிக்காவின் மனப்பான்மை ஓரளவு மாற்றம் கண்டிருக்கிறது. மக்கள் வாழ்விலும், நடவடிக்கைகளிலும் அரசாங்கம் தலையிடவே கூடாது என்று முன்பு அவர்கள் கருதினார்கள். இன்று சில ஆக்கப்பணிகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்க அவர்கள் தயாராயிருக்கிறார்கள். எனினும், தனி மனித உரிமையைப் பாதுகாப்பதிலும், தகுதி—திறமை அடிப்படையில் சமவாய்ப்பளிப்பதிலும் தொன்றுதொட்டு அவர்களுக்கு இருந்துவரும் நம்பிக்கை இன்றும் கடுகளவு கூடத் தளரவில்லை. நீக்ரோ மக்களுக்கு சமஉரிமை கிடைப்பதற்கு அமெரிக்கர்கள் இன்று நடத்தி வரும் போராட்டமே இதற்குத் தக்க சான்று.

### உழைப்பே உயிர்

அமெரிக்கச் சமுதாயத்தில் ஒருவரின் குடிநிலையை (*Status*) நிருணயிப்பதற்கு அவரது குடிமரபை யாரும் எண்ணத்தில் கொள்வதில்லை. மாறாக ஒவ்வொருவரின் தனிப்பட்ட திறமை (*Ability*), உழைப்பாற்றல் (*Energy*) ஆகியவற்றின் அடிப்படையில்தான் குடிநிலையை மதிப்பிடு

கிறார்கள். இதனால், உழைப்பையும் திறமையையும் காட்டுவதில் அங்கு கடும்போட்டி நிலவுகிறது. இந்தப் போட்டியைக் கண்டு, அமெரிக்கர்கள் பொருள் சேர்ப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படுகிறது. பணத்தில் அமெரிக்கருக்கு உள்ள நாட்டம் பற்றி ஐரோப்பியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதற்கு ஹியூகோ முன்ச்டர்பர்க் (*Hugo Munsterburg*) என்னும் ஜெர்மானியர் கூறியுள்ள கருத்து தக்க சான்று:

"உலகின் பழமையான பண்பாட்டில் ஊறிப்போன சாதாரண ஐரோப்பியன் ஒருவன், அமெரிக்காவில் நடைபெறும் துரிதமான பொருளாதார நடவடிக்கையைக் காணும்பொழுது, அமெரிக்கர்கள் பொருளாசை மிக்கவர்கள் என்றே எண்ணுகிறான். ஆனால், சற்று ஆழ்ந்து கவனித்தால், எந்த அமெரிக்கனும் தனது உடைமைப் பொருளை அவசரப்பட்டு விலைகூறிவிடுவதில்லை என்பதைக் காணலாம். தனது உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தையே அவன் எதிர்பார்க்கிறான். உழைக்காமல் வரும் பணத்தை அவன் ஏற்பதில்லை; மதிப்பதில்லை—அவனுடைய கவனம் எல்லாம் பணத்தில் அல்ல; பணம் சம்பாதிக்கும் வழிமுறையில்தான். தனக்குக் கிடைத்த பணத்தைத் தன் திறமைக்குக் கிடைத்த பரிசாக அவன் கருதுகிறான்."

1933-இல் அமெரிக்காவுக்கு வருகை புரிந்த நோ யாங்—பார்க் (*No Yong—Park*) என்ற சீனப் பிரயாணி தெரிவித்துள்ள கருத்து, முன்ச்டர்பர்க்கின் எண்ணத்தையே எதிரொலிக்கிறது:

"அமெரிக்கன் உழைக்கிறான்; உழைக்கிறான்; உழைத்துக்கொண்டேயிருக்கிறான். அவனைப்போல் அயராது உழைப்பவனை உலகில் வேறெங்கும் நான் கண்டதில்லை. அமெரிக்கனுக்கு உழைப்புத்தான் சமயம்; உழைப்புத்தான் பொழுது போக்கு; உழைப்புத்தான் உயிர். அமெரிக்காவில் உழைப்பது ஏழை மட்டுமன்று. ஏழைக்குச் சமமாகப்

பணக்காரனும் உழைக்கிறான். உண்மையைச் சொன்னால், ஒருவருக்குச் செல்வம் பெருகப் பெருக அவரது உழைப்பும் கடுமையாகிறது; அதிகமாகிறது. ஹென்றி போர்டைப் பாருங்கள்! ராக்பெல்லரை—அவரது மகனை—அவரது பேரனைப் பாருங்கள். கோடீசுவரப்பிரபு ராக்பெல்லரின் பேரன் உணவு விடுதியில் ஊழியம் பார்த்து உன்னத நிலைக்கு வந்தார் என்றால் வியப்பாய்த்தானிருக்கிறது; ஆனால் அதுதான் உண்மை! உழைப்பைப் பொருத்தமட்டில் சீனாவுக்கும்அமெரிக்காவுக்குமிடையே எத்துணை வேறுபாடு! சீனாவில் ஏழைமட்டுமே பாடுபடுகிறான்; நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தக் கடுமையாக உழைத்து உழைத்து ஓடாகிறான். ஆனால், பணக்காரனோ, ஏழையின் உழைப்பால் ஏற்படும் பலனையெல்லாம் உண்டு உடல்வளர்ப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதில்லை; சிறு துரும்பைக்கூட அசைப்பதில்லை''.

உழைப்பின் உயர்வுக்கு எடுத்துக்காட்டெனக் கருதப்படும் ஹென்ரி போர்டு, உழைப்பின் பெருமை பற்றிக் கூறுகையில், ''மனித குலமானது அறநெறியிலும், பொருளியலிலும், சமூக இயலிலும் தழைத்தோங்குவதற்கு உழைப்பு ஒன்றேவழி என்பது சிந்திக்கத் தெரிந்த எல்லா மனிதருக்கும் தெரியும். உழைப்பினால் வயிறு மட்டும் நிறைவதில்லை; நம் வாழ்க்கைக்கு உயிரே உழைப்பால் கிடைக்கிறது'' என்றார். இன்றைய அமெரிக்கர் அனைவரும் உழைப்பைப் பற்றி இவ்விதமே கருதுகிறார்கள். உழைப்பையும், பணத்தையும் பற்றி அமெரிக்கரும் பிரெஞ்சுக்காரரும் என்ன எண்ணுகிறார்கள் என்பதை முன்ச்டர்பர்க் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்:

''பிரெஞ்சுக்காரன் பணத்தைப் பணமாகவே மதிக்கிறான். பணம் ஒன்றே அவனுக்குக் குறி. அது எவ்வழியில் வந்தாலும் அவனுக்குக் கவலையில்லை. வாரிசு உரிமை மூல

மாகவோ, வரதட்சிணையாகவோ அல்லது சூதாட்டத்தின் மூலமாகவோ எந்த வழியில் பணம் வந்தாலும், உழைக்காமல், நோகாமல் வருவதாக இருந்தால் அவன் அளவிலா மகிழ்ச்சியடைகிறான். தன் பொருளில் துளியளவு இழக்க நேரிட்டாலும், தன்னையே இழந்துவிட்டதுபோல் இடிந்து போய் உட்கார்ந்து விடுகிறான். ஆயுள் முழுவதும் வாழ்க்கை நடத்தப் போதிய பணம் சேர்த்துவிட்டதாகக் கருதினால், அத்துடன் சம்பாதிப்பதை நிறுத்திவிடுகிறான் பிரெஞ்சுக்காரன். அமெரிக்கனோ இதற்கு நேர்மாறானவன். தானே உழைத்துப் பணம் சேர்க்க வேண்டுமென்பதே அவன் குறிக்கோள். உழைக்காமல் கிடைக்கும் பணத்தை அவன் ஏறெடுத்தும் பாரான். கையிலுள்ள பணம் முழுவதையும் இழக்க நேரிட்டாலும் அவன் அணுவளவும் வருந்துவதில்லை. அதேசமயத்தில், பணம் சேர்க்கும் முயற்சியை அவன் இறுதி வரை நிறுத்துவதுமில்லை. ஈட்டியபொருள் குறைவாக இருந்தாலும், கூடுதலாக இருப்பினும் உழைப்பதையும் அதன் மூலம் பொருளீட்டுவதையும் அமெரிக்கன் இறுதி மூச்சு இருக்கும் வரை கைவிடுவதில்லை.''

### எதிலும் துரிதம்

அமெரிக்கர்கள் சோம்பித்திரியாமல், சுழற்றி விட்ட பம்பரம்போல் எந்நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிய வண்ணமிருக்கிறார்கள். நேரத்தை வீணாக்காமல் துரிதமாகச் செயலாற்றுவதற்கு விரைந்து செல்லும் வாகனங்கள் அவர்களுக்கு ஏராளமாகத் தேவைப்படுகின்றன. 1960-இல் அமெரிக்காவில் 7·5 கோடி டிரக்குகள், நெய்யாவி ஊர்திகள் முதலிய துரிதவாகனங்கள் இருந்தன. இவைகள் தங்கு தடையின்றி ஓடுவதற்கு ஏற்ற சாலைகளும் 40 இலட்சம் மைல் அளவுக்குப் போடப்பட்டிருந்தன. மக்களின் துரித இயக்கமும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாக அமைந்துள்ளன. தனி மனிதனின் பொருளாதாரநிலை உயரும்பொழுது அவன்

மென்மேலும் வேகமாகச் செயலாற்ற முனைகிறான். இவ்வாறாகும் அவனுடைய உழைப்புப் பெருகும்பொழுது நாட்டின் பொருளாதாரமும் துரிதமாகப் பெருகுகிறது.

உழைப்பிலும் பொருளீட்டுவதிலும் அமெரிக்கன் அதிகக் கவனம் செலுத்தினாலும், வாழ்க்கையை அனுபவிப்பதிலும் அவனுக்கு நிகர் அவனே. அமெரிக்கர்கள், மற்றவர்களுடன் தாராளமாகப் பழகுகிறார்கள்; மனந்திறந்து பேசுகிறார்கள்; நட்புக்கொள்ளுகிறார்கள். நண்பர்களுடன் சேர்ந்து உண்ணுகிறார்கள்; குடிக்கிறார்கள்; உல்லாசமாக வாழ்கிறார்கள். சமய இன, நிற, வர்க்கபேதம் எதையும் பாராமல் எல்லோருடனும் அமெரிக்கன் கலந்துறவாடுகிறான். அவனது வாழ்க்கை முறையானது இறுக்கமான கட்டுப்பாடுகளின்றி வளைந்து கொடுக்கும் தன்மையுடையதாக இருப்பதால், கூடிவாழும் உணர்வு அவனுக்குப் பீறிட்டெழுகிறது. அரசாங்கமும், தேவாலயமும் ஒன்றின் பணியில் ஒன்று தலையிடாமல் தனித்தனியே இயங்கி வருவதால் பல்வேறு சமயக் குழுக்கள் தொல்லையின்றிச் சுதந்திரமாக வாழமுடிகிறது. பொருளாதாரத்தில் அரசாங்கத் தலையீடு மிகவும் அரிதாக இருப்பதன் காரணமாக, வணிகர்களும், தொழிலாளர்களும், மற்றத் தொழில் நிறுவனங்களும் சுதந்திரமாக இயங்க முடிகிறது. அமெரிக்க மக்களின் பண்பைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் ஏழு அம்சங்களாகக் கூறலாம்;

1. பலதிறப்பட்ட சமயங்களையும் இனங்களையும் சகித்துக்கொள்ளும் பரந்த மனப்பண்பு.

2. அரசியலமைப்பின்கீழ் அமைந்த அரசாங்கத்திலும், சட்ட ஆட்சியிலும், தனிமனித உரிமைப் பாதுகாப்பிலும் அசையாத நம்பிக்கை.

3. புராடஸ்டண்டுச் சமய மரபினடிப் பிறந்த தன் முயற்சி, தற்சார்பு, சுதந்திரத் தொழிற் சாதனைகள் ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை.

4. அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகியவை தொடர்பான சிக்கல்களை ஆக்கமுறையில் அணுகும் அரிய பண்பு.

5. சமஉரிமை வழங்குவதில் ஆர்வம்; கடும் உழைப்பில் ஈடுபாடு; சாதனையின் சின்னமாகப் பணத்தை மதிக்கும் மனப் பாங்கு.

6. சமூக உறவுகளில் பாகுபாடு—ஏற்றத் தாழ்வு கருதாமல் எல்லோருடனும் கூச்சமின்றித் தாராள மாகப் பழகிக் கூடிவாழும் குண இயல்பு.

7. நேரடி அனுபவத்தின் மூலம் இலட்சக்கணக் கான அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பாடுபடுவதிலும், கடுமையான உழைப்பிலும் உற்சாகமும் மகிழ்ச்சியும் கொள்ளும் உயர்ந்த பண்பு.

# *4. நூலக நாடு

பால்டிமோர் இலவசப் பொது நூலகத்திற்கு *(Baltimore Free Public Library)* நான் சென்றிருந்த பொழுது, அந்நகரத்திலிருந்து வெளியாகும் 'திசன்' *(The Sun)* என்ற நாளிதழின் செய்தியாளர் குமாரி எலன் ஆன் என்னைச் சந்தித்து உரையாடுங்கால், அவரிடம் நான் கூறியது இதுதான்: "ஆலயங்கள் நிறைந்த நாடு இந்தியா; நூலகங்கள் நிறைந்த நாடு அமெரிக்கா". அன்று நான் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை!

அமெரிக்க நாடு முழுவதிலும் சுமார் பதினாலாயிரம் நூலகங்கள் உள்ளன. (இவற்றில் பள்ளி நூலகங்கள் அடங்கப்பெறா). பதினாலாயிரம் நூலகங்களில் பாதிக்கு மேல் பொது நூலகங்கள் ஆகும். பத்து சதவிகித நூலகங்கள் நகர, மாநில, வட்டார நூலக அமைப்புகளுக்குட்பட்டவை. எண்பது கிளைகளோடு இயங்கிவரும், நாட்டிலேயே இரண்டாவது மிகப் பெரிய நூலகமான நியுயார்க் பொது நூலகம் *(New York Public Library)* முதல் சின்னஞ் சிறு நகரத்தில் அல்லது ஊரில் ஒரே கிளையுடன் அல்லது ஒரே

*30-11-65 அன்று சென்னை அமெரிக்கத் தகவல் நிலையத்தில் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவின் ஒரு பகுதி.

ஒரு ஊர்தி நூலகத்துடன் இயங்கும் சிறு நூலகம் வரை, பல்வேறு அளவுடைய பல்லாயிரம் நூலகங்கள் இந்த பத்து சதவிகிதத்தில் அடங்கும். மீதமுள்ள தொண்ணூறு சதவிகித நூலகங்களும் சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் இயங்கி வருபவை. இவைகளை, நம் நாட்டிலுள்ள ஓராசிரியர் பள்ளிகளைப் போல், ஒரே நூலகரே இயக்கி வருகிறார்.

இந்த நூலகங்களின் நூலகர்கள் பெரும்பாலும் பெண்களே! இதனால் இந்நூலகங்களை 'ஒரே பெண் நூலகங்கள்' *(One Woman Libraries)* என அழைக்கிறார்கள். இந்நூலகங்கள், குறிப்பிட்ட சிலமணி நேரமே திறந்திருக்கும். அங்குள்ள நூல்களும் மிகச் சிலவே. அவற்றை நடத்தும் நூலகர்கள் பெரும்பாலும் பயிற்சி ஏதும் பெறாதவர்கள். சிலர் ஊதியம்கூட வாங்குவதில்லை. இந்தப் பெண் நூலகர் தான், நூலகத்தின் வரவு செலவைக் கவனிக்கிறாள்; நூல்களை வாங்கி, அவற்றை வகுப்பதும், தொகுப்பதும், வாசகர்களுக்கு வழங்குவதும் பின்னர் அவற்றைத் திரும்பப் பெறுவதும் அவள்தான். வாசகர்கள் கேட்கும் செய்திகளையும் தகவல்களையும் தெரிவிப்பதும், குழந்தைகளுக்கு நூல் எடுக்க உதவுவதும் அவளே!

அமெரிக்காவில் பொது நூலகங்கள் மூலைமுடுக்குகளிலெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. என்னைக் கேட்டால், அமெரிக்க மக்கள்மீது பொது நூலகங்கள் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டுள்ளனவே தவிர, மக்களின் ஆர்வத்தினால் உருவாக்கப்பட்டவை அன்று என்றே சொல்வேன். அந்தந்த நகரங்களிலிருந்த கோடீசுவரப்பிரபுக்கள் தங்களின் வள்ளன்மையினால் அறநிதிகளை ஏற்படுத்தி, நகரங்களில் பொது நூலகங்களை நிறுவியிருக்கிறார்கள். இவ்விதம் திணிக்கப்பட்ட நூலகங்கள் நகர மக்களுக்குத் தேவைதானா என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. எனினும், மக்களின் அறிவை வளர்ப்பதில் அவர்களுக்

கிருந்த அளவிலா ஆர்வத்திற்கும் அவர்களின் கொடை உள்ளத்திற்கும் நினைவுச்சின்னங்களாக இந்நூலகங்கள் இன்று திகழ்கின்றன. முல்லைக்குத் தேரீந்த பாரி, மயிலுக்குப் போர்வை போர்த்திய பேகன் போன்ற தமிழ் வள்ளல்களின் 'கொடை மடம்' இங்கு நினைவுக்கு வருகிறது.

**பொது நூலக வரலாறு**

அமெரிக்கப் பொது நூலகங்களின் வரலாறு 1731-இலேயே தொடங்குகிறது. பிரிட்டிசு குடியேற்ற ஆதிக்கத்தில் அமெரிக்கா இருந்து வந்த நாட்களில், 1731-இல் பிலடெல்பியாவில் பெஞ்சமின் பிராங்கலின், முதலாவது பொது நூலகத்தை நிறுவினார். அப்போது அதைச் 'சந்தா நூலகம்' (*Subscription Library*) என்று அழைத்தார்கள். சுமார் நூற்றாண்டுகளுக்குப் பிறகு மற்றொரு வகை நூலகம் தொடங்கப்பட்டது. இதைக் கிழக்கு நகரங்களில் பெரிய பெரிய வணிக நிறுவனங்கள் நிறுவின. இது 'வணிக நூலகம்' (*Commercial Library*) என அழைக்கப்பட்டது. வணிக நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பயன்படுத்துவதற்கெனத் தொடங்கிய இந்நூலகங்கள் வணிக நிறுவனங்களின் நிதி உதவியுடன் நடந்து வந்தன. சந்தா நூலகங்களையும், வணிக நூலகங்களையும் குறிப்பிட்ட சிலர்தான் பயன்படுத்த முடிந்தது. அதற்கும் கட்டணம் வசூலிக்கப்பட்டது. எனவே, இந்நூலகங்களை இலவசப் பொது நூலகங்கள் என்று சொல்வதற்கில்லை.

வரிப்பணத்தின் உதவிகொண்டு முதன்முதலாக கனெக்டிகட் மாநிலத்திலுள்ள சாலிஸ்பரி நகரில்தான் ஒரு பொது நூலகம் நிறுவப்பட்டது. இந்நூலகம் 1803-இல் நிறுவப்பட்டபோதிலும், 1810-வரையில் நகர வரிப்பணம் எதுவும் இதற்குக் கிடைக்கவில்லை. வரிப்பணத்தின் உதவியினால் முதலாவது இலவசப் பொது நூலகம் நியுஹாம்ப்ஷயர் மாநிலத்தில் பீட்டர்பரோ நகரில் 1833-இல் நிறுவப்பட்டது. அதைத் தொடர்ந்து 1880-க்குள் பாஸ்டன்,

சிக்காகோ, சின்சினட்டி, கிளீவ்லாந்து, டெட்ராய்ட், இலாஸ்ஏஞ்சல்ஸ் முதலிய நகரங்களிலும் வரிப்பணம் மூலம் நடத்தும் பொதுநூலகங்கள் அமைந்தன. நாட்டிலேயே இரண்டாவது பெரிய பொது நூலகமான நியுயார்க் பொதுநூலகம் 1895-இல் நிறுவப்பட்டது. உலகின் மிகப் பெரிய நூலகமான காங்கிரசு நூலகம், 1800-இல் அமெரிக்க அரசாங்கத்தினுல் நிறுவப்பட்டது. அமெரிக்கக் காங்கிரசின் பயனுக்காக இது அமைக்கப்பட்டது. அது முதல், இது பொது நூலகமாகவே இயங்கி வருகிறது. காங்கிரசு நூலகத்தின் இயக்குநரை அமெரிக்கக் குடியரசுத்தலைவரே நேரடியாக நியமிக்கிருர்.

வரிப்பணத்தைப் பயன்படுத்தி மேன்மேலும் பொது நூலகங்கள் தொடங்கப் பெற்ற காரணத்தால் நூலகத் தொழில் ஒரு முக்கியமான தொழிலாக வளர்ந்தது. 1876-இல் அமெரிக்க நூலகச் சங்கம் அமைக்கப்பட்டது. நூலகங்களைப் பெருக்கவும், வளர்க்கவும், நூலகத்தொழிலில் தகுதியும் திறமையும் வாய்ந்தவர்களை ஈடுபடுத்துவதற்கும் இந்தச் சங்கம் மேற்கொண்டு வரும் மாபெரும் பணியை நினைத்தாலே நமக்கு மலைப்பு ஏற்படும். மேலும் ஆண்ட்ரு கார்னீகி போன்ற வள்ளல்கள் பல நகரங்களில் ஏற்படுத்திய புதிய பொதுநூலங்களும், தாராளமாக வழங்கிய ஏராளமான நன்கொடைகளும் அமெரிக்காவில் பொது நூலகங்களின் வளர்ச்சிக்குப் பெருந்துணையாக அமைந்தன.

அமெரிக்காவில் நூலகப்பணிகளில் மாநிலங்களிடையே பெரும் ஏற்றத்தாழ்வு இருக்கிறதா என்பதைத் தீர்மானிப்பதற்காக 1920-இலும் 1940-இலும் ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அந்தக் காலத்தில், நூலகப்பணிக்கான நிதியை மாநிலச்சட்ட மன்றத்திடமிருந்து மாநில அரசுகள் பெற்றுவந்தன. 1948-இல் அமெரிக்க நூலகச் சங்கம் பொதுநூலகப்பணி பற்றிய தனது தேசியத் திட்டத்தை வெளியிட்டது. நாடு முழுவதற்கும் பொருந்தும்

றுபே சீரான ஒரேவகை நூலகப்பணி முறையை வகுப்பது இயலாமற் போகவே, வெவ்வேறு விதமான ஆறுமுறைகள் இத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

**நான்குவகை நூலகங்கள்**

இன்றையச் சமுதாய வாழ்க்கையில் பொதுநூலகப் பணியின் பங்கு பற்றிய தற்காலக் கருத்து எவ்வளவோ மாற்றமடைந்திருக்கிறது. நூலகம் என்ருல் நூல்களைச் சேகரித்து வைக்கும் ஒரு கூடம் என்று தான் முன்பு எண்ணி வந்தார்கள். அதனுல் நூலகத்தின் செயல்முறைகளும் அலுவல்களும் நான்கு சுவர்களுக்குள்ளேயே அடங்கிக் கிடந்தன. தேவாலயங்கள் அல்லது கோயில்களைப் போன்றவைதான் நூலகங்கள் என்று மக்கள் கொண்டிருந்த கருத்து இன்று தலைகீழாக மாறிவிட்டது. சமுதாயத்தில் கல்வியறிவைப் பரப்பும், வளர்க்கும் முக்கியமான பெரும் பணியை—பொறுப்பை இன்றைய நூலகங்கள் மேற்கொண்டிருக்கின்றன. நூல்கள் மட்டுமின்றி மக்களுக்கு உதவக்கூடிய செவிக்கட் புலச் சாதனங்கள் அனைத்தையும் நூலகங்கள் இன்று சேகரித்து வைக்கின்றன. 1950-ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி, அமெரிக்காவில் நான்கு வகையான நூலகங்கள் இருந்தன :

| மக்கள் தொகை | நூலகங்களின் எண்ணிக்கை | பொது நூலகங்களின் சதவிகிதம் | செலவினம் (டாலர்) |
|---|---|---|---|
| 1,00 000-க்கு மேல் | 135 | 2 % | 1,00,000-க்கு அதிகம் |
| 25,000 முதல் 1,00 000வரை | 577 | 8 % | 25,000 முதல் 1,00,000 |
| 5,000 முதல் 25 00 | 1888 | 25% | 4000 முதல் 25 000 |
| 5,000-க்குக் கீழ் | 4808 | 65% | 4000-க்குக் குறைவு |

எல்லா நூலகங்களிலும் 25 சதவிகித நூலகங்கள், மக்களில் 40 சதவிகிதம் பேருக்குப் பயன்படுகின்றன. 40 சதவிகித மக்கள் போதிய அளவு நூலக வசதியுடனிருக்கின்னர். 65 சதவிகித நூலகங்கள் 10 சதவிகித மக்களுக்கு உதவுகின்றன. இந்த 10 சதவிகித மக்களுக்கு நூலகவசதி போதிய அளவில் இல்லை. 1950-இல் 2·7 கோடி மக்கள் நூலக வசதியினைப் பெறமுடியாது இருந்தார்கள். 1960-இல் இவர்களின் எண்ணிக்கை 2 கோடியாகக் குறைந்தது.

1950-க்கு முன்புவரை அமெரிக்கக் காங்கிரசில் நூலகப்பணி மசோதா எதுவும் கொண்டுவரப்படவில்லை. 1950-இல் கொண்டு வரப்பட்ட மசோதா 3 வாக்குகளில் தோல்வியடைந்தது. 1956-இல் ஜூனில் நூலகப்பணிச் சட்டம் நிறைவேறியது. அது முதல், 10,000-க்குக் குறைந்த மக்கள் தொகையுள்ள கிராமப்பகுதிகளுக்கு நூலகப் பணியை விரிவுபடுத்துவதற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை மத்திய அரசாங்கம் கொடுத்துதவுகின்றது. 1958-இல், முதன் முதலாக நாடு முழுவதிலும் தேசிய நூலக வாரம் அனுசரிக்கும்படி குடியரசுத்தலைவர் அறிவித்தார். "விழி, படி!" என்பது முதலாவது தேசிய நூலக வாரத்தின் முழக்கமாக அமைந்தது. புதிய நூலகப் பணிச் சட்டம் ஒன்றில் 1964 பிப்ரவரி 11-இல் குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டார். கிராமப் பகுதிகளில் வாழும் 3·8 கோடி மக்களுக்கு உதவும் வகையில் நூலகப்பணியை விரிவு படுத்தவும், நகர நூலகங்களை மேலும் வலுப்படுத்தவும், நூலகக் கட்டிடங்களைப் புதுப்பிக்கவும், புதிய கட்டிடங்கள் கட்ட நிதி வழங்கவும் இந்தச் சட்டம் வகை செய்தது.

**குடியரசுத்தலைவர் பெருதம்**

இச்சட்டத்தில் கையெழுத்திட்டபொழுது குடியரசுத் தலைவர் இலிண்டன் ஜான்சன் கூறியது இங்கு கருதற்பாலது;

"நான் எத்தனையோ சட்டங்களில் கையெழுத்திட்டிருக்கிறேன்; கையெழுத்திட்டும் வருகிறேன். ஆனால், இந்தப்

புதிய நூலகச் சட்டத்தில் கையெழுத்திடும்பொழுது ஏற்படும் பெருமிதமும் மகிழ்ச்சியும் மனநிறைவும் இதுவரை எனக்கு ஏற்பட்டதே இல்லை! எல்லா மக்களுக்கும் உதவும் வகையில் இயங்கி வரும் நூலகங்களைத்தான் சிறந்த பொது நூலகங்கள் எனக் கருதமுடியும். உலக அதிசயங்களை அறிந்துகொள்ளத் துடிதுடிக்கும் இளைஞர்களுக்குமட்டும் உரியதன்று நூலகம்; எதிர்கால வாழ்க்கைக்குத் தயாராகும் இளைஞர்களுக்கு மட்டும் சொந்தமன்று; தங்கள் அலுவல்களுக்கு உறுதுணை புரியும் தகவல்களைத் தேடித்திரியும் சுறுசுறுப்பானவர்களுக்கு மட்டுமன்று; எல்லோருக்கும் ஒவ்வொருவருக்கும் பயன்படுவதாக நூலகம் அமைய வேண்டும். அதில்தான் நூலகத்தின் உண்மையான மதிப்புப் புதைந்திருக்கிறது.


இன்று நம் நாட்டுக்கு அதிகமான பல தரப்பட்ட நூல்கள் தேவை. இந்த நூல்களுக்குச் சிறந்த காப்பிடங்களும் வேண்டும். தலைமை நூலகங்களாயினும், கிளை நூலகங்களாயினும், ஊர்தி நூலகங்களாயினும்—எல்லா நூலகங்களும் மக்களுக்கு எளிதில் கிட்டும் தூரத்தில் இருத்தல் வேண்டும். சகிப்புணர்ச்சியை வளர்க்கவும் அறியாமையை ஒழிக்கவும் உதவும் பயனுள்ள சாதனமாக அமைந்திருப்பவை நூல்கள். 'எதையும் புரிந்து கொள்ளும் ஆற்றலில்லாத கீழ்த்தர மனிதர்கள் கண்டதையெல்லாம் கடிந்துரைப்பார்கள்' என்று பிரெஞ்சு அறிஞர் ஒருவர் சொன்னார். தற்கால உலகில் கீழ்த்தர மனங்கொண்டவர்கள் வாழ முடியாது. அறிவுப்பசி கொண்ட சுறுசுறுப்பான உள்ளம் உடையோர்தான் இன்றைய உலகில் வாழமுடியும். அறிவுப் பசியைத் தூண்டவும் சிந்தனையை வளர்க்கவும் சிறந்த பயிற்சிக் கூடமாக அமைந்திருப்பவை நூலகங்கள். அறிவாற்றல் மிக்க காங்கிரசு உறுப்பினர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் இன்று இந்த விழாவில் கலந்துகொள்வது கண்டு களிப்படைகிறேன். இந்தச் சட்டத்தை நிறைவேற்றியதற்காக, இன்றையச் சமுதாய

மும் அவர்களின் குழந்தைகளும் அவர்களுக்குப் பின் வருபவர்களும் பரம்பரைபரம்பரையாகக் காங்கிரசு உறுப்பினர்களுக்குக் கடமைப் பட்டிருப்பார்கள்'',

முதலிடம்

இன்று இலவசப் பொது நூலகங்களின் எண்ணிக்கையில் உலகிலேயே முதலிடம் வகிக்கிறது அமெரிக்கா. அங்கு 8000-க்கும் அதிகமான பொது நூலகங்கள் உள்ளன. அவற்றிற்கு ஏறத்தாழ 3600 கிளைகளும் உண்டு. பொது நூலகங்கள் ஒவ்வொன்றையும் நூலகப் பொறுப்பாளர் குழு (*Board of Trustees*) ஒன்று நிருவகிக்கிறது. பொறுப்பாளர்களைச் சாதாரணமாக நகராட்சித் தலைவர் (*Mayor*) நியமிக்கிறார். இந்த நியமனத்தை நகராட்சி மன்றம் ஒப்ப வேண்டும். பொறுப்பாளர் குழு நிருவாக முறையினால் பல வித நன்மைகள் உண்டு. முக்கியமாக (1) நிபுணர்களின் செயல் முறைகளை இக்குழு கண்காணிக்கிறது; (2) நூலகர்கள் அடிக்கடி மாறுவதால், நூலகத்தின் கொள்கையில் மாறுதல் ஏற்படாமல் இக்குழு பார்த்துக்கொள்கிறது. (3) அரசியல் செல்வாக்குகளில் சிக்கி அலைக்கழியாமல் நூலகத்தை இக்குழு பாதுகாக்கிறது. (4) நம்பிக்கையோடும், பொறுப்புணர்வோடும் இக்குழு செயல்படுகிறது.

அமெரிக்கப் பொது நூலகங்களின் நிருவாக அமைப்பு முறை எவ்விதம் அமைந்திருக்கிறது என்பதைப் பின்வரும் நூலக ஆட்சி அமைப்பியல் வரைபடத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்:


நூலகப் பொறுப்பாளர் குழு
தலைவர் துணைத்தலைவர்கள் செயலாளர் பொருளாளர்கள் குழுக்கள்:
ஆய்வு உதவித் துறை
கலைத்துறை
செயற்றுறை
நிதித்துறை
நியமனத்துறை
நூல் வழங்கும் துறை
இயக்குநர்
துணை இயக்குநர்
இயக்குநரின் உதவியாளர்
தலைமைக் கணக்காளர்
பதிப்பாசிரியர்
நூலக அலுவலகத் தலைவர்
பணியாளர் அலுவலகத் தலைவர்
ஆய்வு உதவித்துறைத் தலைவர்
நூல் வழங்கும் துறைத் தலைவர்
செயற்றுறைத் தலைவர்
பொது உறவுத் துறைத் தலைவர்

எந்தத் துறையிலும், உலகில் அமெரிக்காவே முன்னணியில் இருக்கவேண்டும் என்று அந்நாட்டு மக்கள் விரும்புகிறார்கள். எனவே, அவர்கள் தங்கள் அறிவாற்றலை மேன் மேலும் வளர்த்துக்கொள்ள முயல்கிறார்கள். அதற்குப் பொது நூலகங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதே சிறந்த வழி என அவர்கள் கருதுகிறார்கள். எனவே, அறிவாற்றல் மிக்க குடிமக்களை உருவாக்கி அவர்களின் சொந்த வாழ்க்கையை வளப்படுத்தும் ஓர் இன்றியமையாத சாதனமாக இன்று அமெரிக்க நூலகம் திகழ்கிறது. இன்றையச் சமுதாயத்திற்கு எவை எவை முக்கியமானவையோ அவையெல்லாம் நூலகத்திற்கும் முக்கியமாகி விட்டன. "மக்களே முக்கியம்; நூல்கள் அன்று" என்ற கருத்து, தற்கால நூலக இயக்கச் சிந்தனையோட்டத்தின் முதுகெலும்பாகிவிட்டது. இந்தக் கருத்து மாற்றம், சில நூலகங்களில் திடீரெனத் தோன்றியிருப்பதைக் காண முடிகிறது. புதிய கட்டிடம், சுறுசுறுப்பான நூலகர், மக்களின் எழுச்சி—இம்மூன்றில் ஏதாவது ஒன்றினால், அல்லது மூன்றின் காரணமாக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று சொல்ல வேண்டும். மற்ற நூலகங்களில் படிப்படியாக மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆனால், நூலகங்கள் எந்த வகைப்பட்டதாக இருப்பினும், அவை எங்கிருந்தாலும், மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதில் போட்டி போட்டுக்கொண்டு முனைந்திருப்பதைக் காணமுடிகிறது. அதேசமயத்தில், எதிர்காலத்தையும், வருங்காலத்தில் வரவிருக்கும் மகத்தான வாய்ப்புக்களையும் கருத்தில் கொள்ளவும் அவை தவறவில்லை.

அமெரிக்காவில் நான்கு வகையான நூலக அமைப்புக்கள் (*Library Systems*) உள்ளன. அவையாவன:

1. மாநகர் நூலக அமைப்பு (*Metropolitan Library System*): நகராட்சி மன்றங்கள் அல்லது மாநகராட்சி மன்றங்கள் இந்நூலகங்களை நடத்துகின்றன.

2. மாவட்ட நூலக அமைப்பு (*County Library System*).

3. வட்டார நூலக அமைப்பு (*Regional Library System*).

4. மாநில நூலக அமைப்பு (*State Library System*).

நகராட்சி அல்லது மாநகராட்சி மன்றங்களினால் நடத்தப்படும் நூலகங்களில், தலைமையான நூலகம், நகரின் நடுநாயகமான பகுதியில் அமைந்திருக்கிறது. இது மக்கள் குடியிருக்கும் பகுதிகளிலிருந்து கணிசமான தூரத்தில் இருக்கும். எனவே, மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து எளிதில் செல்லும் வகையில், நகரின் பல்வேறு பகுதிகளிலும் கிளை நூலகங்கள் அமைக்கப்பட்டிக்கின்றன.

மாவட்ட நூலகம் என்பது ஓர் இலவசப் பொது நூலகமாகும். ஒரு மாவட்டத்தில் வாழும் மக்கள் அனைவரும் அல்லது ஒரு பகுதி மக்கள் பயன்படுத்தும் வகையில் அந்த மாவட்ட மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு இந்த நூலகம் நடத்தப்படுகிறது. இந்நூலகம் சுதந்திரமான நிறுவனமாகவோ, நகராட்சி அல்லது மற்ற நூலகங்களுடன் இணைந்ததாகவோ இயங்குகிறது.

வட்டார நூலகம் என்பது ஐந்து மாவட்டங்கள் கொண்ட ஒரு வட்டாரத்திற்குப் பயன்படும் வகையில் அமைந்திருக்கிறது. அந்த வட்டாரத்தின் நடுநாயகமான ஒரு நகரத்தில் வட்டார நூலகத்தின் தலைமையகம் அமைந்திருக்கும். இந்நூலகத்திற்கு ஐந்து மாவட்டங்களிலிருந்து பணம் வருவதால், நூல்களையும் மற்றச் சாதனங்களையும் வேண்டிய அளவுக்கு வாங்கவும், நன்கு பயிற்சிபெற்ற நூலகர்களை அதிக ஊதியத்தில் அமர்த்தவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஊர்தி நூலகங்கள் வாங்கவும் தேவையான நிதிவசதி இருக்கிறது. மாவட்ட நூலகமானது அந்த மாவட்ட மக்களுக்கு மட்டுமே பயன்படுகிறது. ஆனால்,

வட்டார நூலகமானது 5 அல்லது 6 மாவட்டங்களடங்கிய பெரிய வட்டாரத்திற்குப் பயன்படுகிறது. இவ்விரண்டு நூலக அமைப்புக்களுக்குமிடையேயுள்ள முக்கிய வேற்றுமை இதுதான்.

ஊர்தி நூலகங்கள், இன்றையக் கிராமிய நூலகப் பணியின் சின்னமாக விளங்குகின்றன. மாவட்ட அல்லது வட்டார நூலகத் திட்டத்தின்கீழ், கிராமங்களுக்குச் சேவை செய்வதற்கு ஊர்தி நூலகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சில இடங்களில், நகர, மாவட்ட நூலகங்கள் தங்களின் நூலகப் பணிகளைச் சிறந்தமுறையில் ஒருங்கிணைத்திருக்கின்றன. இலாஸ்ஏஞ்சல்சில் நடைபெறும் பொது நூலகப்பணி இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு ஆகும்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் இலவசமாக நூலக வசதி கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்பது தேசியக் கொள்கையாக வகுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தந்த மாநில மக்களின் நூலகத் தேவைகளை அவ்வப்போது கண்டறிந்து உடனே நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் அமைப்பு ஒன்று இயங்கி வருகிறது. சில மாநிலங்களில் இந்த அமைப்பு, மாநிலக் கல்வித் துறையின் ஓர் அங்கமாக இருக்கிறது. வேறு சில மாநிலங்களில், மாநிலச் சட்டசபை நூலகம் அல்லது வரலாற்று நூலகம் அல்லது நூற் காப்புக்கூடம் (*Archives*) இதில் ஏதாவது ஒன்றுடன் இணைந்திருக்கிறது. நூலகப் பயணக் குழு (*Travelling Libraries Commission*), மாநிலப் பயண நூலகம் (*State Travelling Library*), நூலக விரிவுப் பணி நிறுவனம் (*Library Extension Service*), பொது நூலகக் குழு (*Public Libraries Commission*) என்றெல்லாம் இந்த அமைப்புக்குப் பெயருண்டு. பெயர் மாறுபட்டாலும் பணி ஒன்றுதான். மாநில நூலகப் பணியின் இன்றியமையாத ஓர் அங்கமாக இந்த அமைப்பு விளங்குகிறது.

தற்காலப் பொது நூலகங்களின் பணி, நூலகத்தில் நூல்கள் கிடைக்கும்படிச் செய்வதுடன் நின்றுவிடவில்லை. வாசகர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் கூறுதல், படங்கள், திரைப்படங்கள், ஒலிப்பதிவுகள் போன்ற சாதனங்களைப் பயன்படுத்துதல், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், விவாதங்கள் போன்ற குழு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்—இவை போன்ற பணிகளின்மூலம் தீவிரமான சமுதாயநல நிறுவனமாக நூலகம் ஆகிவிட்டது. பொது நூலகர், உள்ளூர் சமுதாய நடவடிக்கைகளில் தீவிரப் பங்கு கொள்கிறார். உள்ளூர் மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறார். இளைஞர் சங்கங்கள், மாதர் சங்கங்கள், தொழிலாளர் கல்விக் கூடங்கள், வாணிகர் சங்கங்கள், சமூக சேவைச் சங்கங்கள் ஆகியவற்றுடன் ஒத்துழைக்கிறார்.

### வயதுவாரி நூலகப் பணி

வயதுவாரி நூலகப் பணிகளுக்கு ஏற்ப, குழந்தைகள் பிரிவு, இளைஞர் பிரிவு, முதியோர் பிரிவு என அமெரிக்கப் பொது நூலகத்தின் அலுவல் துறைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய நூலகப் பணியின் பாதிக்குமேல் குழந்தைகளுக்கானவை. எனவே அமெரிக்காவில் நூலகர் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் பெரும்பாலானோர் குழந்தை நூலகர்களாக இருப்பதில் வியப்பில்லை. பொது உறவுத்துறை (*Public Relations Department*), விரிவுப் பணித்துறை (*Extension Department*) ஆய்வு உதவித் துறை (*Referencc Department*) ஆகியவை பெரிய பொது நூலகம் ஒன்றின் முக்கிய அங்கங்களாகும். இவை முதியோர்களுக்கான பணிகளை மிகத் திறமையுடன் கவனிக்கின்றன. உடல் ஊனமடைந்தவர்கள், மருத்துவமனை நோயாளிகள், வெளியில் செல்ல முடியாதபடி நிறுவனங்களிலேயே உள்ளவர்கள் ஆகியோருக்குச் சேவை புரிவதும் இன்றையப் பொது நூலகங்களின் இன்றியமையாத பணி

களில் ஒன்ருகிவிட்டது. நூலகத்தின் பணிகள் இரு முக்கிய பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன: 1. வாசகர்களுக்கான பணி—இதில் நூல் வழங்கல், தகவல்கள் தெரிவித்தல், மற்றும் அந்தந்தத் துறைகளின் அலுவல்கள் அடங்கும். 2. தொழில் நுட்பப் பணி—இதில் நூல்களைத் தேர்ந்தெடுத்தல், வாங்குதல், வகுத்தல், தொகுத்தல், பாதுகாத்தல் ஆகியவை அடங்கும்.

நூலகத்தின் பல்வேறு பணிகளைத் துரிதமாகச் செய்வதற்காகச் சில நூலகங்களில் நவீனச் செய்தித் தொடர்பு முறைகளையும் போக்குவரத்துச் சாதனங்களையும், தற்கால எந்திரக் கருவிகளையும் பயன்படுத்துகிருர்கள். நூல்கள் யாருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பதிவு செய்யவும், கிளை நூலகங்களுக்கு விவரமான நூலக நூற்பட்டிகளைத் தயாரித்து வழங்கவும், இன்னும் பல அலுவல்களுக்கும் ஐ.பி.எம். கருவிகளைப் பயன்படுத்துவதன் காரணமாக நூலகர்களின் வேலைப் பளு குறைவதுடன், வாசகர்களுக்கான பணியில் அவர்கள் அதிகக் கவனம் செலுத்த முடிகிறது. சில பெரிய நூலகங்களில் தகவல் சேகரிப்புக் கருவி (*Information Storage Computor*) என்னும் முக்கியமான சாதனத்தைப் பயன்படுத்துகிருர்கள். நூல்கள், பருவவெளியீடுகள், ஒலிப்பதிவுகள், திரைப்படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் முதலான நூலகத்திலுள்ள அனைத்தின் பட்டியலையும் இந்தச் சாதனம் நொடிப்பொழுதில் தயாரித்து விடுகிறது. இச்சாதனம் இப்பொழுது ஒரு ஆள்மூலம் இயக்கப்படுகிறது. ஆனுல் 1980-ல் இந்தச் சாதனம் தானே இயங்கும் வகையில் அமைக்கப்பட்டு விடுமாம். ஒரு வாசகர் தனக்குத் தேவையான பொருளை ஒரு அட்டையில் குறிப்பிட்டு இந்தக் கருவியல் போட்டால், சில நிமிடங்களில் அந்தப் பொருள்பற்றி நூலகத்திலிருக்கும் நூல்களின் பட்டியல் அக்கருவியிலிருந்து வெளிவரும். மேலும் சில புதுமைகளையும் நாம் காணலாம். புதிதாக வாங்கிய நூல்களை அந்தந்தப் பிரிவுக்கு 'கன்வே

பா! பெல்ட்' ஒன்று எடுத்துச் செல்லும். மற்ருெரு 'பெல்ட்' நூலல்லாத மற்றச் சாதனங்களை அந்தப் பிரிவுக்குக் கொண்டு செல்லும். எழுதுதல் (*Lettering*), நூல் பகுப்பு, நூற்பட்டியல் அட்டைகளை அட்டவணைப் படுத்துதல், நூல்களைச் செப்பனிடுதல் போன்ற வேலைகளை இயந்திரங்களே செய்யும். 1980–இல் அமெரிக்காவில் நூலகப் பணிகள் பெரும்பாலும் இயந்திரமயமாகி விடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதையெல்லாம் பார்க்க எனக்கு மீண்டும் வாய்ப்புக் கிட்டுமா என்பது எனக்குத் தெரியாது.

# 5. குழந்தை நூலகங்கள்

அமெரிக்காவில் பொது நூலகப் பணியின் மிகச் சிறப்பான, இன்றியமையாத அங்கமாக விளங்குபவை. குழந்தை நூலகங்கள். நாட்டின் எதிர்காலக் குடிமக்களை உருவாக்கும் அரும்பணியில் நூலகங்களின் பங்கு முக்கியமானது என்பதை நன்கு உணர்ந்த அமெரிக்கர் நாடெங்கிலும் குழந்தைகளுக்கெனத் தனி நூலகங்கள் அமைத்திருக்கிறார்கள். பொது நூலகங்களிலும் சரி, பள்ளி நூலகங்களிலும் சரி, குழந்தைகளுக்காகத் தனிப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. குழந்தை நூலகங்களுக்கான அலுவலர்களும் இதற்கெனத் தனித் திறமையும் சிறப்புப் பயிற்சியும் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

இந்நாட்டில் பொதுநூலகங்கள் எவ்விதம் அமைந்திருக்கவேண்டும் என்பதைப் "பொது நூலகத்தர நிர்ணயக் குழு" திட்டவட்டமாக வரையறுத்திருக்கிறது. இந்தத் தரங்களை (*Standards*) அமெரிக்க நூலகக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இக்குழு பரிந்துரை செய்துள்ள தரங்களின் அடிப்படையிலேயே நாடெங்கிலுமுள்ள பொது நூலகங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

---

*6-6-65 அன்று மேலக்கருவேலங்குளம் நடராசர் இளைஞர் கழகத்தின் சார்பில் நடந்த வரவேற்பின்பொழுது ஆற்றிய உரை.

குழந்தை நூலகங்களின் தரத்தை நிர்ணயிப்பதற்காக 1961-ஆம் ஆண்டில் நிபுணர் குழு ஒன்றை அமெரிக்க நூலகக் கழகம் நியமித்தது. இக்குழுவில், குழந்தை நூலக நிபுணர்களே பெரும்பாலும் உறுப்பினர்களாக இடம் பெற்றுர்கள். குழந்தை நூலகப் பணியின் பல்வேறு பிரிவுகளில், நிபுணர்களாக உள்ள பலருடன் தொடர்பு கொண்டு, அவர்களின் அரிய ஆலோசனைகளைக் கேட்டறிந்து, குழந்தை நூலகங்கள் எவ்விதம் அமையவேண்டும் என்பது குறித்துத் தனது பரிந்துரையை இக்குழு 1964-இல் தெரிவித்தது. இந்தக் குழுவின் பரிந்துரையை அமெரிக்க நூலகக் கழகம் அப்படியே ஏற்றுக் கொண்டது.

பொது நூலகப் பணித்தர நிர்ணயத்தின் அடிப்படைத் தன்மை, குறிக்கோள் ஆகியவற்றைப் பின்பற்றியதாகவே குழந்தை நூலகத்தர நிர்ணயமும் அமைந்துள்ளது. எனினும், குழந்தைகளின் தனித் தேவைகள், அவர்களின் மனப்போக்கு, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நூலகத்தில் மேற்கொள்ள வேண்டிய தனி வசதிகள், மற்ற ஏற்பாடுகள் பற்றி இந்தக் குழுவினர் முக்கியமாக ஆலோசனைகள் கூறி இருக்கிறுர்கள். குழந்தை நூலகங்கள் எவ்விதக் குறிக்கோள்களைக் கொண்டதாக இருக்கவேண்டும்? நிர்வாக அமைப்பு எப்படி அமையவேண்டும்? அலுவலர்களை எந்தத் தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்கவேண்டும்? குழந்தை நூலகங்களின் பணிகள் என்னென்ன? எவ்வகையான நூல்களை, சாதனங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்? குழந்தைகளுக்கென நூலகத்தில் என்னென்ன தனி வசதிகள் செய்யவேண்டும்? என்பவைபற்றி இந்தக் குழு திட்டவட்டமாக நிர்ணயித்திருக்கிறது.

**குறிக்கோள்**

குழந்தைகளுக்கான பொது நூலகப் பணி, ஆறு குறிக்கோள்களைக் கொண்டது. அவையாவன:—

1. எளிதில் கிடைக்கக் கூடிய விதவிதமான நூல்களைப் பெரும் அளவில் சேகரிப்பது.

2. படிப்பதற்கு ஏற்ற நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் குழந்தைகளுக்கு வழி காட்டுவது.

3. சொந்த முயற்சியாலும், சுய ஆர்வத்தாலும் நூல்களைப் படித்து இன்பங் காணும் நற்பழக்கத்தைக் குழந்தைகளிடம் வளர்ப்பது.

4. பொதுநூலகங்களின் உதவி கொண்டு, ஆயுள் முழுவதும் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ளும் தணியாத ஆர்வத்தை இளம் உள்ளங்களில் ஏற்படுத்துவது.

5. தனது சொந்தத் திறமையை முழு அளவில் வளர்க்கவும், தன்னைச் சுற்றியுள்ள சமுதாயச் சூழ்நிலையை அறிந்து கொள்ளவும் குழந்தைகளுக்கு உதவுதல்.

6. குழந்தைகளின் நலம் பேணும் பணியில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களுடன் ஒத்துழைத்துச் சமுதாயத்திற்கு அருந்தொண்டு புரியும் வலிமை வாய்ந்த சமூகச் சக்தியாக விளங்குவது.

இத்தனை குறிக்கோள்களும் ஈடேற வேண்டுமெனில், குழந்தைகள் நூலகப் பணிக்காக, தேசிய, மாநில, உள்ளூர் மட்டங்கள் அனைத்திலும் பொதுநூலக வல்லுநர்களின் சேவை இன்றியமையாது தேவைப்படுகிறது. பொதுநூலகப் பணியினால், குழந்தைகளுக்கு ஏற்படும் அளவற்ற பயன்களை நூலக அலுவலர்கள், நிர்வாகத்தினர், சமுதாய மக்கள் எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியம். இதை உணர்ந்து கொண்டால், கல்வித் துறையிலும், சமூக வாழ்விலும் குழந்தைகளை நன்னெறியில் செலுத்தி, நற்குடி மக்களாக வளர்ப்பதற்கு நூலகங்கள் எந்த அளவு உறுதுணையாக இருக்கின்றன என்பது தெளிவாகும்.

**நிர்வாகம்**

படிப்பறிவு தொடங்கும் பருவம் முதல் பதின் மூன்று வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஏற்புடையதாக அமையும் வகையில் குழந்தை நூலகங்கள் நிறுவப்படுகின்றன. குழந்தை நூலகப் பணிகளை (*Children's Services*) ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்தும் ஒருங்கிணைப்பு அதிகாரி (*Coordinator*) ஒருவர் இருக்கிறார். இவர் நூலக நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினர். அவரது அலுவல் பொறுப்புக்களையும், அதிகாரங்களையும் நூலகஅமைப்பு இயக்குநர் (*Director of the Library System*) நிர்ணயிக்கிறார். இந்த ஒருங்கிணைப்பு அதிகாரியின் அலுவல் பொறுப்புக்கள் வருமாறு:—

1. பல்வேறு குழந்தைகள் நலப்பணிகளை நூலகப் பணியுடன் இணைத்தல்.
2. கொள்கைகளை வகுப்பதில் ஆலோசனைகள் கூறி உதவுதல்.
3. சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து, வாங்கி, அவற்றை நூலகங்களுக்கு ஒரே சீராகப் பகிர்ந்தளித்தல்.
4. தனி அலுவலர்களுக்கு, தனி அலுவல்களுக்கு ஏற்ற வகையில் பயிற்சி அளித்தல்.
5. குழந்தை நூலகப் பணி அலுவலர்களுக்கு ஆலோசனை கூறி, ஊக்கம் அளித்து வழி காட்டுதல்.
6. தகுதி வாய்ந்த அலுவலர்களைத் தேர்ந்தெடுத்துப் பொருத்தமான இடங்களுக்கு நியமிப்பதில் பங்கு கொள்ளுதல்.
7. குழந்தை நூலகத் துறையில் புதிய புதிய நுட்பங்களைக் கண்டு பிடிக்க உதவுதல்.

8. பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் திட்டங்களை வகுத்து. அவற்றைச் செயல்படுத்துவதில் உதவிபுரிதல்.

9. தனது ஆட்சி வரம்புக்கு உட்பட்ட பகுதியில் சமுதாயப் பணிகளைப் பெருக்குதல்.

10. நூலகத் துறையின் வரவு-செலவுத் திட்டத்தைச் (*Budget*) சிறந்த முறையில் தயாரித்து, ஒதுக்கிய நிதியைப் பயனுள்ள வழிகளில் செலவிட உதவுதல்.

11. உரிய நூலக அதிகாரியைக் கலந்தாலோசித்து, தனிப்பட்ட நிறுவனங்களுக்குக் குழந்தை நலப் பணி நிதியிலிருந்து பண ஒதுக்கீடு செய்தல்.

12. எல்லா நூலகங்களிலும் குழந்தைகளுக்கான தனிப் பிரிவுக்கு எப்படி இடம் ஒதுக்க வேண்டும்? அந்தப் பிரிவை எப்படி வடிவமைக்க (*Design*) வேண்டும்? என்பது பற்றி ஆலோசனை கூறி அவற்றைச் செயலாக்க உதவுதல்.

13. பொது நூலக-பள்ளி ஒத்துழைப்புக்கான கூட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பங்கு பெறுதல்.

14. தேசிய, மாநில, உள்ளூர் அளவில் பணிபுரியும் குழந்தை நூலக நிபுணர்களுடன் ஒத்துழைத்தல்.

குழந்தை நூலகம் ஒவ்வொன்றுக்கும் தனி நூலகர் உண்டு. குழந்தை நூலகரின் (*Children's Librarian*) அலுவல் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் நூலகத் துறை இயக்குநர் நிர்ணயிக்கிறார். ஒருங்கிணைப்பு அதிகாரி, அவரது துறையில் வல்லுநராக இருக்கிறார். அதே போன்று, குழந்தை நூலகரும் தனது துறையில் நிபுணத்துவம் பெற்றுத் திகழ்கிறார். நூலக நிர்வாகக் குழுவில் அவருக்குச் சிறந்ததொரு இடமுண்டு. நூலக அமைப்பு

முறையின் கட்டுக்கோப்புக்குக் கட்டுப்பட்டவராகவே அவர் பணியாற்றுகிறார்.

தனது பொறுப்பிலுள்ள நூலகத்திற்கான வரவு–செலவுத் திட்டத்தைத் (*Budget*) தயாரிப்பதும், நூல்களைத் தேர்ந்தெடுப்பதும், அவற்றை முறையாகப் பராமரிப்பதும் அவர் பொறுப்பு. செயல் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவதுடன் பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பணியாற்றுவதும் அவரே. ஒருங்கிணைப்பு அதிகாரியின் ஆலோசனைகளுக்கு இணங்கவும், நூலக இயக்குநரின் பொதுவான மேற்பார்வையின் கீழும் நூலகர் தனது பணிகளை ஆற்றுகிறார். நூலகத்தின் தேவைகளை ஆராய்ந்து அறியவும், நூல்களைத் தேர்ந்தெடுக்கவும், செயல் திட்டங்களை வகுக்கவும் அவருக்கு உரிய கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

**அலுவலர்கள்**

குழந்தை நூலகங்களில் பணியாற்றுவதற்குத் தகுதி வாய்ந்த அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. குழந்தைகளுடன் பழகவும், அவர்கள் மனங்கோணுமல் நடக்கவும் இந்த அலுவலர் அறிந்திருக்க வேண்டும். எனவே, குழந்தைகளின் மனோபாவத்தை அறிந்து அவர்களுடன் ஒன்றிச் சேவை செய்யும் தனித்திறன் பெற்றவர்களே குழந்தை நூலகப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். குழந்தைகளுக்குப் பயனுள்ள முறையில் சேவை செய்வதற்குத் தகுதியும் திறமையும் வாய்ந்த அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதும், அன்றி, அவரவர்களுக்கான வேலைமுறைகளை வரையறுப்பதும் பொது நூலகப் பணியின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகவே அமைந்துள்ளது.

பள்ளி இறுதி வகுப்புக்குப் பின்னர் குறைந்தது ஐந்தாண்டுகள் கல்வி பயின்றவராகவும், அங்கீகாரம் பெற்ற

நூலகப் பள்ளி ஒன்றில் பட்டம் பெற்றவராகவும் உள்ளவர்கள் பொது நூலக நூலகராக ஆவதற்குத் தகுதி பெறுகிறார்கள். அதன் பிறகு, குழந்தை நூலகராக விரும்புபவர்களுக்குக் குழந்தை நூலகப் பணியிலும், அது தொடர்பான பொது நூலகப் பணியிலும் தனி வகுப்புக்கள் நடத்திப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பொதுப் பயிற்சியும், தனிப் பயிற்சியும் பெற்றவர்கள்தான் குழந்தை நூலகர்களாக முடியும். குழந்தை நூலகராகப் பணியாற்றுவதற்கு வெறும் படிப்பறிவும், பயிற்சியும் இருந்தால் மட்டும் போதாது. பல்வேறு வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளின் மாறுபட்ட மன இயல்புகளை அறிந்து, குழந்தைகளுடன் அன்புடன் இரண்டறக் கலந்து, திறமையுடன் பணியாற்றும் ஆர்வமும் அவருக்கு இயற்கையாகவே அமைந்திருக்க வேண்டும்.

குழந்தை நலப்பணி ஒருங்கிணைப்பு அதிகாரியாகப் பணியாற்றும் ஒருவர், அங்கீகரிக்கப்பட்ட நூலகப் பள்ளியொன்றில் பட்டம் பெற்றவராகவும், ஆறு முதல் எட்டு ஆண்டுக்காலம் நூலகத் தொழிலில் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். இந்த அனுபவக் காலத்தில், பொது நூலகம் ஒன்றின் குழந்தைகள் பிரிவில் குறைந்தது 4 ஆண்டுகளும், ஆலோசகராக அல்லது மேற்பார்வையாளராகக் குறைந்தது ஈராண்டுகளும் சேவை செய்திருக்க வேண்டும். பொது நூலகப் பணியுடன், குழந்தைப் பணிகளை ஒருங்கிணைப்பதில், தான் ஒரு நிபுணர் என்பதை அவர் சான்றுகள் மூலம் மெய்ப்பிக்க வேண்டியது இன்றியமையாத ஒரு தகுதியாகும். தங்களுடைய தனித்திறமையை நிலைநாட்டவும், மேன்மேலும் அத்திறமையை வளர்த்துக் கொள்ளவும் விரும்பும் குழந்தை நூலகர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

அந்தந்த வட்டாரத்திலுள்ள குழந்தைகள் அனைவருக்கும், சீராகவும் திறமையாகவும் சேவை செய்யும் வகையில் ஒவ்வொரு நூலகத்திலும் போதுமான அளவில் எல்லா

வகை அலுவலர்களும் நியமிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு நூலகத்திலும், நூலகம் திறந்திருக்கும் நேரத்தில், குழந்தைகளுக்குத் தேவையான உதவிகளை அளிப்பதற்காக நூலகத் தொழில் உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள். குழந்தை நூலகர்கள் எத்தனைபேர் வேண்டும் என்பதைப் பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு கணக்கிடுகிறார்கள். நூலகம் இயங்கும் வட்டாரத்தில் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை, குழந்தை நூல்கள் பயன்படுத்தப்படுகின்ற அளவு, நூலகச் செயல் திட்டங்களின் அளவு, நூலகத்தின் அமைப்பு முறை ஆகிய அம்சங்களின் அடிப்படையில் ஒரு நூலகத்திற்குத் தேவைப்படும் நூலகர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப் படுகிறது. ஒரு நூலகத்தில் பெரியவர்களுக்கான நூல்களை விடக் குழந்தை நூல்கள் அதிகமான அளவில் பயன்படுத்தப்படலாம். அந்த நூலகத்திற்கு ஒரே ஒரு நூலகர்தான் அனுமதிக்கப்பட்டிருப்பாரெனில், குழந்தை நூலக நிபுணராகவும், பொது நூலகப் பணியில் ஓரளவு பயிற்சி பெற்றவராகவும் உள்ளவர் அங்கு நூலகராக நியமிக்கப்படுகிறார்.

**குழந்தை நூலகப் பணிகள்**

அந்தந்த வட்டாரத்திலுள்ள சிறுவர், சிறுமியர்க்கு மட்டுமின்றி, வயது வந்தவர்களுக்கும் கூடப் பணியாற்றும் வகையில் குழந்தை நூலகங்கள் இயங்கி வருகின்றன. இதற்கு ஏற்றபடி குழந்தை நூலக அலுவலர்களின் பணிகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கான நூல்களினாலும், குழந்தை நூலகங்களினாலும் ஏற்படும் அளவற்ற நன்மைகளையும், அவற்றைப் பயன்தரும் வகையில் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தையும் சமுதாய மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளச் செய்வது குழந்தை நூலகங்களின் முதற் கடமையாக இருந்து வருகிறது.

குழந்தை நூல்களையும், படிப்பதற்குரிய மற்ற நூல்களையும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் வீடுகளில் எடுத்

துச் சென்று படிப்பதற்கு நிபந்தனை ஏதுமின்றிக் கடனாக இந்நூலகங்கள் வழங்குகின்றன. குழந்தைகள், நூலகத்திற்கு நேரில் வந்து நூல்களைப் படிக்கவும், தேர்ந்தெடுக்கவும் வசதியாக நூலகங்களின் அலுவல் நேரம் அமைந்துள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகள், தங்கள் ஓய்வு நேரத்தை நூலகத்தில் கழிக்கும் வகையில் நூலக அலுவல் நேரம் அமைந்துள்ளது.

ஒவ்வொரு நூலகத்திலும் குழந்தைகளுக்குத் தனித் தனியாகவோ அல்லது குழாமாகவோ நூல்களை வாசித்துக் காட்டுவதற்குத் தனி அலுவலர்கள் இருக்கிறார்கள். குழந்தை நூலகத்தின் ஒரு பகுதியில் இது போன்ற "வாசிப்பு வகுப்புக்கள்" நாள்தோறும் நடப்பதைக் காணலாம். இந்த வகுப்புக்களில் குழந்தைகளுக்குத் தொடர் கதைகள், சிறுகதைகள், நாட்டுத் தலைவர்களின் வீர வரலாறுகள் ஆகியவற்றை அலுவலர் ஒருவர் தேவையான இடங்களில் தகுந்த விளக்கங்களுடன் வாசித்துக் காட்டுகிறார். இதன் மூலம், இத்தகைய நூல்களை மேன்மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைக் குழந்தைகளுக்கு ஊட்டுகிறார்கள். குழந்தை நூலகப் பணியிலேயே மிகச் சிறப்பான அம்சம் இது எனக் கூறலாம்.

கதை சொல்லுதல், உரக்க வாசிக்கக் கற்பித்தல், நூல்களைப் பற்றி விமர்சன விவாதங்களுக்கு ஏற்பாடு செய்தல், கண்காட்சிகள் நடத்துதல், விடுமுறை நாட்களில் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துதல், படக்காட்சிகள் நடத்துதல், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு பெறவும், இச்சாதனங்களைப் பயன்தரும் முறையில் பயன்படுத்தவும் போதித்தல் ஆகிய நூலகத் தொடர்புடைய வேறு பல பணிகளையும் குழந்தை நூலகங்கள் செய்து வருகின்றன. இப் பணிகள் மூலம் முழு அளவுப் பயன் ஏற்படும் வகையில் ஆழ்ந்து சிந்தித்து, பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்

டறிந்து, முன் கூட்டியே தக்க முறையில் விளம்பரங்கள் செய்து இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

குழந்தைகளின் நலன் பேணுவதற்காக இயங்கி வரும் மற்ற நிறுவனங்கள் அனைத்துடனும் நெருக்கமான தொடர்பு கொண்டு ஒவ்வொரு குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் குழந்தை நூலகங்கள் பணியாற்றுகின்றன. ஏராளமான மாணவர்களும், ஆசிரியர்களும் பள்ளி நூலகங்களையும் பொது நூலகங்களையும் முக்கியமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே, நூலகத் துறையின் மற்றப் பிரிவுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதில் குழந்தை நூலகப் பணியாளர்கள் தனி முயற்சி எடுக்கிறார்கள். எல்லாப் பிரிவுகளும் ஒன்றுக்கு ஒன்று உதவிகரமாக இருக்கும் வகையில் உருவான கூட்டுத் திட்டத்தைத் தயாரித்துச் செயல்படுத்துகிறார்கள்.

## நூல் தேர்வு

சமுதாயத்தின் எல்லாக் குழந்தைகளுக்கும், எல்லா வயதுப் பிரிவைச் சேர்ந்த சிறுவர், சிறுமியருக்கும் ஏற்ற விதவிதமான நூல்களை ஏராளமான அளவில் தேர்ந்தெடுப்பதில் குழந்தை நூலகங்கள் தனிக் கவனம் செலுத்துகின்றன. குழந்தைகளிடம் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டவும், அறிவைப் பெருக்கவும், அதே சமயத்தில் மகிழ்ச்சியாகப் பொழுது போக்கவும் உதவுகின்ற வகை வகையான நூல்கள் சேகரிக்கப்படுகின்றன. வெவ்வேறு திறமை கொண்ட குழந்தைகளுக்கு அவரவர்களின் விருப்பத்திற்கு ஏற்ற நூல்கள் வாங்கப்படுகின்றன. நூல்கள் தவிர, குழந்தைகளுக்குச் சுவையூட்டும் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், படங்கள், பூகோளப் படங்கள், பதிவுச் சான்றுகள் (*Recordings*), திரைப்படங்கள், ஸ்லைடுகள் முதலியவற்றையும் வாங்கி நூலகத்தில் சேகரிக்கிறார்கள்.

குழந்தை நூல்களும், நூலகச் சாதனங்களும் வாங்குவதற்காக ஆண்டுதோறும் வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட அளவுக்குத் தனி நிதி ஒதுக்கப்படுகிறது. நூலகம் இயங்கி வரும் வட்டாரத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை என்ன? புதிதாக எத்தனை குழந்தைகள் நூலகத்திற்கு வருவார்கள்? புதிய தேவைகளுக்கு ஏற்ப அதிகமாக எந்த அளவுக்கு நூல்களும் சாதனங்களும் தேவைப்படும் என்பதை ஆண்டுதோறும் மதிப்பிட்டு, அந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன ஒருங்கிணைப்பு அதிகாரியின் ஆலோசனைப்படி, பல்வேறு நூலகங்களுக்கான நிதிகள் வழங்கப்படுகின்றன.

நூலகங்களிலுள்ள நூல்கள் அனைத்தும், மற்றச் சாதனங்களும் குழந்தைகளுக்குத் தேவையான சமயத்தில் உடனுக்குடன் எளிதில் கிடைப்பதற்கான எல்லா வசதிகளும், ஏற்பாடுகளும் நூலகத்தில் செய்யப்படுகின்றன. குழந்தைகளின் மனம் எப்பொழுதும் ஒரேவிதமான நூல்களை நாடுவதில்லை. அறிவும், வயதும் ஏற ஏற அவர்களின் சுவையும் மாறிக்கொண்டே வருகின்றது. எனவே, குழந்தைகளின் இரசனையில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவ்வப்போது கண்டறிந்து, அதற்கு ஏற்ப புதிய நூல்களையும் சாதனங்களையும் வாங்கி நூலகத்தில் சேர்க்கிறார்கள். குழந்தைகள் அதிகம் விரும்பிப் படிக்கும் நூல்களில் பல படிகள் வாங்குகிறார்கள். அதிகம் பயன்படுத்தாமல் ஒதுக்கித் தள்ளப்பட்ட நூல்களை அகற்றி விடுகிறார்கள். இதன் காரணமாக நூலகத்திற்கு எந்த நாளும் வந்து நூல்களைப் படிக்கும் ஆசை குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

குழந்தைகளுக்கான நூல்களையும், மற்றச் சாதனங்களையும் வாங்கிப் பராமரிப்பது சம்பந்தமான சட்ட திட்டங்கள் நூலகப் பணிக் கொள்கை அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகள் பிரிவில் எந்தெந்த நூல்

களை, என்னென்ன சாதனங்களை வைக்க வேண்டும் என் பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் குழந்தை நூலகருக்கே உண்டு. அந்தப் பிரிவில் வைப்பதற்கான திரைப் படங்கள் போன்ற சாதனங்களும் குழந்தை நூலகருடன் கலந் தாலோசித்த பிறகே தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

**குழந்தை நூலக அமைப்பு**

நூலகங்கள் அனைத்திலும் குழந்தைகளுக்குத் தனிப் பிரிவுகள் உள்ளன. எல்லா வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந் தைகளும் எளிதாக வந்து, தாராளமாக நடமாடி நூல் களைப் படிக்கவும், படிப்பதைக் கேட்கவும் வசதியாகக் குழந்தை நூலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குழந் தைகள் பிரிவிலிருந்து பெரியோர் பிரிவுக்கு எளிதாகப் போகவும் வரவும் முடியும். நூலகத்தில் நுழைந்தவுடன், குழந்தைகள் பிரிவு எங்கிருக்கிறது என்பதைச் சுலபமாகக் குழந்தைகள் கண்டு பிடிக்க வசதியாகப் பெரிய எழுத்துக் களில் எழுதப்பெற்ற வழிகாட்டிப் பலகைகள் வைக்கப்பட் டிருக்கின்றன. பொருள் வாரியாக அடுக்கி வைக்கப்பட்டிருக் கும் நூல்களைக் குழந்தைகள் சங்கடமின்றி அடையாளங் கண்டுகொள்ளும் வகையில் அவற்றின் பெயர்கள் பெரிதாக பொறிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் தேவைக்கு ஏற்ற படி, அவர்களின் உயரத்திற்குத் தகுந்தபடி மேசை நாற் காலிகள் அமைந்துள்ளன. நூல் அலமாரிகளும் குழந்தை களின் கைக்கு எட்டும் வகையில் குறைந்த உயரத்தில் செய்யப்பட்டிருக்கின்றன.

நூலகத்தின் தலைமை நூலக நூற்பட்டியலில் *(Principal Catalgue)* குழந்தை நூல்களின் விவரங்களும் அடங்கி இருக்கின்றன. எனினும் குழந்தைகளுக்கெனத் தனி நூற் பட்டியல்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இதனால், தங்க ளுக்குத் தேவையான நூல்களைக் குழந்தைகள் தாங்களா கவே எளிதில் தேடி எடுத்துக்கொள்ள வசதியாக இருக்

கிறது. கண்காட்சிச் சாதனங்களையும், பொருள்களையும், பெரிய அகராதிகள், தேசப் படங்களையும், பத்திரிகை அடுக்குப் பலகைகளையும், திரைப்படப் பெட்டிகளையும் பத்திரமாக வைக்கத் தனி இடங்கள் உள்ளன. நூலகக் கட்டிடத்தின் மற்றப் பகுதிகளுடன் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையில் தகவல் தொடர்புக் கருவிகள் நிறுவப் பட்டிருக்கின்றன. வெளித் தொடர்புக்குத் தொலைபேசிகள் முக்கியமாகப் பயன்படுகின்றன.

மேற்கூறிய வண்ணம் அமெரிக்கப் பெருநாட்டில் குழந்தை நூலகங்கள் சிறப்புற விளங்குவதற்குரிய அடிப்படைக் காரணம் வருங்காலச் சந்ததிகளாகிய குழந்தைகளின் நலனில் மக்கள் சிறந்த அக்கறை காட்டுதலே ஆகும். இவ்வாறே நமது நாட்டிலும் குழந்தை நூலகங்கள் பல தோன்றி, வளர்ந்து பல்கிப் பெருகுமேயானால் நம் சந்ததியினரும் வளமான வாழ்வைப் பெறுவர் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். நம் நாட்டில் முதன் முதலில் குழந்தைகளுக்கென்று தனியாக நூலகம் ஒன்றினைத் தொடங்கிய பெருமை தமிழக அரசுக்கே உரியது. பல ஆண்டுகளுக்கு முன்னரே நம் அரசினரால் தொடங்கப் பட்ட குழந்தை நூலகம் இன்று மாநிலக் கல்வி இயக்குநர் அலுவலகக் (*Office of the D. P. I.*) கட்டிடத்தில் கவினுற விளங்குகின்றது. ஆனால் இக்குழந்தை நூலகத்தைப் பற்றி ஒருசில மக்களே அறிவர் என்பது வருந்தத் தக்கதே. இதற்குக் காரணம், அது ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள இடத்தில் விளங்கும் கட்டிடம் ஒன்றில் இருப்பதே ஆகும். குழந்தைகள், துணையேதுமின்றி தனியாகச் சென்று படிப்பதற்குரிய வகையில் நகர மையப் பகுதியில் விளங்கும் கட்டிடம் ஒன்றிற்கு இந்நூலகம் மாற்றப்பட்டு, தக்க விளம்பரமும் செய்யப்படுமேயாகில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் இந் நூலகத்தினால் பயன் பெறுவர் என்பது திண்ணம். குழந்தைகளுக்கென மாவட்டத் தலைமை நூலகத்தில் தனிப் பகுதி ஒன்றினை முதன்முதலில் தொடங்

றிய பெருமை நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழுவி னரையே சாரும். அப்பகுதி 1953ஆம் ஆண்டு தொடங்கப் பெற் றது. இன்று ஒரு சில மாவட்ட நூலக ஆணைக் குழுவினர் அப்பணியை மேற்கொண்டுள்ளனர். சென்னை நகர நூலக ஆணைக்குழுவினர் குழந்தைகளுக்கெனத் தனிப்பகுதி ஒன் றினை அண்மையில் திறந்திருப்பது வரவேற்பதற்குரியதாகும். எல்லா மாவட்ட நூலக ஆணைக் குழுவினரும் இப்பணியினை மேற்கொண்டு மாவட்டத் தலைமை நூலகங்களிலும், சில பெரிய கிளை நூலகங்களிலும் குழந்தைகளுக்கெனத் தனிப் பகுதியினைத் திறந்து குழந்தைகளது படிக்கும் ஆர்வத்தினை வளர்ப்பதற்குப் பாடுபட வேண்டும். மேலும் தனியாகவே குழந்தை நூலகங்களை நிறுவலாம். ஆனால் மேலை நாட் டைப் போன்று ஆயிரக்கணக்கான நூல்கள் ஆண்டு தோறும் எல்லா இந்திய மொழிகளிலும் குழந்தைகளுக் காக வெளியிடப்படுமாயின் குழந்தை நூலகம் செழித் தோங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நல்ல குழந்தை இலக்கியங்களுக்கென அமெரிக்க நாட்டில் பல பரிசுத் திட் டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே அந்நாட்டு எழுத் தாளர்கள் அனைவரும் அப்பரிசுகளை எவ்வாறேனும் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நல்ல பல குழந்தை இலக்கியங்களைப் படைக்கின்றனர். நமது இந்திய அரசினரும் இத்தகைய பரிசுத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்தி ஒரு சில ஆண்டுகளாக நம் நாட்டு எழுத்தாளர்களை ஊக்கு வித்து வருகின்றது. இப்பரிசுக்குரிய போட்டியினை அந் தந்த மாநில அரசுகள் ஆண்டு தோறும் நடத்தி வருகின் றன. இதன் காரணமாய் பல குழந்தை இலக்கியங்கள் அழகிய முறையில் இன்று வெளிவருகின்றன. பல இளம் எழுத்தாளர்கள் இன்று அப்பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது பணி சிறக்குமானால் குழந்தை நூலகங்கள் வாழும்; வளரும்; கல்விப் பணிகள் பல புரியும். மேலும் அவ்வெழுத்தாளர்களை ஊக்குவித்தற்குப் பல பரிசுத் திட்டங்கள் ஏற்படுத்தப் பெறவேண்டும். குழந்தை இலக்

கியப் பண்ணைகளை அரசினர் தொடங்கி சிறந்த பயிற்சியினை அவ்வெழுத்தாளர்களுக்கு அளித்தல் வேண்டும். நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து அரசினர் வெளியிடவும் செய்யலாம்.

அமெரிக்க நாட்டில் நூலகவியல் பட்டப்படிப்பு மாணவர்கள் தங்கள் விருப்பப் பாடங்களில் ஒன்றாகக் குழந்தை நூலகம் பற்றிய பாடத்தினைப் பெரு விருப்புடன் பயிலுகின்றனர். இன்று அமெரிக்கப் பொது நூலங்களின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக, அதாவது இன்றியமையாத பகுதிகளில் ஒன்றாகக் குழந்தை நூலகப் பகுதி விளங்குவதால் நூலகத் துறையில் ஈடுபடுகின்றவர்களில் பெரும்பான்மையோர் இப்படிப்பினை விரும்பி மேற்கொள்ளுகின்றனர். குழந்தை நூலக அமைப்பு முறை, குழந்தை நூலக ஆட்சி முறை, குழந்தை இலக்கியங்கள், குழந்தைகளுக்குக் கதை சொல்லும் முறை, குழந்தைகளைக் கவரும் வழிவகைகள் முதலியன பற்றி இப்பாடத் திட்டத்தின்கீழ் சொல்லித் தரப்படுகின்றது. ஆனால் இப்பாடம் விருப்பப் பாடங்களில் ஒன்றாகவே விளங்குகின்றது. எனினும் பல மாணவர்கள் தங்களுடைய மனத்தை இப்பயிற்சியில் பறிகொடுக்கின்றனர். நம் நாட்டிலும் நூலகவியல் பாடத் திட்டத்தில் சிறந்த இடத்தைக் குழந்தை நூலகப் பாடத்திற்கு அளித்தல் வேண்டும். அதனால் வருங்காலத்தில் சிறந்த பயனுண்டு.

# *6 பள்ளி நூலகங்கள்

அமெரிக்காவில் உயர்நிலைக் கல்வியின் உயிரோட்டமாக அமைந்திருப்பது பள்ளி நூலகங்களே ஆகும். சிற்றிளமைக் காலத்தில் பயிலும் கல்வியே ஒவ்வொருவரின் எதிர்கால வாழ்வை உருவாக்கும் சாதனமாக அமைந்திருப்பதால், உயர்நிலைக் கல்வியை இயன்ற அளவில் பயன் தரும் வகையில் கற்பிப்பதில் தீவிரக் கவனம் செலுத்தப் படுகிறது. கால மாறுதலுக்கு ஏற்ப, புதிய தேவைகளுக்கு இணங்க உயர்நிலைக் கல்வியை அவ்வப்போது மாற்றியமைக்க வேண்டியிருப்பதால், கல்வித் துறைத் தலைவர்களுக்கு உயர்நிலைக் கல்வி என்றென்றும் பெருஞ் சிக்கலாகவே இருந்து கொண்டிருக்கிறது. இளைஞர் கல்வி முறையைச் சீர்திருத்தி அமைப்பதற்கான வழிவகைகளைக் கூறும்படிக் கல்வி வல்லுநர்கள் எவரிடம் எந்த நேரத்தில் கேட்டாலும், அவர்கள் தாங்கள் கூறவேண்டியவற்றை எல்லாம் கூறிவிட்டு, இறுதியில் ‘இவற்றையெல்லாம் சீராகச் செயல்படுத்த வேண்டுமெனில், பள்ளி நூலகங்களைப் பெருக்க வேண்டும்’ என்று வலியுறுத்தத் தவறுவதே இல்லை. ‘தரமான கல்வியின் முதுகெலும்பு நூலகம்’

---

*12-6-65 அன்று சங்கரன் கோவில் கோமதி அம்பாள் போர்டு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் அளித்த வரவேற்பின்பொழுது ஆற்றிய உரை.

என்று எண்ணும் அளவிற்கு அமெரிக்கப் பள்ளி நூலகங்களின் முக்கியத்துவம் வளர்ந்திருக்கிறது. நூல்களை வாங்கி வாங்கி அடுக்கி வைப்பதுதான் நூலகம் என்ற நிலைமை மாறி, பள்ளியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இன்றியமையாது பங்குகொள்ளும் நிலையங்களாகப் பள்ளி நூலகங்கள் இன்று திகழ்கின்றன.

அமெரிக்க ஐக்கியக் குடியரசில் விளங்கும் நூலகங்களின் பல்வேறு பணிகள் வருமாறு:

1. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றப் பொதுமக்கள் ஆகியோரின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பள்ளியின் செயல் திட்டத்தில் தீவிரப் பங்கு கொள்ளுதல்.

2. நூல்களும் மற்ற நூலகச் சாதனங்களும் சிறுவர்களுக்கும், சிறுமியர்க்கும் தேவையான நேரத்தில் கிடைக்கும்படிச் செய்தல். தங்கள் பணிகள்மூலம் ஒவ்வொரு மாணவனும், மாணவியும் அறிவாற்றல் பெற்றுச் சீரிய முறையில் வளர்வதற்கு உதவி புரிதல்.

3. மாணவர் கல்வி பெறும் காலத்தில், பயன் மிக்க, உள்ளத்திற்கு இன்பந் தரவல்ல எல்லாவித நூல்களையும் படித்து அறிவு பெறவும், படித்த நூல்களின் தன்மையினை மதிப்பிடவும் வழிகாட்டி ஆர்வத்தை ஊட்டுதல்.

4. நூலகத்தில் பெறுகின்ற அனுபவ அறிவின் மூலமாகப் பிறரைக் கவரும் வண்ணம் தங்களுடைய பழக்க வழக்கங்களைச் சீரமைத்துக் கொள்ளவும், சீரான சமூகக் கண்ணோட்டத்தை உருவாக்கவும் மாணவ மாணவிகளுக்கு உதவுதல்.

5. நூலகத்தில் உள்ள நூல்களையும், மற்ற நாள், வார, ஆண்டு என்ற வகைப் பருவ வெளியீடுகளையும், கண்

காட்சி, செவிப்புலன் சாதனங்களையும், திறமையாகவும், பயன்மிக்க வகையிலும் பயன்படுத்திக் கொள்வதற்கு இளஞ் சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் வாய்ப்பும் வசதியும் அளித்தல்.

6. பள்ளி நூலகத்தை மட்டுமின்றி மற்றப் பொது நூலகங்களையும் மாணவர்கள் அறிந்துகொள்ளும் படிச் செய்தல். இதன்மூலம் மாணவர்களின் கல்வியும் பண்பாடும் இடைவிடாமல் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கு வழி வகுத்தல்.

7. பாடங்கள் கற்பிப்பதற்கு உதவும் எல்லாவிதச் சாதனங்களையும் தேர்ந்தெடுக்கவும் அவற்றை உரிய வழிகளில் பயன்படுத்தவும் ஆசிரியர்களுடன் ஒத்துழைத்தல்.

8. பள்ளி ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனும் பண்பாட்டுத் திறனும் மென்மேலும் பெருகுவதற்கு உதவுகின்ற நடவடிக்கைகளில் ஆசிரியர்களுக்கும் பள்ளி ஆட்சியாளர்களுக்கும் (*Administrators*) துணைபுரிதல்.

9. அந்த வட்டாரத்திலுள்ள அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் பொதுவான நூலகச் செயல் திட்டம் ஒன்றைச் செயலாக்குவதற்கு அனைவருடனும் சேர்ந்து ஒத்துழைத்தல்.

பள்ளி நிருவாகம் முதலிய எல்லா நடவடிக்கைகளுக்கும் உறுதுணையாக இருக்கும் வகையில் பள்ளி நூலகம் இயங்கி வருவதை மேற்கூறியவைகளிலிருந்து அறியலாம். அமெரிக்கப் பள்ளி நூலகங்களில் மற்றொரு சிறப்பான அம்சத்தையும் காண முடிகின்றது. அச்சடித்த நூல்களையும் வெளியீடுகளையும் வாங்கி வைப்பது தவிர, பள்ளியில் பாடங் கற்பிப்பதற்கு உதவும் கருவிகளையும்,

சாதனங்களையும் சேகரித்துப் பாதுகாக்கும் நிலையமாக இயங்குவதும் நூலகத்தின் இன்றியமையாத பணிகளில் ஒன்ருகக் கருதப்படுகின்றது. திரைப்படங்கள், செய்திப் படங்கள், இசைத் தட்டுக்கள், மற்றும் பாட போதனைக்கு உதவுகின்ற வகையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள புதிய சாதனங்கள் ஆகியவைகளும் எல்லாப் பள்ளி நூலகங்களிலும் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் அமெரிக்கப் பள்ளி நூலகமானது நூல்களைச் சேகரித்து வைக்கும் நிலையமாகவும் *(Materials Centre)*, போதனைச் சாதனங்களின் நிலையமாகவும் *(Instructional Resource Centre)* விளங்குகின்றது. எனவே அப்பள்ளி நூலகர், நூல் தேர்வு நிபுணராகவும் *(Materials Specialist)*, போதனைச் சாதன ஆலோசகராகவும் *(Instrnctional Resources Consultant)* கருதப்படுகிருர்.

மழலை மொழி பேசும் குழந்தைகளுக்கும், பள்ளி செல்லும் இளஞ்சிருர்க்கும் பலவகைகளிலும் தொண்டு புரிவதற்கான செயல் திட்டங்கள் பள்ளி நூலகத்தின் பணிகளில் சேர்க்கப்பட்டுள்ளன. படிக்கும் வேட்கை கொண்ட மாணவர்களுக்குப் படிப்பதிலும், காட்சிகளைக் கண்டும், சொல்வதைக் கேட்டும் அறிவு பெறுவதிலும் வழிகாட்டுவதும், ஆய்வு உதவும் நூல்களைத் தரல் போன்ற உதவிகளைச் செய்வதும், மாணவர்கள் ஆராய்ச்சி நடத்த உதவுவதும், நூலகச் சாதனங்களை எவ்விதம் சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்வது என்பதுபற்றி ஆலோசனைகள் கூறுவதும் பள்ளி நூலகத்தின் மற்றப் பணிகளாக அமைந்துள்ளன. இந்தப் பணிகள், கடமைகள் ஆகியவற்றை மனத்திற் கொண்டு நூலகத்தின் செயல் திட்டங்களைப் பள்ளி நூலகர் தயாரிக்கிருர். மேலும் அவர் நூலகத்தையும் நூல்களையும் கவர்ச்சிகரமாக வைத்திருப்பதிலும் தனிக் கவனம் செலுத்துகிருர். மாணவர்கள் அமர்ந்து படிக்கும் இடங்கள் நல்ல சுகாதார வசதியுடன், தாராளமான வெளிச்சம் வரும் வகையில் எழில்மிகு தோற்றத்துடன் திகழ்கின்றன.

நுழைந்தவுடனேயே படிப்பதற்கு ஆர்வத்தைத் தூண்டும் முறையில் நூலகத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலையும், தளவாடங்களும் தூய்மையாக வைக்கப்பட்டுள்ளன. நூல்களையுங் கண்ணைக் கவரும் முறையில் காத்தோம்புகிறார்கள். அழுக்கேறிய, சிதைந்துபோன, கிழிந்த நூல்களைச் சிறுவர்கள் கண்ணெடுத்தும் பாரார். எனவே பழுதடைந்த நூல்களை அப்புறப்படுத்திப் புதிய நூல்களை வைக்கிறார்கள்.

அடுத்து நம் தமிழ் நாட்டு உயர்நிலைப் பள்ளி நூலகங்களைப்பற்றி ஒரு சிறிது கூறுவாம். உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழுவின் அறிக்கை உயர்நிலைப் பள்ளி நூலகங்கள் சிறந்த முறையில் விளங்கினால்தான் உயர்நிலைப் பள்ளிக் கல்வி சிறக்கும் என்று கூறியிருந்தும் அப்பணியில் அக்கறை காட்டுவோர் விரல் விட்டு எண்ணக்கூடிய நிலையில் இருப்பது வருந்துதற்குரியது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளி நூலக வளர்ச்சியின் பொருட்டுப் பல இலட்சக் கணக்கான பணத்தைச் செலவிட நமது மத்திய அரசினர் முடிவு செய்துள்ளனர். பொது நூலக வளர்ச்சியில் தமிழகமே வழிகாட்டியாய் விளங்குகின்றது. அவ்வாறே உயர்நிலைப் பள்ளி நூலக வளர்ச்சியிலும் தமிழகம் பிறமாநிலங்களுக்கு வழிகாட்ட வேண்டும். நமது அரசினரும், பள்ளி ஆட்சிக்குழுவினரும், தலைமையாசிரியர்களும் இவ்வாய்ப்பினை உரிய காலத்தில் விழிப்போடிருந்து பயன்படுத்திப் பள்ளி நூலகங்கள் வாழ, வளர வழி செய்ய வேண்டும்.

ஒரு சில பள்ளி நூலகங்களைத் தவிர பெரும்பான்மையான பள்ளி நூலகங்கள், தனிக் கட்டிடம் இன்றியும், தகுதி வாய்ந்த நூலகர் இன்றியும், இருந்து படிப்பதற்குரிய வசதிகள் இன்றியும் விளங்குகின்றன. சில பள்ளிகள் ஆயிரக் கணக்கான நூல்களைக் கொண்டிருந்தும், அவற்றைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் வைக்காமல் ஒரு இருட்டறையில் போட்டு வைத்துள்ளன. ஒருசில பள்ளிகளில் சிறிது வெளிச்

சம் புகக்கூடிய சிறு அறை ஒன்று நூலகத்திற்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அங்கு இருந்து படிப்பதற்குரிய இருக்கைகள் இருக்க மாட்டா. ஒரு சில பள்ளிகள் கடைநிலை ஊழியர் ஒருவரை நூலகத்திற்கென நியமித்துள்ளன. ஆனால் அவர் பள்ளி அலுவலகத்திலேயே பணிபுரிந்து வருவார். எனவே அவ்வறை எப்பொழுதும் மூடியேயிருக்கும். ஆசிரியர்களும் நூலக வளர்ச்சியில் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை. இது வருந்துதற்குரியது.

வேகமாக வளரும் இன்றைய உலகத்தில் நம் இளம் சந்ததியினர் வளமாக வாழவேண்டுமென்றால், நிறைந்த கல்வி அறிவைப் பெற்று மேலைநாட்டுக் குழந்தைகளைப் போன்று சிந்தனைத் திறனைப் பெறவேண்டும். அதற்கு அவர்கள் படிக்கின்ற ஆர்வத்தைப் பெருக்க வேண்டும். அதற்குத் துணை புரிவன பள்ளி நூலகங்களே. எனவே மேலே கூறப்பட்டுள்ள குறைகளை நாம் நீக்க முயல வேண்டும். பள்ளியை நடத்துகின்ற பெருமக்கள் தனி நூலகக் கட்டிடம் கட்டாவிடினும், நூலகத்திற்கெனக் காற்றும் வெளிச்சமும் கொண்ட ஒரு பெரிய அறையினையாவது ஒதுக்குதல் வேண்டும். அவ்வறையினைத் தடுப்புக்களின் துணைகொண்டு மூன்று பகுதிகளாப் பிரித்துக் கொள்ளலாம். ஒரு பகுதியில் நூல்கள் வைக்கப்பட வேண்டும். அப்பகுதியிலேயே நூலகருக்கு இடம் ஒதுக்கலாம். மற்றொரு பகுதியில் நாளிதழ்களும், ஏனைய செய்தி இதழ்களும் சேகரித்து வைக்கலாம். மூன்றாவது பகுதி ஆசிரியர்களும் மாணவர்களும் இருந்து படிப்பதற்கு ஒதுக்கப் படலாம்.

பள்ளி இறுதி வகுப்பினைக் கொண்டிலங்கும் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் குறைந்தது மூவாயிரம் நூல்களையாவது கொண்டிருக்க வேண்டும். ஆயிரம் மாணவர்கள் பயிலும் பள்ளியில் குறைந்தது பத்தாயிரம் நூல்களாவது இருக்க வேண்டும். மாணவர்கள், உலகியலை உணர்ந்து

கொள்வதற்கும், உலக நடப்புக்களை அறிந்துகொள்வதற்கும், பொது அறிவினைப் பெறுவதற்கும், அவர்கள் இயற்கையாகப் பெற்றிருக்கும் சில திறமைகளை வளர்ப்பதற்கும், விஞ்ஞானம், கலை, தொழில் முதலியவற்றை நன்கு அறிந்து கொள்வதற்கும், சிறந்த வாழ்வியற் கருத்துக்களை, வாழ்க்கை உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கும், அவ்வாறே ஆசிரியர்கள் தங்கள் அறிவினைப் பெருக்கிக் கொள்வதற்கும் துணை செய்யக்கூடிய நூல்கள் எல்லாம் இந் நூலகங்களில் இடம் பெறவேண்டும். மேலும் வீரச் சுவையூட்டும் காவியங்களும், கதைகளும், நல்ல கருத்துக்களைக் கொண்ட பொழுதுபோக்கு நூல்களும் வாங்கி வைக்கப்பட வேண்டும். பாட நூல்கள் அனைத்தையும் ஒருங்கே தனியாக வைக்க வேண்டும். பாட நூல்கள் ஆசிரியருக்கும் அதே சமயத்தில் மாணவருக்கும் பயன்படுவனவாகும். எனவே ஒவ்வொரு பாட நூலிலும் மூன்று படிகள் (*Copies*) வாங்கி வைக்கலாம்.

நூல்களை வாங்கி வைத்தால் மாத்திரம் போதாது அவற்றைப் பாதுகாத்து அனைவர்க்கும் வழங்குவதற்கு நூலகப் பயிற்சி பெற்றோரை நூலகர்களாக நியமித்தல் வேண்டும். முதலில் குறுகிய கால நூலகப் பயிற்சி (*Certificate Course*) பெற்றோரையே நூலகராக நியமிக்கலாம். பின்னர் நூலகங்கள் நன்கு வளர்ந்ததும் நூலகவியல் பட்டதாரிகளையே நூலகர்களாக நியமிக்கலாம். கால அட்டவணையில் சில வகுப்புக்களை நூலக வகுப்புக்களாக அமைத்தல் மிக அவசியமாகும். நூலின் தன்மை, சிறந்த நூல்கள், நூலகத்தின் சிறப்பு முதலிய தலைப்புக்களில் நூலகரே மாணவர்களுக்குப் பேசலாம்.

மேலும் நூலகக் குழு ஒன்று இருத்தல் வேண்டும். தலைமையாசிரியர், நூலகர், ஆசிரியர், மாணவர்களில் சிலர் அக்குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

நூலக வளர்ச்சிக்கு அவர்கள் எல்லாவகையானும் பாடு படுதல் வேண்டும். மேற்கூறிய வழிவகைகளை எல்லாம் நாம் கடைப்பிடிப்போமேயானால் நமது உயர்நிலைப்பள்ளி நூலகங்கள் எல்லாம் உயர்வுடன் விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# *7 அமெரிக்க நூலகக் கழகம்

அமெரிக்க நூலகக் கழகம் (*American Library Association*) உலகிலேயே மிகவும் பழைமையானதும், மிகத் தொன்மையானதுமான நூலக நிறுவனமாகும். 1876-இல் பிலடெல்பியாவில் நிறுவப்பட்டதிலிருந்து இன்றுவரை இக்கழகத்தின் வரலாறு முழுவதும், அமெரிக்காவில் நூலகவியல் வளர்ந்த வரலாருகவே இருந்து வருகிறது. நூலகப் பணிகளை விரிவுபடுத்தி, மென் மேலும் வளர்த்து, சமுதாய மேம்பாட்டில் நூல்களையும் எண்ணங்களையும் இன்றியமையாத ஆற்றல்களாக நிலைநாட்டுவதும், குடிமக்கள் அனைவருக்கும் நூல்களும் நூலகப் பலன்களும் கிடைக்கும்படிச் செய்வதும் அமெரிக்க நூலகக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

நூலகங்களின் தரத்தை உயர்த்துவதும், நூலகச் சட்டங்களை இயற்றுவது தொடர்பாக ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை, அறிவுரை கூறுவதும், நூலகத் தொழில் தொடர்பாக உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் எழும் சிக்கல்களைப் போக்கி ஐயங்களை அகற்றி உதவுவதும்,

*4—6—65 அன்று திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழுவைச் சேர்ந்த நூலகர்களும், நூலக ஊழியர்களும் அளித்த வரவேற்பின்பொழுது ஆற்றிய உரை.

அறிவுச் சுதந்திரத்தைக் காப்பதும், உலகிலுள்ள எல்லா நூலகங்களுக்கும் தேவையான தகவல்களை வழங்குவதும் இக்கழகத்தின் முக்கிய பணிகளாக அமைந்துள்ளன.

நூலகப் பொறுப்பாளர்கள் (*Trustees*), நூலகப் பணியில் அக்கறை கொண்டோர் முதலியவர்கள் இக்கழகத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும் நூலகச் சங்கங்கள், நூல் வெளியீட்டு நிறுவனங்கள், வாணிக நிறுவனங்கள், ஆகியனவும் இக்கழகத்தில் அங்கம் வகிக்கின்றன. இப்பொழுது இக்கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை 26,500-க்கும் அதிகம். அமெரிக்காவில் மட்டுமின்றி, உலகம் முழுவதிலுமுள்ள தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் கல்வி, பண்பாடு, பொழுதுபோக்கு, சமூக நலப்பணிகளில் ஈடுபாடு கொண்டிருக்கும் நிறுவனங்கள் இக்கழகத்தில் அங்கம் பெற்றிருக்கின்றன. இதனால், உலகம் முழுவதற்குமே அருந்தொண்டாற்றும் இன்றியமையாத ஓர் உலக நிறுவனமாக இக்கழகம் உருப்பெற்றுத் திகழ்கிறது. உலகமெங்கும் நூலகங்களும் நூலகக் கல்வியும் நூலகத் தொழிலும் தரத்திலும் உயர உதவியும், அவை வளர்வதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்துத் தக்கப் பாதுகாப்புக்களை ஏற்படுத்தியும் சேவைபுரிவதே இக்கழகத்தின் குறிக்கோளாக அமைந்திருக்கிறது.

அமெரிக்க நூலகக் கழகம் இன்று 13 பிரிவுகளுடன் (*Divisions*) இயங்கி வருகிறது. இக்கழகத்தின் பல்வேறு நடவடிக்கைகளை, இந்தப் பிரிவுகளும், நியமிக்கப்பட்ட குழுக்களும், கழகங்களும், வட்டமேசைப் பிரிவுகளும், மேற்கொண்டு வருகின்றன. கருத்துரை வழங்குதல், ஆலோசனை கூறுதல், தலைமை நிலையப்பணிகளைச் செய்தல் முதலியவற்றை, நிருவாக இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் இக்கழகத்தின் தலைமையகம் (*ALA Headquarters*) நேரடியாகக் கவனித்து வருகிறது. இக்கழகத்தின் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகப் பேரவை

(*Council*) யின் மூலம் கழகத்தின் நிருவாகம் நடைபெறுகிறது. கழகத்தின் உயர் அதிகாரிகளும், நிருவாகப் பேரவையின் சில குறிப்பிட்ட உறுப்பினர்களும் அடங்கிய ஒரு சிறு நிருவாகக் குழுவும் இயங்கி வருகிறது.

**தகுதி**

இக்கழக உறுப்பினராக இருப்பதற்குச் சில குறிப்பிட்ட தகுதிகள் இருந்தால் போதும். தனிப்பட்ட முறையில் இக்கழக உறுப்பினராவதற்கு ஒருவர் (1) நூலகராக, (2) நூலகப்பொறுப்பாளராக, (3) நூலகத் துறையில் ஏதாவது பணிபுரிபவராக, (4) நூலகத் துறையில் அக்கறை கொண்டவராக இருக்கலாம். மேலும் பள்ளி நூலகங்கள், ஏனைய நூலகங்கள். மற்றும் உள்ளூர், மாநில, வட்டார நூலகச் சங்கங்கள் ஆகியவற்றின் சார்பாளர் என்ற முறையில் ஒருவர் இக்கழகத்தின் நிறுவன உறுப்பினராக (*Institutional Member*) ஆகலாம். நூல் வெளியீட்டு நிறுவனங்களும், வாணிக நிறுவனங்களும், இக்கழகத்தின் சிறப்பு (*special*) உறுப்பினராகச் சேரலாம். அவ்வாறே நூலக வளர்ச்சிக்கு உதவ விரும்பும் வள்ளல்களும் சேரலாம்.

**13 பிரிவுகள்**

இன்றைய நூலகங்களின் தேவையும் அவற்றின் பணிகளும் பல்கிப் பெருகி விட்டன. ஒவ்வொரு துறைக்கும் நூலகம் தனித்த முறையில் தொண்டுபுரிய வேண்டியதிருக்கிறது. இதன் காரணமாக, அமெரிக்க நூலகக் கழகமும், ஒவ்வொரு துறைக்கு ஏற்ற முறையில் பணிபுரியும் நோக்கத்தோடு 13 பிரிவுகளைக் கொண்டிலங்குகின்றது. அவை பின் வருமாறு: (1) அமெரிக்கப்பள்ளி நூலகர்கள் சங்கம் (*American Association of School Librarians*); (2) அமெரிக்க மாநில நூலகங்கள் சங்கம் (*American Association of State Libraries*); (3) கல்லூரி ஆராய்ச்சி நூலகங்கள் சங்கம் (*Association of College and Research Librar-*

*ies;* (4) மருத்துவமனை-நிறுவன நூலகங்கள் சங்கம் (*Association of Hospital and Institution Libraries*); (5) பொது நூலகச் சங்கம் (*Public Library Association*); (6) முதியோர் நூலகப் பணிப் பிரிவு (*Adult Services Division*); (7) அமெரிக்க நூலகப் பொறுப்பாளர் சங்கம் (*American Library Trustee Association*); (8) குழந்தை நூலகப் பணிப் பிரிவு (*Children's Services Division*); (9) நூலக நிறுவாகப் பிரிவு (*Library Administration Division*); (10) நூலகக் கல்விப் பிரிவு (*Library Education*); (11) ஆய்வு உதவும் நூலகப் பணிப் பிரிவு (*Reference Services Division*); (12) நூல்வளம், தொழில் நுட்பப் பணிப் பிரிவு (*Resources and Technical Services Division*); (13) இளைஞர் நூலகப் பணிப் பிரிவு (*Young Adult Services Division*).

இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றும், அதனதன் துறைகளில் நுட்பமான விரிவான தகவல்கள் அனைத்தையும் அளிக்கிறது. பல திட்டங்களையும் வழங்குகிறது. மேலும் இவை பற்றிய நூல்கள், துண்டு வெளியீடுகள் ஆகியவற்றையும் தந்து உதவுகிறது. தனிப்பட்டவர்களுக்கும், நூலகங்களுக்கும், பல நிறுவனங்களுக்கும் உதவும் செயல் முறைகள், திட்டங்கள் குறித்தும் இது ஆலோசனைகள் கூறுகிறது. இத்துடன் புதிய நுட்பங்களை, முறைகளைக் கண்டுபிடிக்க ஊக்கமும், உதவியும் அளிப்பதுடன் அவற்றை மற்ற உறுப்பினர்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கவும் செய்கிறது. உறுப்பினர்கள் ஒன்று கூடி நேரடியாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் இது ஏற்பாடு செய்கிறது. ஒவ்வொரு பிரிவின் பணிகளும் பின் வருமாறு:

1. அமெரிக்கப் பள்ளி நூலகர்கள் சங்கம் : பள்ளி நூலகங்களின் பணிகளை இப்பிரிவு வரையறுக்கிறது. பள்ளி நூலகப்பணிகளை மேலும் முன்னேற்றுவதற்கும், பள்ளி நூலகர்களின் தொழில் நிலையை உயர்த்துவதற்கும் பாடுபடுகிறது. 1960 ஜூன் மாதத்திலிருந்து தேசியக் கல்விச்

சங்கத்தின் (*National Education Association*) ஓர் உறுப்பாக இப்பிரிவு இயங்கி வருகிறது. "பள்ளி நூலகங்கள்" (*School Libraries*) என்ற இதழை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடுகிறது.

அமெரிக்க மாநில நூலகங்கள் சங்கம்: மாநிலங்களிலும் வட்டாரங்களிலும் தரமான நூலகங்களை நிறுவி, அவற்றின் சேவைகளை விரிவுபடுத்தும் பொறுப்பு இந்தப் பிரிவினுடையது. உள்ளூரில் நூலகங்களின் வளர்ச்சிக்கு உதவி, ஊக்கம் அளிப்பதும் இதன் பொறுப்பாகும். "தலைவரின் செய்திக் கடிதம்" (*President's Newsletter*) என்ற இதழை ஆண்டில் இருமுறை உறுப்பினர்களுக்கு அனுப்புகிறது.

3. **கல்லூரி—ஆராய்ச்சி நூலகங்கள் சங்கம்:** கல்லூரி, பல்கலைக்கழக நூலகங்கள், உயர்கல்வி நிறுவன நூலகங்கள், தனிப்பட்ட ஆராய்ச்சி நூலகங்கள், மற்றச் சிறப்பு நூலகங்கள் இப்பிரிவில் அங்கம் வகிக்கின்றன. கல்லூரி நூலகங்கள், இளம் கல்லூரி நூலகங்கள், அரிய நூல்கள் அன்றி பொருள் சிறப்பு நூல்களைக் கொண்ட நூலகங்கள், ஆசிரியர் கல்வி நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள் ஆகியன இப்பிரிவின் உட்பிரிவுகளாகும். பொருள் சிறப்புப் பிரிவில், விவசாயம், தாவர இயல், கலை, சட்டம், அரசியல் முதலிய துணைப்பிரிவுகளும் உள்ளன. "கல்லூரி—ஆராய்ச்சி நூலகங்கள்" (*College and Research Libraries*) என்ற பெயரில் இதழ் ஒன்றையும் இப்பிரிவு இரு மாதத்திற்கு ஒருமுறை வெளியிடுகிறது.

4: **மருத்துவமனை நிறுவன நூலகங்கள்:** மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், பணிவிடையாளர்கள் (*Nurses*), நோயாளிகள் ஆகியோருக்கும், நிறுவனங்களில் பணி புரியும் அலுவலர்களுக்கும் சேவை செய்யும் நூலகங்களின் நலனை இப்பிரிவு கவனிக்கிறது. மூன்று மாதத்திற்கு

ஒருமுறை வெளிவரும் 'செய்திக் கடிதம்' (*AHIL News letter*) ஒன்றையும் இதுவெளியிடுகிறது.

5. **பொது நூலகச் சங்கம்:** ஒவ்வொரு சமுதாயத்திலும் எல்லா வயதுப் பிரிவினருக்குமான பொது நூலகங்களின் பணிகளைப் பெருக்கி விரிவு படுத்துவதற்கான திட்டங்களை இப்பிரிவு தயாரிக்கிறது.

6. **முதியோர் நூலகப் பணிப் பிரிவு:** முதியோர்களுக்கான கல்வி, பொழுதுபோக்கு, பண்பாட்டு நூலக நடவடிக்கைகளை இப்பிரிவு விரிவாக்குகிறது.

7. **அமெரிக்க நூலகப் பொறுப்பாளர் சங்கம்:** இது நூலகப் பொறுப்பாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குகிறது. நூலகத்திற்குப் பொதுமக்கள் ஆதரவைத் திரட்ட உதவுகிறது. 'நூலகப் பொறுப்பாளர்' (*Library Trustee*) என்ற இதழை வெளியிடுகிறது.

8. **குழந்தை நூலகப் பணிப் பிரிவு:** பள்ளி செல்லும் வயது வராத குழந்தைகள் முதல் உயர் தொடக்கப்பள்ளி மாணவர்கள்வரை எல்லாக் குழந்தைகளுக்குமான நூலகப் பணிகளைப் பெருக்க இப்பிரிவு உதவுவதுடன், அவர்களுக்கு உகந்த நூல்கள் பற்றி ஆலோசனைகளையும் கூறுகிறது.

9. **நூலக நிருவாகப் பிரிவு:** நூலக நிருவாகம் தொடர்பான ஒவ்வொரு அம்சம் குறித்தும் இப்பிரிவு ஆராய்ச்சிகள் நடத்தி, நிதி நிருவாகம், அலுவலர் தேர்வு, பயிற்சி, கட்டிடங்கள் அமைப்பு, கருவிகள், பொது உறவு, நூலக அமைப்பு ஆகியவை குறித்து ஆலோசனைகளைக் கூறுகிறது.

10. **நூலகவியல் கல்விப் பிரிவு:** நூலகவியல் கல்வியை ஆராய்ந்து, கால மாறுதலுக்கு ஏற்ப என்னென்ன மாறுதல்கள் செய்ய வேண்டுமென இப்பிரிவு முடிவு செய்கிறது. அலுவலர்களுக்கு அளிக்கும் நூலகவியல் கல்விக்கான பாடத் திட்டங்களை வகுக்கிறது.

11. ஆய்வு உதவும் நூலகப் பணிப் பிரிவு: ஆய்வு உதவும் நூல்கள், தகவல்கள் கேட்டுவரும் கேள்விகள், நூல்களை வகுத்தல். பகுத்தல், நூல் விவரத்தொகுதிகள் தயாரித்தல், இதற்கென புதிய முறைகள் கண்டுபிடித்தல் முதலியவை பற்றி எழும் சிக்கல்களை ஆராய்ந்து தீர்வுகள் காண்பது இப்பிரிவின் பணியாகும்.

12. தகவல்—தொழில் நுட்பப் பணிப் பிரிவு: நூல்களைக் கண்டுபிடித்தல், வாங்குதல், அந்நூல்களை வகைப்படுத்துதல், நூற்பட்டியல் தயாரித்தல், நூல்களைப் பாதுகாத்தல் ஆகியவை பற்றிய புதிய நுட்பங்களைக் கண்டுபிடிப்பது இப்பிரிவின் அலுவலாகும்.

13. இளைஞர் நூலகப் பணிப் பிரிவு: இளைஞர்களுக்கான நூல்களைத் தேர்ந்தெடுத்தல், அவற்றை வகைப்படுத்துதல், செயல் முறைகளைத் தயாரித்தல், பணிகளை வரையறுத்தல் ஆகியவற்றிற்கு இப்பிரிவு வழிகாட்டி உதவுகிறது.

இந்த 13 பிரிவுகளில், முதல் ஐந்தும் 'நூலக வகை'ப் பிரிவுகளைச் (*Type of Library Divisions*) சேர்ந்தவை. மற்ற 8 பிரிவுகளும், 'செயல்வகை'ப் பிரிவுகளைச் (*Type of Activity Divisions*) சேர்ந்தவை.

அமெரிக்க நூலகக் கழக உறுப்பினராகச் சேரும் ஒவ்வொருவரும் மேற்கூறிய பிரிவுகளில் ஏதாவது இரண்டில் உறுப்பினராக இருக்கலாம். இந்தப் பிரிவுகள் இரண்டும் வெவ்வேறு வகையைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். அதாவது, ஒரு பிரிவு 'நூலக வகை'யிலும் மற்றது 'செயல் வகை'யிலும் இருக்க வேண்டும். இரண்டுக்கு அதிகமான பிரிவுகளில் உறுப்பினராக இருக்க விரும்புவோர் அதற்கெனத் தனிக் கட்டணம் செலுத்திச் சேரலாம்.

**நூல் வெளியீடு**

நூலகவியல் தொடர்பான நூல்களை வெளியிடுவதில் அமெரிக்க நூலகக் கழகம், நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது. இலாப நோக்கமின்றிக் கூட்டுறவு முறையில் இந் நூல்களை வெளியிடுகிறது. இதற்கென இக்கழகத்தில், நூல் வெளியீட்டுப் பிரிவு தனியாகச் செயல்பட்டு வருகிறது. இது வெளியிடும் ஒவ்வொரு நூலையும், துண்டு வெளியீட்டையும் இக்கழக உறுப்பினர்கள் பெறலாம்.

**தலைமை நிலையம்**

நூலகத் தொழிலை உடல் என்று கொண்டால், உடலின் ஒவ்வொரு செயலையும் அசைவையும் கட்டுப்படுத்தி இயக்கும் மூளை மண்டலம், இக்கழகத்தின் 'தலைமை நிலையம்' (*ALA Headquarters*) எனலாம். இத்தலைமை நிலையம் சிகாகோவில் இருக்கிறது. நூலகத் துறையில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களையும் அரசாங்கம் இத்துறை தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகளையும், இயற்றும் சட்டங்களையும் உடனுக்குடன் அறிந்து அவை பற்றிய தகவல்களைக் கழக உறுப்பினர்களுக்குத் தலைமை நிலையம் உடனடியாகத் தெரிவிக்கிறது. ஆண்டில் 11 முறை வெளியாகும் 'ஏ.எல்.ஏ. புல்லெட்டின்' (*ALA Bulletin*) என்ற இதழின் மூலம் இந்தத் தகவல்களைப் பொதுமக்கள் அறிய முடிகிறது. அமெரிக்க நூலகக் கழகத்தின் நடவடிக்கைகள் பற்றிய கட்டுரைகளும், நூலகவியல் தொடர்பாக இத்துறையிலுள்ள அறிஞர்கள் எழுதும் கட்டுரைகளும், மற்றும் நூலகம் பற்றிய உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளும் இந்த இதழில் வெளியிடப்படுகின்றன.

நூலகம் பற்றிய தகவல்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும்படிச் செய்வதற்காகவும், இத்துறையில் அவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டி அவர்களின் ஆதரவைத்

திரட்டுவதற்காகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆண்டுதோறும் மாநாடுகள், கருத்தரங்குகளைத் தலைமை நிலையம் நடத்துகிறது. நூலக அறிஞர்களும், வல்லுநர்களும் தொழில் முறையில் ஒன்றுகூடி, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், புதிய நுட்பங்களைக் கண்டுபிடிக்கவும், ஒருவரோடொருவர் நெருங்கிய தொடர்பு கொள்ளவும் இந்த மாநாடுகளும் கருத்தரங்குகளும் உதவுகின்றன.

**பொதுமக்கள் தொடர்பு**

பொதுமக்களுடனும், நிறுவனங்களுடனும் அன்றாடம் தொடர்பு கொண்டு உதவிகள் புரிவதற்காகத் தலைமை நிலையத்தில் பொது உறவு அலுவலகம் தனியாக இயங்கி வருகிறது. கழகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக அவ்வப்பொழுது செய்தி அறிக்கைகளை இந்த அலுவலகம் வெளியிடுகிறது; பொதுமக்கள் கேட்கும் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதிலனுப்புகிறது; விரும்பும் உதவிகளைச் செய்கிறது.

தலைமை நிலையத்தில் தனி நூலகம் ஒன்று உள்ளது. தலைமை நிலைய அலுவலர்களுக்கு இந்நூலகம் முக்கியமாகப் பயன்படுகிறது. நூலகவியல் தொடர்பாகவும் நூலகர்களின் தொழில் தொடர்பாகவும் உள்ள நூல்கள்தான் இந்நூலகத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. கழக உறுப்பினர்கள் கேட்டால், இந்நூல்கள் அவர்களுக்குக் கடனாகக் கொடுக்கப்படுகின்றன. இந்நூலகத்தில் இப்பொழுது 4800 நூல்களும், 400 பருவ வெளியீடுகள், துண்டு வெளியீடுகள், படங்கள், நுண்சுருள்கள், ஒலிப்பதிவுகள், திரைப்படங்கள் முதலியனவும் உள்ளன.

அமெரிக்க நூலகக்கழகத்தின் 13 பிரிவுகளையும், 10 இலாகாக்களையும் 32 குழுக்களையும் மேற்பார்வையிடும் பொறுப்புத் தலைமை நிலையத்தைச் சேர்ந்ததாகும். இப்பிரிவுகளின் செயல் முறைகளை ஒருங்கிணைத்து, அவை சீராகச் செயல்படுவதற்கான திட்டங்களை வகுத்துக்

கொடுத்துத் தலைமை நிலையம் உதவுகிறது. தலைமை நிலையத்தில் 100-க்கும் அதிகமான முழுநேர அலுவலர்கள் வேலை பார்க்கிறார்கள். தலைமை நிலையத்தில் தலைமை அதிகாரி 'நிருவாக இயக்குநர்' ஆவார். அவரின் கீழ் இணை நிருவாக இயக்குநர் ஒருவரும், துணை நிருவாக இயக்குநர்கள் இருவரும் பணியாற்றுகிறார்கள்.

கழகத்தின் நிருவாகக் குழுவுக்கும், கழக அலுவலர்களுக்குமிடையே தொடர்பாளராக நிருவாக இயக்குநர் பணியாற்றுகிறார். வெளிநாட்டுப் பிரமுகர்களையும், நூலகவியல் அறிஞர்களையும் வரவேற்றுச் சிறப்பிப்பதும் இவரது பொறுப்பாகும். நூலகச் சட்டங்கள் பற்றி ஆலோசனைகள் கூறுவதற்காக வாசிங்டனிலுள்ள சட்டக் குழுவுடன் இவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார். வெளிநாடுகளில் கழகம் மேற்கொண்டுள்ள நூலகத் திட்டப்பணிகளை மேற்பார்வையிடுவதும் நிருவாக இயக்குநரின் பொறுப்பாகும். கொள்கைகளை வகுப்பதிலும், நிருவாகத்தைக் கவனிப்பதிலும் இவருக்கு உதவுவதற்காக ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குழுவில், இணை, துணை நிருவாக இயக்குநர்களும், நூல் வெளியீட்டுப் பிரிவின் இயக்குநரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

**தகவல் நிலையம்**

நூலகத்துறை தொடர்பான தகவல் நிலையமாகவும் *(Information Bureau)* தலைமை நிலையம் இயங்கிவருகிறது. நூலக நிருவாகம் பற்றித் தகவல்கள் கேட்டு இங்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் நூலகங்களிலிருந்து வருகின்றன. ஆண்டுதோறும், அலுவலர் தேர்வுபற்றி மட்டும் இலட்சத்திற்கும் அதிகமான தகவல்கள் அனுப்பப்படுகின்றன. பொதுஉறவுத் தொடர்பு குறித்து 30,000 கடிதங்களும், நூலக நண்பர்கள் பற்றி 25,000 கடிதங்களும் எழுதப்படுகின்றன.

**வெளிநாட்டு உதவித் திட்டம்**

அமெரிக்காவிலும், பிறநாடுகளிலும் உள்ள 60-க்கும் அதிகமான நூலகக் கழகங்கள் இந்தக் கழகத்தில் இணைந்திருக்கின்றன. 1943-இல் வாசிங்டனில் இக்கழகத்தின் உலக உறவு அலுவலகம் (*International Relations Office*) நிறுவப்பட்டது. வெளிநாடுகளில் அமெரிக்க நூல்களை வழங்கவும், அயல்நாடுகளில் அமெரிக்காவின் நூலக உதவித் திட்டங்களைச் செயலாக்கவும் இந்த அலுவலகத்தின் மூலம் இக்கழகம் வழிசெய்கிறது. அயல்நாட்டுச் சுற்றுப்பயணங்களை ஏற்பாடு செய்து, அந்த நாடுகளில் நூலக வளர்ச்சி வேகம் பற்றியும், அங்கு நூலக முன்னேற்றத்திற்கு என்னென்ன உதவிகள் செய்யலாம் என்பது குறித்தும் கழகம் அறிந்து கொள்கிறது. இக்கழகத்தின் உதவிபெறும் வெளிநாட்டு நிறுவனங்களில் டில்லிப் பல்கலைக் கழகத்தின் நூலகவியல் பள்ளி முக்கியமானதாகும். இரங்கூன் பல்கலைக்கழகம், பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகம், ஜப்பானிலுள்ள கியோ பல்கலைக்கழக நூலகவியல் பள்ளி, அங்காரா பல்கலைக்கழகத்தின் நூலகக் கல்விக்கூடம், தேசியத் தைவான் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கும் அமெரிக் நூலகக் கழகம் உதவி புரிந்து வருகிறது.

நமது நாட்டிலும் சென்னை நூலகக் கழகம், இந்திய நூலகக் கழகம் போன்ற நூலகக் கழகங்கள் பணியாற்றி வருகின்றன. அவைகள் அமெரிக்க நூலகக் கழகத்தைப் பின்பற்றி, தக்க முறையில் செயல்படுமாகில் நமது நாட்டு நூலகத் துறையிலும் உலகம் வியக்கத் தக்க நிலையில் பல புதுமைகள் நிகழுமன்றோ!

# 8. கல்லூரி-பல்கலைக்கழக நூலகங்கள்

அமெரிக்கா குடியேற்ற நாட்டு ஆதிக்கத்திலிருக்கும் பொழுதே கல்லூரி நூலகங்கள் பல நிறுவப்பட்டு இயங்கி வந்தன. அப்பொழுதிருந்தே கல்லூரி-பல்கலைக்கழக நூலகங்களின் வரலாறு தொடங்கிவிட்டது எனலாம். முதலாவது கல்லூரி நூலகம் 1638-இல் ஹார்வர்டில் நிறுவப்பட்டது. ஜான் ஹார்வர்ட் என்பார் இப்புதிய நூலகத்திற்கு 329 நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். அமெரிக்கப் புரட்சி நடைபெற்ற நேரத்தில் 9 கல்லூரிகள் தொடங்கப்பட்டிருந்தன. ஆனால், அவற்றின் நூலக வளர்ச்சி மெதுவாகவே நடைபெற்று வந்தது. இந்நூலகங்கள் பெரும்பாலும் அன்பளிப்பாக வரும் நூல்களையே நம்பியிருந்தன. அந்த நூல்கள் கூட ஆசிரியர்களுக்கு மட்டுமே கிடைத்தன. மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்நூலகங்கள் யாராவது ஆசிரியர் ஒருவரின் பகுதிநேர மேற்பார்வையில் இயங்கி வந்ததால், வாரத்தில் சில மணிநேரமே அவை திறந்து வைக்கப்பட்டிருந்தன. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இதே முறையில்தான் இந்நூலகங்களின் செயல்முறை நீடித்து வந்தது என்றாலும் அவற்றின் வளர்ச்சி ஓரளவு வேகமடைந்தது என்று சொல்லவேண்டும். ஹார்வர்டு கல்லூரி நூலகத்தில், 1790-இல் 12 ஆயிரமாக இருந்த நூல்களின் எண்ணிக்கை 1849-இல் 56 ஆயிரத்

திற்கு உயர்ந்தது. இந்நூற்றுண்டின் இடைக்காலத்தில் கொலம்பியா, வர்ஜினியா, யேல், பிரவுன், ஆகிய பல்கலைக் கழகங்களில் நூல்களின் எண்ணிக்கை 12000 முதல் 23000 வரை இருந்தது.

19-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் கல்லூரி-பல்கலைக் கழக நூலகங்கள் வியக்கத்தக்க முறையில் வேகமாக வளர்ந்தன. 15 அல்லது 20 ஆண்டுகளில் இரண்டு அல்லது மூன்று மடங்கு அளவுக்கு விரிவடைந்தன. 1900-ஆம் ஆண்டு கொலம்பியா நூலகத்தில் நூல்களின் எண்ணிக்கை 2,50,000 ஆகப் பெருகியது. யேல் பல்கலைக்கழகத்தில் நூல்கள் 3 இலட்சத்திற்கு உயர்ந்தன. ஹார்வர்டில் 10 இலட்சத்தைத் தாண்டிவிட்டிருந்தன. 1961–இல் 27 பல்கலைக்கழக நூலகங்களில் மொத்தத்தில் ஒரு கோடிக் கும் அதிகமான நூல்கள் இருந்தன. 70 இலட்சம் நூல் களுடன், மிகப்பெரிய பல்கலைக்கழக நூலகமாக ஹார்வர்ட் நூலகம் திகழ்ந்தது. 44,90,420 நூல்களுடன் யேல் நூல கம் இரண்டாவது இடத்தைப் பெற்றது. மூன்றுவது இடம் பெற்ற இலிஞய்ஸ் நூலகத்தில் 33, 83,384 நூல் களிருந்தன. மற்றும் ஏழு நூலகங்களில் ஒவ்வொன்றிலும் 20 அல்லது 30 இலட்சம் நூல்கள் இடம் பெற்றிருந்தன. நூல் எண்ணிக்கை வரிசைப்படி அந் நூலகங்கள் வருமாறு: கொலம்பியா (29, 39, 751), மிச்சிகன் (29, 12, 936), பெர்க்லேயிலுள்ள கலிபோர்னியா (25, 96, 526), கார் னெல் (21, 98, 654), சிகாகோ (21, 42, 223), மின்னி சோட்டா (20, 20, 594). இத்தகைய சிறந்த வளர்ச்சியின் காரணமாக, நூல்களைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்ற பழைய எண்ணம் மறைந்தது. நூல்களை வாசகர் களுக்குத் தாராளமாகக்கிடைக்கச் செய்ய வேண்டும், நூல கங்களை அதிகநேரம் திறந்து வைத்திருக்கவேண்டும், நூல கர்களுக்குத் தனிப் பயிற்சியளிக்க வேண்டும் என்ற எண் ணம் உருவாகியது. கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களி

லும் நூலகங்களில் ஏராளமான நூல்களை வாங்கி நிரப்பி அவற்றைப் பேணுவதால் மட்டும் பயனில்லை; அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்துவதற்குரிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்ற கருத்தும் ஓங்கியது.

நூலகம் பற்றிய கருத்துக்களில் ஏற்பட்ட இம்மாறுதல்கள், நூலகக் கட்டிடங்களில் பிரதிபலித்தன. 19-ஆம் நூற்றாண்டிலும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலும் கட்டப்பட்ட நூலகக் கட்டிடங்கள், பழமைத் தோற்ற அமைப்புடனும், மத்தியில் கவர்ச்சியான மாடிப் படியுடனும், கனமும் வலுவும் பொருந்திய சுவர்களுடனும், உயர்ந்த மேற்கூரைகளுடனும், பெரிய விரிந்த படிப்பறைகளுடனும் அமைந்தன. ஆனால் புதிய நூலகக் கட்டிடங்கள் எளிதில் இயங்குவதற்கு ஏற்ற எல்லா வசதிகளோடும், சிறிய கவர்ச்சியான படிப்பறைகளோடும் தனிப்பட்டவர்களுக்கான ஆராய்ச்சி வசதிகளோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அயோவா, கொலரோடா பல்கலைக் கழகங்களின் நூலகக் கட்டிடங்கள், புதிய நூலகக் கட்டிட அமைப்பிற்கு மாதிரியாக அமைந்துள்ளன. சில பெரிய நூலகங்களில் அண்மைக் காலமாக, பட்டப் படிப்பு மாணவர்களுக்குத் தனிப் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய பிரிவுகளில் தெரிந்தெடுக்கப்பட்ட 75 000 முதல் 1,50,000 நூல்கள்வரை இடம்பெற்றுள்ளன. மாணவர்கள் அமைதியான சூழ்நிலையில் தங்கள் விருப்பப்படி படிப்பதற்கான வசதிகளைச் செய்துகொடுப்பதே இத்தனிப்பிரிவுகளின் நோக்கமாகும். பட்டப் படிப்பு மாணவர்கள், தொழிற் கல்வி மாணவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை விரைவாகப் பெருகி வருவதால் அவர்களுக்கான நூலக வசதிகளும் அதிக அளவில் தேவைப்படுகின்றன. பெரிய நூலகங்களில் மாணவர்களுக்கென தனிப்பிரிவு ஏற்படுத்தியிருப்பதால், மாணவர்களின் தேவைகளை முழு அளவில் நிறைவு செய்ய முடிகிறது. ஹார்வர்டிலுள்ள லெம்மாண்ட் நூலகம் 1949-இல் முடிவடைந்தது. இங்குதான் முதன்

முதலில் மாணவர்களுக்கெனத் தனிப்பிரிவு தொடங்கப் பட்டது. அடுத்தபடியாக மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் மாணவர் பிரிவு தனியாக அமைக்கப்பட்டது. இப்பிரிவில் 2,250 பேருக்கு இடவசதியுண்டு. 1960-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, அமெரிக்காவில் மொத்தம் 1450 கல்லூரி-பல்கலைக்கழக நூலகங்களும், 581 இளங் கல்லூரி நூலகங்களும் இயங்கி வருகின்றன. கல்லூரி நூலகம் ஒன்றில், தலைமை நூலகர், நூற்பட்டியல் பிரிவு நூலகர், நூல் வழங்கு நூலகர், ஆய்வு உதவும் நூலகர் ஆகியோரும் அவர்களுக்கு அந்தந்தத் துறையில் பயிற்சி பெற்ற பல உதவியாளர்களும் பணியாற்றுகின்றனர். இவர்கள் மாணவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அளிக்கின்றனர். நூலக அலுவல்களும், நூல் சேகரிப்பும் பெரும்பாலும் நூலகக் கட்டிடத்தில் ஒருமுகமாக நடைபெற்று வந்தபோதிலும் சில குறிப்பிட்ட துறைகள் மட்டும், முக்கியமாக விஞ்ஞானத் துறைகள், தங்களுக்கு வேண்டிய நூல்களைத் தாங்களே சேகரித்துக் கொள்கின்றன. கல்வி நிறுவனங்களின் நூலகங்கள் பெருகப் பெருக, மானிடவியல், சமூகவியல், அறிவியல் போன்று பாட வாரியாக நூல்கள் பகுக்கப்பட்டு, அவற்றில் பெரும்பாலானவற்றை அந்தந்தத் துறைகளுக்குரிய நூலகங்களில் வைக்கிறார்கள்.

கோலரோடா, ஆரிகான், நெப்ராஸ்கா பல்கலைக்கழக நூலகங்கள், விரிவான பொருட்பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. இலினொய்ஸ் பல்கலைக்கழகத்தில் 30 துறை நூலகங்களும், ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் 50 துறை நூலகங்களும் உள்ளன. சில பெரிய பல்கலைக்கழக நூலகங்களில் பல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். சுமார் 23 பல்கலைக்கழகங்களில் நூற்றுக்கு அதிகமான அலுவலர்கள் வேலை பார்க்கிறார்கள். பெரிய நூலகங்களில் தொழில் முறையில்லாத அலுவலர்கள், தொழில் முறை அலுவலர்கள் ஆகியோரின் எண்ணிக்கை இருவருக்கு

ஒருவர் என்ற விகிதத்தில் அமைந்திருக்கிறது. ஆனால் கல்லூரி நூலகங்களில் இவர்களின் எண்ணிக்கை சரிசமமாகவே அமைந்துள்ளது. கல்லூரி-பல்கலைக் கழக நூலகங்கள் வியக்கத்தக்க முறையில் வளர்ந்துள்ள போதிலும் கூட, பணிகளைச் செவ்வனே புரிவதில் அண்மைக்காலமாக அவைகளுக்குப் பலவிதத் தொல்லைகள் ஏற்பட்டுள்ளன. மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகப் பெருகி வருவதும், நூல்கள் பெரும் அளவில் வெளியாகி வருவதும், நூலகத்தின் நூல் சேகரிப்பு நடவடிக்கைகள் விரிவடைந்து வருவதும், பாட நூல்களின் அடிப்படையில் அல்லாமல் நூலகத்தின் அடிப்படையில் கல்வித் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு வருவதும் இத்தொல்லைகளுக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. அதே சமயத்தில் உயர்கல்வி நிலையங்களைச் சேர்ந்த நூலகங்களுக்கென ஒதுக்கப்படும் நிதி குறைந்து கொண்டு வருகிறது. 1939-40-இல் மொத்தச் செலவினத்தில் 3·7% நிதி நூலகங்களுக்கு ஒதுக்கப்பட்டது. 1957-58-இல் இத்தொகை 2·4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இடவசதிக் குறைவினாலும் நிதிப் பற்றாக்குறையினாலும் நுண்சுருள்களைப் பெரும் அளவில் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மற்றும் பல சிக்கன முறைகளையும், நுட்பங்களையும் கையாள வேண்டியதிருக்கிறது. விரிவடைந்து வரும் நூலகத் தேவைகளினால் தனி நூலகங்களுக்குப் பெருகிவரும் சுமைகளைக் குறைத்து உதவுவதற்குப் பல கூட்டுறவுத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நூலகங்களின் செலவுகளைக் குறைத்துப் பயன்களைப் பெருக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு தானியக்க எந்திரங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. பெரிய நூலகங்களில் நூற்பட்டியல் தயாரித்தல், நூல் வழங்கல், அலுவல் இயக்கம் முதலிய பணிகளுக்கு எந்திரங்களைப் பயன்படுத்த முயன்று

வருகிறார்கள். இதில் நடைபெறும் பரிசோதனைகள் வெற்றி பெற்றால், அடுத்த பத்தாண்டுகளில் எல்லா நூலகங்களிலும் இப்பணிகளுக்கு எந்திரங்களே பயன்படுத்தப்படும். கல்லூரி நூலகங்கள் எவ்விதத் தரத்துடன் அமையவேண்டும் என 1959-இல் நிருணயிக்கப்பட்டது. 600 மாணவர்களுள்ள ஒரு கல்லூரி நூலகத்தில், நிறுவப்பட்ட 4 ஆண்டுகளில் குறைந்தது, 50,000 நூல்களாவது சேகரித்து வைக்கவேண்டும் என்றும், அதிகப்படியான ஒவ்வொரு 200 மாணவர்களுக்கு மேலும் 10,000 நூல்கள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் இத்தர நிருணயத்தில் கூறப்பட்டுள்ளது. மொத்தச் செலவினத்தில் 5 சதவிகித நிதியை நூலகத்திற்குச் செலவிட வேண்டுமெனவும் இதில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் நிறுவனங்களில் 40% நூலகங்களும், பொது நிறுவனங்களில் 67% நூலகங்களும் மாத்திரமே நூல்கள் எண்ணிக்கையில் நிருணயிக்கப்பட்ட குறைந்த அளவு தரத்தோடு இருக்கின்றன. செலவினத்தைப் பொருத்தவரையில் தனியார் துறையில் 38% நூலகங்களும், பொதுத்துறையில் 31% நூலகங்களுமே நிருணயிக்கப்பட்ட வரையறைப்படி நடந்து கொள்கின்றன. இளங்கல்லூரி நூலகங்களுக்கான தரம் 1960-இல் நிருணயிக்கப்பட்டது. இதன்படி 1000 வரை மாணவர்களுள்ள கல்லூரி நூலகத்தில், கவனமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட நூல்கள் குறைந்தது 20 000 இருக்கவேண்டும். அதிகப்படியான ஒவ்வொரு 500 மாணவர்களுக்கும் கூடுதலாக 5000 நூல்கள் சேர்க்கப்படவேண்டும். ஆனால், தனியார் துறையில் 10% நூலகங்களும், பொதுத் துறையில் 16% நூலகங்களுமே இந்தக் குறைந்த தரத்துடன் அமைந்திருக்கின்றன. முன்னர்க் குறிப்பிட்ட "கல்லூரி—ஆராய்ச்சி நூலகங்கள்" (*College and Research Libraries*) என்ற பத்திரிகையை அமெரிக்க நூலகக் கழகம் 1939-இலிருந்து வெளியிட்டுவருகிறது. இதில் கல்லூரி-பல்கலைக்கழக நூலகங்கள் பற்றிய தகவல்களும் கட்டுரைகளுமே வெளியிடப் படுகின்றன.

# 9. சிறப்பு நூலகங்கள்

அறிவை ஆக்கப் பணிகளுக்குத் திருப்பி விடுவது சிறப்பு நூலகங்களின் (*Special Libraries*) கடமையாகும். அமெரிக்காவில் தொழில் நுட்ப முன்னேற்றமும், தொழில் வளர்ச்சியும் வியக்கத்தக்க வகையில் ஏற்பட்டுள்ளன. அதற்கு ஏற்ப அறிவும் கட்டுக்கடங்காமல் பெருகிக் கொண்டே வருகிறது. இந்த அறிவை ஆக்கப்பணிகளில் செலுத்த வேண்டிய புதிய பொறுப்பும் ஏற்பட்டுள்ளது. இந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றுவதில் சிறப்பு நூலகங்கள் முதலிடம் பெற்று இலங்குகின்றன. விஞ்ஞான -தொழில் நுட்ப ஆராய்ச்சியாளர்கள் யாவரும் சிறப்பு நூலகங்களையே நம்பியிருக்கிறார்கள். அதே போன்று, வாணிக நிருவாகத்தினரும், தொழில் நிறுவனத்தினரும், வழக்குரைஞர்கள் போன்ற தொழிலினரும் நிறுவன அமைப்பாளர்களும் தங்கள் அலுவல்களைச் செவ்வனே செய்வதற்குச் சிறப்பு நூலகங்களின் துணையையே நாடுகின்றார்கள். பல்வேறு துறைகளில் ஈடுபட்டு, அவரவர் துறையில் ஏற்பட்டுவரும் அன்றாட வளர்ச்சிகளையும், புதிய கண்டுபிடிப்புக்கள் பற்றிய தகவல்களையும் அறிய விரும்பும் தனிப்பட்டவர்களும், தொகுதியினரும் சிறப்பு நூலகங்களின் உதவியையே தேடுகின்றனர். அறிவியலின் சிறப்புத் துறைகளைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் சேகரித்து, முறையாகத் தொகுத்து, சீராக வகைப்படுத்தித் தேவை

யானவர்களுக்குத் தக்க தருணத்தில் வழங்கும் கலையிலும், குறிப்பிட்ட நிறுவனம் அல்லது வாடிக்கைக்காரரின் தேவைக்கு ஏற்ற தகவல்களை அறிவதற்கான ஆதாரங்களைக் கண்டு பிடிப்பதிலும் வல்லமை பெற்று விளங்கும் சிறப்பு நூலகர்கள் செய்துவரும் தொண்டு சொல்லுக்கு அடங்காத ஒன்று.

நூலகமல்லாத நிறுவனம் ஒன்றின் சேவைப் பிரிவுகளில் ஒன்ருகச் சிறப்பு நூலகம் வழக்கமாக அமைக்கப்படுகிறது. அந்த நிறுவனத்தின் செயல் முறைகளையும், நோக்கங்களையும் சிறப்பு நூலகர் நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நிறுவனத்தின் தேவைகளுக்கு ஏற்ற நூல்களை வாங்கிச் சேகரிக்கவும், நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இணங்க நற்பணி புரியவும் அவரால் இயலும். அவர் பொறுப்பேற்றிருக்கும் சிறப்புத் துறையைப் பற்றியும் அதன் பொருள்கள் குறித்தும் சிறப்பு நூலகர் ஒரளவு அறிந்திருக்கவேண்டும். அது மட்டுமின்றி, அந்தத் துறைக்கும், பொருளுக்கும் பொருத்தமான நூலக நுட்பங்களைக் கையாளும் திறமையும் அவருக்கு அமைந்திருக்கவேண்டும். கிடைத்தற்கரிய தகவல்களை எங்கிருந்து பெறலாம் என்ற நுட்பத்தை அறியும் சிறப்பான ஆற்றல் சிறப்பு நூலகரின் வெற்றிக்குப் பெருந்துணை செய்யும். தகவல் கிடைக்கும் இடத்தை அறிவதோடன்றி, அதைப் பெறுவது எத்துணை கடினமானதாக இருப்பினும், சிறிதும் மனம் சோர்வடையாமல், உள்ள உறுதியோடு முனைந்து நின்று, இடையூறுகளை முறியடித்து, தடங்கல்களைத் தாண்டி, தான் விரும்பிய தகவலைச் சேகரிக்கும் தனித்திறமையும், தளரா முயற்சியும் அவருக்குத் தேவை. விரும்பிய தகவல் ஒரு நூலில் இருக்கலாம்; அல்லது துண்டு வெளியீட்டில், நாளிதழில், அரசாங்கச் சான்றிதழில், பரிசோதனைச்சாலை அறிக்கையில், ஒரு நிறுவனத்தின் அச்சடிக்கப்படாத ஏட்டில் அத்தகவல் இருக்கலாம். முதலில் அத்தகவல் எதிலிருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பது நூலகர் கடமை. பிறகு, அந்த

நூல் அல்லது அறிக்கை தனது நூலகத்தில் இல்லையென்றால், அதை வேறு சிறப்பு நூலகத்திலிருந்து அல்லது வேறிடத்திலிருந்து நூலகர் கடனுகப் பெறலாம். இது போன்ற நேரங்களில், தகவல்களைப் பெறுவதற்குத் தொலைபேசி மிகவும் பயன்படுத்தப்படுகிறது. சிறப்பு நூலகர் தேடிக் கொண்டிருக்கும் தகவல் உண்மையிலேயே மிகவும் இன்றியமையாததாக இருக்குமானுல், அதைப் பெறும் முயற்சியில் நாடு கடந்தும் செல்லவேண்டியிருக்குமானுல் அதற்கும் சிறப்பு நூலகர் சிறிதும் தயங்கக் கூடாது. சுருங்கக் கூறின், சிறப்பு நூலகர் தனது வாடிக்கைக்காரருக்கு அவர் கேட்ட தகவலை மட்டுமின்றி, அவருக்குத் தெரியாத, ஆனுல் அவருக்கு உதவக்கூடிய வேறு தகவல்களையும் சேகரித்து வழங்க வேண்டும். சிறப்பு நூலகரின் இத்தகைய சிறப்பான பணியின் பயனுகப் பலசமயங்களில் பெரும் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு இரசாயன நிறுவனத்தைச் சேர்ந்த இரசாயன நிபுணர் ஒருவர் ஒரு சமயம் 10.000 டாலர் செலவிட்டு ஒரு பரிசோதனையை நடத்தத் திட்டமிட்டார். ஆனுல், அதே பரிசோதனையை ஏற்கனவே ஒரு ஜெர்மன் நிறுவனம் நடத்தி இருக்கிறது என்பதை அந்த நிறுவனத்தின் சிறப்பு நூலகர் ஒரு மொழிபெயர்ப்பு நூலிலிருந்து கண்டறிந்தார். அத்துடன் அந்தப் பரிசோதனை பற்றிய மேல் விவரங்களைச் சேகரித்துக் கொடுத்தார். அந்த மொழிபெயர்ப்பு நூலின் விலை 5 டாலர்தான். சிறப்பு நூலகர் அதைத் தக்க நேரத்தில் கண்டு பிடித்துத் தெரிவித்ததன் பலனுக 10,000 டாலர் மிச்சமாகியது!

இரத்த சோகையைக் குணப்படுத்தக் குதிரையின் நுரையீரலைப் பயன்படுத்தலாம் என ஒரு பத்திரிகையில் வெளியான கட்டுரையில் கூறப்பட்டிருந்தது. நாய் உணவு தயாரிக்கும் நிறுவனம் ஒன்றின் சிறப்பு நூலகர், இந்தக் கட்டுரையைப் படித்து அதை நிறுவனத்தின் நிபுணர்களுக்குத் தெரிவித்தார். அதன்பின், அந்த நிறுவனம், அக்கட்டுரையில் கண்டிருந்தபடி வேறு பொருளை உற்பத்தி செய்யத்

தொடங்கியது. அதுமுதல் அதன் இலாபம் மூன்று இலட்சம் டாலர் கூடுதலாகியது. ஒரு மருந்து நிறுவனத்தின் சிறப்பு நூலகர், நூலகத்திற்கு வந்த 400 தொழில் நுட்பப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளின் பட்டியலைத் தொகுத்துப் படியெடுத்து அந்நிறுவனத்தின் ஆராய்ச்சி நிபுணர்களுக்கு வழங்கிவந்தார். இதனால், நிபுணர்களின் பொன்னான காலம் வீணாகாமலிருந்ததுடன், அதனால் ஆண்டுதோறும் 50,000 டாலர் மிச்சமும் ஆகியது. எனவே சிறப்பு நூலகங்களை மிகப் பெரிய ஆராய்ச்சி ஆதாரங்களாக நிருவாகத்தினர் மதித்துப் போற்றி வருவதில் வியப்பில்லை. அமெரிக்காவில், 80 மோட்டார்த் தொழிற்சாலைகளிலும், 60 மின்சார சாதன நிறுவனங்களிலும், ஸ்டாண்டர்டு ஆயில், அமெரிக்க எஃகு நிறுவனம், இலிலில்லி (*Eli Lilli*), ஈஸ்ட்மேன் கோடாக் (*Eastman Kodak*), ஐ.பி.எம்., லாக்ஹீட் விமானத் தொழிற்சாலை போன்ற பெரிய தொழில் நிறுவனங்களிலும் சிறப்பு நூலகங்கள் உள்ளன. விளம்பர நிறுவனங்கள், பத்திரிகை, காப்பீட்டு (*Insurance*) அலுவலகங்கள், வங்கிகள், சட்ட, மருத்துவ, சமய நிறுவனங்கள், பொருட்காட்சிசாலைகள், நூல் வெளியீட்டு நிறுவனங்கள், வாணிகக் கழகங்கள், அரசாங்கத்துறைகள், முப்படைத் தலைமையகங்கள் ஆகியவற்றிலும் சிறப்பு நூலகங்கள் முக்கிய அங்கங்களாக அமைந்துள்ளன. அறிவுத் துறைகள் பெருகப் பெருக, வளர வளர, சிறப்பு நூலகங்களின் தேவையும் பெருகிக் கொண்டே வருகிறது. சிறப்பு நூலகங்களில் பல தரப்பட்ட நூல்கள் ஏராளமாகச் சேர்த்து வைக்கப்பட்டிருப்பதால், வேண்டிய நூல்களை எளிதாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளமுடிகிறது. விஞ்ஞானத்துறையில் பெரிய சிறப்பு நூலகங்கள் பல உள்ளன. இந்நூலகங்களில், நூற்பட்டியியல் நிபுணர்கள், நூல்-கட்டுரை விவரத் தொகுப்பாளர்கள் (*Documentalists*), ஆராய்ச்சி உதவியாளர்கள் போன்றோருக்குச் சிலசிறப்பான கடமைகள் உள்ளன. சிறு நூலகங்களில், அடிப்படையான

சில ஆய்வு உதவும் நூல்களும், சான்றுக் கட்டுகளும் *(Files)* மட்டுமே இருக்கும். இந் நூலகங்கள் முக்கியமாகத் தேவைப்படும் ; தகவல்களை வெளி நூலகங்களிலிருந்தே பெற்றுக்கொள்கின்றன. இங்கு தொழில் முறை நூலகர்கள் இருவரும் ஓரிரு உதவியாளர்களும் *(clerical assistants)* பணிபுரிகிறார்கள். நூலகம் எந்த அளவு சிறிதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு, நிருவாகம், தொழில் நுட்பம் இரண்டிலும் அதன் கடமைகள் பலதரப்பட்டவையாக இருக்கின்றன. ஆனால், பெரிய நூலகமாயினும் சிறிய நூலகமாயினும், எல்லாச் சிறப்பு நூலகங்களும் அவை சார்ந்திருக்கும் நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் முன்னேற்றத்தில் சிறப்பு நூலகருக்கு அக்கறை இருப்பதால் அவர் நிறுவனத்திற்கு உதவும் வகையில் தமது கடமைகளைச் செவ்வனே செய்கிறார். நூலகத்தை நிறுவனத்தின் ஓர் இன்றியமையாத அங்கமாக உருவாக்க அவர் பாடுபடுகிறார். தேவையான தகவலைத் தேவைப்படும் நேரத்தில் தேவையான வடிவத்தில் துரிதமாகவும், துல்லியமாகவும், குறைந்த செலவிலும் கொடுக்கும் வகையில் நூலகத்தைச் சிறந்த வகையில் உருவாக்குவதற்கு அவர் அரும்பாடுபடுகிறார்.

இந்தச் சேவையைச் சிறப்பாகச் செய்வதிலும், அதன் மதிப்பை உயர்த்துவதிலும் கருத்துடைய நூலகர், எந்தப் பணியிலும் தானே முன்னிற்கிறார். புதிய நுட்பங்களையும், கருத்துக்களையும் அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார். நுண்சுருள் *(Microfilm)*, படி, புகைப்படப் படி *(Photocopy)* முதலியன எடுத்தல் போன்ற எந்திரக் கருவி முறைகளை அவர் தாராளமாகப் பயன்படுத்துகிறார். ஆனால், உலகிலேயே மிகவும் அதிசயமான மின்காந்த எந்திரங்கள் *(Electronic machines)* வந்தபோதிலும், நூலகத்தின் தலையாய தகவல் ஊற்றாக, கருத்துச் சுரங்கமாக விளங்கும் 'மனித மூளை'யின் அரும்பயனை அவர் ஒருபோதும்

மறப்பதில்லை. மனிதருக்கும் எந்திரத்துக்கும் உறவை ஏற்படுத்துவதற்கும், வேண்டியவர்க்கு வேண்டிய தகவலை சரியான நேரத்தில் சரியான அளவிலும் வடிவிலும் விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கும் மதி நுட்பம் இன்றியமையாது தேவை என்பதை நூலகர் நன்ருக அறிவார்.

தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களில் பல எந்த அளவு பரிசோதனைக் கூடங்களுக்குக் கடமைப் பட்டிருக்கின்றனவோ அதே அளவுக்கு நூலகங்களுக்கும் கடமைப்பட்டுள்ளன என்று தயக்கமின்றிக் கூறலாம். இந்தத் துறையில் பணியாற்றுவதற்கு ஏராளமான சிறப்பு நூலகர்கள் ஆர்வம் காட்டுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் எனக் கூறலாம். விஞ்ஞான மண்டலத்தின் எல்லாத்துறைகளிலும்—உயிரியல், உடலியல், தாவரவியல், பௌதிகம், இரசாயனம், தொழில் நுட்பவியல் அனைத்திலும் முன்னேற்றத்திற்கு முன்னேடியாக இருப்பவர்கள், விஞ்ஞான நிபுணர்களின் உண்மையான உறுதுணையாக இருப்பவர்கள் சிறப்பு நூலகர்கள்தான் என்ருல் சிறிதும் மிகையாகாது.

விஞ்ஞான உலகம் வளர்ச்சிப் பாதையில் கடும்வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. மிகச் சிறந்த மேதைகள் கூட அந்த வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தவிக்கிருர்கள். மனித அறிவின் வேறு எந்தத் துறையையும்விட விஞ்ஞான—தொழில் நுட்பத் துறையில் புத்தம் புதிய தகவல்கள் விஞடிக்கு விஞடி மலைபோல் பெருகிக் கொண்டே இருக்கின்றன. இதைச் சமாளிப்பதற்குத் தனிப் பயிற்சி பெற்றவர்கள், அதாவதுசிறப்பு நூலகர்கள், நூல்-கட்டுரை விவரத் தொகுப்பாளர்கள் போன்ற தொழில் நுட்ப வல்லுனர்கள் முதலியவர்கள், பெருகி வரும் அறிவுக் கடலைத் துருவி ஆராய்ந்து, தனிப்பட்ட விஞ்ஞானிகளுக்கும் தொழில் நுட்ப ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான முக்கியத் தகவல்களைக் கண்டறிந்து வழங்குகிருர்கள். இரசாயன

வியல் உலோகவியல், பொறியியல் போன்ற விஞ்ஞானத் துறைகளில் தனிப் பயிற்சி பெற்றுள்ள சிறப்பு நூலகர்கள் தங்களுடைய ஆராய்ச்சிகளுக்குப் பல நவீன விஞ்ஞான முறைகளையும், மின்காந்த சாதனங்களையும் சிறந்த முறையில் பெரும் அளவில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தனது வாடிக்கைக்காரர்களுக்கு மிக உதவியாக இருக்குமெனக் கருதினால், யாருடைய கூட்டுறவையும், உதவியையும் அவர் பெற்றுக் கொள்கிறார். தேவையின் தன்மை, விளைவுகளின் மதிப்பு இவற்றை மனதிற்கொண்டு, அந்த உதவிகளைப் பெறுவதற்கு நியாயமான அளவு செலவிடுவதற்கும் அவர் தயாராக இருக்கிறார்.

விஞ்ஞான-தொழில் நுட்பத் துறையில் பணியாற்றும் சிறப்பு நூலகர், எந்திர சாதனங்களைத் தனது வேலைக்கு முழு அளவில் பயன்படுத்திக் கொள்கிறார். பெரும்பாலான வினாக்களுக்குத் தனது நூலகத்திலிருந்தே விடைகளைப் பெறுவதற்கு அவர் முயல்கிறார். அவர் தேடும் தகவல் ஏதாவது ஒரு மூலையில், முக்கியமில்லாத ஒரு அறிக்கையில், ஒரு விஞ்ஞான இதழில், சிறிய துண்டு வெளியீட்டில், ஒரு தொழில் நுட்பக் கழகத்தின் வெளியீட்டில், அல்லது அரசாங்க இதழில் இடம் பெற்றிருக்கக்கூடும். அதனைத் துருவிக் கண்டுபிடிப்பது சிறப்பு நூலகரின் முக்கியக் கடமையாகிறது. விஞ்ஞான இயல்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருப்பதால் அவற்றை அவ்வப்போது அறிந்து அதன்படி செயலாற்ற வேண்டியது அவசியமாகிறது. இங்கு காலம்தான் முக்கியம். எனவே, இச்சமயங்களில் அச்சிடப்படாத, அச்சிட்ட, ஆனால் கட்டடம் செய்யப்படாத நூல்கள் பேருதவியாக இருக்கும். ஒரு துறையில் புதிதாக ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் பற்றித் தமது நிறுவனத்தினருக்கு உடனுக்குடன் தெரிவிப்பதற்காக அவர் அவ்வப்பொழுது வெளியாகும் முக்கியமான கட்டுரைகளின் படிகளை எடுத்து, அந்தக் குறிப்பிட்டதுறையில் அக்கறை கொண்டவர்களுக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறார்.

"அறிஞர்கள் எவ்விதம் செயலாற்றுகிறார்கள்? அவர்களின் பணிகளில் எந்த அளவுக்கு துணை புரியலாம்? அவர்களுடைய முயற்சிகளின் பல்வேறு நிலைகளில் நூலகத்தின் துணை எந்த அளவுக்குத் தேவைப்படும்? எந்தெந்தத் தகவல்களை எந்தெந்த வடிவத்தில் அவர்களின் பயனுக்குத் தயாராக வைத்திருக்க வேண்டும்?" என்பதையெல்லாம் சிறப்பு நூலகர்கள் கண்டுபிடித்து அதற்கேற்பத் தங்கள் பணிகளை அமைத்துக் கொள்கிறார்கள். இப்பணியை செவ்வனவே நிறைவேற்றுவதற்கு. ஓர் அறிஞர் ஈடுபட்டிருக்கும் துறை பற்றிய ஆழ்ந்த அறிவும், அவரது நேரத்தை எவ்வகையில் மிச்சப்படுத்தலாம் என உய்த்துணரும் திறனும் சிறப்பு நூலகருக்கு இன்றியமையாத தேவை. சுருங்கச் சொன்னால் நுண்ணறிவும் திறமையும் வாய்ந்த ஒரு சிறப்பு நூலகர் சித்தமதியோடு சேகரித்து வைத்திருக்கும் பயனுள்ள நூல்களினாலும், நூலகத்தை அவர் சீராக நிருவகிக்கும் சிறப்பினாலும், ஆராய்ச்சி நிபுணர்களின் காலவிரயம் தவிர்க்கப்படுகிறது; ஏற்கனவே நடந்த ஆராய்ச்சிகளை மீண்டும் நடத்தாமல் தவிர்ப்பதன்மூலம் பணவிரயமும் தவிர்க்கப்படுகின்றது. இன்னொரு வகையில் சொல்வதென்றால் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஆய்வுக்கூடம் எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே அளவுக்குச் சிறப்பு நூலகங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இயங்குகின்றன.

விஞ்ஞானத் துறையிலுள்ள சிறப்பு நூலகங்களை விட வாணிகம், தொழில் ஆகிய துறைகளிலிருக்கும் சிறப்பு நூலகங்கள் தன்மையிலும் வகையிலும் வேறுபட்டவையாக இருக்கின்றன. இந்நூலகம் ஒவ்வொன்றும், வங்கி, நிதி உதவி நிறுவனம், போக்குவரத்து நிறுவனம், செய்திப் போக்குவரத்து நிறுவனம், விளம்பரம்—பொது உறவு நிறுவனம், உற்பத்தி, காப்பீடு, நூல்வெளியீட்டு நிறுவனம் ஆகியவற்றின் தனித்தனித் தேவைகளுக்கு ஏற்ப வெவ்வேறு விதமாக அமைந்துள்ளது. எனினும், அந்தந்த நிறுவனத்தின் தேவைகளுக்கு முழு அளவில் உதவிகரமாக

இருக்க வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கை மட்டும் எல்லா நூலகங்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கிறது. சிறப்பு நூலகர் தனது நிறுவனத்துடன் ஒன்றிவிடுகிறார். அந்நிறுவனத்தின் ஓர் அங்கமாகவே நூலகத்தை அவர் கருதுகிறார். ஆராய்ச்சிகளும், தொழில் முன்னேற்றமும் கடும் வேகத்தில் பெருகிவரும் இந்நாளில் அன்றாட வளர்ச்சி களை அறிந்து அவற்றைக் கைக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது என்பதை இக்கால தொழில் நிருவாகி கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இவ்வளர்ச்சிகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்வதற்கு சிறப்பு நூலகமே சிறந்த சாதனம் என்பதனையும் அவர்கள் அறிந் திருக்கிறார்கள். கேள்விகள் கேட்கப்படுவதற்கு முன்பே, அதற்குரிய தகவல்களைச் சேகரிப்பதில் சிறப்பு நூலகர்கள் ஈடுபடுகிறார்கள். என்னென்ன தகவல்கள் தேவைப்படும் என்பதை முன்னதாக ஊகித்தறிந்து, அவற்றுக்குரிய நூல் களைச் சேகரித்து, பயன்படுத்துவதற்கு ஆயத்தமாக சிறப்பு நூலகர் வைத்திருக்கிறார். இத்தகவல்களைப் பயன்படுத்தி, நிறுவனத்தின் அதிகாரிகள் ஒரு சிக்கலைத் தீர்த்து அல்லது காலவிரயத்தைத் தவிர்த்து உழைப்பையும் பணத்தையும் மிச்சப்படுத்துவாரானால், அதனால் முதலில் மகிழ்ச்சியில் திளைப்பவர் சிறப்பு நூலகராகத்தான் இருப்பார்.

அமெரிக்காவில் ஜெனரல் எலக்ட்ரிக், ஜெனரல் மோட் டார்ஸ், ஸ்டாண்டர்ட் ஆயில் போன்ற பெரிய வாணிக நிறுவனங்கள் மட்டுமின்றி, அமெரிக்கத் தொலைபேசி—தந்தித்துறையிலும் கூட சொந்த நூலகங்கள் உள்ளன. டெட்ராய்ட் எடிசன் கம்பெனி என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான நூலகத்தில் 12 நூலகர்கள் பணியாற்று கிறார்கள். இந்நூலகத்தின் நடவடிக்கைகள், சிறப்பு நூல கங்களுக்கு பொதுவாக அமைந்துள்ளன. நூல்கள் வாங்கு தல், வகைப்படுத்தல், புதிய நூல்களின் பட்டியல் தயாரித் தல், காலத்திற்கு ஒவ்வாதவைவற்றை ஒதுக்கித் தள்ளுதல் ஆகிய இந்தப் பணிகளை மட்டுமின்றி தொழில் நுட்பம்

பற்றிய துண்டு வெளியீடுகளின் தொகுப்பையும், பத்திரிகைச் செய்திக் கத்தரிப்புத் தொகுப்பையும், நிறுவனத்தின் கொள்கை பற்றிய தொகுப்புகளையும் இந்நூலகம் பேணி வருகின்றது. கட்டுரைகளில் தேவையான பகுதிகளின் படி எடுப்பதுடன் அவற்றை மொழிபெயர்க்கவும் செய்கின்றது. உரிமைக் காப்புடைய புத்தாய்வுகளையும் (*Patent Research*) இந்நூலகம் மேற்கொள்கிறது. ஏராளமான ஆய்வு உதவும் வினாக்களுக்கு (*Reference Questions*) விடை காண்பதில் இது ஈடுபடுகிறது. 'நூலக மஞ்சரி' (*Library digest*) என்னும் மாத இதழையும் இந்நூலகம் வெளியிடுகிறது. புதிதாக வெளிவரும் நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய மதிப்புரைகளும், அவற்றிலடங்கியுள்ள கட்டுரைகளின் சுருக்கமும் இம்மாத இதழில் இடம் பெறுகின்றன. நூலகத்திற்குப் புதிதாக வாங்கப்பட்டுள்ள நூல்களின் பட்டியலும் இவ்விதழில் வெளியிடப்படுகிறது.

செய்தித்தாள் நூலகம் என்பது உள்ளத்திற்கு உற்சாக மூட்டும் ஓரிடமாகும். இங்கு தொலைபேசிகள் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டேயிருக்கும். ஒரு முக்கியமான உணர்ச்சியூட்டும் செய்திக்குத் தேவையான பின்னணித் தகவல்களைப் பெறச் சில செய்தியாளர்கள் வந்த வண்ணமிருப்பர். இன்னும் சிலர், சாகுந்தறுவாயிலிருக்கும் அரசியல் தலைவரைப் பற்றி எழுதுவதற்காக அவரது வாழ்க்கை வரலாற்றைப் பெற ஓடி வருவர். வேறு சிலர், நாட்டுப் படத்தில் கண்டு பிடிக்க முடியாத ஓர் இடம் எங்கிருக்கிறது என்பதை அறிந்து செல்லத் துடிப்பர். விரைவும், துல்லியமும்தான் இந்நூலகப் பணியின் உயிராகும். நுட்பமான விவரங்களடங்கிய தொகுதிகளும், அவற்றை உரிய சமயத்தில் கண்டெடுப்பதற்குரிய நுண்ணறிவும் கொண்ட நூலகர் இந்நூலகத்திற்குப் பேருதவியாக இருப்பார்.

பொது மக்களின் அன்றாடத் தேவைகள் பற்றி மதிப்பீடு செய்யும் (*Consumer surveys*) விற்பனைக்கள ஆராய்ச்சி

யாளர்கள் (*Market researchers*) தங்கள் பணிக்குச் சிறப்பு நூலகங்களின் உதவியினைப் பெரிதும் நம்பியிருக்கிறார்கள். தொலைக்காட்சி உற்பத்தியாளர்கள், வானொலித் திட்டமைப்பாளர்கள், வாணிக ஓவியர்கள் ஆகியோரைப்பற்றி விளம்பர நிறுவனத்தின் நூலகம் கவனம் செலுத்துகிறது. நிதி உதவி நிறுவனம் ஒன்றின் நூலகர், பல்வேறு துறைகளில் பணிபுரிய வேண்டியிருப்பதால், அவர் வெவ்வேறு பொருள்களைப் பற்றி அறிந்து கொள்கிறார். எல்லாப் பொருள்களைப் பற்றியும் கிடைக்கும் பலவிதமான சிறு தகவல்களைக் கொண்டு அவர்கள் தங்கள் பணிகளைச் செய்கிறார்கள். எனவே, சிறப்பு நூலகர்களிடம் புதிய தகவல்களைத் தேடிப் பெறும் ஆர்வம் இயல்பாக அமைந்துவிடுகிறது. நூல்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு விரைவாக அச்சாகி வெளிவருவதில்லை. எனவே, 75 சதவிகித நூல்கள் அச்சாகி வெளிவருவதற்கு முன்னதாகவே அந்நூல்களில் அடங்கியுள்ள தகவல்களை வாணிக நிறுவனத்தின் சிறப்பு நூலகர் சேகரித்துவிடுகிறார். அவர் இவ்விதம் சேகரிக்கும் ஒவ்வொரு சிறு தகவலும் நிறுவனத்திற்குப் பெரும்பயன் விளைவிக்கவல்லது. ஆகவே, இன்றையத் தேவையை முழுமையாக நிறைவு செய்வதற்காக நாளைக்கு என்ன வரும் என எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார் சிறப்பு நூலகர்.

தனது நூலகத்தின் செயல் வரம்புக்கு அப்பாற்பட்டதாக உள்ள வினாக்களுக்கு உரிய விடைகளைப் பெற, சிறப்பு நூலகர் எந்த அளவுக்குச் சிறிதும் தயக்கமின்றி பிற நூலகங்களின் உதவியை நாடுகிறாரோ, அதே போன்று பிற நூலகர்கள் கேட்கும் உதவியையும், கடனாகக்கோரும் நூல்களையும் அளித்து உதவுகிறார். நூலகங்களிடையே நூல்கள் கடனாக வழங்குதல் மிகவும் சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சி. இது ஒரு வகையில் முக்கியமான பணியுமாகும். குறிப்பாக வாணிக, தொழில் துறை சிறப்பு நூலகர்கள் இவ்விதம் நூல்களைக் கடனாகப் பரிமாறிக் கொள்வது, மிகவும் இன்றியமையாததாக அமைந்துள்ளது. ஒரு வாணிக அதிபர்

தனது சிறப்பு நூலகரிடம் ஒரு குறிப்பிட்ட தகவலைக் கேட்கும் பொழுது, "அந்தத் தகவல் கிடைக்கவில்லை" என்று அவர் சொல்ல முடியாது; சொல்லவும் கூடாது. ஏனென்றால், அந்தக் தகவலை எப்படியும் கண்டு பிடித்து அல்லது தேடிக் கொடுக்க வேண்டியது சிறப்பு நூலகர்களின் கடமையாகும். எனவே, அதை அவர் எவ்வகையிலும் கண்டு பிடித்தேயாக வேண்டும். உண்மையில் அதற்காக அவர் அரும்பாடுபடுகிறார். வாணிக, தொழில் துறையில் சிறப்பு நூலகராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைப்பது, ஒருவருக்கு கிடைத்தற்கரிய ஒரு பெரும்பேறு எனலாம். இதைப் போல், பொருளும் புகழும் தேடித்தரும் தொழில் வேறு இல்லை என்று சொல்லலாம். இத்தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கிறது; பயனுள்ள முறையில் உழைப்பதற்கும், பெரிய மனிதர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பணியில் தாமும் முக்கிய பங்கு கொள்கிறோம் என்ற ஆன்மீக நிறைவும் ஏற்படுகிறது.

மருத்துவம், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் பற்றிய நூல்களைச் சேகரிப்பதில் மருத்துவ நூலகங்கள் கவனம் செலுத்துகின்றன. நோயின் வரலாறு, நோய் நாடல் முறைகள், நோய் தீர்க்கும் வழிகள், பல்வேறு நாடுகளில் நோய்களை ஒழிக்க நடந்து வரும் முயற்சிகள் ஆகியவை பற்றிய நூல்கள், பத்திரிகைகள், துண்டு வெளியீடுகள், ஆராய்ச்சி அறிக்கைகள் முதலியன இந் நூலகங்களில் இடம் பெறுகின்றன. மருத்துவ ஆராய்ச்சிகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களும், புதிய முறைகளும், தனிவரைவு நூல்களிலும் (*Monograph*) பத்திரிகைகளிலும் முதலில் வெளியிடப்படுகின்றன. பிறகு அவை நூல் வடிவம் பெறுகின்றன. மருத்துவத் துறையில் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும், மருத்துவம் பற்றிய இலக்கியங்களில் பல்லாயிரம் பக்கங்களைச் சேர்க்கின்றன.

மருத்துவத்துறை பற்றி மட்டும் ஆண்டுதோறும் 5000 பத்திரிகைகளும், 10,000 நூல்களும் வெளிவருகின்றன. இவற்றையெல்லாம் உடனுக்குடன் சேகரித்து, துரிதகதியில் இயங்கி வரும் ஆராய்ச்சியாளர்க்கு தேவைப்படும் தகவல்கள் உடனடியாகக் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டியது மருத்துவ நூலகரின் கடமையாகிறது. அமெரிக்காவில் மருத்துவர்களுக்கும், இத்துறையில் பணியாற்றும் மற்ற ஊழியர்களுக்கும் உதவுவதற்காக 400 மருத்துவ நூலகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள், வாசிங்டனிலுள்ள தேசிய மருத்துவ நூலகமே மிகப் பெரியது. இங்கு ஏறத்தாழ 10 இலட்சம் நூல்கள் உள்ளன. பெரும்பாலான மருத்துவ நூலகங்கள் சிறு இடங்களிலேயே இயங்கி வருகின்றன. அவற்றில் இலட்சத்திற்குக் குறைவான நூல்கள் இருக்கின்றன. சில நூலகங்கள் மருத்துவப் பள்ளிகளிலும், இன்னும் சில ஆராய்ச்சிக் கூடங்களிலும், மருத்துவக் கழகங்களிலும், மற்றும் சில மருத்துவ மனைகளிலும் அமைந்துள்ளன. மருத்துவ அல்லது பல்மருத்துவ ஆசிரியர்கள், மாணவர்கள், பயிற்சியாளர்கள், தொழில் நடத்தும் மருத்துவர்கள், அறுவைச் சிகிச்சை வல்லுநர்கள், மருந்து விற்பனையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவப் பணியாளர்கள் (*Nurses*) ஆகிய பலதரப்பட்டவர்கள் மருத்துவ நூல்களைப் பயன்படுத்துகிறார்கள். பயன்படுத்துவோரின் வகையையும் தொகையையும் பொறுத்து மருத்துவ நூலகத்தின் நூல்களின் தொகையும் பணிகளும் அமைகின்றன. மருத்துவப் பள்ளிகள் அல்லது நிலையங்களுக்கு நூல்கள் சேகரிப்பதற்கு ஆகும் செலவைவிடக் குறைந்த செலவில் மருத்துவ மனைகளுக்கான நூல்களைச் சேகரிக்க முடிகிறது. போதிய வசதிகளுடைய மருத்துவ நூலகம், ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. எனவே, சின்னஞ் சிறு மருத்துவமனையானாலும்கூட அங்கு அடிப்படையான ஆய்வு உதவும் நூல்கள் அனைத்தும் உள்ளன. இவை தவிர, மருத்துவம் குறித்த முக்கியமான

எல்லாப் பருவ வெளியீடுகள், அண்மையில் வெளிவந்துள்ள முக்கியமான மருத்துத் தனிவரைவு நூல்களும் அங்கு உள்ளன. இத்தகைய நூலகம் முதலில் சிறிய அளவினதாகத் தொடங்கப்பெறும். நாளடைவில் இதற்குப் பயிற்சி பெற்ற மருத்துவ நூலகர் ஒருவர் தேவைப்படும். இவர் ஒரு துறையின் தலைவர் என்ற உயர்நிலையைப் பெறுகிறார். மருத்துவ மனையின் தலைமை நிருவாகிக்கு மட்டுமே இவர் கீழ்ப்படிந்தவராக இருப்பார். மருத்துவ நூலகத்தை சிறந்த அலுவலர்களைக் கொண்டு சிறந்த வசதி ஏற்படுத்தி நிருவகிக்கிறார். மருத்துவ நூல்களையும், பத்திரிகைகளையும் போதிய அளவில் சேகரித்து வைத்து, நோயாளிகளைப் பேணுவதிலும் நோய்களைக் குணமாக்குவதிலும் புதிய புதிய முறைகளைக் கையாள்வதற்கு மருத்துவமனை மருத்துவர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் மருத்துவ நூலகர் பேருதவி புரிகிறார்.

அமெரிக்காவில் மருத்துவ நூலகச் சங்கம் (*Medical Library Association*) ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ நூலகத் துறையில் தனிப் பயிற்சியும் அனுபவமும் பெற்ற சிறப்பு நூலகர்களுக்கு இந்தச் சங்கம் நற்சான்றிதழ்களை (*Certificates*) வழங்குகிறது. மருத்துவ நூலகராவதற்குத் தனிப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சியின்போது நூலகக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் அளிக்கப்படும் வழக்கமான பயிற்சிகளுடன், உடலியல் விஞ்ஞானம், ஜெர்மன் மொழி ஆகியவற்றிலும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி தவிர, ஆறு மாத காலம் மருத்துவ நூலகம் ஒன்றில் பயிற்சியாளராகவும் பணியாற்ற வேண்டும். மருத்துவப் பணியாளர் (*Nurse*) பயிற்சிப் பள்ளிகளை நடத்திவரும் மருத்துவமனைகளுக்குப் போதிய வசதிகளையுடைய மருத்துவ நூலகம் தேவைப்படுகிறது. சில சமயங்களில், மருத்துவமனையில் பணிபுரியும் நிருவாகிகளுக்கும், பராமரிப்பு அலுவலர்களுக்கும் உதவும் நூல்களை சேகரிக்க வேண்டியது மருத்துவ நூலகரின் பொறுப்பாக அமைகிறது.

சட்டப் பள்ளிகள், சட்ட அலுவலகங்கள், சட்டச் சங்கங்கள், நீதிமன்றங்கள், அரசாங்க அலுவலகங்கள், சட்ட மன்றங்கள் ஆகியவைகளில் சட்ட நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அமெரிக்காவில் சட்டத் தொழிலுக்கு உதவி புரியமட்டும் 1000 முதல் 1500 சட்ட நூலகங்கள் இயங்கி வருகின்றன. சட்டச் சிக்கல்கள் தொடர்பாக நாளுக்கு நாள் புதிய புதிய தீர்ப்புகளை நீதிமன்றங்கள் வழங்கி வருகின்றன. அரசாங்கம் புதுப் புதுச் சட்டங்களைக் கொண்டு வருகிறது. சமூக மாறுதல்களின் காரணமாக பல விதமான சட்டச் சிக்கல்களும் எழுந்தவண்ணமிருக்கின்றன. இவற்றையெல்லாம் சட்ட நிபுணர்களும், வழக்குரைஞர்களும், நீதிபதிகளும் உடனுக்குடன் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்குச் சட்ட நூலகங்களே உறுதுணையாயிருக்கின்றன. வேறு எந்தத் தொழிலையும் விட, நூல்களை வெகுவாக நம்பியிருக்கும் தொழில் சட்டத் தொழில்தான் என்று சொல்லலாம். சட்டம் பற்றிய அடிப்படைத் தகவல்கள் சட்ட நிபுணர்களுக்கு அவ்வப்போது கிடைக்க வேண்டும். பல சட்ட நூலகங்கள் ஒரே கட்டிடத்தில் அமைந்திருப்பதைப் பார்க்கும்பொழுது, செய்த வேலையினைத் திரும்பச் செய்யும் பயனற்ற நிலையங்கள் அவை என்று எண்ணத் தோன்றும். ஆனால், ஆராய்ச்சித் தேவைகளின் அவசரத்தையும் அவசியத்தையும் உணரும்பொழுது அவற்றின் இன்றியமையாமை தெளிவாகும். அமெரிக்காவிலேயே மிகப் பெரிய சட்ட நூலகங்களில் ஒன்று, காங்கிரஸ் நூலகத்திலிருக்கிறது. ஒவ்வொரு மாகாணத் தலைநகரிலும் சட்ட நூலகம் இயங்கி வருகிறது.

சமயப் பிரச்சாரகர்கள், பாதிரிமார்கள் முதலியவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக உள்ள சமய நிறுவனங்கள் பலவற்றில் சமய நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. தத்துவம், சமயம், கடவுட் கோட்பாடுகள பற்றிய ஏராளமான நூல்கள் இந்நூலகங்களில் இடம் பெற்றுள்ளன. சில நூல நூலகங்களில், அவை எந்தச் சமயச் சார்புடையவையாக

இருக்கின்றனவோ, அந்தச் சமயம் பற்றிய நூல்கள் பெரும்பான்மையாக இருப்பதைக் காணலாம். வேறு சில நூலகங்கள், சமய வரலாறு, சமயக் கோட்பாடு போன்ற குறிப்பிட்ட துறைகளைப் பற்றிய நூல்களை அதிக அளவில் சேர்த்து வைத்திருக்கின்றன. மாதா கோயில் நூலகங்களும், யூதர் கோயில் நூலகங்களும் இப்பொழுது பெருமளவில் ஏற்பட்டு வருகின்றன. இவை சமய நூலகங்களேயாயினும், பொதுமக்களைக் கவரும் வகையில் அமைந்துள்ளன. பாமர மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய எளிய மொழியில் எழுதப்பட்ட நூல்கள் இந்நூலகங்களில் இருப்பதால் பொதுமக்கள் பெரும் அளவில் இங்கு சென்று படிக்கிறார்கள்.

மருத்துவ நூலகரைப்போல், சட்ட நூலகர், சமய நூலகர் ஆகியோருக்கும் தனிப் பயிற்சி தேவை. நூல்களை மட்டுமின்றி, செதுக்குச் சிற்பங்கள், அச்சுக்கள், வண்ண நிலேடுகள், ஓவியங்கள், சிலேகளின் புகைப்படங்கள், கட்டிடக் கலேப்படங்கள், முன்மாதிரி வரைப்படங்கள், ஆகியவைகளைக் கையாளும் பயிற்சியும் சில நூலகர்கள் பெற்றிருக்கிறார்கள். மத்தியக் கலேக்கையெழுத்துக்கள், விலேமதிக்க முடியாத தொன்மையான நூல்கள், மேடை அலங்காரப் பொருள்கள், இசைக் கருவிகள் முதலியவற்றையும் இவர்கள் கையாள்கிறார்கள். ஒரு சிறப்புத் துறையைச் சேர்ந்த நிறுவனத்திற்கு உதவும் நூலகங்களில் பொருட்காட்சி நூலகம் முதலிடம் பெறுகிறது. பொருட் காட்சியின் அலுவலர்களுடைய தேவையை நிறைவு செய்வதே இந்நூலகத்தின் தலேயாய பணியாகும். தொல்பொருளாராய்ச்சியாளர்களுக்கும், காட்சிப் பொருள்களைக் கவர்ச்சியாக வைப்பதற்குத் தொழில் நுட்பவல்லுநருக்கும், பயணங்கள் மேற்கொள்ளவும் சொற்பொழிவுகள் தயாரிக்கவும், கட்டுரைகள், நூல்கள் எழுதுவதற்கும் பேச்சாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பொருட்காட்சி நூலகம் உதவுகிறது. தொல்பொருள்களில் ஆர்வமுடைய

பொதுமக்களும் சில சமயங்களில் இந்நூலகத்தை நாடுவதுண்டு. கலையழகும் நுட்பமும் வாய்ந்த அரிய பொருள்கள் பொருட்காட்சியில் இடம் பெறுவதால், இவற்றினைப் பற்றிய ஆழ்ந்த அறிவும் கலைக் கண்ணோட்டமும் பொருட்காட்சி நூலகருக்கு அவசியம் இருக்க வேண்டியனவாகும்.

அமெரிக்காவில் தற்பொழுது நுண்கலைகள் பற்றிய நூல்களையும், அரிய நூல்களையும் கொண்ட சிறப்பு நூலகங்களின் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகி வருகிறது. உலகப் புகழ்பெற்ற நுண்கலைச் சிறப்பு நூலகங்கள் சில அமெரிக்காவில் உள்ளன. லாஸ் ஏஞ்சல்ஸ் அருகிலுள்ள ஹட்டிங்டன் கலைக்கூட நூலகம், நியுயார்க்கிலுள்ள கலைப் பொருட்காட்சி...மார்கான் நூலகம், வாசிங்டனிலுள்ள தேசியக் கலைக்கூடம் ஆகியவை குறிப்பிடத் தக்கன. நுண்கலை நூலகங்கள் இப்பொழுது படிப்படியாகப் பொதுமக்களிடையே செல்வாக்குப் பெற்று வருகின்றன. அண்மையில் ஜெர்ஸி நகரில் ஒரு நுண்கலை நூலகம் திறக்கப் பட்டது. இது இம்மாகாணத்திலேயே முதலாவது நுண்கலை நூலகமாகும். 3,50 000 டாலர் செலவில் புதிதாகக்கட்டப்பட்டுள்ள சொந்தக் கட்டிடத்தில் இந்நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது பெரிய நகரங்களில் இசை—நாடக அரங்கு நூலகங்களும் இயங்கி வருகின்றன. இசைப் பள்ளிகளில் சிறப்பு நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. பல பெரிய பொது நூலகங்களில் இசைப்பிரிவு தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இசைவாணர்கள், இசையமைப்பாளர்கள், நாட்டியக்காரர்கள், நடிகர்கள், நடிகைகள், தயாரிப்பாளர்கள் ஆகியோருடன் பணியாற்றுவது நூலகர்களுக்கு உளம் மகிழும் அனுபவமாக அமைகிறது. வரலாற்றுப் பொருட்காட்சிகளிலுள்ள நூலகங்களும் சிறப்பு நூலகவரிசையில் சேரும். நாடெங்கிலும் இயங்கி வரும் நூற்றுக்கணக்கான வரலாற்றுக் கழகங்கள், சிறிய அல்லது பெரிய நூலகங்களை நடத்தி வருகின்றன. மாகாணந்தோறும் குறைந்தது ஒரு வரலாற்று நூலகமாவது

இருக்கிறது. சில மாகாணங்களில் பல வரலாற்று நூலகங்கள் உண்டு. அந்தந்த வட்டார வரலாற்றில் ஆர்வமுடைய நூலகம், வரலாறு பற்றிய நூல்களையும் பல சான்றுகளையும் சேகரித்துத் பேணுவதில் தனி இன்பம் காண்கிறது. சேகரிக்கும் நூல்கள் பற்றிய சிறு நூல்களை எழுதித் தயாரிப்பதும் நூலகர்களின் பணிகளில் ஒன்றாகிறது. சில மாகாணங்களில் ஆவணக் காப்புத் துறைகள் நிறுவப்பட்டுள்ளன. அந்த மாநிலங்களின் கடந்த கால வரலாறு பற்றிய தகவல்களை அறிவதற்கு இந்த ஆவணக்காப்புத்துறைகள் ஆராய்ச்சியாளர்களுக்கு அரிய கருவூலகங்களாக அமைந்துள்ளன. அரிதான, விலை மதிப்பு மிக்க பதிவுச் சான்றுகளையும் ஆவணங்களையும் மிகவும் கவனமாக பாதுகாத்தல் வேண்டும். டென்னசி மாகாண நூலகத்திலும், ஆவணக் காப்பிடத்திலும் பழைய ஆவணங்களைப் பத்திரமாகப் பேணுவதற்கு ஒரு தனி ஆய்வுக்கூடமே உள்ளது. இங்கு ஆவணங்களை நன்றாகச் சுத்தம் செய்து, இரசாயனப்படி கெடாமல் பக்குவம் செய்து, பிளாஸ்டிக்கில் சுருட்டித் தனித்தனி உறைகளிலிட்டு வைக்கிறார்கள். இப்பணிகளுக்காக இங்கு நுண்கருள் கருவிகள், உருப்பெருக்கி எந்திரங்கள், புகைப்படப்படி எடுக்கும் சாதனங்கள், முதலியன உள்ளன.

அமெரிக்காவின் பல்வேறு குடியரசுத் தலைவர்களின் ஆட்சிக்காலம் பற்றிய வரலாற்றுச் சான்றுகளைப் பாதுகாப்பதற்காக அண்மை ஆண்டுகளில் பல நூலகங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அபிலின் (*Abilene*), கன்சாஸ் (*Kansas*) ஹைட் பார்க் (*Hyde Park*), நியுயார்க் ஆகிய நகரங்களிலும் கலிபோர்னியா மாகாணத்தில் பாலோ ஆல்டோ (*Palo Alto*) விலுள்ள ஸ்டாண்ட் போர்டு பல்கலைக் கழகத்திலும் இத்தகைய நூலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந் நூலகங்கள் அனைத்தும் தொழில் முறை நூலகர்களால் நிருவகிக்கப்படுகின்றன. பெரும்பாலான வரலாற்று நூலகங்களில் மரபியல் (*Genealogical*) நூல்கள் இடம் பெற்றுள்ளன. சில சந்தா நூலகங்கள், குறிப்பிட்ட அளவு சந்

தாதாரர்களுக்கு மட்டும் பணிபுரியும் வரலாற்றுச் சிறப்பு நூலகங்களாக இயங்கி வருகின்றன. இவ்வகையில், நியுயார்க் கழக நூலகம் கடந்த 200 ஆண்டுகளுக்கு மேலாகப் பொதுமக்களுக்குத் தொண்டாற்றி வருகிறது.

உலகின் மிகப்பெரிய நூலகம் காங்கிரஸ் நூலகம் ஆகும். இது ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இரண்டு பெரிய கட்டிடங்களில் இயங்கி வருகிறது. இங்கு நூல்களும் மற்ற இனங்களும் 4 கோடி அளவுக்குச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் மூன்றில் ஒரு பகுதி நூல்களும், துண்டு வெளியீடுகளும் ஆகும். இங்குள்ள நூல் அலமாரிகளை வரிசையாக அடுக்கி வைத்தால் 270 மைல் நீளத்திற்குச் செல்லும். இந்நூலகம் ஒரு தேசிய நிறுவனம். இது, காங்கிரசுக்கு மட்டுமின்றி, அரசாங்கத்தின் எல்லாத் துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும், நாடெங்கிலுமுள்ள நூலகங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் சிறந்த முறையில் பயன்பட்டு வருகிறது. இதைப் பற்றிய மற்ற விவரங்களை தனித்தலைப்பின் கீழ் காணலாம்.

அரசாங்கத்தின் எல்லாத்துறைகளும் தனித் தனியாக நூலகத்தை அமைத்துக் கொண்டிருக்கின்றன. சில துறைகளுக்குப் பல நூலகங்களும் உள்ளன. மத்திய அரசாங்க நிறுவனங்களைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் அதிகமான நூலகங்களில் பாதிக்கும் மேற்பட்டவை வாசிங்டனில் அல்லது வாசிங்டன் அருகில் அமைந்துள்ளன. மற்றவை நாடெங்கும் பரவலாக இயங்குகின்றன. இவற்றுள் 10 சதவிகித நூலகங்கள் வெளிநாடுகளில் இயங்கி வருகின்றன. (சென்னையிலுள்ள அமெரிக்க நூலகம் இவற்றில் ஒன்று). மத்திய அரசாங்க நூலகங்கள் வகையிலும் உருவிலும் பிரம்மாண்டமானவைகளாக உள்ளன. வேளாண்மைத்துறை நூலகத்தை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இங்கு 10 இலட்சம் நூல்கள் இருக்கின்றன. இராணுவ நூலகமும் மிகப்பெரியது. அங்கு 2,00 000 நூல்கள் உள்ளன. இவை தவிர, 2000 பருவ வெளியீடுகள்

இங்கு வருகின்றன. இங்குள்ள இராணுவ நாட்டுப் படப் பிரிவில், 20 இலட்சம் நாட்டுப் படங்களும் இலட்சத்திற்கும் அதிகமான நூல்களும் துண்டு வெளியீடுகளும் உள்ளன. வாணிகத்துறைக்குச் சொந்தமான நூலகங்கள் பல. இதன் வானிலைப் பிரிவில், வானிலை பற்றி உலகிலேயே அதிகமான நூல்களிருக்கின்றன. பல்வேறு தொழில் நுட்பத் துறைகளுக்கு உதவுவதற்காகச் சிறந்த நூலகவசதிகளமைந்த ஆய்வுக் கூடங்கள் நாடெங்கிலும் நிறுவப்பட்டிருக்கின்றன. கொலரோடோ மாகாணத்தில் போல்டரில் (*Boulder*) உள்ள ஆய்வுக்கூட நூலகம், சயன மண்டல ஆராய்ச்சி, வெளி மண்டல, வானவெளிப் பௌதீகம், வானொலி, பொறியியல் ஆகிய துறைகளில் சிறப்பு வாய்ந்தாக விளங்குகிறது. வாஷிங்டனிலுள்ள தேசிய வானவெளி ஆய்வு நிருவாக அலுவலகத்தில் (*National Aeronautics and space administration*) இருக்கும் நூலகம் அண்மையில் நிறுவப்பட்டதெனினும் மிகப்பெரியது. கடற்படை வானியல் ஆய்வுக் கூட நூலகத்தில் நூற்பட்டியிட்ட 55,000 நூல்கள் உள்ளன. இவற்றுள் கிடைத்தற்கரிய நூல்கள் சிலவும் இருக்கின்றன. கடற்படையின் ஆராய்ச்சிக்கூடத்தின் மிகப் பெரிய நூலகத்தை ஒரு பெண் உருவாக்கினர் என்பது வியக்கத்தக்க செய்தியாகும். இப்படியாக மத்திய அரசாங்க நூலகங்கள் பலப்பல உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சில குறிப்பிட்ட துறைகளில் மட்டும் கவனம் செலுத்துகின்றன. இராணுவ நூலகங்கள் போன்ற மற்ற நூலகங்கள் பொதுவான இயல்புகளுடன் ஏறத்தாழப் பொது நூலகங்களைப் போல் அமைந்திருக்கின்றன. முதியோர் நிருவாக மருத்துவமனை (*Veterans Administration Hopsital*) யைச் சேர்ந்த நூலகங்கள், அரசாங்க நூலகங்களின் தனிப்பெருந் தொகுதியாகும். முப்படைகளைச் சேர்ந்த நூலகங்கள், இராணுவ அதிகாரிகள், வீரர்கள், அவர்களின குடும்பத்தினர் ஆகியோருக்கு மட்டுமே பயன்படுவன; அமைப்பில் பொது நூலகங்கள் போல்வன.

மற்ற அரசாங்க நிறுவனங்களில் முதலில் நினைவுக்கு வருவது அமெரிக்கத் தகவல் நிறுவனம் (*U. S. I. Agency*) ஆகும். பல ஆண்டுகளாக வெளிநாடுகளின் தலைநகர்களிலும் மற்ற முக்கிய நகர்களிலும் நூலகங்களை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இவற்றில் சில நூலகங்களை அமெரிக்காவும், அவை இயங்கிவரும் நாடும் கூட்டாக நடத்துகின்றன. அமெரிக்க வாழ்க்கை முறை பற்றிய உண்மைகளை எடுத்துக் கூறும் நூல்களும், பிற பொருள்களும் அந்தந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்கும்படி செய்வதே அமெரிக்கத் தகவல் நிறுவன நூலகங்களின் தலையாய நோக்கமாகும். அந்தந்த நாடுகளிலுள்ள அறிஞர்களும், படித்தவர்களும்.அனைத்து நாட்டு மனப்பான்மை கொண்டவர்களும், புதிய தகவல்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களும் இந்த நூலகங்களைப் பெரும் அளவில் பயன்படுத்தி வருகிறார்கள். மக்களாட்சி முறை அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் கூட இந்நூலகங்களை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

# 10. தலைசிறந்த நூலகங்கள்

**1 நியுயார்க் பொது நூலகம்**

உலகிலுள்ள மாபெரும் நிறுவனங்கள் அனைத்தும் முதலில் தோன்றிய இடம் மனிதனின் உள்ளமே. உள்ளத்தில் உதயமாகிய பின்னரே அவை நடைமுறையில் முழு உருவம் பெறுகின்றன. எனினும், நீண்டகாலமாக இருந்து வரும் மாபெரும் நிறுவனங்களை ஏதோ "தற்செயலாகத் தோன்றியவை" என எண்ணுவதே மனித இயல்பாக இருந்துவருகிறது. மனிதன் தனது அறிவாலும், அயராத உழைப்பாலும் அரும்பாடு பட்டு உருவாக்கியவைதான் இந்நிறுவனங்கள் என்ற எண்ணம் இவற்றைப் பார்த்த மாத்திரத்தில் யாருக்குமே உடனடியாக ஏற்படுவதில்லை. மனிதனின் சாதனைக்கு ஓர் எடுத்துக் காட்டாக—பார்ப்போரை மலைக்க வைக்கும் மாபெரும் நிறுவனங்களில் ஒன்றாக "நியுயார்க் பொது நூலகம்" (*The New York Public Library*) இலங்குகின்றது. நியுயார்க் நகரின் நடு நாயகமான ஐந்தாவது அவனியூ (*Fifth Avenue*) பகுதியில், "அம்மா பெரிது" என வியக்கும் வண்ணம் அமைந்துள்ள தலைமைக் கட்டிடத்தின் (*Central Building*) எழிலார்ந்த தோற்றம்; அங்கு வரிசை வரிசையாக நிற்கும் அலமாரிகளில் அடுக்கடுக்காய் அழகுற அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இலட்சக்கணக்கான நூல்கள்; தெற்கில் ஸ்டேடன் தீவின் (*Staten Island*) தென் முனை முதல் வடக்கில் மேல் பிராங்கு (*Upper Bronx*) வரையிலும் நீண்டு விரிந்து கிடக்கும் நியு

யார்க் மாநகர் முழுவதிலும் இயங்கி வரும் 80-க்கும் அதிக மான கிளை நூலகங்கள்—இவை அனைத்தையும் காணும் பொழுது. இவையெல்லாம் தனிப்பட்ட மனிதனின் கற் பனையில் தோன்றி அவனது உழைப்பினால் உருவம் பெற் றவை என்பதை நம்புவது முதலில் சற்றுக் கடினமாகத் தான் தோன்றுகிறது.

எனினும், மனிதன் கண்ட கனவும், அதை நனவாக்க அவன் மேற்கொண்ட மன உறுதியும், எடுத்த அரும் முயற்சிகளும் இந் நூலகம் பிறக்கக் காரணமாகவும், அதன் வளர்ச்சிக்கு ஒவ்வொரு கட்டத்திலும் உறுதுணையாகவும் அமைந்திருந்தன என்பது மறக்க முடியாத உண்மை. எனவேதான், இந்நூலகத்தை உருவாக்கிய வீரர்கள் நூல் வரலாற்றில் (*History of books*) மட்டுமின்றி, நாட்டின் வரலாற்றிலும் அழியாத இடம் பெற்று விட்டார்கள் பாமர மக்களுக்குத் தொண்டு புரிவதில் இந்த வீரர்கள் காட்டிய பேரார்வமும் பொதுநலப் பணிகளுக்காக வாரி வாரி வழங்கிய அவர்களது வள்ளன்மையும், தாம் தீட்டிய திட்டங்களைச் செயலாக்குவதில் அவர்கள் காட்டிய அள வற்ற பொறுமையும், மேற்கொண்ட அளப்பரிய முயற்சி களும் நியுயார்க் மாநகரின் வரலாற்றில் முக்கிய இடம் பெற்று விளங்குகின்றன.

நியுயார்க் பொது நூலகத்தின் வரலாற்றை ஒரு நாடகமாகக் கொண்டால், அதில் வரும் முதல் கதா நாயகன் ஜான் ஜேகப் ஆஸ்டர் (*John Jacob Astor*) என லாம். வேற்று நாட்டிலிருந்து திக்கற்ற சிறுவனாக. வயிற் றுப் பிழைப்புக்கு வழி தேடி அமெரிக்கா வந்து சேர்ந்த ஆஸ்டர், நியுயார்க் நகரில் அடைக்கலம் புகுந்தார். பல தொழில்களைச் செய்து சிறுகச் சிறுகப் பொருள் தேடிய அவர் கம்பளி வணிகம், கப்பல் வணிகம், தேயிலை வணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டு பெரும் பொருள் குவித்தார். நகரில் பெரும் பணக்காரரானார். பல வழிகளிலும் வந்து குவியும்

செல்வத்தை அறப்பணிகளுக்கும், பொது நலனுக்கும் செல விட வேண்டும் என்ற தணியாத ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது.

1883-ஆம் ஆண்டில், மேல்மன்காட்டனிலுள்ள (*Upper Manhatten*) தனது "நாட்டுப்புற இல்லத்தில்" (*Country house*) ஆஸ்டர் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். ஒருநாள் அவரது ஆருயிர் நண்பர் ஜோசப் கிரீன் காக்ஸ் வெல் (*Joseph Green Cogswell*) என்பவர் அவரைக் காண வந்தார். காக்ஸ்வெல் சிறந்த அறிஞர்; பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்; பெயர் பெற்ற எழுத்தாளர்: ஆஸ்டருக்குப் பல சமயங்களில் அரிய ஆலோசனைகள் கூறி வந்த உயிர்த் தோழர். அவரிடம் பொதுநலச் சேவையின் தமக்குள்ள நாட்டத்தை ஆஸ்டர் எடுத்துச் சொன்னார். ஏதாவது ஒரு பொதுத் தொண்டிற்காக 4 இலட்சம் டாலர் நன்கொடை வழங்கத் தாம் விரும்புவதாகவும், எந்தக் காரியத்திற்கு இதைக் கொடுக்கலாமென ஆலோசனை கூறும்படியும் காக்ஸ்வெல்லிடம் ஆஸ்டர் வேண்டினார். "நியுயார்க் நகருக்கு நல்லதொரு நூலகம் நெடுநாளையத் தேவை. எனவே, இந்நிதியைக் கொண்டு ஒரு நூலகம் நிறுவலாம்" என நண்பர் கூறிய கருத்தை ஆஸ்டர் உடனடியாக ஏற்றுக் கொண்டதுடன், இதற்கான திட்டம் ஒன்றை வகுத்து அதைச் செயலாக்கும் பொறுப்பையும் காக்ஸ்வெல்லிடமே ஒப்படைத்தார்.

'நூலகம் நிறுவலாம்' என காக்ஸ்வெல் மிக எளிதாகச் சொல்லிவிட்டாரே தவிர, அதைச் செயல்படுத்தும் பொறுப்புத் தன்மேல் விழுந்தபோதுதான், அது எவ்வளவு கடினமான பணி என்பதை உணர்ந்தார். ஆனாலும் அப்பொறுப்பை ஒரு புனிதக் கடமையாக ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றுவதற்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்டார். நூலக அமைப்புத் திட்டத்தைத் தயாரிக்க மட்டும் அவர் 10 ஆண்டுகள் செலவழிக்க வேண்டியிருந்தது. நூலகக் கட்டிடத்திற்கான வரைப் படம் தயாராகி

யது. ஓய்வு ஒழிச்சலின்றி நூல்களைச் சேகரிக்கும் வேலையில் இறங்கினார் காக்ஸ்வெல். ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளுக்குச் சென்று தனியார் நூலகங்களில் ஏலம் போடும் நூல்களையெல்லாம் வாங்கி வந்தார். உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் எங்கு நூல் ஏலம் நடந்தாலும் அங்கு காக்ஸ்வெல்லைக் காணலாம். பிற நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவும், அவர்களின் மொழி, பண்பாடு, வாழ்க்கை முறை முதலியனவற்றை அறிந்து கொள்ளவும் அந்தந்த நாட்டு மொழிகளிலுள்ள நூல்கள் பெரிதும் பயன்படும் என்று காக்ஸ்வெல் கருதினார். எனவே, கிடைக்கக்கூடிய எல்லா மொழி நூல்களையும் வாங்கிச் சேகரித்தார். நூலகக் கட்டிடம் கட்டத் துவங்கும் முன்னரே சேர்க்கப்பட்ட நூல்கள் மலைபோல் குவிந்து கொண்டிருந்தன.

தனது வள்ளன்மையின் சின்னமாக உருவாக்கிய திட்டம் முழு உருவம் பெறுவதைப் பார்த்து மகிழும் பேறு ஆஸ்டருக்குக் கிட்டவில்லை. நூலகத்திற்காக நிறுவப்பட்ட அறப்பணி நிதி நிறுவனத்திடம் (*Astor Trust*) 4 இலட்சம் டாலரை ஒப்படைத்துவிட்டு, 1848-ஆம் ஆண்டு மார்ச் 29-ஆம் தேதி ஆஸ்டர் காலமானார். அவர் மறைந்து இரண்டு மாதங் கழித்து, அதாவது, மே 20-ஆம் தேதியன்று ஆஸ்டர் அறப்பணி நிதி நிறுவனத்தின் பொறுப்பாளர் குழு (*Board of Trustees*) முதன் முதலாகக் கூடி, நூலகத்திற்கு "ஆஸ்டர் நூலகம்" எனப் பெயரிடுவதெனத் தீர்மானித்தது. நூலகத்தின் முதல் மேலாளராகக் (*Superindentent*) காக்ஸ்வெல் நியமிக்கப்பட்டார். பின்னர் நடந்த கூட்டம் ஒன்றில், பொறுப்பாளர் குழுவின் தலைவராக, வாசிங்டன் இர்விங் (*Washington Irving*) தேர்ந்தெடுக்கப்பட்டார். நியுயார்க் நகரில் அப்போது பண்பாட்டு நிலையமாக விளங்கிய லபாயட் பிளேஸ் (*Lafayette place*) என்ற என்ற பகுதியில் நூலகக் கட்டிடத்திற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. சுமார் 6 ஆண்டுகளில் நூலகக் கட்டிட

வேலை முடிவடைந்தது. 1854-ஆம் ஆண்டு சனவரி 9-ஆம் தேதியன்று "ஆஸ்டர் நூலகம்" பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டது. "இந்நாள் இம்மாநகர் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த பொன்னாள்" என "வாசிங்டன் போஸ்ட்" (*Washington Post*) என்ற நாளிதழ் குறிப்பிட்டு எழுதியிருந்தது.

இந்நூலகத்தில், திறப்பு விழாவன்றே 90,000 நூல்கள் இருந்தன. முதல் நாளன்று இந்நூலகத்திற்கு 50 வாசகர்கள் வந்து, 70 நூல்களைப் படித்தார்கள். 1895-இல் இங்குள்ள நூல்களின் எண்ணிக்கை 2,60,000 ஆக உயர்ந்தது. நாள்தோறும் 600 பேர் வந்து ஏறத்தாழ 1000 நூல்களைப் படித்துச் சென்றார்கள். பல்வேறு நாடுகளிலிருந்தும் பலதிறப்பட்ட மொழிகளில் கிடைத்தற்கரிய ஏராளமான நூல்களை வாங்கிச் சேர்த்த பெருமை நூலகத்தின் முதல் மேலாளர் காக்ஸ்வெல்லைச் சேரும். அவர் அன்று அரும்பாடுபட்டுச் சேகரித்த நூல்கள் இன்றும் பெரும் மதிப்பு வாய்ந்தவையாக மதித்துப் போற்றப்படுகின்றன.

### லெனக்ஸ் நூலகம்

இதற்கிடையில், இந்நகரில் வாழ்ந்து வந்த ஜேம்ஸ் லெனக்ஸ் (*James Lenox*) என்னும் அறிஞர் ஏராளமான நூல்களைத் தனிப்பட்ட முறையில் சேகரித்து வைத்திருந்தார். நூல்களைப் படிப்பதில் பெருவேட்கை கொண்ட அப்பெரியார், பல்வேறு அறிவுத் துறைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான நூல்களை வாங்கிக் காத்தோம்பி வந்தார். அமெரிக்க இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், வரலாறு, மில்டன், சேக்சுபியர், பனியன், வால்டன் ஆகிய பேரறிஞர்களின் நூல்களும், விவிலியம் பற்றிய பலதிறப்பட்ட இலக்கியங்களும் அவர் சேகரித்து வைத்திருந்த அரிய நூல் களஞ்சியத்தில் முக்கியமானவைகளாகும்.

இந்த நூல்களைக் கொண்டு நூலகம் ஒன்று நிறுவ விரும்பினார் லெனக்ஸ். அவர் விரும்பியபடி ஐந்தாவது

அவனியூ பகுதியில் 70, 71-ஆவது வீதிகளுக்கிடையில் "லெனுக்ஸ் நூலகம்" (*Lenox Library*) நிறுவப்பட்டது. 1877-இல் இந்நூலகக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. லெனுக்ஸ் அரும்பாடுபட்டுச் சேகரித்த பல்லாயிரக்கணக்கான நூல்கள் இந்நூலகத்தில் இடம் பெற்றன. ஆஸ்டர் நூலகத்திற்காக ஆஸ்டரும், காக்ஸ்வெல்லும் சேர்ந்து சேகரித்த நூல்களின் எண்ணிக்கைக்குச் சரிசமமான அளவுக்கு லெனுக்ஸ் தன்னந் தனியாகச் சேர்த்திருந்த நூல்களின் தொகை இருந்தது. ஜேம்ஸ் லெனுக்ஸ் தமது சொத்துக்களையெல்லாம் நூலகத்திற்கே அர்ப்பணித்து விட்டு, 1880-இல் இயற்கை எய்தினுர்.

டில்டன் நூலகம

நியுயார்க் நூலக இயக்கத்தின் மற்ருெரு முன்னேடியாகத் திகழ்ந்தவர் சாமுவேல் ஜேம்ஸ் டில்டன் (*Samuel James Tilden*) என்பவர் ஆவார். டில்டன், தலைசிறந்த வழக்கறிஞர்; செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர். 1875 முதல் 1877 வரை நியுயார்க் மாநிலக் கவர்னராகப் பணியாற்றியவர். 1876-இல் நடந்த குடியரசுத்தலைவர் (*President*) தேர்தலில் சனநாயகக் கட்சியின் வேட்பாளராக (*Democratic Party Candidate*) டில்டன் தேர்ந்தெடுக்கப் பட்டார். தேர்தலின்போது குடியரசுக் கட்சி வேட்பாளர் (*Republican Candidate*) ருதர்போர் எச். ஹேய்ஸ் (*Rutherford H. Hayes*) என்பாரைவிட டில்டன் பொதுமக்கள் வாக்குகளை (*Popular Votes*) 2,50,000 அதிகம் பெற்ருர். ஆனல், அப்போது நடைமுறைக்கு வந்த வாக்காளத் தொகுதி வாக்குகளில் (*Electoral college Vote*) ஒரே ஒரு வாக்குக் குறைவினல் டில்டன் தேர்தலில் தோற்ருர்.

கவர்னர் டில்டன் தமது ஆயுட்காலம் முழுவதும் நூலக இயக்க வளர்ச்சிக்கே பாடுபட்டார். அவர் தாமாக 15,000 நூல்கள் வரைச் சேர்த்துவைத்திருந்தார். 1886-ல் அவர் காலமானபோது தமது உயிலில், 'டில்டன் அறப்பணி

நிதி நிறுவனம்' நிறுவி, அதன் சார்பில் நியுயார்க் நகரில் "இலவச நூலகமும் படிப்பகமும்" அமைக்கவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். அறப்பணி நிதிக்கு 2 இலட்சம் டாலர் ஒதுக்கியதுடன், தான் சேகரித்து வைத்திருந்த 15,000 நூல்களையும் அர்ப்பணித்திருந்தார். டில்டன் விரும்பிய வண்ணம் அவரது நிதியைக் கொண்டு டில்டன் அறப்பணி நிதி நிறுவனம் (*Tildon Trust*) அமைக்கப் பட்டது. நூலகத்தை நிறுவும் முயற்சியில் பொறுப்பாளர் கள் ஈடுபட்டார்கள்.

நூலகங்கள் இணைப்பு

இந்த நேரத்தில், ஆஸ்டர் நூலகத்திற்கும், லெனுக்ஸ் நூலகத்திற்கும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. புதிய நூல் கள் வாங்கவும், அலுவலர்களுக்கு ஊதியம் வழங்கவும் போதிய பணம் இன்றி இரு நூலகங்களும் திண்டாடின. யாராவது நிதி உதவி செய்ய முன் வந்தாலன்றி இந் நூலகங் களைத் தொடர்ந்து நடத்த இயலாது என்ற நிலைமை தோன்றியது இதற்கிடையில், நியுயார்க் மாநகரின் மக்கள் தொகை 5 இலட்சத்திலிருந்து 20 இலட்சமாக உயர்ந்து விட்டது. நூலகத்தின் தேவையும் அதிகரித்தது. இந்தத் தேவை முழுவதையும் ஈடுசெய்ய ஆஸ்டர் நூலகம், லெனுக்ஸ் நூலகம் இரண்டினுல் மட்டும் முடியவில்லை. நவீன வசதிகள் கொண்ட புதியதொரு நூலகம் தேவை என்பதை அனைவரும் உணர்ந்தனர்.

இச்சமயத்தில், டில்டன் அறப்பணி நிதி நிறுவனப் பொறுப்பாளர்களில் ஒருவரான ஆண்ட்ரூ எச். கிரீன் (*Andrew H. Green*) என்னும் பெரியார், 1892-இல் லெனுக்ஸ் நூலகத்துடன் டில்டன் அறப்பணி நிறுவனத்தை இணைத்துப் புதியதொரு பெரிய நூலகம் அமைக்கலாம் என ஆலோசனை கூறினர். இதை இருதரப்பினரும் ஒரு மனதாக ஏற்றுக் கொண்டனர். ஈராண்டுகளுக்குப் பின் னர் 1894-இல் ஆஸ்டர் அறப்பணி நிதி நிறுவனப் பொறுப் பாளர்களில் ஒருவரான ஜான் எல். காட்வாலடர் (*John*

*L. Cadwalader*) என்பவர் மேற்கொண்ட முயற்சியினால், டில்டன்—லெனாக்ஸ்—ஆஸ்டர் அறப்பணி நிதி நிறுவனங்கள் மூன்றையும் ஒரே நிறுவனமாக இணைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. 1895-ஆம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதியன்று இந்த மூன்று நிறுவனங்களும் இணைந்தன. "நியூயார்க் பொது நூலகத்திற்கான ஆஸ்டர்—லெனாக்ஸ்—டில்டன் அறப்பணி நிறுவனம்" அமைந்தது. இப்புதிய நிறுவனத்தின் சார்பில் நிறுவப்பட்ட நூலகம்தான் இன்றுள்ள "மத்திய ஆராய்ச்சி நூலகம்" (*Central Research Library*) புதிய அறப்பணி நிறுவனத்திற்குப் பொறுப்பாளர் குழு (*Board of Trustees*) புதிதாக அமைக்கப்பட்டது. பிரான்சில் முன்பு அமெரிக்கத் தூதராகப் பணியாற்றியவரும், "ஈவ்னிங் போஸ்ட்" (*Evening Post*) என்ற நாளிதழின் பதிப்பாளர்களில் ஒருவருமான ஜான் பிஜிலோவ் (*John Bigelow*) புதிய குழுவின் முதல் தலைவரானார். பெயர் பெற்ற வாஷிங்டன் "மருத்துவர் நூலக"த்தின் (*Surgeon General's Library*) அமைப்பாளர் (*Organiser*) ஜான் எஸ். பில்லிங்ஸ் (*John S. Billings*) குழுவின் முதல் இயக்குநர் (*Director*) ஆனார்.

மூன்று நூலகங்களையும் ஒருங்கிணைத்த பின்னரும் இந்நூலகம் தனது பொருள் தேவைக்கு நன்கொடைகளையும், 35 இலட்சம் டாலர் அறநிதியின் மூலம் கிடைத்த வட்டிப் பணத்தையும் மட்டுமே நம்பியிருக்க வேண்டியிருந்தது. அத்துடன் பழைய ஆஸ்டர், லெனாக்ஸ் நூலகக் கட்டிடங்கள் பொருத்தமான இடத்தில் அமைந்திருக்கவில்லை. விரிவடைந்து வரும் நகரின் தேவைகளுக் கேற்ற வசதிகளும் இக்கட்டிடங்களில் இல்லை. எனவே, நகரின் மத்தியப் பகுதியில் நூலகத்திற்கு உகந்த இடம் உடனடியாக வேண்டியிருந்தது.

### நீர்த் தேக்கத்தில் கட்டிடம்

ஐந்தாவது அவனியூப் பகுதியில் 40-ஆவது 42-ஆவது வீதிகளுக்கிடையில் நகருக்குக் குடி நீர் வழங்குவதற்காக

குரோடான் நீர்த் தேக்கம் (*Croton Reservoin*) அமைந்திருந்தது. இந்த நீர்த் தேக்கம் நகரின் நடுவில் இருந்தமையாலும் குடி நீர் தேக்கி வைக்க அந்த இடம் போதுமானதாக இல்லை என்பதாலும் நீர்த் தேக்கத்தை வேறிடத்திற்கு மாற்ற நகராட்சி மன்றம் இடம் தேடிக்கொண்டிருந்தது. இதை அறிந்த நூலகப் பொறுப்பாளர் குழுவினர், அந்த நீர்த் தேக்கப் பகுதியை மத்திய நூலகம் கட்டுவதற்கு ஒதுக்கி உதவுமாறு வேண்டி நகராட்சித் தலைவர் வில்லியம் எல். ஸ்டிராங்கிற்கு (*Mayor William L. Strong*) எழுதினார்கள். இவ்வேண்டுகோளை நகராட்சி மன்றம் ஏற்றுக்கொண்டது. "குத்தகை—ஒப்பந்த" (Lease and Agreement) அடிப்படையில் நகராட்சிக்கும் பொறுப்பாளர் குழுவிற்குமிடையே 1897 டிசம்பர் 8-இல் உடன்படிக்கை கையெழுத்தாகியது. தேர்ந்தெடுத்த இடத்தில் நூலகத்திற்கான தலைமைக் கட்டிடத்தைக் (Central Building) கட்டித் தரவும், அதற்கான தளவாடச் சாமான்களை (Furniture) வாங்கித் தரவும், கட்டிடத்தைக் காத்தோம்பிப் பழுது ஏற்படின் செம்மைப்படுத்தவதற்குத் தேவைப்படும் நிதியை ஆண்டுதோறும் வழங்கவும் நகராட்சி மன்றம் ஒப்புக்கொண்டது. இவ்விதமாக, நியுயார்க்கில் முதற் பொது நூலகமான ஆஸ்டர் நூலகம் தோன்றிய 40 ஆண்டுகளுக்குப் பிறகு "நியுயார்க் பொது நூலகம்" (New York Public Library) உருவாகத் தொடங்கியது. இந்த நேரத்தில் நகரத்தை விரிவாக்கி "நியுயார்க் பெருநகர்" (Greater New York) அமைக்கும் திட்டத்தைச் செயலாக்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. பெருநகர் வேலையும், நூலகக் கட்டுமானமும் இணை இணையாக நடந்து வந்தன.

நீர்த் தேக்கத்திலிருந்து நீரை வெளியேற்றித் துப்புரவாக்கிப் பள்ளத்தைத் தூர்த்துப் புதிய கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்கு 14 ஆண்டுகள் பிடித்தன. 1911-ஆம் ஆண்டு மே 23-இல் புதிய தலைமைக் கட்டிடம் திறக்கப்

பட்ட போது, அது இம்மாநகரில் காணுதற்கரிய அதிசயங்களில் ஒன்றாக அமைந்தது. அமெரிக்காவில் மட்டுமின்றி, உலகம் முழுவதிலும் கட்டிடக்கலை வரலாற்றிலேயே ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய மாபெரும் சாதனையாக இக் கட்டிடம் இன்றும் மதிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டிடத்திற்கான சலவைக் கற்களை, கிரீஸ், இத்தாலி பிரான்சு, செர்மனி, பெல்சியம் முதலிய அயல் நாடுகளிலிருந்து வரவழைத்தார்களாம்! இதைக் கட்டி முடிப்பதற்கு மொத்தம் 90,02,523 டாலர் செலவாகியது.

நூலகத்தில், படிப்பதற்கான பொது அறையுடன் (Main Reading Room) 18 சிறிய அறைகள் (இப்பொழுது 21 அறைகள்) கட்டப்பட்டன. ஆராய்ச்சிகள் நடத்துவோர் தனியாக அமர்ந்து அமைதியாகப் படிப்பதற்கு இவ்வறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆய்வு உதவிப் பிரிவில் (Reference Section) நூல்களின் எண்ணிக்கையை 12 இலட்சமாக உயர்த்த அறப்பணி நிறுவனப் பொறுப்பாளர்கள் குழுவினர் பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்த எண்ணிக்கை, பழைய மூன்று நூலகங்களிலிருந்த நூல்களின் மொத்த எண்ணிக்கையைப் போல் மூன்று மடங்காகும்.

### 80 கிளை நூலகங்கள்

புதிய தலைமைக் கட்டிடத்தில் பொது நூலகம் சீராக இயங்கிக் கொண்டிருந்த சமயத்தில், 1901-ஆம் ஆண்டு மார்ச் 13-இல் நூலகத்தின் இயக்குநர் டாக்டர். பில்லிங்கக்கு ஆண்ட்ரு கார்னிகி (Andrew Carnegie) என்ற பெருஞ் செல்வந்தரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. "நியுயார்க் பொது நூலகத்தின் சேவையை நகரின் எல்லாப் பகுதி மக்களும் பெற வேண்டுமெனில், பெருநகர் முழுவதிலும் பொது நூலகத்தின் கிளை நூலகங்களை அமைத்தல் இன்றியமையாததாகும். மத்திய நூலகத்திற்குச் செய்தது போன்று, நகரின் ஒவ்வொரு பகுதியிலும் கிளை நூலகத்திற்காக இடம் ஒதுக்கி, கட்டிடம் கட்டியபின் அக்கட்டிடத்தைக் காத்

தேவையான நிதியும் தர நகராட்சி மன்றம் இசையுமானால், இக்கிளை நூலகங்களுக்கான கட்டிடங்கள் அமைத்தையும் கட்டுவதற்குத் தேவைப்படும் பணம் 52 இலட்சம் டாலர் வரை ஆனாலும், அத்தொகை முழுவதையும் வழங்க நான் தயாராக இருக்கிறேன்'' என்று கார்னிகி தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இக்கடிதத்தை, பொறுப்பாளர் குழுவினர் உடனே அப்போது நகராட்சித் தலைவராக இருந்த ராபர்ட் ஏ. வான் விக்கிடம் (*Robert A. Van Wyck*) அனுப்பினார்கள். அவரும் இத்திட்டத்தைப் பெரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். நியுயார்க் நகர நூலகக் கட்டிடங்களைப் பழுது பார்த்து ஓம்புதற்கு ஆண்டுதோறும் நிதி ஒதுக்குவதற்கு வகை செய்யும் சட்டத்தையும் இயற்றினார். இந்நகரில் தனிப்பட்ட முறையில் 10 சுழல் நூலகங்களும் (*Circulating Libraries*) இயங்கி வந்தன. புதிய நூலகச் சட்டத்தின்கீழ், இந்நூலகங்களும் நியுயார்க் பொது நூலகத்துடன் இணைக்கப்பட்டு "நூல் பரிமாற்றுத் துறை'' *Circulation Department*) அமைக்கப்பட்டது.

கார்னிகி வழங்கிய நிதியைக் கொண்டு நகர் முழுவதிலும் கிளை நூலகங்களுக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டன. பொது நூலகத்தின் 39-ஆவது கிளை 1929-ல் முடிவடைந்தது. இன்று இக்கிளை நூலகங்களின் எண்ணிக்கை எண்பதுக்கும் அதிகம்.

## நன்கொடைகள்

1848-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நியுயார்க் பொது நூலகத்திற்கு நிதி நன்கொடை வழங்கியோர் எண்ணிக்கைப் பல்லாயிரக் கணக்கை எட்டியுள்ளது. மத்திய ஆராய்ச்சி நூலகத்திற்கான அறநிதியில் பெருஞ் செல்வந்தர்கள் தாராளமாக வழங்கிய பெருந்தொகைகள் முக்கியமாக அடங்கியிருந்த போதிலும், நூலகத்தினால் பயன்பெற்ற அளவிறந்த பாமர மக்கள் தங்களின் நன்றிப்

பெருக்கினால், நூலகத்திற்குத் தங்களால் இயன்ற சின்னஞ் சிறு தொகைகளை நன்கொடையாக வழங்கி இருக்கிறார்கள். வாழ்க்கைக்கு வழி தேடவும், நூல்கள் எழுதவும், புதிய கருவிகள் கண்டு பிடிக்கவும், வாழ்வில் இன்பமும் மகிழ்ச்சியும் காணவும் இந்நூலகம் நூற்றுக்கணக்கானவர்களுக்குப் பேருதவியாக இருந்திருக்கிறது. இவர்கள் எல்லாம் இந்நூலகத்திற்கு இன்னும் தம்மாலியன்ற அளவு நன்கொடைகள் வழங்கிய வண்ணமிருக்கிறார்கள்.

இந்நூலகத்தின் அறநிதிக்கு மிகப் பெரிய தொகையை நன்கொடையாக வழங்கியவர் பெய்னி விட்னி (*Payne Whitney*) என்பார் ஆவார். இவர் இந்நூலக அறப்பணி நிறுவனப் பொறுப்பாளர்களில் ஒருவராகப் பணியாற்றியவர். இவர் தமது வாழ்நாளில் தம் தந்தையார் ஆலிவர் எச். பெய்னி (*Oliver H. Payne*) நினைவாக இந்நூலகத்திற்கு 20 இலட்சம் டாலர் நன்கொடை வழங்கினார். பின்னர், 1927-இல் இவர் காலமானபோது, அவரது உயிலில் நூலகத்திற்கு 1,40,00,000 டாலர் வழங்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார்.

பணமாக மட்டுமன்றி நூல்களாகவும், எழுத்துப் பிரதிகளாகவும், அச்சு வெளியீடுகளாகவும், இசைத் தட்டுக்கள் மற்றும் இது போன்ற சாதனங்களாகவும் இந்நூலகத்திற்கு நன்கொடைகள் ஏராளமாக வழங்கப்படுகின்றன. இந்நன்கொடைகள் நூல்களின் எண்ணிக்கை பல்கிப் பெருக பெரிதும் உதவின. 1911-ல் ஆய்வு உதவிப் பிரிவில் மட்டும் 12 இலட்சமாக இருந்த நூல்களின் தொகை 1964-ல் 45 இலட்சமாக உயர்ந்தது.

நியூயார்க் பொது நூலகத்தின் மிக முக்கியமான கிளைகளில் ஒன்றாகத் திகழ்வது டான்னல் நூலகம் (*Donnell Library Center*) ஆகும். அதிகமான மக்கள் வந்து போகும் கிளைகளில் இதுவும் ஒன்று. இந்தக் கிளை நூலகத்துடன் இணைவாகக் குழந்தைகளுக்கான நாதன் ஸ்டிராஸ் நூலக

மும் (*Nathan Straus Library*) கண்பார்வை இழந்தோர்க்கான நூலகமும் (*Library for the Blind*) இயங்கி வருகின்றன. நீக்ரோ வரலாற்று—இலக்கிய நூல் பிரிவும் (**Schombourg Collection of Negro History and Literature**) இக்கிளை நூலகத்தின் மற்றொரு சிறப்பான அம்சமாகும்.

பொது நூலகத்தின் ஆராய்ச்சிப் பிரிவைப் பயன்படுத்துவோர் தொகை பெருகியதால், 1960-இல் 43-வது வீதியில் தனிக்கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது. அண்மையில், லிங்கன் சதுக்கத்தில் பொது நூலகத்தின் ஒரு பகுதியாக 'நுண்கலை நூலக-பொருட்காட்சி நிலையம், (*Library and Museum of the Performing Arts*) திறக்கப்பட்டது. நாடகம், இசை, நடனம் ஆகியவை தொடர்பான நூல்களும் சாதனங்களும் இப்புதிய நிலையத்தில் இடம் பெற்றன. இதற்கிடையில், 40-வது வீதியின் தென்கிழக்கு முனைவரையிலும் நூலகக் கட்டிடம் விரிவுபடுத்தப்பட்டது. இவ்விதமாய் 1925-ஆம் ஆண்டில் பொது நூலகம் முழுமை பெற்றது.

உன்னத நிறுவனம்

அமெரிக்காவில் எந்தப் பெரிய நகருக்குச் சென்றாலும், அங்குக் கண்ணையும் கருத்தையும் கவரும் கவின்மிகு தோற்றத்துடன் விளங்கும் பொதுக் கட்டிடங்களில் அந்நகரின் பொது நூலகமும் ஒன்றாகத் திகழ்கிறது. இந்நாட்டில், இன்னின்ன நூல்கள்தான் நூலகத்தில் இடம் பெறுதல் வேண்டும் என்ற அரசாங்கத் தடையோ, கட்டுப்பாடோ எதுவும் கிடையாது. எனவே, இந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி. அறிவை வளர்க்கும் எல்லாவித நூல்களையும் வாங்கி நூலகங்கள் சேகரிக்கின்றன.

நாட்டிலேயே மிகப் பெரிய நகரமான நியூயார்க்கிலுள்ள பொது நூலகம், நாட்டிலேயே மிகச் சிறந்த

மாபெரும் பொது நூலகமாகத் திகழ வேண்டும் என நகர வாசிகளும் மற்றவர்களும் எதிர்பார்ப்பதில் வியப்பில்லை. அவர்கள் நம்பிக்கை வீண்போகாத வகையில், அமெரிக்கா விலேயே ஈடு இணையற்ற உன்னதமானதொரு நிறுவன மாக நியூயார்க் பொது நூலகம் அமைந்திருக்கிறது. ஆண், பெண், ஏழை, பணக்காரர், கறுப்பர்-வெள்ளையர், ஆளும் கட்சி-எதிர்க்கட்சி என்ற பேதங்கள் இன்றி எல்லா வயதி னர்க்கும், எல்லா மொழியினர்க்கும் முழு அளவில் பயன் படும் தலைசிறந்த சமரச நிறுவனமாக இந்நூலகம் இயங்கு கிறது. இன்னொரு சிறப்பான அம்சம் என்னவென்றால், இந்நூலகத்தின் பராமரிப்பில் நகராட்சி மன்றமும் தனிப் பட்டவர்களும் தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பது ஆகும். மத்திய நூலகத்திற்குத் தேவைப்படும் ஆராய்ச்சி நூல்கள் வாங்குவதற்கு 80 சதவிகிதம் தனியார் நிதி உதவுகிறது. மீதத் தொகையை நகராட்சியினர் வழங்கு கின்றனர். கிளை நூலகங்களின் பராமரிப்புக்கும், வளர்ச் சிக்கும் தேவையான நிதியை நகராட்சி மன்றமும், மாநில அரசாங்கமும் அளிக்கின்றன.

மத்திய நூலகத்தில் ஏறத்தாழ ஒரு கோடி நூல்கள் உள்ளன. இந்நூல்களைப் பற்றிய நூலக நூற்பட்டியல் அட்டைகளில் (*Catalog Cards*) படிப்பாளர்களுக்குத் தேவையான எல்லா விவரங்களும் அடங்கியுள்ளன. அவற்றின் உதவி கொண்டு நூல்களை எளிதில் கண்டெடுக்க முடிகிறது. எந்த நூலையாவது தேடி எடுக்க ஒருவருக்கு இயலாமல் போகுமானல், அவர் தாம் விரும்பும் நூலின் பெயரையும் மற்ற விவரத்தையும் ஒரு காகிதச் சீட்டில் எழுதி, நூல் வழங்கும் அலுவலரிடம் கொடுக்கிறார். அவர் அந்த நூல் எந்தப் பிரிவில் கிடைக்கும் என்பதை அறிந்து, அந்தச் சீட்டை ஒரு குழாயின் மூலம் குறிப்பிட்ட அந்தப் பிரிவுக்கு அனுப்புகிறார். சில நிமிட நேரத்தில் நூல் இருக்கும் இடம் கண்டுபிடிக்கப்படுகிறது.

### அதிகம் பயன்படும் நூல்கள்

அறிஞர்களுக்கான அறிவியல் ஆராய்ச்சி நூல்களும்; கலைஞர்களுக்கான நுண்கலை நூல்களும் இந்நூலகத்தில் அதிக அளவில் படிக்கப்படுகின்றன. வரலாறு, இலக்கியம், கலை, விஞ்ஞானம், அரசியல், வணிகம், சமூக இயல் ஆகியவை பற்றிய நூல்களை மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் பெரும் அளவில் பயன்படுத்துகிறார்கள். பெயர் பெற்ற அறிஞர்களும், புகழ் பெற்ற எழுத்தாளர்களும் இந்நூலகத்தின் தலைமைப் படிப்பறையில் அமர்ந்து படித்தும் எழுதியும் அழியா இலக்கியங்கள் பலவற்றை உருவாக்கியிருக்கிறார்கள். பார்பரா டச்மான் (*Barbara Tuchman*), வி. வி. மக்னிட் (*V. V- Mcnitt*), மார்செட் சூட் *Marchette Chute*) ஆர்தர் (*Arthur*), பார்பரா கெல்ப் *Barbara Gelb*), முர்ரே ஷீலர் (*Murray Seiler*), ரோஜர் பர்லிங்காம் (*Roger Burlingame*), லியோனார்ட் லெவின்சன் (*Leonard Levinson*) ஆகியோர் அவர்களில் சிலர்.

### வணிகம், அரசியல்முறை, தொழிலாளர் நலன்

இன்றைய வணிகப் பெருக்கத்திற்கு ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாது தேவைப்படுகிறது. அமெரிக்காவில் வணிக முன்னேற்றத்திற்கான கணிசமான அளவு ஆராய்ச்சிகள் நியுயார்க் பொது நூலகத்தில் நடத்தப்படுகின்றன. ஆயிரக்கணக்கான உற்பத்தி நிறுவனங்களும், வாணிப நிதி நிறுவனங்களும், கப்பல் வணிக அமைப்புகளும், பொது சேவை நிலையங்களும், தொழிற் சங்கங்களும் தங்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு இந் நூலகத்தின் உதவியை நாடியவண்ணமிருக்கின்றன. தங்களின் வணிகப் பெருக்கத்திற்குத் தேவையான புதிய தகவல்களை இந்நூலகத்தின் மூலம் இந்நிறுவனங்கள் பெற்று வருகின்றன. அரசியல், அரசாங்க விவகாரங்கள் பற்றிய தகவல்களை அறிய அரசியல் தலைவர்களும், அரசாங்க அதிகாரிகளும் இந்நூலகத்தையே நம்பி இருக்கிறார்கள்.

பல திறப்பட்ட துறைகள் பற்றிப் பொதுமக்கள் கேட்கும் தகவல்களையும், புள்ளி விவரங்களையும் உடனுக்குடன் தெரிவிப்பது இந்நூலகத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். நாள்தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் தொலை பேசி மூலம் பல தகவல்களைக் கேட்கிறார்கள் அவர்களுக்குத் தேவையான தகவல்களைத் தாமதமின்றிச் சேகரித்து நூலக அலுவலர்கள் உடனே தெரிவிக்கிறார்கள். நாள் தோறும் தகவல்கள் கேட்டு வந்து குவியும் இலட்சக்கணக்கான கடிதங்களுக்குப் பொறுமையுடன் மறுமொழி எழுதுகிறார்கள்.

## புகைப்படப் பிரிவு

இந்நூலகத்தின் புகைப்படப் பிரிவு (*Photographic Service*) செய்யும் சேவையும் குறிப்பிடத் தக்கதாகும். இப்பிரிவு 1912–இல் நிறுவப்பட்டது. கிடைத்தற்கரிய பழைய நூல்களின் புகைப்பட நகல்களை (*Photo-copying*) எடுத்துக் காப்பது இப்பிரிவின் பணியாகும். பழைய நாளிதழ்களை நுண்சுருளில் (*Microfilm*) நகல் எடுத்து இப்பிரிவினர் பத்திரமாகச் சேகரித்து வைக்கின்றனர். இந்தப் புகைப்பட, நுண் சுருள் நகல்கள் எத்தனை ஆண்டுகளாயினும் கெடுவதில்லை. நீண்ட நாட்களுக்குப் பின்பு, ஆராய்ச்சி நடத்துவோருக்கு இவை பெரிதும் பயன்படுகின்றன. இப்பிரிவினர் வெளிநாடுகளுக்கும் புகைப்பட நகல்களை எடுத்து அனுப்புகின்றனர். இவ்விதம் ஆண்டு தோறும் 60,000 புகைப்பட நகல்களை இப்பிரிவு எடுத்து அனுப்புகிறது.

கிடைப்பதற்கரிய படங்கள், புகைப்படங்களைச் சேகரித்து வைப்பதும் புகைப்படப் பிரிவின் பணியாகும். இப்படங்கள் பல்லாயிரக் கணக்கில் 8000 பிரிவுகளில் பொருள் வாரியாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. கட்டிட வடிவமைப்பாளர்கள், ஆடைத் தயாரிப்பாளர்கள், ஓவியர்கள், தொலைக்காட்சி—நாடக—திரைப்படத் தயாரிப்பாளர்கள்,

மாற்று ஆசிரியர்கள் ஆகியோருக்கு இந்தப் படங்களின் உதவி சொல்லுந்தரமன்று.

### குழு நடவடிக்கை

இவ்வா நூலகத்தின் அலுவல்களில் குழு நடவடிக்கைகள் (Group Activities) சிறப்பு அம்சமாகத் திகழ்கின்றன. நண்பர்களைக் கூட்டி நூல்களைப் பற்றி சொல்லாடுதல், கலைக்காட்சிப் பொருள்களைக் கண்டு மகிழ்தல், குழந்தைகளுக்குக் கதை சொல்லுதல், நூல்களை நாடகபாணியில் நடித்துக்காட்டுதல், கண்காட்சிகளும், திரைப்படக் காட்சிகளும் நடத்துதல், கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்தல், பெற்றோர்களுக்கு அறிவுரைக் கூட்டங்கள் நடத்துதல் ஆகியவை இவ்வா நூலகங்களின் சிறப்பான பணிகளாக அமைந்துள்ளன.

### அலுவலர்கள்

சுமார் 3000 மொழிகளிலுள்ள 45 இலட்சம் நூல்களைக் கையாளவும், நூலகத்தைத் திறமையாகவும், சீராகவும் நிர்வகிக்கவும் நூலகர்களும் மற்றும் நூற்றுக்கணக்கான அலுவலர்கள் தேவை என்பதில் ஐயமில்லை. நியூயார்க் பொது நூலகத்தில் பணியாற்றும் ஆண்களும், பெண்களும் தனிப்பயிற்சியும், அசாதாரண ஆற்றலும் நிர்வாகத் திறமையும் உடையவர்களாக இருக்கிறார்கள். கடுமையாக உழைக்கும் மனப்பான்மையும், பொறுப்புணர்வும், பொது மக்களின் தேவையை உணர்ந்து உதவி புரியும் திறமையும் வாய்ந்த இவர்கள் வாசகர்களுக்கு உறுதுணை செய்யும் நண்பர்களாக விளங்குகிறார்கள்.

### சில சிக்கல்கள்

உலகம் முழுவதிலும் ஆண்டுதோறும் 32 இலட்சம் புதிய நூல்கள் வெளியாகின்றன. அதாவது நாள் தோறும் சுமார் 1000 புதிய நூல்கள் வெளியிடப்படுகின்றன! இவை தவிர, 33,000 நாளிதழ்களும், 70,000 வார, மாத, ஆண்டு

...மாற்று ஆசிரியர்கள் ஆகியோருக்கு இந்தப் படங்களின் உதவி சொல்லுந்தரமன்று.

## குழு நடவடிக்கை

சிறுவர் நூலகத்தின் அலுவல்களில் குழு நடவடிக்கைகள் (Group Activities) சிறப்பு அம்சமாகத் திகழ்கின்றன. ...பர்களைக் கூட்டி நூல்களைப் பற்றி சொல்லாடுதல், ...க்காட்சிப் பொருள்களைக் கண்டு மகிழ்தல், குழந்தைகளுக்குக் கதை சொல்லுதல், நூல்களை நாடகபாணியில் ...த்துக்காட்டுதல், கண்காட்சிகளும், திரைப்படக் காட்சிகளும் நடத்துதல், கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு ...தல், பெற்றோர்களுக்கு அறிவுரைக் கூட்டங்கள் நடத்துதல் ஆகியவை சிறுவர் நூலகங்களின் சிறப்பான பணிகளாக ...மந்துள்ளன.

## அலுவலர்கள்

சுமார் 3000 மொழிகளிலுள்ள 45 இலட்சம் நூல்... ...க்கையானவும், நூலகத்தைத் திறமையாகவும், சீராகவும் நிர்வகிக்கவும் நூலகர்களும் மற்றும் நூற்றுக்கணக்கான அலுவலர்கள் தேவை என்பதில் ஐயமில்லை. நியுயார்க் ...து நூலகத்தில் பணியாற்றும் ஆண்களும், பெண்களும் ...ப்பயிற்சியும், அசாதாரண ஆற்றலும் நிர்வாகத் திறமையும் உடையவர்களாக இருக்கிறார்கள். கடுமையாக ...முக்கும் மனப்பான்மையும், பொறுப்புணர்வும், பொது...களின் தேவையை உணர்ந்து உதவி புரியும் திறமையும் ...ர்ந்த இவர்கள் வாசகர்களுக்கு உறுதுணை செய்யும் ...பர்களாக விளங்குகிறார்கள்.

## சில சிக்கல்கள்

உலகம் முழுவதிலும் ஆண்டுதோறும் 32 இலட்சம் புதிய நூல்கள் வெளியாகின்றன. அதாவது நாள் தோறும் ...ர் 1000 புதிய நூல்கள் வெளியிடப்படுகின்றன! இவை ...ர், 88,000 நாளிதழ்களும், 70,000 வார, மாத, ஆண்டு

இதழ்களும் வெளியாகின்றன. இவற்றில், நியுயார்க் பொது நூலகம், ஆண்டுதோறும் இலட்சம் புதிய நூல்களையும், 27,000 நாளிதழ்கள் மற்றும் பருவ வெளியீடுகளையும் வாங்கி வருகிறது. எனவே, இந்த நூல்களைப் பாதுகாப்பாகப் பராமரிப்பது பெரும் சிக்கலாக இருப்பது இயற்கையே. அத்துடன் நூல்கள், பருவ வெளியீடுகளின் விலைகள் இன்று அபரிமிதமாக உயர்ந்துவிட்டன. எனவே, நூல்கள் வாங்குவதற்குப் பணம் அதிகமாகத் தேவைப்படுகிறது.

நியுயார்க் பொது நூலகத்தையும் அதன்பல்வேறு கிளைகளையும் காத்தோம்புவதற்கு ஆண்டுதோறும் 1,60.00,000 டாலர் செலவாகிறது. இந்நூலகம் இருவேறு பிரிவுகளாக இயங்குகிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறு வழிகளின் மூலம் நிதி கிடைக்கிறது. முதல் பிரிவு "நூல் பரிமாற்றத் துறை" *(Circulation Department)* ஆகும். இந்தத் துறைக்கு மன்காட்டன், பிராங்க்ஸ், ஸ்டேடன் தீவு ஆகிய பகுதிகளில் 80-க்கும் அதிகமான கிளைகள் உள்ளன. இக் கிளை நூலகங்கள், வீடுகளில் படிப்பதற்கான புத்தகங்களை வழங்குவதுடன் அந்தந்த வட்டாரத்தில் பொது நூலகம் செய்யும் மற்ற நூலகப் பணிகளையும் செய்து வருகிறது. இந்தத் துறையின் செலவுக்கு ஆண்டுதோறும் 1,05,00.000 டாலர் தேவை. இத்தொகையை நகராட்சி மன்றமும் மாநில அரசாங்கமும் வழங்குகின்றன.

ஐந்தாவது அவினியூவிலுள்ள மத்திய ஆராய்ச்சி நூலகம் *(Central Research Library)* இரண்டாவது பிரிவாகும். உலகிலுள்ள தலைசிறந்த ஆராய்ச்சி நூலகங்களில் முன்னணி நூலகமாக இது திகழ்கிறது. இதற்கு ஆண்டுதோறும் 60 இலட்சம் டாலர் செலவாகிறது. இத்தொகையில் பெரும் பகுதி (81 சதவிகிதம்) பொதுமக்கள் நன்கொடைப் பணத்திலிருந்து கிடைக்கிறது. மீதமுள்ள 19 சதவிகித நிதியை நகராட்சி மாநில மன்றமும், அரசாங்கமும் வழங்குகின்றன.

1890-இல், உலகிலுள்ள பெரிய நகர்களின் பட்டிய லில் நியுயார்க் அப்போதுதான் புதிதாக, அதுவும் கடைசி வரிசையில் இடம் பெற்றிருந்தது. அதே போன்று, உலகப் பெரிய நூலகங்களின் வரிசையில் நியுயார்க் பொது நூலக மும் அடிவரிசையிலேயே இருந்து வந்தது. இன்று, உலகில் இது வாணிகத்துறையின் முதல் நகராகவும், உலக அரசிய லின் தலைநகராகவும், உலகிலுள்ள பெரிய நகர்களில் இரண்டாவது பெருநகராகவும் நியுயார்க் வளர்ந்து விளங்குகிறது. மேலைநாடுகளிலேயே மிகப் பெரியதும், அதிகமானவர்கள் பயன்படுத்தும் நவீன நூலகமாக நியு யார்க் "மத்திய ஆராய்ச்சி நூலகம்" திகழ்கிறது.

### பால்டிமோர் பிராட் இலவச நூலகம்

அமெரிக்காவில் மேரிலாந்து (*Maryland*) மாநிலத்தி லுள்ளது பால்டிமோர் (*Baltimore*) நகரம். இந்நகரின் நடுநாயகமாகத் திகழ்கிறது ஓர் அறிவுலகம். இவ்வுலகம் அமைதியின் இருப்பிடம். எனினும் அங்கு எவரும் நினைத் ததைப் பேசலாம்; பேசுவதைக் கேட்கலாம். இந்தப் புத் துலகில் உலாவர வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று. அதுதான் அறிவுப் பசி கொண்ட உள்ளம்.

ஈனாக் பிராட் இலவச நூலகம் (*Enoch Pratt Free Library*)—இதுதான் அந்த அறிவுலகம். இது 15 இலட்சம் நூல்கள், நாளிதழ்கள், பருவ வெளியீடுகள், பதிவேடுகள், படங்கள், அச்சுக்கள், ஓவியங்கள், ஒலிப்பதிவுகள், ஸ்லைடுகள், திரைப்படங்கள் ஆகியவற்றின் இருப்பிடம், இச்சேகரிப் புகளைப் பேணிக்காக்கும் வானுயர் கட்டிடங்கள், அவற்றில் பணியாற்றும் அலுவலர்கள் எல்லாம் இந்த உலகின் உறுப் பினர்கள். அறிவைத் தேடித் தன்னை நாடிவரும் நகரவாசி ஒவ்வொருவருக்கும் அறிவுப் பசியைப் போக்கி, மேலும் பசியூட்டும் இந்த அறிவுக் களஞ்சியத்தை 'அறிவுலகம்' என்று சொல்வது சாலவும் பொருந்தும்.

1886-இல் இந்நூலகம் திறக்கப்பட்ட நாளிலிருந்து, இது நாள் வரையிலும் 12,50,00,000 நூல்களை வாசகர்கள் வாங்கிச் சென்றிருக்கிறார்கள். சென்ற 15 ஆண்டுகளில் மட்டும் 50,00,000 கேள்விகளுக்கு இந்நூலகம் பதிலனுப்பி இருக்கிறது; சிறந்த முறையில் அறிவுத் தொண்டாற்றி வரும் இந்த நூலகத்தின் 75-ஆம் ஆண்டு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. "மனிதனின் அறிவை வளர்த்து, ஆற்றலைப் பெருக்கி, சிந்தனையைத் தூண்டுவதே" அன்றும் இன்றும் இந்நூலகத்தின் குறிக்கோளாக இருந்து வருகிறது.

## இணையற்ற பரிசு

1870 ஆம் ஆண்டின் இறுதியில் ஓர் நாள். பால்டிமோர் நகரில் வாணிகத்தின் மூலம் பெரும்பொருள் குவித்துப் பெருஞ் செல்வந்தராக விளங்கிய ஈனுக் பிராட் என்பார், நகரப் பிரமுகர் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருக்கையில் திடீரென ஒரு வினவை எழுப்பினார்: "இந்நகரத்திற்கு அளிக்கத் தகுந்த மிகச் சிறந்த பரிசு எது?" என்ன பதில் சொல்வது என்று நண்பர் தயங்கிக் கொண்டிருந்த நேரத்தில், பிராட் தன் கேள்விக்கு தானே விடையும் கூறினார்: "நானே சொல்கிறேன். ஏழை—பணக்காரர் என்ற பேதமின்றி, கறுப்பர்—வெள்ளையர் என்ற பாகுபாடின்றி, நகரின் குடி மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய இலவசப் பொது நூலகம் ஒன்றுதான் இந்நகரின் இன்றைய இன்றியமையாத தேவை. இதுதான் இணையற்ற பரிசும் ஆகும். இப்பரிசை இந்நகருக்கு நானே வழங்குவேன்."

பொருளும் அருளும் கொண்ட பிராட், தமது எண்ணத்தைச் செயலாக்கும் பணியிலும் இறங்கினார். நூலகத்தின் அமைப்பு, கட்டிடங்கள், சேகரிக்க வேண்டிய நூல்கள் ஆகியவை பற்றிய திட்டங்களை வகுத்தார். தனது நூலகம் ஒரு சிலருக்கு மட்டும் உதவும் வகையில் இருக்கக்கூடாது என்பதில் அவர் மிகவும் அக்கறை காட்டினார். "நகரி

ளுள்ள ஒவ்வொருவருக்கும் இந்நூலகம் பயன்பட வேண்டும். ஏழை—பணக்காரர் எல்லோரும் இங்கு வரவேண்டும். இன—நிறப்பாகுபாடு இங்கு தலைகாட்டக்கூடாது. எல்லா இனத்தவரும் எல்லா நிறத்தரும் இங்கு சம உரிமையும், சமவாய்ப்பும், சமபயன்களும் பெற வேண்டும்'' என்பதை பிராட் திட்டவட்டமாகத் தெளிவுறுத்தினார்.

1881-ஆம் ஆண்டில் மல்பெரி (Mulberry) வீதியில் ஒரு மாபெரும் கட்டிடம் எழுந்தது. இக் கட்டிடம் எதற்காகக் கட்டப்படுகிறது என்பதை பிராட் யாரிடமும் கூறவில்லை. இரகசியம் அறியாத பொதுமக்கள், அங்கு ஒரு தொழிற்சாலை உருவாவதாக நினைத்தார்கள். வேறு சிலர் ஏதாவது 'அனாதை இல்ல'மாக இருக்கும் என்றார்கள். கட்டிடம் துரிதமாக வளர்ந்துகொண்டு வருகிற நேரத்தில், 1882 சனவரி 21-இல் நகராட்சித் தலைவருக்கு (Mayor), பிராட் ஒரு கடிதம் எழுதினார். "பால்டிமோர் நகருக்கு மத்தியப் பொதுநூலகக் கட்டிடம் ஒன்றையும், மற்றும் அதன் நான்கு கிளைகளுக்கான கட்டிடங்களையும் கட்டித் தருகிறேன். இவற்றைப் பேணுவதற்கான அறநிதியும் வழங்க விரும்புகிறேன். எனது இந்த அன்பளிப்பை ஏற்க வேண்டுகிறேன்" என்று பிராட் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். பத்து நாட்களுக்குப் பிறகு, இந்த வேண்டுகோளை நகராட்சி மன்றம் (City Council) ஏற்றுக்கொண்டது. 1882 அக்டோபர் 25-இல் நகரில் நடந்த சிறப்பு வரவேற்பில், பிராட்டின் நன்கொடையை நகர மக்கள் பேராதரவுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

அர்ப்பணம்

மத்திய நூலகக் கட்டிடமும், நான்கு கிளைகளுக்கான கட்டிடங்களும் 1884-இல் கட்டி முடிக்கப்பட்டன. உடனே, நூலகத்திற்கான அறப்பணிக் குழு (Board of Trustees) ஒன்றை நிறுவி அதனிடம் நூலகத்தின் நிருவாகப் பொறுப்பை ஒப்படைத்தார் பிராட். முதலாவது அறப்

பணிக் குழுவில் 9 உறுப்பினர்கள் இடம் பெற்றார்கள். இவர்கள் அனைவரையும் பிராட்டே தேர்ந்தெடுத்தார். இனிமேல், குழுவில் காலியிடம் ஏற்பட்டால் அதற்குக் குழுவே உறுப்பினர்களை நியமித்துக் கொள்ளலாமென பிராட் விதி வகுத்தார். "சமயம், அரசியல், இனம், நிறம், காரணமாக அறப்பணிக் குழு உறுப்பினர் அல்லது நூலக அதிகாரி எவரையும் வேலையிலிருந்து நீக்கவோ அல்லது வேலையில் நியமிக்கவோ கூடாது" என்பது பிராட் வகுத்த திட்டவட்டமான விதிமுறைகளில் ஒன்று.

நூலகத்தை நகர மக்களுக்கு அர்ப்பணிக்கும் விழா 1886 சனவரி 4-இல் நடந்தது. இவ்விழாவில் உரையாற்றிய பிராட் சுருக்கமாகச் சில வார்த்தைகளே கூறினார். எனினும், அந்தச் சொற்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. பிராட் சொன்னார்:

"ஆண்டவனின் ஆசியுடன் இன்று இந்நூலகத்தை உங்களிடம் ஒப்படைக்கிறேன். இதைப் பேணிக்காத்து, மென்மேலும் வளர்த்து, இன்றைய மக்களும் வாழையடி வாழையாக இனிவரும் சந்ததியினரும் இதன் பலன்களை நுகர்ந்து இன்புற்றிருப்பார்கள் என நம்புகிறேன். முடிந்து விட்டது என் பணி. நிறைந்து விட்டது என் நெஞ்சம்."

நூலகக் கட்டிடங்களுக்கான மனைகள் வாங்கவும், கட்டிடங்களைக் கட்டவும், அறநிதிக்கு நிதி ஒதுக்கவும் பிராட் மொத்தம் செலவிட்ட தொகை 11,45,833 டாலர். நூலகத்தின் மூலதனத்தில் ஆண்டுதோறும் 5 சதவிகிதம் வருமானம் கிடைக்கும் வகையில் நூலகத்தின் நிதித் திட்டங்களைப் பிராட் வகுத்திருந்தார். இதன்படி ஆண்டுதோறும் 50,000 டாலர் வருமானம் கிடைத்து வந்தது. இந்த வருமானத்தைக் கொண்டு மேலும் இரண்டு கிளைகள் திறக்கப்பட்டன.

நூலகத்தை நகருக்கு அர்ப்பணித்ததுடன் அதனுடைய தொடர்பை பிராட் அறுத்துக்கொண்டு விடவில்லை.

மாளாகத் தனது இறுதிநாள் வரையிலும் நூலகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த நாட்களிலும், நாள்தோறும் ஒருதடவையாவது நூலகத்திற்கு வர அவர் தவறியதில்லை. 1896 செப்டம்பர் 18-இல் காலமாகும் வரை அவர் அறப்பணிக் குழுவின் தலைவராக இருந்தார்.

கார்னீகி உதவி

பிராட் நூலகத் திறப்பு விழா நடந்த 4 ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்காவின் புகழ்பெற்ற எஃகுத் தொழிலதிபரும், நூலக இயக்கப் புரவலர்களில் ஒருவருமான ஆண்ட்ரூ கார்னீகி (Andrew Carnegie) பிராட்டின் அழைப்பின் பேரில் புதிய நூலகத்தைப் பார்ப்பதற்கு வருகை புரிந்தார். அப்போது இருபெரும் வள்ளல்களும், அமெரிக்கப் பொது நூலகத்தின் எதிர்காலம் பற்றி விவாதித்தார்கள். பிராட்டின் பணி கார்னீகியைப் பெரிதும் கவர்ந்தது. அமெரிக்காவின் நூலக இயக்கத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு கார்னீகி ஈடுபடுவதற்கும், நூலகங்களுக்காகப் பெருந்தொகைகளை வழங்குவதற்கும் இந்தச் சந்திப்புத்தான் தூண்டுகோலாக இருந்தது. பிற்காலத்தில், நூலகங்களுக்குத் தாம் அளித்த உதவிகள் பற்றிக் குறிப்பிடுகையில், "இந்த வகையில் ஈனக் பிராட்தான் எனக்கு வழிகாட்டி" என்று கார்னீகி கூறினார்.

பிராட்—கார்னீகி சந்திப்பு நடந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு, 1906-இல் ஈனக் பிராட் இலவச நூலகத்திற்குக் கார்னீகி 5,00,000 டாலர் நன்கொடை வழங்கினார். நூலகத்திற்கு நகரத்தில் மேலும் பல கிளைகள் நிறுவுவதற்கு மனைகள் வாங்க நிதி வழங்கினார். கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆகும் செலவில் 10 சதவிகிதத்தை அவரே ஏற்றுக்கொண்டார். நூலகத்தை நிருவகிப்பதற்கு ஆண்டுதோறும் தேவைப்படும் செலவுத் தொகையையும் கொடுத்தார். இவரது நன்கொடைகள் மூலம் 15 நூலகங்களை நிறுவ

முடிந்தது. 1908-க்கும் 1923-க்குமிடைப்பட்ட ஆண்டுகளில் இந்நூலகங்கள் நிறுவப்பட்டன.

பொற்காலம்

1886-இல், பிராட் நூலகம் இயங்கத் தொடங்கிய முதலாண்டிலேயே பால்டிமோர் நகரவாசிகளில் 26,000 பேர், 4,00,000 நூல்களை வாங்கிப் படித்தார்கள். அவ்வாண்டில், நூலகத்தில் 45,000 நூல்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. பெயர் பெற்ற மருத்துவரும், அறிஞரும், கல்வியாளருமான டாக்டர். லெவிஸ் ஹென்றி ஸ்டெய்னர் (Lewis Henry Steiner) நூலகத்தின் முதலாவது நூலகராகப் பணியாற்றினார். அவரும், அவரது உதவியாளரான சார்லஸ் ஈவான்ஸ் (Charles Evans) என்பவரும்தான், ஒரே ஆண்டில் இவ்வளவு நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணமாக இருந்தார்கள். "இவ்வளவு நூல்களையும், நாங்கள் கண்ணை மூடிக்கொண்டு வாங்கிவிடவில்லை. ஒவ்வொரு நூலையும் நன்கு படித்து, அதன் தராதரத்தை ஆராய்ந்து, வாசகர்களுக்கு அது பயன்படும் என்று திட்டமாக முடிவு செய்த பிறகுதான் நூல்களை வாங்கினோம்" என்று ஸ்டெய்னர் கூறியிருக்கிறார். நூல் சேகரிப்பில் ஸ்டெய்னர் தனிக்கவனம் செலுத்தினார். மற்ற நூலகர்களுடன் கலந்தாலோசித்து, அவர்கள் கூறிய நல்ல கருத்துக்களின்படி அவர் செய்த மதிநுட்பமான மாறுதல்கள் நூலக நிருவாகம் வெற்றிகரமாக நடைபெறுவதற்குக் காரணமாக இருந்தன.

1892-இல் டாக்டர். ஸ்டெய்னர் காலமானார். அவருக்குப் பிறகு, அவரது மகன் டாக்டர். பெர்னார்டு கிறிஸ்டியன் ஸ்டெய்னர் என்ற 25 வயது இளைஞர் பிராட் நூலகத்தின் நூலகரானார். அவரது நிருவாகத்தில், பல புதிய சேவைப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. குழந்தை இலக்கியங்களையும், கல்வி, தொழில் நுட்பம், நுண்கலை பற்றிய நூல்களையும் அவர் ஏராளமாக வாங்கிச் சேர்த்தார். அமெரிக்க

வரலாறு பற்றிய நூல்களையும், தற்கால அயல் நாட்டு மொழி நூல்களையும் வாங்குவதில் அவர் தனிக்கவனம் செலுத்தினர். நூலகக் கட்டிடத்தை விரிவுப்படுத்துவதிலும் அவர் முக்கியமாக அக்கறை காட்டினர். அவரது காலத்தில் கிளை நூலகங்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்தது. 1926-இல் இவரது அகால மரணத்தினல், நூலகத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட ஓர் அரிய தொண்டரைப் பிராட் நூலகம் திடீரென இழந்தது. தந்தை—தனயன் இருவரும் பிராட் நூலகத்தில் சேவை செய்த காலத்தை இந்நூலகத்தின் "பொற்காலம்" எனலாம்.

## புதிய கட்டிடம்

மத்திய நூலகத்திற்கு இணைப்புக் கட்டிடம் ஒன்றைக் கட்டவேண்டும் என 1913-இலேயே டாக்டர். ஸ்டெய்னர் எண்ணினர். ஆனல், நிதிவசதிக் குறைவால் அவரது எண்ணம் ஈடேறவில்லை. அவருக்குப் பிறகு நூலகராகப் பதவி பெற்ற ஜோசப் எல். வீலர் (Joseph L. Wheeler), ஸ்டெய்னரின் திட்டத்தைச் செயலாக்குவதில் முனைந்தார்.

1926-இல் வீலர் பதவிக்கு வந்த உடனேயே இந்நூலகத்தின் சேவையில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கினர். வாசகர்கள், நூல்களை நேரடியாக எடுக்கும் வசதியை முதலில் இவர்தான் ஏற்படுத்தினர். இதற்காக வாசகர்கள் அதிகமாக விரும்பிக் கேட்கும் சுமார் 7000 நூல்களை வாங்கி மத்தியக் கட்டிடத்தில் தனி அலமாரிகளில் வைத்தார். இந்த அலமாரிகளுக்கு வாசகர்களே சென்று நூல்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் அனுமதித்தார். குழந்தைகளுக்கான நூல்களைக் கையாளவும், வழங்கவும், அவர்களுக்குக் ஆய்வு உதவி நூல்கள் எடுத்துக் கொடுத்து உதவவும் அதற்கென பயிற்சிபெற்ற அலுவலர்களை வீலர்தான் முதன் முதலில் வேலைக்கு அமர்த்தினர்.

மத்திய நூலகத்தின் ஒருபகுதி, ஆரம்பத்தில் மல்பெரி வீதியில் கட்டப்பட்ட கட்டிடத்திலேயே இயங்கி வந்தது. மற்றப் பகுதிகள் இடவசதிக் குறைவால், வேறு வீதியிலிருந்த 3 வீடுகளில் இருந்தன. மத்திய நூலகத்திற்கு இணைப்புக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதைவிட, புதிய மத்திய நூலகக் கட்டிடம் ஒன்றையே கட்டிவிடலாமென வீலர் கருதினர். 1927-இல் இதற்கான திட்டம் ஒன்றை அறப்பணிக் குழுவின் ஒப்புதலுடன், நகராட்சித் தலைவருக்கு அனுப்பினர். இத்திட்டத்தை நகராட்சி மன்றம் ஏற்றுக்கொண்டு, காதட்ரல் வீதியில் 400 பகுதிகள் கொண்ட புதிய மத்திய நூலகக் கட்டிடத்தைக் கட்ட மனை ஒதுக்கியதுடன், கட்டுமானத்திற்கென 30,00,000 டாலரும் ஒதுக்கியது. புதிய கட்டிடத்திற்கான திட்டத்தை வகுக்கவும், வடிவமைப்பைத் தயாரிக்கவும் ஐந்தாண்டுகள் பிடித்தன. இறுதியில், 1930 டிசம்பரில் ஒதுக்கிய மனையிலிருந்த பழைய கட்டிடங்களை இடித்து விட்டு, புதிய கட்டிடம் எழுப்பப்பட்டது 1933 சனவரியில் புதிய மத்திய நூலகக் கட்டிடம் திறக்கப்பட்டது.

## சீர்திருத்தம்

புதிய கட்டிடத்தில் மத்திய நூலகம் அமைந்ததும், நூல்களின் அமைப்பிலும், நூல்களை வரிசைப்படுத்தி அடுக்குவதிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. ஒரே பொருள் தொடர்பான வழங்கு நூல்கள், ஆய்வுஉதவி நூல்கள், பருவ வெளியீடுகள், பதிவேடுகள், துண்டு வெளியீடுகள் அனைத்தும் ஒரே பிரிவில் இடம் பெற்றன. இவைகளைத் தேடி எடுப்பதில் வாசகர்களுக்கு உதவ உதவியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இப்பிரிவின் சில பகுதிகளில் வாசகர்களே நேரில் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆறு பொருள் பிரிவுகள் (Subject Departments) ஏற்படுத்தப்பட்டன. கதைகள், மற்றும் கற்பனை நூல்களுக்

கெனத் தனி நூலகம் அமைந்தது. பொது ஆய்வு உதவிப் பகுதியும் (General Reference Department) அமைக்கப் பட்டது. நுண்கலை, மேரிலாந்து பிரிவுகள் இரண்டாவது மாடியில் இடம் பெற்றன. நிருவாக அலுவலகங்களும், பொது மக்கள் தொடர்பில்லாத மற்ற அலுவலகங்களும் இரண்டாம் மாடியிலேயே அமைந்தன. குழந்தைகள் படிப்பறையும், நாளிதழ் படிப்பறையும் தரைப்பகுதியில் தனித் தனியாக ஏற்படுத்தப்பட்டன.

தாராளமான இடவசதியும் அழகிய தோற்றமும் கொண்டதாக மத்திய நூலகம் அமைய வேண்டும் என விலர் கனவு கண்டார். அவரது கனவை எழுத்துக்கு எழுத்து நனவாக்கும் வகையில் புதிய மத்தியக் கட்டிடம் அமைந்தது. இதைக் கட்டி முடிக்க மொத்தம் 22,50,000 டாலர் செலவாயிற்று. இந்த நூலகக் கட்டிடத்தை முன் மாதிரியாகக் கொண்டே, அமெரிக்காவின் பிற பகுதிகளில் நூலகக் கட்டிடங்கள் உருவாக்கப்பட்டன. இதிலிருந்து இக்கட்டிடத்தின் சிறப்பினை அறியலாம்.

பிராட் நூலகத்தின் மத்தியக் கட்டிடத்தில் அவ்வப் போது சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. 1959-60-இல் கட்டிடத்தின் விளக்குகள் புதுப்பிக்கப்பட்டன. வண்ணப் பூச்சும் மாற்றப்பட்டது. 1954-இல் குளிர்சாதனக் கருவி, பொறுத்தப்பட்டது. 1949-இல் திரைப்படப் பிரிவும், 1958-இல் இசைத் தட்டுப் பிரிவும் ஏற்படுத்தப்பட்டன.

### நிருவாகத்திறமை

எந்த ஒரு சேவையும் திறமையாக நடைபெறுவதற்கு அதில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் தேர்வும், அவர்களின் பயிற்சியும், அவர்களின் உற்சாகமான உழைப்பும் அடிப் படையாக அமைந்திருக்கின்றன. ஒரு நூலகத்தின் நிருவா கம் எவ்விதம் திறமையாக இயங்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக பிராட் நூலக நிருவாகம் விளங்கு கிறது. இந்நூலகத்தின் திட்டங்களை வகுப்பதிலும், செய

லாக்குவதிலும், பொதுச் செயல்முறைகளிலும் நூலக அலுவலர்கள் காட்டும் ஈடுபாடும், திறமையும் இந்நூலகத்திற்கு இப்பெருமையைத் தேடித் தந்திருக்கின்றன.

நூல்களை வழங்குவதிலும், நூலகம் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதிலும் நூலக அலுவலர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்கும் முறையை முதன் முதலாக வீலர் கையாண்டார். 1928-இல் இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களுக்குத் தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சி வகுப்புகள் 18 ஆண்டுகள் நடந்து வந்தன. இதன் மூலம் நூலக அலுவலர்களில் நல்ல தேர்ச்சியும், ஆர்வமும் வாய்ந்த ஏராளமான அலுவலர்கள் இந்நூலகத்திற்குக் கிடைத்தார்கள். நாட்டின் பல பகுதிகளில் நூலகர் பயிற்சிக் கல்லூரிகளும், பள்ளிகளும் ஏற்படும் வரை இந்நூலகம் தனது அலுவலர்களுக்குத் தானே பயிற்சி வகுப்புகளை நடத்தி வந்தது. பிறகு இவ்வகுப்புகள் நிறுத்தப்பட்டன. அதன்பின், நூலகவியலில் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே, இங்கு நூலகர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

### அலுவலர் பயிற்சி

நூலகர் பயிற்சிப் பள்ளிகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகள், பிராட் நூலகத்தில் வேலை பெறுவதற்குப் போட்டி போட்டுக்கொண்டு முன் வந்தார்கள். இதற்கு இங்குள்ள சிறந்த பயிற்சி வசதியே காரணம். நூலக வேலையில் இங்கு சிறந்த முறையில் அனுபவம் பெறுவதன் மூலம், பலருக்கு உயர்ந்த பதவிகள் எளிதிலும் விரைவிலும் கிடைத்தன.

இரண்டாம் உலகப் போரின்போது பொதுவாக அமெரிக்கா முழுவதிலுமே நூலகர் பற்றுக்குறை நிலவியது. பிராட் நூலகமும் இதனால் பாதிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் சில பட்டதாரிகளைத் தொழில் புகுமுக அலு

வலர்கள்" (Pre-professionals) என நியமித்து, குழந்தைகள் பிரிவில் அவர்கள் வேலை பார்க்க அனுப்பப்பட்டார்கள். இந்த வேலையின் மூலம் அவர்களுக்கு நூலகத் தொழில் நேரடி அனுபவம் பெற்றார்கள். இந்த நேரடி அனுபவத் தோடு அவர்கள் நூலகப் பள்ளியில் சேர்ந்து எளிதாகப் பட்டம் பெற முடிந்தது.

பிராட் நூலகத்தில் இப்பொழுது மொத்தம் 500 அலு வலர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 200 பேர் நூலகர் தொழில் பயிற்சி பெற்றவர்கள். மற்ற 300 பேரும் நூலகர் அல்லாத (Non-professionals) அலுவலர்கள். இவர் களுடைய அரிய தொண்டும் பிராட் நூலகத்தின் சிறப் பான சேவைக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. நூலகர் அல்லாத அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பது, பயிற்சிபெற்ற நூலகர்களைத் தேர்ந்தெடுப்பதுபோல், அவ்வளவு கடின மல்ல என்றாலும், உள்ளூரிலுள்ள தொழில், வாணிக நிறுவ னங்களில் கிடைக்கும் அதிகச் சம்பளங்கள் அவர்களைக் கவர்வதால், இந்த அலுவலர்கள் நூலகத்திற்குக் கிடைப் பதும் சற்றுக் கடினமாகவே இருக்கிறது.

## சேவைகள் பெருக்கம்

பிராட் நூலகத்திற்குப் புதிய மத்தியக் கட்டிடம் கட்டிய பிறகு அதன் சேவைகள் அளவிறந்த முறையில் பல்கிப் பெருகின. எனினும் நாட்டில் பொதுவாக ஏற் பட்ட பொருளாதார வீழ்ச்சி, இந்நூலகத்தின் புதிய கிளை களைத் திறப்பதற்குத் தடங்கலாக இருந்தது. பொருளா தார வீழ்ச்சியைத் தொடர்ந்து இரண்டாம் உலகப்போரும் மூண்டது. சுமார் 19 ஆண்டுக்காலம் இந்நூலகத்தின் நூலகராகப் பணியாற்றி ஆக்கபூர்வமான பல அரிய முயற்சிகளை மேற்கொண்டு பெருந்தொண்டாற்றிய வீலர் 1945-இல் உயிர் நீத்தார். அவருக்குப் பின்னர் எமர்சன் கிரீன்வே (Emerson Greenaway) என்பவர் நூலகத்தின் இயக்குநர் (Director) ஆனார். அவர் பதவியேற்ற உடனேயே

நூலகத்தின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் தீவிரமாக முனைந்தார். கிளை நூலக வளர்ச்சிக்கான நீண்ட காலத்திட்டம் ஒன்றை வகுத்தார். கிளை நூலகக்கட்டிடங்களில் பல மோசமான இடங்களில் அமைந்திருந்தன. அவை பழையனவாகவும், நெருக்கடி மிக்கதாகவும், பழுதடைந்தனவாகவும் இருந்தன. இந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்கும் நோக்கத்துடன், கிளை நூலக வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டது. புதிய கட்டிடங்களுக்காகவும், நூலகச் சாதனங்களுக்காகவும் மூன்று தவணைகளில் (1947, 1952, 1956) 45,00,000 டாலரை பால்டிமோர் நகராட்சி மன்றம் கடனாக வழங்கியது. 6 புதிய கிளை நூலகங்கள் கட்டவும், மூன்று பழைய நூலகங்களைப் புதிப்பிக்கவும், மத்தியக் கட்டிடத்திலும் கிளை நூலகங்களிலும் குளிர் சாதனம் (Air-condition) அமைக்கவும் தனியாக நிதி ஒதுக்கப்பட்டது. ஊர்தி நூலகங்களுக்காக (Book-mobiles) இரண்டு ஊர்திகள் வாங்கப்பட்டன. கடன் தொகையைக் கொண்டு மேலும் இரு புதிய கிளைகள் திறக்கப்பட்டன.

இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் கிளை நூலக அமைப்பு (Branch Library system) மிகச் சீரிய முறையில் அமைந்தது. கட்டிடங்கள் கவர்ச்சியாகவும், காற்று, வெளிச்சம் வசதியாக உள்ளனவாகவும் மாறின. இங்கு வந்து படிப்பதற்கு ஆவலைத் தூண்டும் வகையில் கட்டிட அமைப்பும், தளவாடங்களும் மாற்றப்பட்டன. சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லா வயதினரும் தங்கள் விருப்பப்படி பொழுது போக்குவதற்கு ஏற்ற வகையில் நூலகத்தில் பல்வேறு வகைப் பொழுதுபோக்கு நூல்களும், இன்ன பிற சாதனங்களும் ஏராளமாக வாங்கிச் சேர்க்கப்பட்டன. இதனால் இந்நூலகத்திற்கு வந்து போவோரின் எண்ணிக்கைப் பன்மடங்காகப் பெருகியது.

மத்திய நூலகத்திற்கோ, மற்றக் கிளைகளுக்கோ நேரடியாக வரமுடியாதவர்கள், நகரின் பல பகுதிகளில்

வெகு தூரத்தில் இருப்பவர்களும் கூட இந்நூலகத்தின் மூலம் முழுப்பலன் பெற்று வந்தார்கள். இதில் ஊர்தி நூலகங்களின் பணியைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். நூலக வசதிகள் இல்லாத இடங்களுக்கு நூல்களைக் கொண்டு செல்வதற்காக, பல அடுக்கு இணைப்பு ஊர்திகள் (Tractor trailer bookmobiles) இரண்டு 1949-50-இல் வாங்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும், 4000 நூல்களை ஏற்றிச் செல்லக் கூடியவை.

பிலடெல்பியா இலவச நூலகத்தின் இயக்குநர் பதவியை ஏற்பதற்காக, 1951-இல் பிராட் நூலக இயக்குநர் பதவியிலிருந்து கிரீன்வே விலகிக் கொண்டார். அவரது ஆறாண்டுப் பதவிக் காலத்தில், நூலகத்தின் நிருவாகம் மிகச் சிறந்த முறையில் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. முக்கியமாக கிளை நூலக அமைப்புப் புத்துயிர் பெற்று நூலகத்தின் முக்கிய அங்கமாக உருவாகியது.

## பொதுப்பணிகளில் பங்கு

பிராட் நூலகத்தின் துணை இயக்குநராக இருந்த குமாரி அமி வின்ஸ்லோ (Amy Winslow). கிரீன்வேக்குப் பதிலாக 1951 அக்டோபர் 1-இல் இயக்குநராக நியமிக்கப்பட்டார். கிளை நூலக வளர்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் அவர் கவனம் செலுத்தினார். அத்துடன் சமுதாய நடவடிக்கைகளில் நூலகமும் முக்கியப் பங்கு கொள்ளும் வகையில் நூலகத்தின் பொதுப்பணிகளை அவர் சீர்திருத்தி அமைத்தார்.

1957-இல் குமாரி வின்ஸ்லோ ஓய்வு பெற்றதும் ஆர்தர் எச். பார்சன்ஸ் (Arthur H. Parsons Jr.,) இயக்குநரானார். அவரது பதவிக்காலத்தில் இந்நூலகம், மாநில ஆதாரச் செம்மைப்பு நிலையமாக (State Resource Centre) மாறியது. இந்நூலகத்தின் சில குறிப்பிட்ட சேவைகளை, மேரிலாந்து மக்கள், அவர்களின் வட்ட நூலகங்கள் (County Libraries)

மூலம் பெறுவதற்கு வகைசெய்யும் ஒப்பந்தம் ஒன்று 1960 ஜுலை 1-இல் கையெழுத்தாகியது.

நூலகத்தின் பலன்கள் அனைத்தையும் பால்டிமோர் மக்கள் அனைவரும் தங்கு தடையின்றி முழு அளவில் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே பிராட் நூலகம் இயங்கி வருகிறது. நூலகத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் இந்த நோக்கம் நிறைவேறுவதையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பள்ளியில் அல்லது கல்லூரியில் படித்து முடித்த பின்னர் ஒவ்வொருவரும் தங்களுடைய கல்வித்திறனை மேலும் வளர்த்துக் கொள்ளும் வகையில் அமெரிக்கக் கல்வி முறை அமைந்திருக்கிறது. இந்த முறை இன்று உன்னத வெற்றி பெற்றிருக்கிறது என்றால் அதற்கு இந்நாட்டிலுள்ள நூலகங்களின் சிறப்பான பணியே காரணம். மக்களுக்குப் புதுப்புது அறிவுலகத்தைக் காட்டும் மகத்தான பணியில் பிராட் நூலகம் முன்னணியில் நிற்கிறது.

1886-இல் பிராட் நூலகம் ஆரம்பிக்கப் பட்டபோது, அதில் 45,000 நூல்களே இருந்தன. அங்கு பணியாற்றிய அலுவலர்கள் 40 பேர்தான். ஆனால் இன்றோ இங்கு 15,00,000-க்கும் அதிகமான நூல்களிருக்கின்றன. 500-க்கு மேற்பட்ட அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். நூலகத்தின் சேகரிப்புகளில் அச்சடித்த நூல்கள் மட்டுமின்றி, பல்லாயிரக்கணக்கான ஒலிப்பதிவுகள், இசைத்தட்டுகள், நுண் சுருள்கள், நுண் அச்சுக்கள், படங்கள், நாட்டுப் படங்கள், ஓவியங்கள் ஆகியவையும் நூலகத்தின் முக்கிய சொத்துக்களாக உள்ளன. நூலகத்தின் இந்தச் சேகரிப்புகள், தேவையான தகவலறியவும், ஆராய்ச்சிகள் நடத்தவும் உதவுவதோடன்றி, எல்லாவயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் அறிவுப் பசியைத் தூண்டி, படிக்கும் ஆர்வத்தை மூட்டி சிந்தனையைப் பெருக்கவும் வழி செய்கின்றன. குழந்தைகளுக்காக இந்நூலகம் செய்துவரும் சேவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. பள்ளிக்குச் செல்லும் வயது வராத

குழந்தைகள் கூட இந்நூலகத்திற்கு வந்து தாங்கள் விரும்பும் நூல்களைப் பார்த்தும், காட்சிப் பொருள்களைக் கண்டும் பொழுது போக்குகின்றனர். படிக்கத் தெரியாத குழந்தைகளுக்கு, கதைகள் கூறவும், நூல்களைப் பகுத்துக் காட்டவும் தனி அலுவலர்கள் உள்ளார்கள். இதைக் கேட்பதற்குக் குழந்தைகள் ஆர்வத்துடன் வருகிறார்கள். இதன்மூலம் சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு ஆர்வம் பிறக்கிறது. பள்ளிக்குச் செல்லும் முன்பே கல்வி பெறுவதற்கு ஏற்ற வகையில் அவர்களின் மனம் பக்குவமடைகிறது.

## குழந்தைகளுக்கு அரிய பணி

பள்ளிக் குழந்தைகளுக்கு நூல்களை வாசித்துக் காட்டவும் தனி அலுவலர்கள் இருக்கிறார்கள். இதன் பலனைக் குழந்தைகளுக்கு நூலறிவு பெருகிறது. பாடநூல்கள் தவிர, வேறுபல நூல்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. பள்ளிகளில் நூல்களைப் பற்றி நடக்கும் விவாதங்களில் கலந்து கொள்ள அவர்களுக்கு ஆர்வம் ஏற்படுகிறது.

பெரியவர்களுக்கு நூல்களை வழங்குவதுடன் பிராட் நூலகம் நின்று விடவில்லை. அன்றாட அரசியல், சமூக நிலைமைகள், பல்வேறு துறைகளிலும் எழும் புதிய சிக்கல்கள் இவைகளை நகரமக்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ளும்படிச் செய்யும் மகத்தான பணியையும் இந்நூலகம் மேற்கொண்டிருக்கிறது. நல்ல நூல்களைப் பற்றிய விவரங்களையும், அவற்றின் பலன்களையும் சிறு நூல்களாக எழுதி நகரவாசிகளுக்கு பிராட் நூலகம் வழங்கிவருகிறது. நூலகத்தின் பணிகள் பற்றிய நூல்களையும் அவ்வப்போது வெளியிடுகிறது.

## நிதி வசதி

பிராட் நூலகத்தைப் பேணுவதற்கு, பால்டிமோர் நகரப் பொது நிதியிலிருந்து ஆண்டுதோறும் நிதி ஒதுக்கப்

படுகிறது. ஈனுக் பிராட் அறநிதியிலிருந்து ஆண்டுதோறும் 50 000 டாலர் அளவுக்கு வருமானம் கிடைக்கிறது. மேரிலாந்து மாநிலத்தின் அரசாங்கத்திடமிருந்தும் பிராட் நூலகம் ஓரளவு பணம் பெறுகிறது. இந்நூலகத்திற்கென நிறுவப்பட்டுள்ள வேறு சில சிறுசிறு அறநிதிகளிலிருந்தும் குறிப்பிட்ட அளவுக்கு வருமானம் வருகிறது. இந்த வருமானம், நூலகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் பராமரிப்புக்கும் போதுமானதாகவே இருக்கிறது. அப்படி ஏதாவது பணப்பற்றாக் குறை ஏற்படுமாயின், நகராட்சி மன்றத்திடம் நூலகம் பணம் கோருகிறது. நகராட்சி மன்றம், இதற்கு மக்கள் ஒப்புதல் பெறுவதற்காக தனித் தேர்தல் நடத்துகிறது. நூலகத்தின் கோரிக்கையைப் பொதுமக்கள் பேராதரவுடன் ஏற்றுக்கொள்கின்றனர். நூலகத்தின் நிதிக் கோரிக்கைக்காக இதுவரை நடந்த எந்தத் தேர்தலிலும், கோரிக்கை மறுக்கப்பட்டதில்லை. பிராட் நூலகம், பால்டிமோர் நகரமக்களுக்கு எந்த அளவுக்கு அரும்பணியாற்றி வருகிறது என்பதற்கும், இந்நூலகத்தின் மீது மக்கள் எவ்வளவு உயர்ந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள் என்பதற்கு இதுவே தக்க சான்று.

### 3. ஹார்வடு பல்கலைக் கழக நூலகம்

அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழக நூலகங்களிலெல்லாம் மிகப் பெரியது ஹார்வர்டு பல்கலைக்கழக நூலகமாகும். ஹார்வர்டுக் கல்லூரி நூலகம், பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாகவே இயங்கி வருகிறது.

நூலகம் என்பது ஒரு கல்வி நிறுவனத்தின் இன்றியமையாத ஓர் உறுப்பு; ஏன், இருதயம் என்றே சொல்லலாம். ஏனெனில், கல்வி நிறுவனத்தின் வலிவும், திறமையும், ஆக்கப் பணித்திறனும், இடையறாத வளர்ச்சியும் அதன் நூலகத்தையே பொறுத்திருக்கிறது. நூலகம், மாபெரும் அறிவுக் களஞ்சியம். முற்போக்கான மாறுதல்களுக்கு நூல

கம் தடங்கலாக இருப்பதில்லை. மாறாக, ஒரு பல்கலைக்கழகம் கால மாறுதலுக்கு ஏற்ப முன்னேற்றப் பாதையில் சென்று, புதிய குறிக்கோள்களை அடைவதற்கு நூலகம் உறுதுணையாக இருக்கிறது. ஒரு கல்வி நிறுவனத்தின் கல்வித் தரம் எந்த அளவுக்கு உயர்வாக இருக்கிறது என்பதை அந் நிறுவனத்திலுள்ள நூலகத்தின் தரத்தைக் கொண்டு மதிப்பிடலாம். இவ்விதமாக, முழு அறிவு வளர்ச்சிக்கு வலுவான நூலகங்கள் இன்றியாது தேவை என்பதை எல்லோரும் உணர்ந்துள்ளனர். இதை ஹார்வர்டு பல்கலைக்கழக நிருவாகிகள் முழுதும் உணர்ந்த காரணத்தினால், நூலகத்தை வலுப்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்தினார்கள். அவர்களது அயராத உழைப்பின் சின்னமாக இன்று ஹார்வர்டு பல்கலைக் கழகம் விளங்குகிறது.

## ஹார்வர்டு கல்லூரி நூலகம்

ஹார்வர்டு பல்கலைக் கழக நூலகத்தின் பேருறுப்பாக ஹார்வர்டு கல்லூரி நூலகம் இருந்து வருகிறது. உண்மையில் கல்லூரியின் கலை, விஞ்ஞானத் துறைகளின் தனித்தனி நூலகங்களும் அவை தனித்தனியே சேகரித்த நூல்களும் அடங்கியதுதான் இந்தக் கல்லூரி நூலகமாகும். மூன்று பெரிய தலைமைக் கட்டிடங்களிலும், மற்றும் பல தனிக் கட்டிடங்களிலும் உள்ள நூல்களும் கல்லூரி நூலகத்தைச் சேர்ந்தவையே.

கல்லூரி நூலகத்தின் தலைமையான சேகரிப்புகள், வைடனர் (*Widener*) ஹௌட்டன் (*Houghton*), லெமாண்ட் ஆகிய மூன்று பெரிய கட்டிடங்களில் உள்ளன. இவை பல்கலைககழக நூலகத்தின் ஒரு பிரிவாக விளங்குகின்றன.

கலை, விஞ்ஞானத் துறைகளைச் சேர்ந்த சுமார் 24 நூலகங்களும், பட்டதாரித் தொழிற் பள்ளிகளைச் சேர்ந்த 12 நூலகங்களும், மற்றும் சிறப்பு ஆராய்ச்சிக் கூடங்களைச் சேர்ந்த 10 நூலகங்களும் ஒரு பிரிவாகும்.

தலைமைச் சேகரிப்பில் மானிட இயல், சமூக விஞ்ஞானங்கள், ஆகியவை பற்றிய நூல்கள் முக்கியமாக இடம் பெற்றுள்ளன. பல்கலைக்கழகத்தின் மற்ற நூலகங்களுக்கு துணையாக இருக்கும் வரலாற்று நூல்களும், துணை நூல்களும் இந்தச் சேகரிப்பில் உள்ளன ஆனால் மற்ற நூலகங்களில் இருக்கும் நூல்கள் இச்சேகரிப்பில் இரா.

வைடனர் கட்டிடம்தான், ஹார்வர்டு பல்கலைக்கழக நூலகத்தின தலைமைக் கட்டிடமாகும் ஆராய்ச்சித் தலைமை நிலையமும் இதுதான். அரிய நூல்கள், எழுத்துச் சான்றுகள் இவற்றின் இருப்பிடம் ஹௌட்டன் கட்டிடம். ஹார்வர்டு கல்லூரியில் பட்டப் படிப்புக்குப் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான துணை நூல்கள் எல்லாம் லெமாண்ட் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று கட்டிடங்களிலும் வந்து மாணவர்கள் படிப்பதற்கான நேரங்கள் தனித்தனியே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. பல்கலைக்கழகத்தில் படிக்காத வெளியார்கள், தனி அனுமதி பெற்று வைடனர், ஹௌட்டன் கட்டிடங்களிலுள்ள நூலகங்களுக்குச் சென்று படிக்கலாம். பொதுவாக வெளியாரில் உயர்நிலை ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை உண்டு. சில சமயங்களில் வைடனர் நூலகத்திற்குச் செல்லும் வெளியாரிடம் தனிக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

வைடனர், ஹௌட்டன் இரு கட்டிடங்களிலும் காட்சிப் பொருள்கள் தனியாக வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு பொது மக்கள் தடையின்றித் தாராளமாக அனுமதிக்கப்படுகிறார்கள்.

### நூலக நூற்பட்டிகள்

ஹார்வர்டு பல்கலைக்கழக நூலகத்தில், தேவையான நூலைக் கண்டு பிடிப்பதற்குச் சற்று அதிகமான பழக்கம் தேவை. வேண்டிய நூலை மகலில் அதற்குரிய அட்டை நூலக நூற்பட்டியில் (*Card Catalogue*) பார்க்க வேண்டும்.

இந்த நூற்பட்டியில், அந்த நூல் இல்லையென்றால், அது ஏதாவது ஒரு சிறப்புத் துறை நூலகத்தில் இருக்கலாம்; அல்லது தனியாகக் கையாள்வதற்காக வைக்கப்பட்டிருக்கலாம். அது பற்றிய விவரங்களை ஆய்வு உதவி நூலகர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

நூற்பட்டி அட்டைகள் ஆசிரியர்கள் பெயர் வரிசைப்படி தயாரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஆசிரியர் பெயரைச் சொல்லியே குறிப்பிட்ட நூலைக் கேட்க வேண்டும். பருவ இதழ்களுக்கான அட்டைகள் தலைப்புப் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலும் எல்லா மொழிகளின் நூல்களும் நூற்பட்டிகளில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரே நூலின் பல பதிப்புகள் வெளியிடப்பட்டிருக்குமானால், காலவரிசைப்படி நூற்பட்டி அட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. கடைசிப் பதிப்பு வேண்டுவோர் கடைசி அட்டையைப் பார்க்க வேண்டும்.

ஒன்றிப்பு நூலக நூற்பட்டி (*Union Catalogue*), வைடனர் கட்டிடத்தின் முதல் மாடியிலிருக்கிறது. இதில் பல்கலைக்கழகத்தின் நூலகங்களிலுள்ள எல்லா நூல்களும், துண்டு வெளியீடுகளும் இடம் பெற்றிருக்கின்றன. இக்கட்டிடத்தின் இரண்டாவது மாடியிலுள்ள இந்நூலகப் பொது நூலக நூற்பட்டியில் (*Public Catalogue*) கல்லூரி நூலக நூல்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆய்வு உதவிப் பகுதியில் (*Reference Section*) நாளிதழ்களுக்கு (*Newspapers*) தனியாக நூலக நூற்பட்டி உள்ளது. ஆனால், ஒரு நாளிதழ் நிறுவனம் வெளியிட்ட அல்லது நாளிதழ்களைப் பற்றிய நூல்கள் பொது நூற்பட்டிகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஹார்வர்டு பல்கலைக் கழக ஆவண (*Archives*) நூற்பட்டி, தியோடார் ரூஸ்வெல்ட் நூற்பட்டி, கிரீனவ் ஆங்கிலப் புதின நூற்பட்டி ஆகியவை போன்ற வேறு சில சிறப்பு

நூலக நூற்பட்டிகளும் உள்ளன. இவை இக்குறிப்பிட்ட துறைகளில் நூல்களை எடுக்க உதவுகின்றன.

### நூல் வழங்கல்

வைடனர் கட்டிடத்திலுள்ள நூல்களை வாசகர்கள் ஒரு மாத காலத்திற்குக் கடனாக வாங்கிக் கொள்ளலாம். ஒரு மாதம்வரை காலவரம்பை நீடிக்க வேண்டியதில்லை. எனினும், ஒரு நூலை பலர் ஒரே சமயத்தில் கேட்டால், அந்த நூலை 10 நாட்களில் திருப்பித் தரவேண்டுமென வாசகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குறிப்பிட்ட நூல் அலமாரியில் இருக்கிறதா அல்லது வாசகர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை நூல் வழங்கும் பிரிவினரிடமிருந்து தெரிந்து கொள்ளலாம். நூல் இருந்தால், கேட்ட கால்மணி நேரத்தில் அதை நூல் வழங்கும் பிரிவின் அலுவலர்கள் எடுத்து வந்து கேட்டவர்களுக்குக் கொடுக்கின்றனர். ஒரு நூல் வெளியில் செல்லாமல், அதன் குறிப்பிட்ட இடத்தில் இல்லாமலுமிருந்தால், அதுபற்றி நூல் வழங்கும் பிரிவினருக்கு வாசகர்கள் தெரிவிக்க வேண்டும். அலுவலர்கள் நூலைத் தேடி எடுத்துத் தருவார்கள். அல்லது தேடி எடுத்தபின் வாசகர்களுக்கு அஞ்சல் மூலம் தெரிவிப்பார்கள். வாசகர்கள் திருப்பிக் கொண்டு வந்து கொடுக்கும் நூல்களை வாங்குவதற்கெனத் தனிப் பிரிவு (*Book Return Desk*) இருக்கிறது. குறிப்பிட்ட நாளுக்குப் பிறகு திருப்பிக் கொடுக்கப்படும் நூல்களுக்கு அபராதம் வசூலிக்கப்படுகிறது.

பட்டம் பெற்ற மாணவர்கள், தனி அனுமதி அட்டை பெற்று நூல் அலமாரிகளுக்கு நேரடியாகச் சென்று நூல்களைத் தேர்ந்தெடுக்கலாம். பட்டத்திற்குப் படிக்கும் மாணவர்களுக்கும் சில சமயங்களில் இந்தச் சலுகை அளிக்கப்படுவதுண்டு. அதற்கு அவர்கள் தங்களின் பேராசிரியர் அல்லது பொறுப்பாசிரியரின் (*Tutor*) பரிந்துரைக் கடிதம் பெற்று வரவேண்டும். மூத்த (*Senior*) பேராசிரியர்கள்

அனுமதி அட்டையின்றி அலமாரிகளுக்குச் செல்லாம். ஆனால், இளம் *(Junior)* பேராசிரியர்கள் இந்த அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பட்டப் படிப்பு மாணவர்கள் உட்கார்ந்து படிக்கவும், குறிப்புகள் எடுக்கவும் அலமாரிகளின் அருகிலேயே மேசை நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. ஆராய்ச்சிப் பட்ட மாணவர்களுக்கு இங்கு படிக்க முதற் சலுகை யளிக்கப்படுகிறது.

ஆராய்ச்சிக்குப் பயன்படும் ஒரு குறிப்பிட்ட நூல், ஹார்வர்டு நூலகங்களில் இல்லாமலிருந்தால், அந்த நூலை கடைகளில் உடனடியாக வாங்க முடியாமலுமிருந்தால், மற்றொரு நூலகத்திடமிருந்து அந்த நூலை ஹார்வர்டு நூலகம் கடனாகப் பெற்று வாசகருக்கு வழங்குகிறது. அந்த நூல் எந்த நூலகத்திடமிருக்கிறது என்பதை காங்கிரஸ் நூலகத்திலுள்ள தேசிய ஒன்றிப்பு நூற்பட்டியிலிருந்து தெரிந்து கொள்கிறார்கள். ஒரு நூலைக் கடன் கொடுக்க முடியாத நிலையில் ஒரு நூலகம் இருக்குமானால், அந்த நூலின் புகைப்பட *(Photostat)* அல்லது நுண்சுருள் *(Microfilm)* பிரதி எடுக்க ஏற்பாடு செய்கிறார்கள்.

### ஆய்வு உதவி நூலகர்கள்

வைடனர் கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் உள்ள பெரிய படிப்பறையின் அருகில் தகவல் தெரிவிக்கும் ஆய்வு உதவி நூலகர்கள் *(Reference Librarians)* இருக்கிறார்கள். இவர்களிடம் நூலகப் பணிகள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்து கொள்ளலாம். நூல்கள், அட்டை நூற்பட்டிகள் ஆகியவை பற்றியும், மற்றும் நூலகம் குறித்துத் தேவையான தகவல்களையும் இவர்களிடமிருந்து வாசகர்கள் தெரிந்து கொள்ளலாம். வேறு சில தகவல்களை எங்கிருந்து பெறலாம் என்பதையும் இவர்கள் தெரிவிப்பார்கள். ஒரு குறிப்பிட்ட சிக்கல் தொடர்

பான தகவல்களை எந்த நூலிலிருந்து பெறலாம் என்பதை யும் அவர்கள் கூறுவார்கள்.

வைடனர் கட்டிடத்திலுள்ள தலைமைப் படிப்பறையில் ஆய்வு உதவி நூல்கள் உள்ளன. இவை பிரிவு பிரிவாகப் பகுத்து அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. படிப்பறையில் கிழக்குக்கோடியில் பொது நூல் விவரத் தொகுதியும், 'நியுயார்க் டைம்ஸ்' நாளிதழின் பொருட் பட்டியும், ஆராய்ச்சிக் கட்டுரைகளின் பட்டியலும் இருக்கின்றன. அதற்கு அடுத்தபடியாக கல்வி, வாழ்க்கை வரலாறு பற்றிய நூல்கள், பல்வேறு மொழிகளிலுள்ள பொதுக் கலைக் களஞ்சியங்கள், பல்வேறு மொழிகளிலுள்ள அகராதிகள் முதலியன பிரிவு பிரிவாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பொது ஆய்வு உதவி நூல்களுக்கு அடுத்தபடியாக, கலை, இலக்கியம், வரலாறு, பூகோளம், விஞ்ஞானம், சமயம், புள்ளிவிவரம், அரசியல் முதலான சிறப்புப் பொருள் வாரியாக நூல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வாசகர்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை எளிதாகவும், விரைவாகவும், அல்லது துல்லியமாகவும் தெரிந்து கொள்வதற்கும் உதவும் வகையில் ஆய்வு உதவி நூலகத்தில் எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

## அரசாங்க ஆவணக் காப்பிடம்

அமெரிக்க அரசாங்க ஆவணங்களின் (*Documents*) காப்பிடமாகவும் (*Depository*) ஹார்வர்டு நூலகம் பணியாற்றி வருகிறது. எனவே, அரசாங்கத்தின் எல்லாச் சான்றுகளும், பத்திரங்களும் இங்கு வருகின்றன. பாராளுமன்ற நடவடிக்கை அறிக்கைகள், பாராளுமன்ற ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகள், சட்டங்கள், மசோதாக்கள் அனைத்தின் படிகளும் இந்நூலகத்திற்கு வருகின்றன. இவை இந்நூலகத்தின் ஒரு பகுதியாக பொருள்வாரியாக வைக்கப்பட்டிருக்கின்றன. வாசகர்கள் இவற்றையும் குறிப்பெடுக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் அதிகார முறைப் பதிவுச் சான்றுகள் (*Official records*), வைடனர் கட்டிடத்தின் உச்சி மாடியிலுள்ள பல்கலைக் கழக ஆவணக் காப்பிடத்தில் (*University Archives*) வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பல்கலைக் கழகத்தின் வரலாறு பற்றிய சான்றுகளையும், இங்கு படித்த புகழ்பெற்ற தலைவர்கள், அறிஞர்கள் பற்றிய சான்றுகளையும் இங்கு வாசகர்கள் பெற்றுக் கொள்ளலாம்

பல்கலைக்கழக ஆவணங்களில் இடம் பெறாத பெரும்பாலான எழுத்துச் சான்றுகள் (*Manuscripts*) ஹௌட்டன் படிப்பறையில் அரிய நூல்கள் (*Rare Books*) பிரிவில் இடம் பெற்றிருக்கின்றன. வைடனர் கட்டிடத்திலிருக்கும் தலைமைப் படிப்பறையில் அண்மைக் கால பூகோளப்படங்களும் வரலாற்று நாட்டுப் படங்களும், மற்றும் சிறப்பு முறையிலான நாட்டுப் படங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

நுண்சுருள்கள் (*Microfilm*). நுண் அட்டைகள் (*Microcard*). நுண் அச்சுக்கள் (*Microprint*) முதலியன நுண்சான்றுப் படிப்பறையில் உள்ளன. நுண் எழுத்துக்களைப் படிப்பதற்கான கருவிகளும் இவ்வறையில் இருக்கின்றன.

### நாளிதழ்களுக்குத் தனியிடம்

இந்நூலகத்திலுள்ள நாளிதழ்கள் பற்றிய விவரங்கள் பொது நூற்பட்டிகளில் இடம் பெறவில்லை. நாளிதழ்களுக்கென தனி நூற்பட்டி உள்ளது. 1800-க்குப் பிறகு அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் வெளியாகிய நாளிதழ்கள் வைடனர் கட்டிட ஆய்வு உதவி நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன 1800-க்கு முந்திய நாளிதழ்கள் ஹௌட்டன் படிப்பறையில் உள்ளன. முக்கியமான பல நாளிதழ்களின் நுண்சுருள் பிரதிகள் நுண்சான்றுப் படிப்பறையிலிருக்கின்றன.

## அரிய நூல் பிரிவு

தொன்மையான நூல்களும், கிடைத்தற்கரிய நூல்களும், மதிப்பு வாய்ந்த நூல்களும் ஹௌட்டன் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூல்களை வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிப்பதில்லை. தேவையானால், இவற்றின் புகைப்பட அல்லது நுண்சுருள் நகல்களை வாங்கிக் கொள்ளலாம்.

லெமாண்ட் கட்டிடத்தின் ஐந்தாவது மாடியில் கவிதை அறை *(Poetry Room)*, உள்ளது. இங்கு கவிதை, கதை, நாட்டுப்பாடல் முதலியவற்றை வாசித்து ஒலிப் பதிவு செய்யப்பட்ட ஒலித் தட்டுக்களும், நாடா ஒலிப்பதிவு நாடாக்களும் இருக்கின்றன. இவற்றை வெளியே கொண்டு செல்ல முடியாது. இவற்றைப் போட்டுக் கேட்பதற்கான கருவிகளும் இங்கு உள்ளன.

## நிருவாகம்

பல்கலைக்கழக நூலகம் : ஹார்வர்டு பல்கலைக் கழகத்தினிடமுள்ள எல்லா நூல்களும் பல்கலைக்கழக நூலகத்தில் அடங்கும். பல்கலைக்கழக நூலகக்குழு, கலை—விஞ்ஞானத் துறை நூலகக்குழு என இரு குழுக்கள் இயங்குகின்றன. பல்கலைக்கழக நூலகத்தின் இயக்குநர் *(Director)*, தமது பதவியின் நியமித்தம் *(exo-fficio)* இவ்விரு குழுக்களின் தலைவராக இருக்கிறார். பல்கலைக்கழக நூலகர் பதவி நிமித்தம் இக்குழுக்களின் துணைத் தலைவராக உள்ளார் பல்கலைக் கழக நூலக அமைப்பின் *(University Library System)* கீழ் உள்ள எல்லா நூலகங்களுக்கும் தலைவரும் துணைத் தலைவரும் சென்று அவ்வப்போது நேரில் அவற்றின் செயல் முறைகளைக் கண்காணிக்கிறார்கள். ஒவ்வொரு நூலகத்தின் நூலகரும், ஆண்டுதோறும் பல்கலைக்கழக நூலக இயக்குநருக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

கல்லூரி நூலகம் : ஹார்வர்டு கல்லூரி நூலகத்தின் நூல்களையெல்லாம், பல்கலைக்கழகம் முழுமைக்குப் பயன்

படுத்தலாம். எனினும், உண்மையில் அது, கலை—விஞ்ஞானத் துறையின் நூலகமாகவே இருப்பதால், அதை அத்துறையின் துணைப் பிரிவாகவே கருதுகிறார்கள். உயர்தரப் படிப்புக்கும், ஆராய்ச்சிகளுக்கும் உதவும் சிறப்பு நூலகங்கள் நிருவாக காரியங்களுக்காக இந்த நூலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஹார்வர்டு கல்லூரி நூலகத்தின் தலைமை நிருவாக அதிகாரி, பல்கலைக்கழக நூலகரேயாவார். இவர் பல்கலைக்கழக நூலக இயக்குநர், கலை-விஞ்ஞானத் துறை நூலகக்குழு ஆகியோரின் ஒப்புதல் பெற்ற பின்னரே எந்தத் திட்டங்களையும் செயலாக்க வேண்டும்.

ஹார்வர்டு நூலக அமைப்பைப் பொறுத்தவரையில் அதிகாரங்கள் எல்லாம் பரவலாக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இவ்வமைப்பிலடங்கிய பல்வேறு நூலகங்களிடையே ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவது அவசியம். இந்தப் பணியைப் பல்கலைக்கழக நூலகக்குழு செய்கிறது.

## நூல் தேர்வு

நூல்களைத் தேர்ந்தெடுப்பதில் 62-க்கும் அதிகமான நூலகர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், நூலக அதிகாரிகளும் வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செல்லும் பொழுது ஆங்காங்கே கிடைக்கும் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து வாங்கும் முக்கியப் பணியையும் கவனிக்கிறார்கள்.

## எந்திரமயம்

நூலக அலுவல்கள் பல எந்திரமயமாக்கப்பட்டுள்ளது, இந்நூலகத்தில் காணப்படும் சிறப்பான அம்சமாகும். நூற்பட்டி அட்டைகளைத் தயாரிக்கவும், நூல்விவரத் தொகுதிகளின் பிரதிகள் எடுக்கவும் புகைப்பட, நுண்சுருள், நுண்ணெழுத்துப் பிரதிகள் எடுக்கவும் நவீன எந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இதனால் நேரமும், மனிதச்சக்தியும் வெகுவாக மிச்சமாகிறது.

72 இலட்சம் நூல்கள்

1963-64-ஆம் ஆண்டு நிலவரப்படி ஹார்வர்டு பல்கலைக் கழகத்திலுள்ள நூல்கள், மற்றச் சேகரிப்புக்களின் மொத்த எண்ணிக்கை 72 45,321. இதில் கல்லூரி நூலகச் சேகரிப்புக்கள் மட்டும் 26 92 019 ஆகும். வைடனர் கட்டிடத்தில் உள்ளவை-22,50,467; ஹௌட்டனில் 1 92210; லெமாண்டில் 1,43 680; நுண்கலைப் பிரிவில் 1,05,662. மற்றவை இந்நூலக அமைப்பைச் சேர்ந்த பிற நூலகங்களில் இருப்பவை. இந்தப் புள்ளிவிவரங்களைக் கொண்டு ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் மிகப் பெரிய தன்மையை உணரலாம்.

4. அமெரிக்க காங்கிரசு நூலகம்

அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய நூலகம் காங்கிரசு நூலகமாகும். (*Library of Congress*) 1800-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் தேதி பாராளுமன்றத்தில் நிறைவேறிய சட்டத்தின்படி இந்நூலகம் அமைக்கப்பட்டது. வாசிங்டன் நகரில் இன்றைய இந்நூலகம் இருக்கும் இடத்தில் இதற்கான கட்டிடம் கட்டுவதற்கும் நூல்கள் வாங்குவதற்கும் தேவையான நிதியை இந்தச் சட்டத்தின்படி அமெரிக்க அரசினர் ஒதுக்கினர். 1814-இல் 3000-க்கும் அதிகமான நூல்கள் இந்நூலகத்தில் இருந்தன. ஆனால், அதே ஆண்டு ஆகஸ்டு 24-இல் வாசிங்டனை பிரிட்டிசார் தாக்கியபோது இந்நூலகம் அடியோடு நாசமாகிவிட்டது. என்னும், அழிந்துபோன நூல்கள் அனைத்தையும், குடியரசுத் தலைவர் தாமஸ் ஜெட்பார்ஸனின் நூலகத்திலிருந்து விலைக்கு வாங்கி, 1815 சனவரியில் மீண்டும நூலகத்தைத் தொடங்கினார்கள். தாமஸ் ஜெப்பார்ஸன் தனது நூலகத்தில் சுமார் 6000 நூல்களைச் சேர்த்து வைத்திருந்தார். இந்நூல்களனைத்தும் அவரே தனிப்பட்டமுறையில் சேர்த்தவை. இந்நூல்களில் காங்கிரசு நூலகம் விலைக்கு வாங்கிக் கொண்டது போக

மற்றவற்றை அந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கி விட்டார் ஜெப்பர்ஸன். இந்த நூல்களை அடித்தளமாகக் கொண்டுதான், காங்கிரசு நூலகத்தின் இன்றைய மாபெரும் சேகரிப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது எனலாம். 1851-ஆம் ஆண்டு டிசம்பர் 21-இல் வாசிங்டனில் ஏற்பட்ட மற்றொரு பெருந் தீவிபத்தில் காங்கிரசு நூலகத்திலிருந்த நூல்களில் பாதிக்குமேல் தீக்கிரையாகிவிட்டன. எனினும், இந்நூல்கள் மீண்டும் புதிதாக வாங்கிச் சேர்க்கப்பட்டன.

## துரித வளர்ச்சி

1815-க்கும் 1897-க்கு மிடைப்பட்ட ஆண்டுகளில் இந்நூலகம் துரிதமாக வளர்ச்சியடைந்தது. நூல்களின் எண்ணிக்கை விரைவாகப் பெருகியது. 1840-லிருந்து வெளிநாட்டு அரசாங்கச் சான்றுகள் சேமிப்பு நிலையமாகவும், நூல் உரிமைப் பதிவு (*Copyright*) நிலையமாகவும், 1866-லிருந்து ஸ்மித்சோனியன் நிறுவனத்தின் (*Smithsonian Institution*) நூலகச் சேமிப்பு நிலையமாகவும் இந்த நூலகம் மாறியது. இதனால் இந்நூலகம் மேலும் வலுவுடைய வழி ஏற்பட்டது. 1867-இல் போர்ஸ் (*Force*) என்பவர் சேகரித்திருந்த அமெரிக்கக் கலைக்களஞ்சியத் தொகுதிகளும், 1882-இல் பெஞ்சமின் பிராங்களின் சேகரித்திருந்த நூல்களும், அமெரிக்கப் புரட்சிப் பற்றி ரோச்சம்பா (*Rochambeau*) சேகரித்து வைத்திருந்த நூல்களும் (1883) இந்நூலகத்திற்கென வாங்கப்பட்டன. குடியரசுத் தலைவர்கள் வாசிங்டன் (1834), மாடிசன் (1837), ஜெப்பர்ஸன் (1848), மன்ரோ (1849) ஆகியோரும் மற்றும் அலெக்சாண்டர் ஹாமில்டன் (1848), பெஞ்சமின் பிராங்களின் (1882) முதலியோரும் சேகரித்து வைத்திருந்த நூல்களையும் கடிதங்களையும் வாங்குவதற்கு அமெரிக்கப் பாராளுமன்றம் அவ்வப்போது நிதி ஒதுக்கீடு செய்தது. இவையனைத்தும் 1900-இல் இந்நூலகத்தில் இடம் பெற்றன. பல பெரியவர்கள் இந்நூலகத்திற்கு ஏராளமான நூல்களை நன்கொடை

யாக வழங்கினார்கள் டோனர் வழங்கிய அமெரிக்கக் கலைக் களஞ்சியத் தொகுதிகள், குஷிங் (*Cushing*), ராக்கில் (*Rockhill*) இருவரும் வழங்கிய சீன இலக்கியத் தொகுப்பு நூல்கள், இரண்டாம் சுல்தான் அப்துல் அமீத் வழங்கிய துருக்கி இலக்கிய நூல்கள் முதலியன அன்பளிப்புகளில் குறிப்பிடத் தக்கவை. 1897-இல் நூல்களின் எண்ணிக்கை 7,40 000-க்கு உயர்ந்தது. இவை தவிர, 18 000 நாளிதழ் தொகுப்புக்களும், 20 000 இசைத் தட்டுக்களும், 2,50 000 ஒலிப்பதிவுகளும், 40,000 படங்களும் இருந்தன.

## நூல் சேகரிப்பு

இந்நூலகத்தின் தலைமைக் கட்டிடம், (*Main Building*) 1897-இல் கட்டி முடிக்கப்பட்டது. நூலகத்தின் நூல்கள் அரசு அலுவலகக் கட்டிடத்திலிருந்து (*Capitol*) இப்புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டன. நூல்களைப் வகுத்து (*Classification*), நூலக நூற்பட்டி தயாரிக்கும் இப்போதுள்ள முறை, அப்போதிருந்தே கையாளப்பட்டது. அதைத் தொடர்ந்து 1901-இல் அச்சடித்த நூலக நூற்பட்டி அட்டை வினியோக பணியும் (*Prited Catalog Card Distribution Service*) 1914-இல் சட்ட ஆய்வு உதவிப் பணியும் (*Legislative Reference Service*) தொடங்கப்பட்டன. 1927-இல் தேசிய ஒன்றிப்பு நூலக நூற்பட்டி (*National Union Catalog*) உருவாக்கப்பட்டது. முக்கியமான நூல்கள் பலவும் வாங்கப்பட்டன. அவற்றில் யூதின் (*Yudin*) சேகரித்திருந்த ரஷ்ய இலக்கியங்களும் (1907), வால் பெஹர் சேகரித்து வைத்திருந்த பண்டைய இலக்கிய நூல்களும், ஆபிரகாம் லிங்கனின் கையெழுத்துப் பிரதிகளும் முக்கியமானவையாகும். இன்னும் பல அரிய நூல்களை வாங்குவதற்குச் செல்வந்தர்கள் பெருந்தொகைகளை நன்கொடையாக வழங்கினர். 1898-ல் நுண்கலை நூல்களுக்காக ஹப்பர்டு பிகஸ்டும் (*Hubbard Beguest*) இசைத் தட்டுக்கள் வாங்க கூலிட்ஜ் (*Coolidge*) நிறுவனமும் (1925)

அமெரிக்க வரலாற்று நூல்களை வாங்கவும், தேசிய ஒன்றிப்பு நூலக நூற்பட்டி தயாரிக்கவும் ராக்பெல்லர் (1927), வில்பர், பெஞ்சமின் ஆகியோரும் பெருந்தொகைகளை வழங்கினர். வானியல் நூல்களை வாங்குவதற்கு குக்கன் ஹீம் (*Guggenhiem*) நிதி பயன்பட்டது. ஹிஸ்பானிக் (*Hispanic*) இலக்கியங்களைச் சேகரிக்க ஹண்டிங்டன் (*Huntington*) நன்கொடை உதவியது. நேர்த்தியான அச்சு நூல்களைத் தேர்ந்தெடுக்க பென்னல் (*Pennel*) நிதி பயன்பட்டது. அருமையான இசைப்பதிவுகளைச் சேகரிக்க விட்டால் (*Whittall*) நிறுவன நிதி உதவியது. கிடைத்தற்கரிய நூல்களை அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்துச் சேகரித்து வைத்திருந்த லெஸ்ஸிங் ஜே ரோசன் வால்ட் (*Lessing J. Rosenwald*) அந்நூல்கள் அனைத்தையும் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். குடியரசுத் தலைவர்கள் மற்றும் பெயர் பெற்ற அரசியல் தலைவர்கள், இலக்கிய, நுண்கலை அறிஞர்கள் ஆகியோரின் கையெழுத்துப் பிரதிகளும் ஏராளமாக நன்கொடையாக கிடைத்தன.

காங்கிரசு நூலகத்தின் இணைப்புக் கட்டிடம் 1939-இல் முடிவடைந்தது இன்று இந்நூலகம் சுமார் 36 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இங்குள்ள அலமாரிகளை ஒரே வரிசையாக அடுக்கி வைத்தால் அவற்றின் நீளம் 270 மைல் தூரத்திற்கு வரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1963 ஜுன் 30-ஆம் தேதிக் கணக்குப்படி, இந்நூலகத்திலுள்ள நூல்களின் எண்ணிக்கை 1,27,52,000. இவை தவிர, 1,56,000 நாளிதழ் தொகுப்புகளும், 1,86,10,000 கையெழுத்துச் சான்றுகளும், 27,46,000 படங்களும், 2,52,000 நுண்சுருள்களும் (*Microfilm*) 75,000 திரைபடச் சுருள்களும், 21,41,000 இசைத் தட்டுகளும், 1,25,000 ஒலிப்பதிவுகளும், 31,24,000 புகைப் படங்களும், ஸ்லைடுகளும், 5,88,000 நுண் அச்சுக்களும் இந்நூலகத்தில் உள்ளன.

## பொதுமக்களுக்குச் சேவை

இது காங்கிரசு நூலகமாக இருந்த போதிலும் பொது மக்களுக்கான பொது ஆய்வு நூலகமாகவும் இது இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் எல்லாரும் இலவசமாக அனுமதிக்கப்படுகிறார்கள். இங்குச் செல்வதற்கு எவருடைய பரிந்துரையோ அடையாளச் சீட்டோ தேவையில்லை. காங்கிரசுக்கும் மற்ற அரசாங்க அலுவல்களுக்கும் உதவியாக இருப்பதே இந்நூலகத்தின் அடிப்படை நோக்கமாக விருந்த போதிலும், இங்குள்ள நூல்களையும் மற்றச் சேகரிப்புகளையும் பொதுமக்கள் பெரும் அளவில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்நூலகம் பணியாற்றி வருகிறது.

உயர் நிலைப்பள்ளிப் படிப்பு வயதை எட்டிய எவரும் இந்நூலகத்திற்குள் சென்று படிப்பறைகளில் படிக்கலாம். அதற்குக் குறைந்த வயதுடையவர்கள், சிறப்பான தேவைக்காக நூலகத்திற்குச் செல்ல விரும்பினால், தங்கள் பள்ளித் தலைமையாசிரியரிமிருந்து கடிதம் வாங்கிச் செல்லலாம். அல்லது பெரியவர் யாருடனாவது செல்லலாம். முக்கிய படிப்பறையை (*Main Reading Room*) மட்டும் பார்க்க விரும்பும் பார்வையாளர்கள், பெருமன்றத்திலுள்ள (*Main Hall*), மேற்செல் ஊர்திகளின் (*Elevators*) மூலம் பார்வையாளர்கள் பலகணிக்குச் (*Visitors Gallery*) சென்று பார்க்கலாம். தாமஸ் ஜெப்பர்சன் படிப்பறை முதலான மற்றப் படிப்பறைகளையும் இதேபோன்று பார்க்கலாம்.

இந்நூலகத்தில் இரண்டு பொதுப் படிப்பறைகள் (*General Reading Rooms*) உள்ளன. ஒன்று முக்கியப் படிப்பறை (*Main Reading Room*) இரண்டாவது தாமஸ் ஜெப்பர்ஸன் படிப்பறை. தலைமைக் கட்டிடத்தின் (*Main Building*) நட்ட நடுவிலுள்ள வட்டவடிவ மண்டபம்தான் முக்கியப் படிப்பறையாகும். இணைப்புக் கட்டிடத்தின் (*Annex*) ஐந்தாவது மாடியில் தாமஸ் ஜெப்பர்ஸன படிப்பறை இருக்கிறது.

## நூலக நூற்பட்டிகள்

பொது நூல்களின் (*General Book Collections*) நூலக நூற்பட்டி முக்கிய நூலக நூற்பட்டி (*Main Catalog*) எனப் படுகிறது. இது முக்கியப் படிப்பறையிலுள்ளது. இணைப்பு நூலக நூற்பட்டியானது (*Annex Catalog*), இணைப்புக் கட்டிடத்தின் ஐந்தாவது மாடியில், தாமஸ் ஜெப்பர்சன் படிப்பறையை யொட்டியுள்ள மத்திய மண்டபத்தில் (*Central Hall*) எல்லோருக்கும் தெரியும்படியாக வைக்கப்பட்டிருக்கிறது. முக்கிய நூலக நூற்பட்டியிலும் இணைப்பு நூலக நூற்பட்டியிலும் காங்கிரசு நூலகத்தின் அச்சிட்ட நூலக நூற்பட்டி அட்டைகள் (*Printed Catalog Cards*) முக்கியமாக இடம் பெற்றிருந்த போதிலும், அச்சிட்ட அட்டைகள் இல்லாத எழுத்துச் சான்றுகள் பலவும், இன்னபிற சேகரிப்புகளும் முக்கிய நூலக நூற்பட்டியில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, இணைப்பு நூலக நூற்பட்டியைவிட முக்கிய நூலக நூற்பட்டிதான் "முழுமை"யானதெனக் கருதலாம். இணைப்பு நூற்பட்டியிலும் ஒரு சிறப்பு உண்டு. இந்த நூலகத்தில் இல்லாத நூலானால் மற்ற நூலகங்களிலுள்ள பல நூல்களின் அச்சடித்த அட்டைகளும் இணைப்பு நூலக நூற்பட்டியில் இடம் பெற்றுள்ளன. 1939–ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்தின் விவரங்களையும் இணைப்பு நூலக நூற்பட்டியிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இவ்விரு பொது நூலக நூற்பட்டிகள் தவிர, தேசிய ஒன்றிப்பு நூலக நூற்பட்டியும் வாசகர்களுக்கு உதவியாக வைக்கப்பட்டுள்ளது. பொது நூலக நூற்பட்டியில் இடம் பெறாத பல நூல்களை இந்த நூலக நூற்பட்டியில் கண்டு கொள்ளலாம். அரிய நூலறைக்குத் (*Rare Book Room*) தனியாக நூலக நூற்பட்டி ஒன்றும் உள்ளது. பொது நூலக நூற்பட்டிகளுக்கு அருகிலேயே, நூல் வடிவில் நூலக நூற்பட்டிகள் (*Catalogs in book form*) வைக்கப்பட்டுள்ளன. காங்கிரசு நூலகத்திலுள்ள நூல்

களும், அதனுடன் ஒத்துழைக்கும் பிற நூலகங்களின் நூல்களும் நூல் வடிவ நூலக நூற்பட்டியில் இடம் பெற்றுள்ளன.

### நூலக நூற்பட்டியின் பயன்

நூலக நூற்பட்டியில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு நூலுக்கும் தனித்தனி அட்டை அல்லது அட்டைகள் உண்டு. இந்த அட்டைகளில் நூலாசிரியர் பெயர், நூல் வெளியீட்டு இடம், வெளியிடுபவர் பெயர், வெளியீட்டுத் தேதி முதலியன குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகவல்களுடன் நூலின் பக்க எண்ணிக்கை, சான்று நூல்கள் *(Illustrative material)* பற்றிய சிறு குறிப்பு, நூலின் நீள அகலம் ஆகியவை பற்றியும் இந்த அட்டைகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒரு நூல் ஒரு வரிசையைச் *(Series)* சேர்ந்ததாக இருக்குமாயின், அந்த நூலின் வரிசை எண்ணும் இவ்வட்டையில் குறிக்கப்பெறும்.

நூலக நூற்பட்டி அட்டைகள் சிலவற்றில் முதலில் ஆசிரியர் பெயர் இருக்கும். மற்றொரு அட்டையில் நூலின் பெயர் முதலில் இருக்கும். வேறொன்றில் பொருள் தலைப்பு *(Subject heading)* முதலில் இடம் பெறும். சில நூல்களின் அட்டைகளில், வரிசைப் பெயர் அல்லது தொகுப்பாசிரியர் பெயர் அல்லது மொழி பெயர்ப்பாளரின் பெயர் இடம் பெற்றிருக்கலாம். இவ்வட்டைகள் அகர வரிசையில் அடுக்கப்பட்டிருந்தாலும், சில சமயங்களில் வாசகர்கள் குழப்பமடைவது இயற்கையே. அவர்களுக்கு நூலக உதவியாளர்கள் தேவையான உதவிகளைச் செய்கிறார்கள்.

ஒரு நூலை எடுக்க விரும்பும் வாசகர் முதலில் ஆசிரியர் பெயர் வரிசையைப் பார்க்கிறார். (நூலை வெளியிட்ட கழகங்கள், நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றின் பெயர்களும் நூலாசிரியர் பெயர் வரிசையில் இடம் பெற்றிருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக, 'அமெரிக்க விவசாயத் துறை' என்ற நூலாசிரியர் பெயரின் கீழ் அதன்

ஆண்டறிக்கை இடம் பெறும்). நூலாசிரியர் பெயர் தெரியாவிட்டால் நூலின் பெயர் வரிசையைப் பார்க்கலாம். ஒரு நூல் எந்தப் பொருளைப் பற்றியது என்பது மட்டும்தான் தெரியுமெனில் அல்லது ஒரு பொருள் பற்றி ஏதாவது ஒரு நூல் வேண்டுமெனில் அந்தக் குறிப்பிட்ட பொருள் தலைப்பின்கீழ் நூலைத் தேடலாம். சிலர் "விலைகள்" பற்றிய நூல்கள் மட்டும் அறிய விரும்பலாம். அவர்கள் "பொருளாதாரம்" என்ற விரிவான பொருள் வரிசையில் அதைப் பார்க்காமல், "விலைகள்" என்ற தலைப்பில் பார்க்க வேண்டும்.

## நூலைக் கேட்பது எப்படி ?

பொதுப் படிப்பறைகளிலிருந்து படிப்பதற்கு, நூலகத்தின் இரண்டு கட்டிடங்களிலுமுள்ள அலமாரிகளிலிருந்து நூல்களை எடுக்க விரும்பும் வாசகர்கள் என்ன செய்ய வேண்டும்? 1 நூலக நூற்பட்டியைப் பார்த்து நூலின் வரிசை எண்ணைக் குறித்துக்கொள்ள வேண்டும். 2. நூல் கோரிக்கைச் சீட்டில் (*Call Slip*), நூலின் வரிசை எண், நூலின் பெயர் குறிப்பிடவேண்டும் 3. படிப்பறையில் தான் உட்காரப் போகும் இடத்திலுள்ள நாற்காலி-மேசையின் எண்ணையும் இந்தச் சீட்டில் குறிக்க வேண்டும். 4 பின் இச்சீட்டை நூல் வழங்கும் மேசை (*Issue Desk*) யிலுள்ள அலுவலரிடம் கொடுக்க வேண்டும்.

ஒருங்கிணைத்துத் தைக்கப்பட்ட பருவ வெளியீடுகளின் (நாளிதழ்கள் தவிர) தொகுதிகள் பொதுப் பகுப்பு வரிசையில் (*General Classified Collections*) இருக்கின்றன. இந்தத் தொகுதிகள் வேண்டுமெனில், கோரிக்கைச் சீட்டில் நூலாசிரியர் பெயரைக் குறிப்பிடத் தேவையில்லை. தொகுதியின் தலைப்பு, தொகுதி எண், வரிசை எண், தேதி முதலியனவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். ஒருங்கிணைத்துத் தைக்கப்படாத (*Unbounded*) பருவ வெளியீடுகள்,

அரசாங்க அறிக்கைகள், நாளிதழ்கள் ஆகியவற்றை இவற்றுக்கான தனிப் படிப்பறைகளில் கண்டு கொள்ளலாம்.

நூலக நூற்பட்டிகளைப் பயன்படுத்தவும், மற்ற நூல் விவரத் தொகுதிகளைக் கையாளவும், எளிதில் கண்டுபிடிக்காத நூல்களைக் கண்டுபிடிக்கவும் வாசகர்களுக்கு உதவி புரிவதற்காகப் பொதுப் படிப்பறைகளிலும், தனிப் படிப்பறைகளிலும் அலுவலர்கள் உள்ளனர். இவர்கள், வாசகர்களுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளைச் செய்கிறார்கள்.

கோரிக்கைச் சீட்டை முறையாக எழுதி, நூல் வழங்கு மேசை அலுவலரிடம் கொடுத்துவிட்டு, வாசகர் இரு கட்டிடங்களிலுமுள்ள ஏதாவதொரு படிப்பறையில் போய் அமர்ந்து கொள்ளலாம். கேட்ட நூல் இருக்குமெனில், அரைமணி நேரத்திற்குள், அலுவலர் ஒருவர் அதைக் கண்டுபிடித்து எடுத்து வாசகரிடம் கொண்டு வந்து கொடுக்கிறார். அரை மணிக்கு மேல் தாமதமாகுமானால், நூல் வழங்கு மேசை அலுவலரிடம் போய் விசாரிக்க வேண்டும். அவர், தாமதத்திற்கான காரணத்தை அறிந்து விளக்குவார்.

கேட்ட நூல் கிடைக்கவில்லை என்றால், நூல் கிடைக்கப் பெறாததற்கான காரணத்தைச் சீட்டின் பின்புறத்தில் எழுதி வாசகரிடம் சீட்டைத் திருப்பிக் கொடுக்கிறார்கள். நூல் கிடைக்கவில்லை என்பது தவறான தகவலாக இருக்குமென நூல் வழங்கு அலுவலர் கருதினால், மீண்டும் நூலைத் தேடும்படி உரிய அலுவலர்களுக்கு ஆணையிடுகிறார். மறுபடியும் தேடிய பிறகு, ஒரு நூலை வேறொரு வாசகர் எடுத்துச் சென்றிருப்பதாகத் தெரிந்தால், அந்நூல் எப்பொழுது திரும்பிவரும் என்பதை வாசகருக்குத் தெரிவிக்கிறார்கள். நூல் திரும்பி வந்தவுடன் அந்த வாசகருக்கு அஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும். அப்படித் தெரிவித்த 10 நாட்களுக்குள் வாசகர் அந்த நூலை வாங்கிச் செல்லலாம்.

ஒரு வாசகர் ஒரு நூலைப் படித்து முடித்த பின்னர் அல்லது படிப்பறையிலிருந்து வெளியே செல்லும்போது, தான்

படித்த நூலை, நூல் வழங்கு மேசை அலுவலரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதால், படிப்பறை மேசைகளில் நூல்கள் குவியாமலிருப்பதுடன் நூல்களை உடனுக்குடன் அந்தந்த இடங்களில் வைக்கவும் வசதியாக இருக்கிறது.

கோரிக்கைச் சீட்டைக் கொடுத்த பின்னர், வாசகர் தான் குறிப்பிட்ட இடத்திலிருந்து அவசரமாக வேறு எங்காவது சென்று திரும்ப வேண்டியிருந்தால், அவர் நூல் வழங்கு மேசை அலுவலரிடம் சொல்லிவிட்டுச் செல்லலாம். அவர் கேட்ட நூலை அலுவலர் ஒருவர் எடுத்து அவர் குறிப்பிட்டிருந்த இடத்தில் வைத்து, அந்நூலின் மேல் வாசகரின் பெயரைக் குறிப்பிட்டு, 'வாசகர் திரும்பி வருவார்; தயவு செய்து அரை மணிநேரம் இந்நூலை யாரும் எடுக்காதீர்கள்'' என்று எழுதப்பட்ட சீட்டை வைத்துவிட்டுச் செல்கிறார்.

## ஒதுக்கீடு

குறிப்புகள் எடுப்பதற்காக ஒரு வாசகருக்கு ஒரு நூல் பல நாட்களுக்குத் தொடர்ந்து தேவைப்படுமானால், அவருக்காக அந்த நூலை, தனியாக ஒதுக்கி (Reserve) வைக்கிறார்கள். இதற்கெனத் தனிச் சீட்டு உண்டு. இவ்விதம் ஒதுக்கிய நூலை அல்லது நூல்களை வாசகர் ஒவ்வொரு நாளும் பயன்படுத்திய பிறகு மீண்டும் ஒப்படைத்துவிட்டு மறுநாள் திரும்ப வாங்கிக் கொள்ளலாம். இவ்விதம் நூல்களை 3 நாட்கள் வரை ஒதுக்குகிறார்கள். ஒவ்வொரு வாசகரும் ஒரே சமயத்தில் 3 நூல்கள் வரை ஒதுக்கிக் கொள்ளலாம். ஆய்வு உதவி நூல்கள் (*Reference Collections*), கதை நூல்கள் எதுவும் ஒதுக்கப்படமாட்டா. அவசரத் தேவை ஏற்படின், இவ்விதம் ஒதுக்குவது ரத்து செய்யப்படலாம்.

## ஆய்வு உதவி நூல்கள்

பல ஐயங்களை நீக்குதற்கும், பலவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் பயன்படுத்தப்படும் குறிப்பு நூல்கள் ஆய்வு

உதவி நூல்கள் (*Reference Collections*) ஆகும். நூல் விவரத் தொகுதிகளும் (Bibliographies) இதில் அடங்கும். இந்த நூல்கள், எளிதில் கிடைக்கும் வண்ணம் வசதியான இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியப் படிப் பறையில் சுமார் 25,000 ஆய்வு உதவி நூல்கள் உள்ளன. தாமஸ் ஜெப்பர்சன் படிப்பறையில் 9,000 ஆய்வு உதவி நூல்களிருக்கின்றன.

### நுண்சுருள்—நுண் அச்சு

இந்நூலகத்தின் நுண்சுருள் படிப்பறை (Microfilm Reading Room) தனியாக இருக்கிறது. இங்கு நுண்சுருள் களை வாசகர்கள் படிக்கலாம். இதற்கான எந்திர சாதனங் கள் இவ்வறையில் உள்ளன. நுண் அச்சுக்களைப் (Micro-print) படிப்பதற்கும் இந்த அறையிலேயே தனியாக எந்திர சாதனங்கள் இருக்கின்றன.

சில தனித் தேவைகளைக் கருதி, நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அலமாரிகளுக்கே சென்று நூல்களைப் படிக்கவும், குறிப்புகள் எடுக்கவும் சில வாசகர்கள் விரும்ப லாம். இவர்கள், இதற்கான தனிக் கோரிக்கைச் சீட்டை எழுதிக் கொடுத்து அனுமதி பெறலாம்.

ஆராய்ச்சிகள் நடத்துவோருக்கு உதவுவதற்காக இந் நூலகத்தில் தனி இடங்களும், நூல் அலமாரிகளும் ஒதுக் கப்பட்டிருக்கின்றன. உரிய அனுமதிபெற்று இங்கு ஆராய்ச்சிகள் நடத்தலாம்.

### சட்ட நூலகம்

சட்ட நூலகத்தின் (*Law Library*) படிப்பறை தலை மைக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் அமைந்துள ளது. சட்டங்கள், சட்ட நுட்பங்கள், சட்ட விளக்கங்கள் பற்றிய 11 இலட்சம் நூல்கள் எல்லா மொழிகளிலும் உள்ளன. பண்டைக்கால, இக்காலச் சட்ட முறைகள் பற்றி பல்லாயிரம் நூல்களை இங்கு காணலாம். இங்குள்ள

ஆய்வு உதவி நூல் பிரிவில் மட்டும் 35,000 நூல்கள் இருக்கின்றன.

இரண்டு பொதுப் படிப்பறைகள், சட்ட நூலகப் படிப்பறை இம்மூன்றும் தவிர மற்றும் பல படிப்பறைகளும் இந்நூலகத்தில் உள்ளன. அவையாவன:— 1. அரசாங்க வெளியீடுகள் படிப்பறை; 2. ஹிஸ்பானிக் நிறுவனப் படிப்பறை (ஹிஸ்பானிக், போர்த்துக்கீசிய ஆராய்ச்சிக்கு மட்டும்); 3. உள்நாட்டு வரலாறு—தொல்குடிமரபு வரலாற்றுப் படிப்பறை; 4. எழுத்துச் சான்றுப் படிப்பறை; 5. நாட்டுப்படப் படிப்பறை; 6. நுண்சுருள் படிப்பறை; 7. இசையியல் படிப்பறை; 8. நாளிதழ் படிப்பறை; 9. பருவ வெளியீட்டுப் படிப்பறை; 10. அச்சு, புகைப் படப் படிப்பறை; 11. அரிய நூல் படிப்பறை; 12. விஞ்ஞானப் படிப்பறை; 13. காங்கிரசுப் படிப்பறை (காங்கிரசு பற்றிய அலுவல்களுக்கு மட்டுமே பயன்படுவது).

### தேசிய ஒன்றிப்பு நூலக நூற்பட்டியும் சிறப்பு ஒன்றிப்பு நூலக நூற்பட்டியும

காங்கிரசு நூலகம் மற்றும் இதுபோன்ற ஆராய்ச்சி நூலகங்களின் கூட்டு முயற்சியின் பலனாக தேசிய ஒன்றிப்பு நூலக நூற்பட்டி (*National Union Catalog*) தயாரிக்கப் பட்டு காக்கப்பட்டு வருகிறது. 1952-ஆம் ஆண்டுக்கு முன் வெளியிடப்பட்ட 1,40 00,000-க்கும் அதிகமான நூல்களுக்கான அட்டைகள் இந்த நூலக நூற்பட்டியிலுள்ளன தலைமைக் கட்டிடத்தில், முக்கியப் படிப்பறைக்குக் கிழக்கிலுள்ள 154-ஆம் அறையில் இந்த நூலக நூற்பட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலும், கானடாவிலுமுள்ள சுமார் 700 நூலகங்களில் காணும் முக்கியமான நூல்கள் அனைத்தும் இந்நூலக நூற்பட்டியில் இடம் பெற்றுள்ளன. அதுமட்டுமின்றி, இந்நூலகத்தின் பொது நூலக நூற்பட்டியில் சேர்க்கப்படாத, ஆனால் இந்நூலகததிலுள்ள பல நூல்களும் தேசிய ஒன்றிப்பு நூலக நூற்பட்டியில் இடம்

பெற்றுள்ளன. எனவே. இந்நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்தையும் அறிய வேண்டுமெனில், இந்நூலக நூற்பட்டியையும் தவறாது பார்வையிடுதல் வேண்டும். நூலாசிரியர் பெயர் வரிசைப்படி இந்நூலக நூற்பட்டி அமைந்திருக்கிறது.

அமெரிக்க நூலகங்களிலும், வத்திகன் நூலகத்திலும் (*Vatican Library*) உள்ள சிறப்பான நூல்களுக்கான (Special Collections) நூலக நூற்பட்டியொன்று, சிறப்பு ஒன்றிப்பு நூலக நூற்பட்டிப் பிரிவில் (Special Union Catalog Division) உள்ளது. அமெரிக்காவிலுள்ள ஹீப்ரு ஸ்லாவிக், ஜப்பானிய, சீன இலக்கிய நூல்கள் இந்த நூலக நூற்பட்டியில் சிறப்பு நூல்களின் வரிசையில் அடங்கியுள்ளன.

## நூலக நூற்பட்டி அட்டைப் பிரிவு

காங்கிரசு நூலகத்தின் அச்சிட்ட நூலக நூற்பட்டி அட்டைகள் (Printed Catalog Cards) மற்றும் தொழில் நுட்ப வெளியீடுகள் (Technical Publications) ஆகியவற்றை நூலக நூற்பட்டி அட்டைப் பிரிவு (Card Division) அச்சிட்டு, வழங்குவதுடன் விற்பனையும் செய்கிறது. நூலக நூற்பட்டி தயாரிக்கவும், நூல் விவரத் தொகுதிகள் தயாரிக்கவும் பயன்படும் 11 கோடி அட்டைகளை இப்பிரிவு தயாரித்திருக்கிறது. நூலாசிரியர் வரிசை, பொருள் வரிசை அல்லது அட்டை எண் வரிசைப்படி இந்த அட்டைகளை அடுக்கலாம். பல பொருள்களுக்கும், பல்வேறு மொழிகளுக்கும் ஏற்ற விதத்தில் இந்த அட்டைகள் அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றன.

## புகைப்படப்படி எடுப்புப் பணி

காங்கிரசு நூலகம் மேற்கொள்ளும் முக்கிய பணிகளில் புகைப்படப்படி எடுப்புப் பணி (Photo Duplication Service) ஒன்றாகும். இந்நூலகத்திலுள்ள நூல்கள், பருவ வெளியீடு

கள், எழுத்துச் சான்றுகள், நாட்டுப் படங்கள், இசைத் தட்டுகள், புகைப்படங்கள், கட்டிடக்கலைப் படங்கள் முதலியனவற்றை நுண்சுருள்முறை, புகைப்படமுறை மூலமாகப் படி எடுத்துக் கொடுப்பது இப்பிரிவின் பணியாகும்.

நூலகக் காங்கிரசு பற்றியும், அதன் பணிகள் குறித்தும் தகவல் அறிவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதற்காகத் தகவல் பிரிவு (Information Desk), தலைமைக் கட்டிடத்தின் தரைக் கட்டிடத்தில் தனியாக இயங்கி வருகிறது. நூலகத்தைப் பற்றிய இலவச வெளியீடுகளை இப்பிரிவு வழங்குகிறது.

### ஆராய்ச்சிக்கு உதவி

ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இந்நூலகம் தனி உதவிகளைச் செய்து கொடுக்கிறது. இவர்களுக்கு உதவுவதற்காக, சுருக்கெழுத்தாளர்கள் யாரும் நூலக அலுவலர்களில் இல்லை. ஆனால், இவ்வித உதவிக்கு முன்வரும் சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், மொழிப் பெயர்ப்பாளர்கள் ஆகியோரின் பட்டியலை இந்நூலகம் வைத்திருக்கிறது. இப்பட்டியலைப் பார்த்துத் தேவையானவர்களை அழைத்துக் கொள்ளலாம். நூலகத்தில் தட்டெழுத்துக் கருவியைக் கொண்டு வந்து பயன்படுத்துவதற்கு இடவசதி செய்து கொடுக்கப்படுகிறது.

### நூல் கடனுதவி

காங்கிரசு நூலகத்திலுள்ள நூல்களை, மற்ற நூலகங்கள் கடனாகப் பெற்றுத் தங்கள் வாசகர்களுக்கு அளிக்கலாம். இதேபோன்று, மற்ற நூலகங்களிலிருந்தும் நூல்களை இந்நூலகம் கடன் வாங்கித் தனது வாசகர்களுக்கு வழங்குகிறது. இதற்கென நூல் கடன் பிரிவு (Loan Division) இந்நூலகத்தில் இயங்கி வருகிறது. இவ்விதமாக

மக்களின் அறிவுச் சுடரைத் தூண்டிவிட காங்கிரசு நூலகம் ஆற்றி வரும் பணி மகத்தானதாக அமைந்துள்ளது.

5. அமெரிக்கத் தலைமை மருத்துவ நூலகம்

அமெரிக்காவிலுள்ள "நாட்டுத் தலைமை மருத்துவ நூலகம்" (National Library of Medicine), மருத்துவத் துறையில் உலகிலேயே மிகப் பெரிய நூலகமாகக் கருதப் படுகின்றது. இந்நூலகம் ஒரு புனிதப் பணியைக் குறிக் கோளாகக் கொண்டு இயங்குகிறது. மருந்து மக்கள் உடல் நலன் (Public Health) தொடர்பாக உலகம் முழுவதிலும் நடைபெறும் புத்தம் புது ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் முதலியன பற்றிய நூல்கள், வெளியீடுகள் அனைத்தையும் சேர்த்து, காத்து, வகுத்து, வழங்கி மருத்துவ விஞ்ஞானத் தையும் அதனுடன் தொடர்பு கொண்ட பிறவிஞ்ஞானங் களையும் வளர்ப்பதற்கு உதவுவதே இந்நூலகம் மேற் கொண்டுள்ள புனிதப் பணியாகும். இப்பணிகளை நிறை வேற்றுவதில் நூல்களைச் சேர்த்தல், வகுத்தல், வழங்கல் ஆகிய அலுவல்களில் இந்நூலகம் நேரடியாக ஈடுபடுகிறது. அந்நாட்டில் மருத்துவ நூலகப்பணிகளை வலுப்படுத்தவும், மேலும் விரிவாக்கவும் வெளிப்புறத் திட்டங்களையும் இது தீவிரமாகச் செயலாக்குகிறது.

வரலாறு

'நாட்டுத் தலைமை மருத்துவ நூலக'மானது முதன் முதலில் 1836-இல் "மருத்துவர் அலுவலக (இராணுவ) நூலகம்" (Surgeon General's Office (Army) Library என்ற பெயரில் நிறுவப்பட்டது. இந்நூலகத்தின் நூலகராக டாக்டர். ஜான் ஷாபில்லிங்ஸ் (Dr. John Shaw Billings) 1865 முதல் 1895 வரை பணியாற்றியபோது நாட்டின் தலைமை நூலகமாகும் அளவுக்கு இந்நூலகம் செழித் தோங்கி வளர்ந்தது. 1922-இல் இந்நூலகத்தின் பெயரை "இராணுவ மருத்துவ நூலகம்" (Army Medical Library) என மாற்றினார்கள். இந்தப் பெயரும் நெடுநாட்கள்

நீடிக்கவில்லை. 1952—இல் "ஆயுதப் படையினர் மருத்துவ நூலகம்" (Armed Forces Medical Library) எனப் பெயரிடப்பட்டது. காலஞ்சென்ற குடியரசுத் தலைவர் ஜான். எப். கென்னடி அமெரிக்கப் பாராளுமன்ற மேலவை உறுப்பினராகப் (Senator) பணியாற்றியபோது 1956-இல் அவரும் லிஸ்டர் ஹில் (Lister Hill) என்பவரும் சேர்ந்து கொண்டு வந்து நிறைவேற்றிய ஒரு சட்டத்தின்படி, இந் நூலகம் பொதுச் சுகாதாரத் துறையில் (Public Health Service) சுதந்திரமான ஆட்சியின் கீழ் வந்தது. அதோடு நூலகத்தின் பெயரும் "நாட்டுத் தலைமை மருத்துவ நூலகம்" (National Library of Medicine) என மாற்றப்பட்டது. 1962-இல் மேரிலாந்து (Maryland) மாநிலத்தில் பெதஸ்டா (Bethesda) நகரில் விஸ்கான்சின் பகுதியில் (Wisconsin Avenue) இப்போது இயங்கி வரும் கட்டிடத்திற்கு இந்நூலகம் மாற்றப்பட்டது.

## 12 இலட்சம் நூல்கள்

இந்நூலகத்தில் இப்பொழுது எழுபதுக்கும் அதிகமான மொழிகளில் ஏறத்தாழ 12 இலட்சம் நூல்கள் உள்ளன. இவற்றில் மருத்துவ விஞ்ஞானத் தொடர்பான நூல்கள், பத்திரிகைகள், ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்புகள், சிறு வெளியீடுகள், நுண் சுருள்கள் (Microfilms) ஆகியவை அடங்கியிருக்கின்றன. இந்தத் துறையில் உலகிலேயே மிகப் பெரிய ஆராய்ச்சி நூலகமாக இன்று இது திகழ்கிறது.

குறிப்பிட்ட பொருள் பற்றிய 3 இலட்சம் கட்டுரைகள், 2,86,000 பத்திரிகைத் தொகுப்புகள், 2,85,000 ஆராய்ச்சிக் குறிப்புகள், 1,67,000 துண்டு வெளியீடுகள், 3,300 நுண்சுருள் தொகுதிகள், 59,000 ஓவியங்கள், விளக்கப்படங்கள் ஆகியவை இங்கு இடம் பெற்றிருக்கின்றன. சுமார் 15 000 பருவ வெளியீடுகள் இப்போது இந்நூலகத்திற்கு வருகின்றன.

மருத்துவம் பற்றிய 40 பிரிவுகளைச் சார்ந்த எல்லா நூல்களையும் இந்நூலகம் சேகரிக்கிறது. இரசாயனம், பௌதிகம், உடல் உட்கூறு இயல் (Biology), தாவர இயல், உளவியல், கருவி இயல் (Instrumentation) ஆகிய பொது விஞ்ஞானப் பிரிவுகள் குறித்த நூல்களையும் இந்நூலகம் ஓரளவுக்கு சேகரிக்கிறது. ஆண்டுதோறும் சுமார் 90 000 நூல்கள் வீதத்தில் இந்நூலகத்திற்குப் புதிய நூல்கள் வாங்கப்படுகின்றன.

## வெளிநாடுகளுக்கு உதவி

உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் உள்ள எல்லா நூலகங்களுக்கும் உதவியாக நாட்டுத் தலைமை மருத்துவ நூலகம் செயல்பட்டு வருகிறது. நூலகத்திற்கு நூலகம் உதவும் திட்டம் (Inter Library Loan Programe) ஒன்றை இந்நூலகம் நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் உள்ள எந்த நூலகமாவது தனக்குக் கிடைக்காத பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகளின் நகல்களை அனுப்பி வைக்கும்படி வேண்டினால், இந்நூலகம் உடனே அக்கட்டுரைகளின் புகைப்பட நகல்களை (Photo Copies) எடுத்து அனுப்புகிறது. இந்தச் சேவைக்குக் கட்டணம் எதையும் இந்நூலகம் வசூலிப்பதில்லை. புகைப்பட நகல்களைக் கேட்கும் நூலகம் தேவைப்படுமானால் அவற்றை நிரந்தரமாக வைத்துக் கொள்ளலாம்

இத்தகைய நகல்களை விரும்பும் அனுமதி பெற்ற நூலகங்கள், தங்கள் கோரிக்கைகளையும், தங்களுக்குத் தேவையான கட்டுரைகளின் விரிவான விவரங்களையும் குறிப்பிட்ட அச்சடித்த விண்ணப்பத் தாள்களில் (Forms) குறிப்பிட்டு நாட்டுத் தலைமைமருத்துவ நூலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் கூடிய விரைவில் புகைப்பட நகல்கள் அனுப்பப்படுகின்றன. இது தவிர, அமெரிக்க நூலகங்களுக்கு, அந்தந்த பத்திரிகைகளின் தொகுப்புகளை வழங்கியும் இந்நூலகம் உதவுகிறது.

உலகின் மிகப் பெரிய உடலியல்—மருத்துவ நூலகம் என்ற முறையில், உலகம் முழுவதும் வெளியாகியுள்ள, வெளியாகிவரும் மருத்துவம், உடல் உட்கூறு, இயல் (Biology) ஆகியவை தொடர்பான நூல்கள் அனைத்தையும் அலசி, ஆராய்ந்து, பகுத்து, வகுத்து, பொருள்வாரியாக வகைப்படுத்தும் (Indexing) மாபெரும் பொறுப்பையும் இந்நூலகம் மேற்கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் இப் பணியைச் செய்துவரும் ஒரே நிறுவனம் இதுதான். இந்த நூல்கள் எல்லாம் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் வகையில், நூல் விவரத் தொகுதிகளை இந் நூலகம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. மருத்துவ இலக்கியங்கள் பெருவாரியாகப் பெருகிவிட்ட காரணத்தால் மருத்துவ இலக்கியங்களை அலசி ஆராய்வதில் தனிப் பயிற்சியும், திறமையும் பெற்ற மற்ற அறிஞர்களின் ஒத்துழைப் போடும், மின் காந்த சாதனத்தின் (Electronic Computer) உதவி கொண்டும் நூல் பகுப்புப் பணி நடைபெறுகிறது. ஒவ்வொரு கட்டுரையையும் ஆய்வு வல்லுநர்கள் (Analysts) ஆழ்ந்து படித்து ஆராய்ந்து, அதை எந்தப் பொருள் வரிசையில் (Index) சேர்க்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த தகவல்களை (Data) நாடாக்களில் (tapes) பதிவு செய்து, மின் காந்தக் கருவியினுள் (Computer) செலுத்திக் காந்த நாடாக்களாக (Magnetic tapes) உரு மாற்றுகிறார்கள். இதன் மூலம் இவற்றைப் பாதுகாத்து வைப்பது எளிதாகிறது. இந்நாடாச் சுருள் (reel) ஒவ்வொன்றும் சுமார் 12 அங்குல விட்டம் உள்ளது. ஒரு சுருளில் சுமார் 35000 நூல்களின் விவரங்களைப் பதிவு செய்து வைக்க முடியும்.

இந்நூலகத்தின் மருத்துவ இலக்கிய ஆய்வு-சேகரிப்புப் பிரிவினர் (Medical Literature Analysis and Retrieval System—MEDLARS) உலகெங்கிலுமிருந்து வெளியாகும் 2,400 மருத்துவப் பத்திரிகைகளைப் படித்து அதிலுள்ள கட்டுகளை அலசி ஆராய்ந்து, பொருள்வாரியாகப் பிரித்து, தொகுத்து,

மாதந்தோறும் பொருள்—ஆசிரியர் வாரியாகக் கட்டுரைகளின் வரிசையைத் (Index) தயாரிக்கிறார்கள். இவ்விதம் தொகுக்கப்படும் கட்டுரைகளில் 75 சதவிகிதம் வெளி நாடுகளிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் வெளியானவை. இத்தொகுப்புகளைப் பெரும் அளவில் அச்சிட்டு விற்பனையும் செய்கிறார்கள்.

அவ்வப்போது நூல் விவரத் தொகுதிகளை (Recurring Bibliographies) வெளியிடுவதும் இந்தப் பிரிவின் மற்றொரு பணியாகும். புற்று நோய், இருதய நோய், மனநோய் ஆகிய துறைகளில் நடைபெறும் நுண் ஆராய்ச்சிகள், புதிய மருந்துகள் பற்றி அண்மையில் வெளியான அறிக்கைகள் ஆகியவற்றைப் பொருள் வாரியாகத் தொகுத்து அதற்கான நூல் விவரத் தொகுதிகளை இடைவிட்டு இடைவிட்டு இந்தப் பிரிவினர் வெளியிட்டு வருகிறார்கள். அந்தத் துறையில் பணியாற்றும் வல்லுநர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இத்தொகுதிகள் பேருதவியாக இருக்கின்றன.

மருத்துவ நூல்களைப் பற்றிய விவரங்கள் பெரும்பாலும் மின்காந்தக் கருவிகளினால் கண்டு பிடிக்கும் வகையில் எந்திரங்களினால் தொகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ஆய்வு உதவி நூல்களை நாடி வருபவர்கள் தங்களுக்குத் தேவையான நூலைத் தேடி எடுப்பதற்குள் பல விதமான நூலக நூற் பட்டிகளையும், நூல் விவரத் தொகுதிகளையும், பொருள் வரிசைகளையும் பார்க்க வேண்டியதிருக்கிறது. இந்த வேலையை எளிதில் முடிப்பதற்கு எந்திர முறை பயன்படுகிறது. நூல் விவரங்களை எந்திர முறையில் தொகுப்பதற்கு இதுவே காரணம். 1969-ஆம் ஆண்டில் சுமார் 10 இலட்சம் நூல்களின் விவரங்கள் இங்கு எந்திர முறைப்படி தொகுத்து வைக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின் காந்தக் கருவிகளில் தொகுத்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களை இருவித முறைகளின்படி அச்சடித்து எடுக்

கிறார்கள். இதில் ஒரு முறை அதிவேக அச்சுப் பொறியில் அச்சடிப்பதாகும். இந்தப் பொறியில் நிமிடத்துக்கு 11,600 சொற்கள் வீதம் அச்சடிக்கப்படுகிறது. இரண்டாவது முறையில் ஓவியக் கலை அச்சுக்கோப்புச் சாதனம் (Graphic Arts Composing Equipment) பயன்படுகிறது. இதில் நிமிடத்திற்கு 3,600 சொற்கள் வீதத்தில் அச்சடிக்கப் படுகிறது.

நூல் விவரங்கள் பதிவு செய்த நாடாக்களின் நகல்களைக் குறைந்த விலையில் தேவையானவர்கள் வாங்கிக் கொள்ளலாம். இந் நகல் நாடாக்கள், கல்வி நிறுவனங்களுக்கும், ஆராய்ச்சிக் கூடங்களுக்கும் வழங்கப்படுகின்றன. பொருத்தமான மின் காந்த சாதனத்தின் உதவி கொண்டு இந்த நாடா நகல்களை எளிதாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## அமைப்பு முறை

நாட்டுத் தலைமை மருத்துவ நூலகம் ஐந்து உட் பிரிவுகளாகவும் (Internal Divisions) இரு வெளிப் பிரிவுகளாகவும் (External Divisions) பிரிக்கப்பட்டுள்ளன. ஐந்து உட்பிரிவுகள் வருமாறு:— 1. தொழில் நுட்பப் பிரிவு (Technical Services Division) 2. ஆய்வு உதவிப் பணிப் பிரிவு (Reference Services Division); 3. நூல் விவரத் தொகுதிப் பணிப் பிரிவு (Bibliographic Services Division) 4. தகவல் பகுத்தாய்வுப் பிரிவு (Data Processing Division) 5. மருந்து வரலாற்றுப் பிரிவு (History of Medicine Division)

இரு வெளிப் பிரிவுகளாவன :— 1. வெளியீட்டு—மொழி பெயர்ப்புப் பிரிவு (Publication and Transl. tion Division); 2. ஆராய்ச்சி-பயிற்சிப் பிரிவு (Research and Training Division).

## தொழில் நுட்பப்பணிப் பிரிவு

தொழில் நுட்பப் பணிப் பிரிவின் அலுவல்கள் என்ன? இந்த நூலகத்தின் மற்ற வெளியீடுகளையும் அனைத்து நாடுகளுடனும் பரிமாறிக் கொள்ளல், எந்த மருத்துவத் துறைகளை இந்நூலக அலுவல் வரம்பின் கீழ்க் கொண்டு வர வேண்டும் என்பதைத் தீர்மானித்தல், மருந்துகள் தொடர்பான எல்லாவிதமான நூல்கள், பருவ வெளியீடுகள், திரைப் படங்கள், ஒலிப்பதிவுகள் (Recordings) மற்றும் இன்னபிற நூலகச் சாதனங்களையும் வாங்கிப் பகுத்து, வகுத்து வகைப்படுத்துதல், பின்னர் அவற்றிற்கான பட்டியல் தயார் செய்து அவற்றை முறையாக வைத்துக் காத்தல் முதலியன இப்பிரிவின் பணிகளாகும்.

## ஆய்வு உதவிப் பணிப் பிரிவு

வாசகர்கள் கேட்கும் ஆய்வு உதவி நூல்களையும் (Reference Books), நூல் விவரத் தொகுதிகளையும் உடனுக்குடன் தேடி எடுத்துக் கொடுப்பது இப்பிரிவுதான். நூலகத்திற்கு நூலகம் நூல் வழங்கும் திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பும், சேகரித்த நூல்களை முறையாகக் காத்தோம்புதலும் இதனைச் சாரும். புகைப்படம் — புகைப்பட நகல் எடுக்கும் பணிகளும் இப்பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. ஆய்வு உதவி நூல்களைத் தேடி எடுத்துத் தரக் கட்டணம் கிடையாது. புகைப்பட நகல்கள் எடுப்பதற்கு அதற்காகும் செலவுத் தொகை மட்டும் வசூலிக்கப்படுகிறது.

## நூல் விவரத் தொகுதிப் பிரிவு

பொருள் வரிசைப் பட்டியலில் அடங்கியுள்ள கட்டுரைகளுக்கான பொருள் தலைப்புகளை (Subject headings) இப்பிரிவு நிர்ணயிக்கிறது. மின்காந்தக் கருவிகளின் துணை கொண்டு தகவல்களை அறிவதும், பொதுக் கட்டுரைகளிலிருந்து அந்தத் துறைகள் பற்றிய தகவல்களைப் பகுத்து எடுப்பதும் இப்பிரிவின் பணிகளாகும்.

## தகவல் பகுத்தாய்வுப் பிரிவு

தாறுமாறாகக் கிடக்கும் பலதிறப்பட்ட தகவல்களைப் (Data) பகுத்தாய்ந்து, கருவிகளால் கையாள்வதற்கு ஏற்ற வாறு முறையாகத் தயாரிப்பது இப்பிரிவின் முக்கிய அலுவல் ஆகும். கருவிகளுக்கான புதிய செயல் திட்டங்களை வகுப்பதும், நூல் விவரத் தொகுதிகளைத் தயாரிப்பதும், கருவிகள் துணையுடன் பொருள் வரிசைப் பட்டியலைத் தயாரிப்பதும் இந்தப் பிரிவே.

## மருந்து வரலாற்றுப் பிரிவு

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவ நூல்களையும் சாதனங்களையும் சேகரித்து அவற்றின் பட்டியலைத் தயாரித்தல் இதனது முக்கிய பணியாகும். கையெழுத்துப் பிரதிகள், கட்டுரைகள், ஓவியங்கள், ஆய்வு உதவி நூல்கள், நூல் விவரத் தொகுதிகள் ஆகியவை அடங்கிய சுமார் 60,000 வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நூல்களை இப்பிரிவினர் இதுவரை சேர்த்து வைத்துள்ளனர். பிற நூலகங்கள் கடனாக நூல்களைக் கோரினால், அந்தக் கோரிக்கையை இந்தப் பிரிவு ஆராய்ந்து நூல்களை வழங்கலாமா என்பது குறித்து ஆலோசனை கூறுகிறது. கோரப்படும் நூல்களைக் கடனாக கொடுக்க முடியாத நிலை இருக்குமானால், அந்நூல்களின் நுண்சுருள் நகல்களை (Microfilm Copies) எடுத்து வழங்க இப்பிரிவு ஏற்பாடு செய்கிறது. இதற்காகும் செலவு தொகையைக் கோருபவரிடம் வசூலிக்கிறார்கள்.

## வெளியீட்டு—மொழிபெயர்ப்புப் பிரிவு

நாட்டின் சுகாதார மேம்பாட்டு முயற்சிகளுக்கு உறுதுணை செய்யக்கூடிய மருத்துவ நூல்களின் திறனாய்வுகள் (Critical Reviews), வழிகாட்டிகள் (Directories), ஆய்வுக் குறிப்புகள், நூல் விவரத் தொகுதிகள் ஆகியவற்றை அச்சிட்டு வெளியிடுவதும், மருத்துவம் தொடர்பான வெளி

நாட்டு இலக்கியங்களை மொழி பெயர்த்து வெளியிடுவதும் இப்பிரிவின் பணியாகும்.

## ஆராய்ச்சி—பயிற்சிப் பிரிவு

மருத்துவம் பற்றிய தகவல்களை எந்திரங்களில் பதிவு செய்யவும், பதிவான தகவல்களை மீண்டும் தேடி எடுக்கவும் நிபுணர்களுக்கு இப்பிரிவு தனிப்பயிற்சி அளிக்கிறது. நூலகம் பற்றிய தகவல் தொடர்பு அலுவல்கள் மேலும் சீராகவும் துரிதமாகவும் நடைபெறுவதற்கான புதிய வழிமுறைகளை ஆராய்ந்து கண்டு பிடிப்பதும் இப்பிரிவின் பணிகளில் ஒன்றாகும் மருத்துவ நூலகர்கள், மருத்துவ விஞ்ஞானத் தகவல் நிபுணர்கள், தகவல் பகுத்தாய்வு வல்லுநர்கள், மருத்துவ விஞ்ஞான எழுத்தாளர்கள், கட்டுரையாளர்கள் ஆகியோருக்கு அந்தந்தத் துறையில் சிறப்புப்பயிற்சி அளிப்பதற்கு இந்தப் பிரிவு ஏற்பாடு செய்கிறது. இப்பயிற்சிக்கு ஆகும் செலவை இப்பிரிவே ஏற்றுக் கொள்கிறது

## உலகுக்கு வழிகாட்டி

மருத்துவ விஞ்ஞானம் தொடர்பாகப் பலதிறப்பட்ட பருவ வெளியீடுகளை வெளியிட்டு வருவது நாட்டுத் தலைமை மருத்துவ நூலகத்தின் தலையாய பணிகளில் ஒன்றெனக் கூறலாம். மருத்துவம் பற்றிய நவீன ஆராய்ச்சிகளும், புதிய கண்டுபிடிப்புகளும் உலகமெங்குமுள்ள மக்களுக்கு உடனுக்குடன் தெரிவதற்கு இந்த வெளியீடுகள் உதவுகின்றன. இதனால் இங்கிருந்து வெளியாகும் வெளியீடுகளை, எல்லா நாடுகளிலுமுள்ள மருத்துவ விஞ்ஞானிகளும், ஆராய்ச்சிக் கூடங்களும், மருத்துவ வல்லுநர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் வியப்பேதுமில்லை. உலகில் மிகப் பெரிய இந்த நூலகம், அமெரிக்க மக்களுக்குப் பயனளிப்பதுடன் நில்லாமல், அகில உலக மக்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்கிறது.

# 11. பிற சிறப்புக்கள்

### நூலகவியல் கல்வி

நூலகத் துறையில் முன்னணியில் நிற்கும் அமெரிக்காவில் நூலகவியல் கல்வி உயர்ந்த நிலையில் விளங்குவதில் வியப்பில்லை. பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்வியைப் போலவே நூலகவியலும் தொழிற்கல்வியாகக் கற்பிக்கப் படுகின்றது. அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் பட்டப்படிப்பு நிலையிலும், பட்ட மேற்படிப்பு நிலையிலும் நூலகவியல் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பட்டத்திற்குக் கீழ்ப்பட்ட நிலையிலும் (Undergraduate Level) ஒரு வகுப்பு நடக்கின்றது. இவ்வகுப்பு முக்கியமாக பள்ளி நூலகர்கள், ஆசிரிய—நூலகர்கள் ஆகியோருக்கென நடைபெறுகிறது. சிகாகோ பல்கலைக் கழகத்தில் மட்டும் பொதுக் கல்வி அமைப்பின் (General Education System) ஒரு தொடர்ச்சியாகவே நூலகவியல்பட்ட வகுப்பு நடத்தப் படுகிறது நூலகவியல் கல்வி பயிலுவதற்கு வலுவான ஆயத்தக் கல்வியாகவும், உயர்ந்த நிலையில் இத்துறையில் சிறப்பாய்வு (Specialisation) நடத்துவதற்குப் போதிய கால அவகாசம் தரும் வகையிலும் இது அமைந்திருக் கிறது

பொதுவாக அமெரிக்காவிலுள்ள நூலகப் பள்ளிகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டனவாகவே உள்ளன. நூலகத் தொழிலின் தனித்தன்மை, நடைமுறை அம்சங்கள்

ஆகியவற்றின் அடிப்படையில் இந்நூலகப் பள்ளிகள் அமைந்திருப்பதே இந்த வேறுபாட்டுக்குக் காரணம். பாடத்திட்டங்களிலும், பாடங் கற்பிப்பதிலும் வேறுபாடு இருந்தபோதிலும், நூலகப் பணிக்கான சிறந்தபயிற்சியை வழங்குவதே இப்பள்ளிகளின் பொதுவான நோக்கமாக இருந்து வருகிறது.

நூலகப் பள்ளிகளில் பல வகுப்புகள், பலவிதமாக நடத்தப்படுகின்றன. அதே சமயத்தில், ஒரு குறிப்பிட்ட துறையில் சிறப்பாகப் பயிற்சி பெறுவதற்கும் பெரும் அளவில் வாய்ப்பளிக்கப்படுகிறது. நூலகவியலின் தந்தை எனக் கருதப்படும் மெல்வில் டூவியின் (Melvil Dewey) காலத்திலிருந்து நூலகவியலின் பாடத்திட்டம் சீரான முறையில் வளர்ந்து வந்திருக்கிறது. தொடக்கத்தில், சில குறிப்பிட்ட எளிய அலுவல்களில் பயிற்சியளிப்பதுதான் பயிற்சியின் நோக்கமாக இருந்தது. இன்று, ஏராளமான தொழிற் துறைகளில் தனிப்பயிற்சியளிக்கும் வகையில் பாடத்திட்டம் விரிவடைந்திருக்கிறது. சிறப்புத் துறைகள் பலவாகப் பெருகியிருப்பதால், நூலகர்களின் தன்மையும் அந்தந்தத் துறைகளுக்கு ஏற்றவாறு மாறுபட்டிருக்கின்றது. நூலகவியல் கல்வியானது இன்று சில எளிய நுட்பங்களில் பயிற்சி பெறுவதுடன் நின்றுவிடவில்லை. பல திறமைகளின் கூட்டுச் சேர்க்கையாக அமைந்துள்ளது. நூல்கள் மட்டுமின்றி பல்வேறு சாதனங்களும் நூலகத்தின் உறுப்புக்களாக இருந்துவருவதால், அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து சீரான முறையில் இயக்கி நூலகப்பணி திறமையாக நடைபெறச் செய்யவேண்டியது இன்றைய நூலகர்களின் பொறுப்பாக இருக்கிறது. புதிய செய்திகளையும், தகவல்களையும் மக்களுக்கு அறிவிக்கும் கருவியாக நூலகங்கள் இன்று பணியாற்றி வருவதால், சமூகத்தில் ஒழுக்க நெறியை உருவாக்கும் ஓர் இன்றியமையாத சாதனமாகவும் நூலகவியல் இன்று ஆகியிருக்கிறது.

## ஒருங்கிணைப்பு

நூலகத்தின் பல்வேறு பணிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் கடந்த பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் இந்த ஒருங்கிணைப்பு முடியவில்லை என்றே சொல்ல வேண்டும். நூலகத்திலுள்ள நூல்களையும், பிற சாதனங்களையும் 'எப்படிப் பயன்படுத்துவது?' என்ற சிக்கலுக்கே அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அவற்றை 'எப்படி அமைப்பது?' என்ற சிக்கலுக்குக் குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது. பழைய கருவிகளையும், நூலகமுறைகளையும் மாற்றியமைப்பதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. எனினும், இத் துறையில் சில புதிய, குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டு வருகின்றது. பொருள் வாரி நூல் விவரத் தொகுதி இயல் (Subject Bibliography) பற்றிக் கல்வி கற்பிப்பதை அந்தந்த ஆராய்ச்சித் துறைகளுடன் இணைத்திருக்கிறார்கள். நூல் விவரத் தொகுதி இயல் கற்பிப்பதிலும், நூலகர் பயிற்சியிலும் ஆராய்ச்சி தொடர்பான சிக்கல்கள் பலதரப்பட்டவை என்பதும், அச்சிக்கல்களைப் பல முனைகளிலிருந்து அணுகவேண்டும் என்பதும் இப்பொழுது உணரப்பட்டு வருகிறது. அதே போன்று 'பொருளடக்க ஆய்வும்' (Content Analysis) தனி இயலாக உருவாகிக்கொண்டு வருகிறது நூல்களைத் தக்கமுறையில் ஆராய்ந்து அவற்றின் தராதரத்தை மதிப்பிடுவதற்குப் பொருளடக்க ஆய்வு உதவியாக இருக்கிறது. சிக்காகோ நூலகப் பள்ளியில் இந்தப் புதிய நூலகவியல் கல்வி முறைகள் கையாளப்படுவதைக் காணலாம். நூலகவியல் கல்வித்துறையில் சிறப்பான இடம்பெற்று இந்தப் பள்ளி விளங்குகிறது.

## நூலகத்தில் பயிற்சி

பல்கலைக் கழகங்களில் விரிவான கல்வி வசதிகள் அளிக்கப்படுவதுடன், பல பெரிய நிறுவனங்களில் "உள்சேவை" பயிற்சிக்கான (In-Service Training) வசதிகளும் உள்ளன

அந்தந்த நூலகத்தின் தேவைகளுக்கிணங்க, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்களுக்கு, இவர்களின் சேவை நிரந்தரமாக்கப்படுவதற்கு முந்திய காலத்தில் (Probation Period) உரிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சில இடங்களில் இந்தக் காலம் ஈராண்டுகள் வரை நீடிக்கிறது. இக்காலத்தில் அலுவலர்களுக்கு நூலகத்தின் எல்லாப் பணிகளிலும் ஆழமான பயிற்சியளிக்கப்படுகிறது. நூலகப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் நூலகத்தில் எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்பது குறித்துச் சில நூலகங்கள், அந்த நூலகப்பள்ளிகளுக்கு அறிக்கைகள் அளித்து வருகின்றன. நூலகவியல் கல்வியின் குறைகளை அறிந்து கொள்ளவும் கல்வித்திறனை மேம்படுத்தவும் இந்த அறிக்கைகள் உதவுகின்றன.

அமெரிக்காவில் கல்வி புத்தம் புதிய துறைகளையெல்லாம் உள்ளடக்கி அபரிமிதமான முறையில் விரிவடைந்து கொண்டு வருகிறது. கல்வியின் துரிதமான வளர்ச்சிக்கு ஏற்பக் கல்வி வசதிகளைப் பெருக்க வேண்டியிருக்கிறது. கல்வியில் எந்த ஒரு புதிய துறை தோன்றினாலும், முன்னேற்றம் ஏற்பட்டாலும் அதற்கான வசதிகளை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டியது நூலகங்களின் முதற் கடமையாகிறது. இந்தக் கடமையை அமெரிக்க நூலகங்கள் மிகவும் விழிப்புடனிருந்து நிறைவேற்றி வருகின்றன. கல்வித் துறையில் ஏற்படும் புதிய மாறுதல்களின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து அதற்கேற்றத்தக்க வசதிகளைச் செய்து, பணிகளை ஆற்றும் வகையில் நூலக அலுவலர்களுக்கு அவ்வப்போது புதிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. நூலகப் பள்ளிகள், நூலகச் சங்கங்கள் ஆகியவை மாநில நூலக அதிகாரிகளின் உதவியோடு அவ்வப்போது நூலக அலுவலர்களுக்கு மறு பயிற்சி வகுப்புகளையும் கருத்தரங்குகளையும், மகாநாடுகளையும் நடத்தி வருகின்றன. நூலகத் தொழில் நிபுணர்களும் பல்வேறு துறைகளில்

தனிப் பயிற்சிபெற்ற வல்லுநர்களும் அவ்வப்போது கூட்டங்களும் மகாநாடுகளும் நடத்தி நூலகத் துறையில் புதிதாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள், மாற்றங்கள் குறித்து விவாதிக்கிறார்கள். இவையெல்லாம் நூலகரின் அறிவாற்றலை விரிவாக்கவும் திறமையை வளர்க்கவும் பேருதவியாகவிருக்கின்றன.

## சிக்கன முறைகள்

அமெரிக்க நூலகங்களில் இன்று பல சிக்கன முறைகள் கையாளப்படுகின்றன. பணிப் பகுப்பு (Job Analysis), பணிநிலை வகுப்பு (Classification of Positions), அடக்கக் கணிப்பு (Cost Accounting), நேர—இயக்க ஆய்வு (Time and Motion Study), மற்றும் இவை போன்ற சிக்கன நடைமுறை நுட்பங்கள் நூலகங்களிலும் வெகுவாகக் கையாளப்படுகின்றன. வழக்கமான அலுவல்கள் (Routine Operations) பற்றிய விவரங்கள் அனைத்தும் நிருவாக அறிக்கைகளில் (Manuals) கவனமாகப் பதிவு செய்யப்படுகின்றன. அலுவல்களுக்கு இணக்கமான முறையில் பதிவேடுகளின் அமைப்பும் வடிவங்களும் அமைந்துள்ளன. தொழில் முறை (Professional) அலுவல்கள் எவை? எழுத்து முறைப் (Clerical) பணிகள் எவை? என்பதையெல்லாம் திட்டவட்டமாக அவர்கள் வரையறுத்திருக்கிறார்கள். நிருவாக அமைப்பு மிகச் சிறந்த முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவைக்கு மீறிய தகவல்களும், அளவுக்கு அதிகமான சிறப்புப் பயிற்சியும் (Specialisation), பெரும் அளவிலான அலுவல்களும், சில சமயங்களில், நிருவாகத்தில் தனிப்பட்டவரின் அலுவல் வரம்பை குறுகலாக்கிவிடுவதுண்டு. எனினும், திருவாகத்தையும், நூலகப் பணியையும் சீராக்கவும் எளிதாக்கவும் உருவான ஆலோசனைகள் கூறும் தனிப்பட்டவர்களின் அறிவாற்றலுக்கும், திறமைக்கும், அனுபவத்திற்கும் உரிய மதிப்பும் மரியாதையும் கிடைத்து விடுகின்றன. அங்கு அதிகாரிகள் உண்டு; அவர்களுக்கு அதிகாரங்களும்

உண்டு. ஆனால், அதிகார வர்க்கத்தின் வெற்று ஆதிக்கம் இல்லை. அடிக்கடி நடைபெறும் விவாதங்களும், கூட்டங்களும், மாநாடுகளும் நிருவாகத்திலுள்ள எல்லா அதிகாரிகளையும் அலுவலர்களையும் ஒன்று சேர்க்கின்றன. அவர்கள் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசி ஒருவரை யொருவர் புரிந்து கொள்வதால், எதை எப்படிச் செய்யவேண்டுமென்பதை எல்லோரும் நன்கறிந்து கொள்கிறார்கள். எனவே எந்த ஒரு அலுவலைத் தொடங்கினாலும் அது எல்லா மட்டங்களிலும் தங்கு தடையின்றி விரைவாக நடந்தேறுகிறது. வீண் காலதாமதம் செய்யும் 'சிவப்பு நாடா' முறையை அங்கு காண முடிவதில்லை. முக்கியமாகப் பெரிய நிறுவனங்கள், புத்துணர்ச்சியோடும், சேவை மனப் பாங்கோடும் துரித கதியில் செயல்பட்டுவருவதைக் காண வியப்பு மேலிடுகிறது.

அமெரிக்காவில் நூலக நிருவாகத்தின் தரமும் திறமையும் உயர்வாக இருப்பது போலவே அதற்கான செலவும் அதிகமாக இருக்கின்றது. ஊதியங்கள் உயர்வாக இருப்பதே இதற்கு முக்கிய காரணம் எனலாம். இந்தியாவுடன் ஒப்பிடும்பொழுது, அமெரிக்காவில் நூலக நிருவாகச் செலவு 6 முதல் 8 மடங்கு அதிகமாக இருக்கிறது. அதற்கு ஏற்றாற்போல் நிருவாகத்தரம் உயரியதாக உள்ளது. தனிப்பட்டவர்களின் திறமையும் மிகுதியாகவே இருக்கிறது. எளிதாகவுள்ள பல வேலைகளை ஒருவரே கவனிப்பது சாதாரணம். எடுத்துக்காட்டாக, ஒரு மாவட்டம் (County) முழுவதிலும் இயங்கும் ஒரு நூலக ஊர்தியின் பணிகளை ஒருவரே செய்கிறார். இவரே ஊர்தியைஓட்டுவார். நூலகரும் இவரே. நூல்களை வழங்குவதும் வாங்குவதும் இவர்தான். மற்றும் ஊர்தி நூலகச் சேவையோடு தொடர்புடைய எழுத்து வேலைகள், நுட்பப் பணிகள் இவற்றைக் கவனித்துக் கொள்வதும் இவரே.

## அங்கும் இங்கும்

அமெரிக்காவில் நூலகத் துறையில் ஏற்பட்டுள்ள மாபெரும் முன்னேற்றங்களை நேரில் கண்டபோது, அந்தத் தரத்தை எட்ட இந்திய நூலகங்கள் என்னென்ன செய்ய வேண்டும்; அதற்கு மக்கள் எவ்வெவ்வாறு பல ஆக்கப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட வேண்டும் என்பன பற்றி என் உள்ளத்தில் எண்ணிப் பார்த்தேன். அந்த நினைவு அலைகளை எனது ஆலோசனைகளாக இங்கு தருவது பொருத்த மெனக் கருதுகின்றேன்.

### 1. பல்கலைக்கழக நூலகங்கள்

இந்தியாவில் பல்கலைக் கழக நூலகங்கள் இன்று ஓர ளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கின்றன என்று சொல்ல லாம். இந்நூலகங்கள் இப்பொழுது ஒரு குறிப்பிட்ட கட்டத்தை எட்டியிருக்கின்றன. இனிமேல், இவற்றைத் துரிதமாக விரிவாக்குதல் வேண்டும். கடந்த காலத்தில் பல்கலைக்கழக நூலகங்களின் வளர்ச்சி எந்தெந்தத் திசை களில் ஏற்பட்டு வந்திருக்கின்றது என்பதைத் தீர்மானித் துக் கொண்டு இனிமேல் அவற்றின் முன்னேற்றம் எவ்வெவ் வகையில் அமைய வேண்டும் என்பதை முடிவு செய்து, அதற்கு ஏற்ற கொள்கைத் திட்டங்களை வகுத்துச் செயல் படுத்த வேண்டும்.

வலிமையற்ற ஒரு தலைமை நூலகத்துடன் (Main Library) பல்வேறு துறைகளில் நூலகங்களை அமைத்து நடத்தி வருவது பழைய முறை. இப்பழைய முறை, அதிகச் செலவை உண்டு பண்ணுகிறது. அத்துடன் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உகந்ததாகவும் இல்லை. இதை அமெரிக்கப் பல்கலைக்கழக நூலகங்கள் தெளிவாக உணர்த்துகின்றன. இப்பொழுது ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கும், பொதுக் கல் விக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், அதற் குப் பழைய முறையிலிருந்து மாறுப்பட்ட புதிய நூலக

அமைப்பு முறை தேவைப்படுகிறது. அண்மைக் காலமாக, பெரும் பொருட் பிரிவு அமைப்பு முறை (Divisional Pattern of Organisation) தற்காலத் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமானதெனக் கருதப்பட்டு வருகிறது. ஆராய்ச்சிப் பணிகளைத் திறமையாகவும் சிக்கனமாகவும் விரிவாக்குவதற்கு இந்த முறை அதிக வாய்ப்பளிக்கிறது. பழைய முறையில் கண்காணிப்புப் பொறுப்புகளுடன் அந்தந்தத் துறைகளின் நூலகங்கள் செயல்படுவதால் நூல்களும் சாதனங்களும் தேவையின்றி ஒன்றுக்கு இருமடங்காகப் பெருகுவதுடன், ஆராய்ச்சி வசதிகளை ஒருங்கிணைந்த முறையில் பெருக்குவதற்கும் அது தடங்கலாக இருக்கிறது. அமெரிக்காவில் நிலவிய பழைய நிலையே இன்று இந்தியாவில் நீடித்து வருகிறது. ஆகவே இந்தியாவில் பல்கலைக் கழக நூலகங்களின் அமைப்பு முறையை மாற்றி புதிய நிலைமைகளுக்கேற்ப நவீன வசதிகளோடு சீர்திருத்தி அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

நூல்களை வாங்குவதிலும் நமது பல்கலைக் கழக நூலகங்கள் புதிய முறையைக் கையாள்தல் வேண்டும். இருக்கின்ற நூல்களையும் படிக்கவும் ஆராய்ச்சி நடத்தவும் தேவைப்படும் நூல்களையும் தீர ஆராய்ந்து அறிந்து, அதன் பின் மிகவும் கவனமாக நூல்களை வாங்குதல் வேண்டும். எல்லா நூல்களையும் எல்லா நூலகங்களும் வாங்குவது இயலாது; அது சரியான செயலும் அன்று. எனவே, உடனுள்ள பிற பல்கலைக்கழகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கூட்டுறவு அடிப்படையில் நூல்வாங்கும் திட்டத்தை வகுப்பது நல்லது. இந்தக் கூட்டுறவுத் திட்டத்தில் சேரும் நூலகங்களுக்குப் பொதுவான ஒரு நூலக நூற்பட்டி தயாரித்து வைக்கலாம்.

ஆராய்ச்சி வசதிகளைப் பெருக்க வேண்டுமெனில், பல்கலைக் கழக நூலகங்களுக்கு வரும் பருவ வெளியீடுகளின் எண்ணிக்கை பலமடங்காகப் பெருக வேண்டும். இதிலும் கூட்டுறவு முறை பயனுடையதாக இருக்கும். பொதுவாக

இந்தியப் பல்கலைக் கழக நூலகங்களில் அரசாங்க ஆவணங்களைச் (Documents) சேகரிப்பது மிகக் குறைவாகவே நடைபெறுகிறது எனலாம். இது ஒரு பெருங்குறையே. இந்த நூலகங்களில், மாநில, மத்திய அரசுகளின் ஆவணங்களைச் சேகரித்து வைப்பதற்கு விரிவான ஏற்பாடுகளும் வசதிகளும் உடனடியாகச் செய்தல் வேண்டும். இதற்காக அரசாங்கங்களுக்கு ஆகும் செலவு மிகவும் சொற்பம். ஆனால், இதனால் நாடு முழுவதிலுமுள்ள மாணவர்களுக்கும் அறிஞர்களுக்கும் உண்டாகும் நன்மைகள் அளப்பரியன.

நமது பல்கலைக் கழக நூலகங்களில் பல பழைய நூல்கள் கிடைப்பதில்லை. இந்தக் குறையை நீக்குவதற்கு நூல்களை நுண்சுருள்களிலும் (Microfilms), நுண் அச்சுக்களிலும் (*Microprints*) படியெடுத்து வைத்துக் கொள்வது மிகவும் உதவியாக இருக்கும். இக்காலத்தில் ஆராய்ச்சிக்கு முக்கியமாகப் பயன் படுபவை நாளிதழ்கள், இவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து வைப்பது எளிதான காரியமன்று. எனவே, இவற்றையும் நுண்சுருள்களிலும் நுண் அச்சுக்களிலும் படியெடுத்து வைத்துக் கொள்ளலாம். இது மிகவும் சிக்கனமான முறைகளில் ஒன்று.

நூல்கள், நாளிதழ்கள் முதலியனவற்றைப் புகைப்படப் படிகள் எடுப்பதற்கும் நமது பல்கலைக்கழக நூலகங்களில் வசதிகள் செய்யவேண்டும். சென்னைப் பல்கலைக் கழகம், டெல்லிப் பல்கலைக் கழகம் போன்ற ஒரு சில பல்கலைக் கழக நூலகங்களில் இன்று இவ்வசதி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு நூலகத்திலும் உடனடியாக இவ்வசதியை ஏற்படுத்துவது இயலாது. ஆகையால் படிப்படியாக எல்லா நூலகங்களிலும் இவ்வசதியை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

### 2. பயிற்சி பெற்ற ஊழியர்கள்

நூலகப் பணிகளைப் பொறுத்தவரையில், அமெரிக்காவுடன் ஒப்பிடும்பொழுது இந்திய நூலகங்கள் எவ்வளவோ

பின் தங்கிய நிலையிலிருக்கின்றன. தகுதியும், பயிற்சியும் பெற்ற ஊழியர்கள் இல்லாமையே இதற்கு முக்கிய காரணம் எனலாம். தமிழ் நாட்டில் இன்று அரசாங்கத்தினரால் நடத்தப்படுகின்ற பல கல்லூரிகளில் நூலகவியலில் பட்டம் பெற்றோர் நூலகர்களாக இல்லாமலிருப்பது பெருங்குறையாகும். அவ்வாறே மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் நடத்தப் பெறுகின்ற நூலகங்களை மேற்பார்வையிடுவதற்குப் பல மாவட்டங்களில் நூலகர் இல்லை என்பதும் நாம் அறிவோம். இதற்குக் காரணம், ஒன்று அவர்களுக்குப் போதிய ஊதியம் கொடாமலிருப்பது; மற்றொன்று அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு நூலக ஆட்சியாளர்கள் முட்டுக்கட்டைபோடுவதாகும். இன்று கூட ஒரு சில கல்லூரிகளில் பயிற்சி பெற்ற முழு நேர நூலகர் பணியாற்றினாலும், அவர் புதிய முறைகளைப் புகுத்தி, கல்லூரி நூலகத்தினை விரைவில் வளரச் செய்வதைத் தடை செய்வது போன்று பழமையில் முழுக்க முழுக்க ஊறித்திளைத்த பேராசிரியர் ஒருவர் அவருக்கு மேற்பார்வையாளராக இருக்கிறார். இம்முறை இன்று பொருந்துவதன்று. நூலகரும் ஒரு துறையின் தலைவர் என்ற நிலை ஏற்படின் அவர் உற்சாகமாகப் பணியாற்ற வழி உண்டு. அவருக்கு மேலதிகாரியாக கல்லூரி முதல்வர் ஒருவர்தான் இருக்க வேண்டும். மேலும் பேராசிரியர்கள், முதல்வர், நூலகர் ஆகியோர் அடங்கிய நூலகக்குழு நூலகருக்கு ஆலோசனை கூறலாம். கல்லூரி நூலகர் கல்லூரி விரிவுரையாளராகக் கருதப்பட வேண்டும் என்று கல்வி வல்லுநர் அறிக்கைகள் பல கூறினும் ஊதியத்தைப் பொறுத்தமட்டில் குறைத்தே கொடுக்க வேண்டும் என்று ஒரு சிலர் எண்ணுகின்றனர். இது மிகவும் தவறான கருத்தாகும். பொதுக் கல்வியில் ஒரு பட்டமும், நூலகவியலில் ஒரு பட்டமும் ஆக இரண்டு பட்டங்கள் பெற்று வருகின்ற ஒருவருக்குக் குறைந்தது விரிவுரையாளர்க்கு உரிய ஊதியமாவது இருத்தல் வேண்டும். மற்றொன்றும் இங்கு கருதத்

தக்கது. விரிவுரையாளர் ஒரு சில ஆண்டுகளில் பேராசிரிய ராகலாம். அடுத்த சில ஆண்டுகளில் கல்லூரி முதல்வராக லாம். இவ்வாய்ப்புகளையெல்லாம் பெறமுடியாத நிலையி லிருக்கின்ற கல்லூரி நூலகருக்கு இந்த ஒரு சலுகையாவது அளிக்க வேண்டுவது கல்லூரிப் பொறுப்பாளர்கள், அரசி னர் தலையாய கடமையாகும்

அண்மையில் தமிழக அரசாங்கம் கல்லூரி ஆசிரியர் களுக்கு ஊதிய உயர்வு கொடுத்துள்ளமையை நாமறி வோம். ஆனால், என்ன காரணத்தினாலோ நூலகரை நமது அரசாங்கம் மறந்துவிட்டது. குறிப்பிடத்தக்க அளவிற்கு அவர்களது ஊதியத்தில் உயர்வு ஒன்றுமில்லை. நூலகரை விரிவுரையாளராகக் கொண்டால் விரிவுரையாளரது ஊதி யத்தையும் தகுதியையும் நூலகர் பெறவேண்டும்- சொல் லளவில் இருந்தால் மாத்திரம் போதாது. விரிவுரையாள ருக்கு உரிய புதிய ஊதியம் ரூ. 300–25–600 ஆகும். நூல கருக்குக் கொடுக்கப்பட்டிருப்பது ரூ. 200–10–300 ஆகும். ஆனால், பல்கலைக்கழகப் பரிந்துரைப்படி இன்று தமிழ் நாட்டில் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற கல்லூரி களில் பணியாற்றுகின்ற நூலகர் பலர் ஏற்கெனவே ரூ. 225–10–275–15–350 என்ற ஊதிய நிலையில் உள்ளனர். புதிய ஊதியத் திட்டத்தை வகுக்கின்றபொழுது ஏற் கெனவே இருக்கின்ற ஊதிய விகிதத்தில் குறைவு ஏதும் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் கடமையாகும். மேலும் இதுபற்றிப் பல்கலைக் கழகத்தை யும் கலந்தே செய்திருக்க வேண்டும். எனினும் நமது தமிழக அரசு இதனை மீண்டும் ஆராய்ந்து பல்கலைக் கழகத் தையும் கலந்து, பல்கலைக்கழக மானியக்குழு செய்திருக் கின்ற பரிந்துரையினையும் கருத்திலே கொண்டு உடனடி யாக விரிவுரையாளருக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியத் தையே நூலகருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யும் என்ற நம்பிக்கையோடு நூலகர்கள் உள்ளனர். மேலும் முதுகலைப் பட்டப் படிப்பு இருக்கின்ற கல்லூரிகளில், முதுகலைப் பட்ட

மும், நூலகவியல் பட்டம் அல்லது டிப்ளமோவும் அல்லது பொதுக் கல்வி இளங்கலைப் பட்டமும் நூலகவியலில் முதுகலைப் பட்டமும் பெற்றவர்களையோ, அன்றி பொதுக் கல்விப் பட்டமும் நூலகவியல் பட்டம் அல்லது டிப்ளமோவோவும் பெற்று ஐந்தாண்டு அநுபவம் உடையவர்களை நூலகராக நியமிக்கலாம். அவர்களுக்குத் தலைமை விரிவுரையாளர்களுக்குரிய ஊதிய விகிதம் (ரூ. 400-800) கொடுத்தல் வேண்டும். பொதுக் கல்விப் பட்டமும் நூலகவியலில் குறுகிய காலப்பயிற்சி பெற்றுச் சான்றிதழும் வாங்கியோர் கல்லூரிகளில் நியமிக்கப்பட்டால் அவர்களுக்கு ரூ 150-10-250 என்ற நிலையில் ஊதியம் கொடுக்கலாம். நூலகர் நிலை உயர்ந்தால் நூலகம் உயரும். நூலகம் உயர்ந்தால் கல்லூரியின் கல்வித்தரம் உயரும். கல்வித்தரம் உயர்ந்தால் மக்கள் உயர்வர். அதன் வழியே நாடும் உயரும்.

### 3. ஆய்வு உதவிப் பணி

நமது நூலகங்களில் ஆய்வு உதவிப் பணி போதிய அளவில் உருப்பெறவில்லை. மேலும் சிறப்பு ஆராய்ச்சி உதவி நமது நூலகங்களில் அளிக்கப்படுவதே இல்லை. ஒரு சில பல்கலைக்கழக நூலகங்களில் சிறப்பு ஆய்வுப் பணிக்கு என்று ஒரு சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்கள் வேறு பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனர். இந்நிலை மாற வேண்டும். இவ்விரு பணிகளைக் கொண்டு தான் பிறநாடுகளில் நூலகத்தின் தராதரம் மதிக்கப்படுகிறது. எனவே, நம் நாட்டில் இவ்விரு பணிகளையும் உரிய முறையில் வளர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கான நிதிவசதிகளும் பயிற்சி வசதிகளும் செய்யப்படவேண்டும். அமெரிக்க நூலகங்களில் ஆராய்ச்சிகளுக்கான உதவிகள் பொருள் வாரியாக மிகவும் சிக்கனமான முறையில் அளிக்கப்பட்டிருக்கின்றன. பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞா

ளம், மானிடவியல், சமூகவியல் என்பன போன்ற குறிப்பிட்ட பிரிவுகளாக நூலகப்பணிகள் வகுக்கப்பட்டிருப்பதால் அந்தந்தப் பிரிவுகளுக்கான உதவிகளை எளிதில் பெற முடிகிறது. நூல்களையும் வாசகர்களையும் நேரடியாக இணைக்கும் விரும்பிய வண்ணம் படிக்கும் முறை *(Open Acess)*, நூல்களைப் பயன்படுத்துவதில் மிகவும் முக்கியமான ஒரு அங்கமாகக் கருதப்படுகிறது. இதுபோன்ற சிறந்த வசதிகளை இந்திய நூலகங்கள் அனைத்திலும் ஏற்படுத்த வேண்டும்.

4. தொழில் நுட்ப முறைகள்

நூலக நூற்பட்டி தயாரித்தல், நூல்களைப் பகுத்து வகுத்தல், பதிவு செய்தல் முதலியன தொடர்பாக இந்தியாவில் கையாளப்படும் முறைகள் தரமானவைகளாக இல்லை. இவற்றைவிட எவ்வளவோ உயர்ந்த சிறந்த முறைகள் இப்பொழுது மேலைநாடுகளில் கையாளப்பட்டு வருகின்றன. முக்கியமாக நூல் வழங்கும் முறைகளும், வழங்கியவைகளைப் பதிவு செய்யும் முறைகளும் மிகவும் பழையவை. இந்தப் பத்தாம்பசலி முறைகளைக் கைவிட்டு நவீன முறைகளைக் கையாள்வதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவில் நூலக நிருவாகத்தை ஒரே சீரான தரத்துடன் அமைப்பதற்கு இதுவரையில் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அண்மைக் காலமாக மூலதனச் செலவுகளுக்கெனப் பல்கலைக் கழகங்களுக்குப் பெரும் அளவில் மானிய நிதிகள் கிடைத்து வருகின்றன. ஆனால், நூலகங்களுக்கெனத் தனியாகப் பெருமளவு நிதி ஒதுக்கப்படுவதில்லை. இந்தியாவின் நிலைமைக்கும் நம் பல்கலைக் கழகங்களின் தேவைக்கும் ஏற்ற முறையில் 'நூலகத்தரம்' *(Standard)* ஒன்றை உடனடியாக உருவாக்க வேண்டும்.

## 5. நூலகக் கட்டிடம்

நூலகக் கட்டிடங்களைப் பொறுத்த வரையில் அமெரிக்காவிடமிருந்து இந்தியா எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டும் அங்கு பெரிய நூலகக் கட்டிடங்கள் ஒலி எதிரொலிக்காத முறையிலும், எளிதில் விரிவுப்படுத்துவதற்கு உகந்த வகையிலும் கட்டப்படுகின்றன அவற்றின் மாதிரியில், உயர அகலங்களை நமது நாட்டு நிலைக்கு ஏற்ப மாற்றி அமைத்து. நம் நூலகக் கட்டிடங்களையும் நன்கு கட்ட வேண்டும். அமெரிக்க நூலகக் கட்டிடங்களின் உயரம் எட்டு முதல் பத்து அடிவரை அமைந்துள்ளது. அங்கு செயற்கை வெளிச்ச முறையை அமைப்பது எளிதாக இருப்பதால் அவர்கள் உயரத்தைக் குறைவாக அமைத்துக் கொள்கிறார்கள். நம் நாட்டில் இயற்கை வெளிச்சம் தாராளமாக உட்புகும் வகையில் பதினாறு அடி உயரத்திற்குக் கட்டிடங்களை அமைக்கலாம் இந்தியப் பல்கலைக் கழக நூலகக் கட்டிடங்களில் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் குளிர் சாதன வசதி (*Air-condition*) ஏற்படுத்துவது நல்லது. இதற்குச் சற்றுச் செலவானாலும், அதனால் விரைவாகச் சிறந்த பலன்கள் ஏற்படுவது உறுதி. அமெரிக்காவில் நூலகக் கட்டிடங்கள் உயரத்தில் சிறியதாக இருந்தாலும் அவை சிக்கனமான முறையிலும் எளிமையோடும் அமைத்திருப்பதுடன் திறமையாக இயங்குவதற்கான எல்லா வசதிகளையும் பெற்றிருக்கின்றன. நூலகம் வளரும் தன்மையது. எனவே, நம் நாட்டில் நூலகக் கட்டிடங்களை கட்டுகின்ற போது, நூலகத்தின் வருங்கால வளர்ச்சியினை மனதிலே கொண்டு கட்டிடங்களை அமைத்தல் வேண்டும். அத்துடன் நின்றுவிடாது, வளர்ச்சிக்கு ஏற்ப நாளாவட்டத்தில் கட்டிடத்தை விரிவுபடுத்தவும் வேண்டும். மேலும், பல்கலைக் கழக நூலகங்களிலும், பெரிய கல்லூரி நூலகங்களிலும் பல மணி நேரம் நூலகத்திலிருந்து படித்துப் பயன்பெறுவோர் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு உரிய அறைகளும், ஆராய்ச்சி செய்வோர் தனியாக அமர்ந்து அமைதியாகத்

தங்களுடைய ஆய்வினைச் செய்வதற்கு ஏற்ற நிலையில் அமைக்கப்பட்ட தனிப்பகுதிகளும் அமைக்கப் பெறுதல் வேண்டும். இதனால் சிறந்த பலன்கள் நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்படும்.

6. நூலகவியல் கல்வி

அமெரிக்க நூலகத்துறையின் தலையாய அங்கமாக அமைந்திருப்பது நூலகவியல் கல்வியாகும். அமெரிக்காவில் 1880இல் எந்த அளவுக்கு நூலகக்கல்வி வசதிகளும், பயிற்சி வசதிகளும் அமைந்திருந்தனவோ அந்த அளவில்தான் நாட்டில் இன்று நம் வசதிகள் உள்ளன. நமது பாடத்திட்டங்கள் மிகக் குறுகிய அளவிலேயே உள்ளன. இந்தியாவில் நூலகவியல் கல்வியை ஒழுங்குபடுத்தி அதைச் சாதாரணத் தொழில்திறன் நிலையிலிருந்து மேம்பட்ட நிலைக்கு உயர்த்தியவர் நூலகவியல் பேரறிஞர் டாக்டர். எஸ். ஆர். ரங்கநாதன் ஆவார். அவருக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். நூலகவியல் கல்விக்கு அவர் வரையறுத்த தரத்தைக் குறையாமல் நிலை நாட்ட வேண்டுமெனில் இந்தியாவில் நூலகவியல் பள்ளிகள் வளர்வதற்குக் குறைந்த அளவு வசதிகளாவது இருக்கவேண்டும். இதற்கு நூலகவியல்பள்ளிகளில் போதிய தகுதி பெற்ற முழுநேர ஆசிரியர்களைப் போதுமான அளவு அமர்த்த வேண்டும். இந்தத் தொழிலில் இறங்கினால் நல்ல வாய்ப்புக்கள் இல்லை எனப் பலரும் கருதுவதால் நூலகப் பள்ளிகளில் பயில திறமையானவர்கள் முன் வருவதில்லை. எனவே, இத்தொழிலைக் கவர்ச்சிகரமானதாக ஆக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். நூலகவியல் கல்வி பயிலுவோர்க்கு உதவிச் சம்பளங்கள் வழங்க அரசினர் முன்வர வேண்டும். அதேசமயத்தில் நூலகவியல் கல்விக்கான பாடத்திட்டங்களையும் இக்காலத்தேவைக்கேற்ப மாற்றியமைத்தல் வேண்டும். மேலும், நூலகவியல் பட்டப் படிப்புக்கு வருகின்ற மாணவர்கள் ஏற்கனவே பொதுக் கல்வியில் பட்டம் பெற்றிருப்பதால், ஓராண்டு

முழுநேர நூலகவியல் பட்டப் படிப்பிற்குப் பின்னர், அமெரிக்காவைப் போன்று, அவர்களுக்கு நூலகவியலில் முதுகலைப்பட்டமே வழங்கலாம். குறைந்த காலத்தில் முதுகலைப்பட்டம் வழங்குவதா? ஏனைய பாடங்களில் முதுகலை மாணவர்கள் இரண்டாண்டுகள் பயிலுகின்றனரே! என்று ஒரு சிலர் எண்ணலாம். ஓராண்டு போதாது என்று கருதினால் அதனை இரண்டாண்டுப் படிப்பாகக் கொண்டு அவர்களுக்கு முதுகலைப்பட்டம் வழங்கலாம் மேலும் பலர் ஏனைய முதுகலைப்பட்டங்களைப் போன்று நூலகவியல் பட்டமும் எம். ஏ., அல்லது எம். எஸ்சி. என்று இருக்க வேண்டுமென விரும்புகின்றனர். இக்கருத்தும் சிந்திப்பதற்குரியதாகும். இரண்டாண்டுகள் பயிலுகின்றகால் மாணவர்கள் நூலகவியல் பள்ளிகளை நடத்துகின்ற பல்கலைக் கழக நூலகங்களிலேயே சிறந்த நேர்பயிற்சியினை நல்ல முறையிலே பெறுவதற்கு உரிய சூழ்நிலையை அமைக்கவேண்டும். ஓராண்டுப் பயிற்சிக்காலமெனினும் அவர்கள் படிக்கின்ற பல்கலைக்கழக நூலகங்களிலேயே தரமான நேர் பயிற்சியைப் பெறுதற்கு வாய்ப்புக்களை வழங்கவேண்டும் மேலை நாடுகளைப் போன்று அவர்களை ஓய்வு நேரங்களில் பல்கலைக் கழக நூலகங்களில் பணியாற்றச் செய்து அதற்கு ஊதியமும் வழங்கலாம். இதனால் அவர்கள் சிறந்த பயன்களை அடைந்து வருங்காலத்தில் நூலகங்களை நன்கு நடத்துதற்குரிய ஆற்றலையும் அனுபவத்தையும் பெற இயலும் இன்று நம் நாட்டில் இரண்டு நிலைகளில் நூலகவியல் பட்டப்படிப்பு உள்ளது. ஒரு நிலை நூலகவியல் இளங்கலைப் பட்டப்படிப்பு (*B. Lib. Sc*); மற்றொரு நிலை முதுகலைப் பட்டப் படிப்பு (*M. Lib. Sc*). இரண்டிற்கும் தனித்தனியாக ஓராண்டு படிப்புக் காலமாகும். முதுகலைப் பட்டம் பெற்றவர்களும் இளங்கலைப் பட்டம் பெற்றோ அன்றி 'டிப்ளமோ' பெற்றோ துறையில் பல ஆண்டுகள் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர்களும் நூலகவியல் கலையில் சிறந்த ஆய்வுகளை நடத்துவதற்கு நம் நாட்டில் வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும்.

அவ்வாறு ஏற்படுத்தினால்தான், நூலகவியல் கல்வி மேலை நாட்டைப் போன்று நம் நாட்டில் நன்கு விளங்கும்.

நூலகவியல் பள்ளிகளில் அவைகளுக்கென தனி நூலகங்கள் விளங்குதல் வேண்டும். அந்நூலகங்களில் நூலகவியல் பற்றிய எல்லா நூல்களும் பருவ வெளியீடுகளும், நூலகவியல் மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்குத் துணைபுரியும் பல நூல்களும் இடம் பெறுதல் வேண்டும். விலையுயர்ந்த பாட நூல்களை மாணவர்களுக்கு அமெரிக்கப் பல்கலைக்கழக நூலகங்கள் வாடகைக்குக் கொடுத்து உதவுவதுபோல் நம் நாட்டிலும் செய்யலாம். நூலக நூற்பட்டியியல், ஆய்வு உதவி இயல் ஆகிய இரு பாடங்களுக்கும் நூலகவியல் பள்ளிகளில் செய்முறைக் கூடங்கள் (*Laboratories*) இருத்தல் வேண்டும். அங்கு இன்றியமையாது தேவைப்படுகின்ற நூல்களும் சாதனங்களும் இருத்தல் வேண்டும். மேலும் நூலகங்களில் பணியாற்றுவோர் பணியாற்றிக் கொண்டே நூலகவியல் கல்வி பயிலுவதற்குரிய வாய்ப்பும் வசதியும் நம் நாட்டில் ஏற்பட வேண்டும்.

7. பொது நூலகங்கள்

அமெரிக்காவில் நூலக வளர்ச்சியைக் கவனிப்பதற்கான அரசாங்க அமைப்பு மிகவும் திறமையாகவும், சிக்கனமாகவும் இயங்கி வருகிறது. அதைப் பின்பற்றி இந்தியாவிலும் ஓர் அரசாங்க அமைப்பை ஏற்படுத்தலாம். அரசாங்க அளவில் அடிப்படை அலுவல்களைக் கவனிப்பதற்குத் தகுதி வாய்ந்த, திறமை வாய்ந்த ஓர் அமைப்பு இல்லாவிடில் பொது நூலக வளர்ச்சிப் பணிகள் வீண் விரயமாகவே முடியும். அமெரிக்காவில் அரசாங்க அளவில் நூலக அமைப்புக்கள் எவ்விதம் செயல்படுகின்றன என்பதை ஆராய்ந்து அவற்றைப் பின்பற்றி இந்தியாவிலும் அமைத்தல் நலம். மேலும் பொது நூலகப் பணியில் அமெரிக்காவில் கையாளும் சில முக்கியமான முறைகளை நம்நாட்டிலும் சிறப்பாகக்

யைபானலாம். ஆய்வு உதவிப் பணியும், ஆலோசனைப் பணியும் நூலகப் பணியின் இரு அடிப்படை அம்சங்களாகும். நூலகத்தைச் சமுதாய மக்களுடன் இணைப்பதற்கு இவ்விரு பணிகளும் உதவுகின்றன. இவ்வழி வகைகளை எல்லாம் நாமும் கடைப்பிடிப்போமானால் நம் நாட்டு நூலகங்களும் சிறந்த பணிகளைச் செய்ய இயலும்.

பல துறைகளிலும் வழிகாட்டியாக விளங்கும் தமிழ் நாடு பொது நூலகத் துறையிலும் வழிகாட்டியாக விளங்குவது நாமறிந்த தொன்றே. சென்னை மாநிலப் பொது நூலகச் சட்டம் 1948–இல் கொண்டு வரப்பட்டது; 1950-இல் நடை முறைக்கு வந்தது. பதினேழு ஆண்டுகளில் பொது நூலகத் துறை குறிப்பிடத் தக்க அளவிற்கு, நாம் அனைவரும் போற்றும் நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளமையை யாரும் மறுக்க இயலாது. இன்று நூலக ஆணைக் குழுவினரால் நடத்தப் பெறும் பொது நூலகங்கள், தலைமை நூலகங்கள், கிளை நூலகங்கள், வழங்கு நூலகங்கள் ஆகப் பல்கிப் பெருகி உள்ளன. அதாவது பல பொது நூலகங்கள் பல ஊர்களில் விரைந்து தொடங்கப் பெற்றன. இனியும் பல நூலகங்கள் திறக்கப்பட விருக்கின்றன. ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்கு இந்த அளவில் நூலகங்களைத் திறப்பதை நிறுத்தி விட்டு, திறக்கப்பட்ட நூலகங்கள் எந்நிலையில் செயலாற்றுகின்றன? மக்களுக்கு அவை எந்நிலையில் துணை செய்கின்றன? திட்டத்தில் குறைபாடுகள் ஏதேனும் உளவா? குறைபாடுகளிருப்பின் அவற்றைக் களைவதற்குரிய வழிவகைகள் என்ன? எல்லா மாவட்டங்களுக்கும் நிதி நிலைமை சரியாக உள்ளதா? இல்லாதிருப்பின் என்ன செய்ய வேண்டும்? திறக்கப்பட்ட நூலகங்கள் திறம்படச் செயலாற்ற மேலும் என்ன செய்யவேண்டும்? என்பனவற்றை எல்லாம் நமது அரசாங்கம் ஆராய்ந்து, பொது நூலகங்கள் திறம்படச் செயலாற்றி, சமுதாயத்தின் இன்றியமையாத அங்கங்களில் ஒன்றாக மாறுதற்கு நல்லதொரு திட்டமொன்றினை வகுத்த பின்னரே, மேற்

கொண்டு பொது நூலகங்கள் திறக்கப்படுவதற்கு அரசாங்கம் ஆதரவு நல்க வேண்டும். மேலை நாடுகளில் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை நூலக விசாரணைக் குழுக்கள் நியமிக்கப் படுகின்றன. அக் குழுவினர் நூலகங்களை எல்லாம் பார்த்த பின்னர், நூலகத் துறையினர், பொது மக்கள் ஆகியோரது கருத்துரைகளையும் தெரிந்து கொண்டு, இறுதியில் சிறப்புக் களையும் குறைகளையும் எடுத்துக் காட்டி, குறைகளை நீக்கு தற்குரிய வழிவகைகளையும் வகுத்தளிக்கின்றனர். அக்குழுவினரது அறிக்கையில் காணும் கருத்துரைகளை நூலக ஆட்சியாளர் மகிழ்ச்சியோடு வரவேற்று, நடைமுறையிலும் கையாண்டு, நூலக வளர்ச்சிக்கு ஆவன செய்து, சிறந்த வெற்றியினையும், நிலைத்த புகழினையும் பெறுகின்றனர். அரசாங்கமும் இதற்குத் தனது ஆதரவை முழுமனதுடன் நல்குகிறது. இதனால் சிறந்த பயன்களை அனைவரும் பெறுகின்றனர். எனவே நமது தமிழக அரசாங்கமும் இத்தகைய குழுவொன்றினை நியமித்து, பொது நூலகங்களின் வளர்ச்சி பற்றி ஆராயச் செய்து, இறுதியில் அக் குழுவினை அறிக்கை ஒன்றினைத் தயாரித்து அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அக்குழுவினைச் சார்ந்த உறுப்பினர்களில் ஒரு சிலர் நூலகவியல் கல்வி அறிவுடையவர்களாக இருக்க வேண்டும்; ஒரு சிலர் சட்டசபை உறுப்பினர்களாகவும் அரசாங்க அலுவலராகவும் இருக்க வேண்டும். மற்றுஞ் சிலர் நூலகத்துறையில் அக்கறையும் ஆர்வமும் உடையவராக இருத்தல் வேண்டும். நூலகவியல் கல்வி பெற்று, சிறந்த அனுபவமும் ஆற்றலும் உடைய ஒருவர் இக்குழுவின் தலைவராக இருக்க வேண்டும்.

மேற்கூறியவாறு அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கைப் படி, குறைகளை நீக்குவதோடு, நிதிநிலையைச் சரிசெய்து கொண்டு, நாம் இத்துறை வளர்ச்சியில் ஈடுபடுவோமானால் நமக்குச் சிறந்த வெற்றி உண்டு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இருக்கின்ற நூலகங்களைப் பலப்படுத்திய பின்னரே மேலும் நூலகங்களை நாம் திறக்க வேண்டும்.

உண்மையைக் கூறப்போனால் நூலகங்களை அதிகமாகத் திறந்த காரணத்தால் ஒரு சில மாவட்டங்களில் நிதிப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக ஊழி யர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம்தரப்படுவதில்லை. இதன் காரணமாக இத்துறையில் பணியாற்றுகின்ற ஒரு சிலர் வேறு துறைக்குச் செல்லுகின்றனர்; செல்ல முயற் சிக்கின்றனர். மேலும் ஒரு சில மாவட்டங்களில் கிளை நூலகங்கள் கடை நிலைப் பணியாளர்கள் பொறுப்பிலே உள்ளன. புதியவர்களும் இத்துறைக்கு வர அஞ்சுகின் றனர். இதற்கு வேறு சில காரணங்களும் உண்டு. ஏனைய துறைகளைப் போன்று பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புக்கள் இத்துறையில் இல்லாமலிருப்பது வருந்துதற் குரியதாகும். இக்குறை உடனடியாக நீக்கப்பட வேண் டும். இருக்கின்ற ஒரு சில உயர் பதவிகளுக்குக் கல்வித் துறையில் பணியாற்றுகின்றவர்களை அதிகச் சம்பளம் கொடுத்து நியமிப்பது இன்று நடை முறையில் உள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டும். நூலகவியலில் குறுகிய கால பயிற்சி பெற்று இரண்டாந்தர நூலகராகப் பணி யாற்றுகின்றவர்களை, ஏனைய துறையினரைப் போன்று துறைத்தேர்வுகளை எழுதச் செய்து, அவர்கள் அத்தேர்வு களில் வெற்றி பெற்றால், அவர்களுக்கே நூலக ஆணைக் குழு வின் கணக்காயர் (*Accountant*) மேலாளர் (*Superintendent*) பதவிகளைத் தரவேண்டும். இதன் காரணமாக அவர் கள் உற்சாகத்துடன் பணியாற்றுவர். துறையை விட்டு நீங்காதும் இருப்பர். மேலும் அவர்கள் உயர்கல்வி பெறு வதற்கு விரும்பினால், அதற்கும் அவர்களுக்கு ஆதரவு நல்கி ஊக்கப் படுத்த வேண்டும். இன்று மேலாளர் பதவிக்கு, பள்ளித் தணிக்கையாளர்களை, நூலகவியல் குறுகியகால பயிற்சி பெறச் செய்து அதிகச் சம்பளத்துடன், நியமிக்கின் றோம். துறையிலுள்ளோரையே இப்பதவிக்கு நியமித்தால் இச் செலவினம் இல்லாது இருக்கும். மேலும் மேலாள ராக இன்று பணியாற்றும் பள்ளித் தணிக்கையாளர்கள்

கல்வித் துறையில் பதவி உயர்வு ஏற்படுங்கால் இத்துறையை விட்டு நீங்கிவிடுகின்றனர். சிலர் பதவி உயர்வு இல்லாமலேயே தங்கள் நிலைத்த துறைக்குத் திரும்பி விடுகின்றனர். இருக்கின்ற ஒரு சிலரும் "இங்கிருந்தால் ஏதோ கூடுதல் சம்பளம் கிடைக்கின்றது; கல்வித் துறையில் பதவி உயர்வு கிட்டியதும் இதனை உதறித்தள்ளி விடவேண்டும்; அதுவரை ஒரு மாதிரியாக இங்கு காலத்தைக் கடத்தி விடலாம்" என்ற மனநிலையில் தான் உள்ளனர். சுருங்கக் கூறின் இவர்கள் இத்துறையில் நீடித்து இருப்பதற்கில்லை. நிலைத்து இல்லாமலிருக்கின்றவர்களுக்கு நூலகத்துறை உயர் பதவிகள் அளிக்கப்படுவதால், நூலகத் துறையில் இருக்கின்றவர்கள், நாளடைவில் துறையை விட்டு நீங்குகின்றனர். இதனால் இருவிதத்தில் நமக்கு நட்டம் ஏற்படுகிறது. எனவே இதனை நமது அரசாங்கம் நன்கு பரிசீலித்து, நூலகத் துறையில் பணியாற்றுவோர், அத்துறையில் வளர்ந்து நிலைத்திருப்பதற்குரிய ஆக்கப் பணிகளைச் செய்தல் வரவேற்பதற்குரியதாகும்.

மேலை நாடுகளைப் போன்று நூலகவியல் உயர் கல்வி பெற்றவர்களையே நூலக ஆணைக் குழுவின் செயலாளராகப் போட வேண்டும். இன்று மாவட்டக் கல்வி அதிகாரிகள் செயலாளராக உள்ளனர். நூலகத் தொழில் துறை வளர வேண்டுமெனின், அத்துடன் பொது நூலகத்துறை மேலும் வளர்ச்சி பெற வேண்டுமெனின், நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் பொது நூலக வளர்ச்சியால் மக்கள் சிறந்த பயன்களைப் பெற வேண்டுமெனின் பொதுக் கல்விப் பட்டமும், நூலகவியல் பட்டமும் பெற்ற, அதாவது நூலகவியல் கல்வி அறிவுடையவர்களே, செயலாளராக வரவேண்டும். ஒரு சிலர் அவர்களுக்கு ஆட்சித்திறனும், அனுபவமும், அரசாங்க அலுவலக நடைமுறையினைத் தெரிந்து கொள்ளக் கூடிய பயிற்சியும் இல்லையே என்று கூறலாம். இது வேண்டுமென்றே எழுப்பும் விவாதமாகும். எனவே இதற்கு முடிவென்பதே இருக்காது. ஏனைய துறைகளை எடுத்துக்கொள்

வோம். ஏன்? கல்வித் துறையையே எடுத்துக்கொள் வோம். மாவட்டக் கல்வி அலுவலரின் தலையாய பணி பள்ளிக் கூடங்கள் சரியாக நடக்கின்றனவா என்பதைப் பார்ப்பதுதான் என்பதை நாமறிவோம். எனவே அவர் களுக்குப் பொதுக் கல்வியோடு ஆசிரியர் பயிற்சிப் பட்ட மும் அவசியமாகிறது. ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெறாத ஒருவர் கல்வி அதிகாரியாக இருக்கிறாரா? இருக்க முடியாது. ஆனால் நூலகக் கல்வியும் பயிற்சியும் பெறாதவரும் மற்றொரு துறையின் முழுநேர ஊழியராகவும் உள்ள ஒருவர் செய லாளராக இருந்து கொண்டு மாவட்ட நூலக ஆணைக் குழு விற்கு ஆலோசனை கூறுவது நம் நாட்டில்தான் நடை முறை யிலுள்ளது. இது வியப்பிற்கும் வேதனைக்கும் உரியதாகும். மேலும் கல்வியதிகாரிகள் பதவிக்கு நேரடியாகத் தேர்ந் தெடுக்கப் படுகின்றதால் (*Direct Recruitment*), அவர்கள் எந்த அனுபவத்தோடு பதவிக்கு வருகின்றனர்? மேலும் அவர்கள் அலுவலக நடை முறையினை அறிந்து கொண்டா வருகின்றனர்? அவர்களும் அனுபவமில்லாதுதான் வருகின் றனர். நாளடைவில் அனுபவத்தைப் பெறுகின்றனர்; நடை முறையினை அறிந்து கொள்கின்றனர். துறைத் தேர்வுகளை எழுதி விதிமுறைகளையும், துறை நுணுக்கங்களை யும் தெரிந்து கொள்கின்றனர். இந்நிலையில்தான் ஏனைய துறையிலுள்ளோரும் உள்ளனர். எனவே மேற்கூறிய காரணம் அடியோடு பொருந்துவதன்று. நூலக அலுவலரும் அவர்களைப் போன்று அனுபவமும் தொழில் அறிவும் நாள டைவில் பெறுவார். நூலகருக்கும் ஆட்சிப் பயிற்சிக்கு அவர்களைப் போன்று ஏற்பாடு செய்யலாம்; துறைத் தேர்வுகளையும் (*Departmental Tests*) அவர்கள் எழுத ஏற்பாடு செய்யலாம்.

பொது நூலகங்கள் நன்கு நமது தமிழகத்தில் காலூன்றி விட்டன. இனி நாம் செய்யவேண்டியது அவற்றை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தச் செய்தலே ஆகும். அதற்கு உறுதுணையாக நூலகவியல் கல்வி பெற்றோரே விளங்க முடி

யும். எனவே நூலகவியல் கல்வியும், தகுதியும், திறமையும் மிக்கோரே இத்துறையில் பணியாற்ற வேண்டும். ஒவ்வொரு ஆணைக் குழுவிலும் இரு நூலகர்கள் உயர்நிலை அதிகாரிகளாக நியமிக்கப்பட வேண்டும். ஒருவர் மாவட்ட நூலக அதிகாரியாகவும், மற்றொருவர் மாவட்டத் தலைமை நூலகத்தின் அதிகாரியாகவும் இருத்தல் வேண்டும். நூலக அதிகாரிக்கு (*District Library Officer*) ஏனைய துறைகளிலிருக்கும் மாவட்ட அதிகாரிகளுக்குரிய ஊதியமும் தகுதியும் தரப்பட வேண்டும். பொதுக் கல்வியில் முதுகலைப் பட்டமும், நூலகவியல் டிப்ளமோ அன்றி பட்டமும் பெற்றவர்களையோ அல்லது பொதுக்கல்வியில் இளங்கலைப் பட்டமும், நூலகவியலில் முதுகலைப் பட்டமும் பெற்றவர்களையோ, மாவட்ட நூலக அதிகாரிகளாக நேரடியாகத் தேர்ந்தெடுக்கலாம். மேலும் பொதுக்கல்வியில் இளங்கலைப் பட்டமும், நூலகவியலில் டிப்ளமோ அன்றி பட்டமும் பெற்றவராகவும், ஐந்தாண்டுகள் நூலகராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவராகவும் இருக்கின்ற ஒருவரையும் இப்பதவிக்கு நியமிக்கலாம். ஆனால் ஐந்தாண்டுகள் அனுபவமில்லாதவரை மாவட்டத் தலைமை நூலகத்தின் அதிகாரியாக நியமிக்கலாம். அவர் தலைமை நூலகத்தின் வளர்ச்சியைக் கவனித்துக்கொள்வதோடு, மாவட்ட நூலக அதிகாரிக்கு நூலக அமைப்பியலிலும் ஆட்சியியலிலும் துணை புரிவார். அவருக்கு ரூ. *300-25-600* என்ற ஊதியம் இருத்தல் வேண்டும். இருவரும் நூலக ஆணைக் குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். ஆனால் மாவட்ட நூலக அதிகாரி குழுவின் செயலாளராக இருக்க வேண்டும். இவ்வாறே மாநில நூலகச் சிறப்பு அல்லது தனி அலுவலர் (*Special Officer for Libraries*) நூலகவியல் கல்வி பெற்றவராக இருத்தல் வேண்டும். நூலகவியல் குறுகிய காலப் பயிற்சி கூடப் பெறாதவர்கள் அப்பதவியைப் பெறுகின்றமை இங்கு சிந்திப்பதற்கு உரியதாகும். மேலும் முதன் முதலாக நமது அரசினரால் நியமிக்கப்பட்ட திரு. ஆர். ஜனார்த்தனம் நாயுடு

அவர்கள் இவ்வலுவலர்க்குரிய எல்லாத்தகுதிகளையும் பெற்றிருந்தார் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

மாநில நூலக இயக்குநராக இன்று கல்வி இயக்குநரே விளங்குகிறார். ஆனால் பொது நூலகத் துறை விரிவடைந்து விட்டமையால் நூலகத் துறையில் அனுபவம் பெற்ற நூலக வியல் அறிஞர் ஒருவரை, முழுநேர, ஊதியம் பெறும் மாநில நூலக இயக்குநராக நியமித்தல் நல்ல பலன்களைத் தரும் என்பது வெள்ளிடைமலையாகும். அத்தகைய ஒருவரை உடனடியாக நியமிக்காவிடினும், முதற்படியாக நூலக வியல் கல்வியும், அனுபவம் உடைய ஒருவரை இணை நூலக இயக்குநராக நமது அரசாங்கம் நியமிக்க வேண்டும். அவர் ஒருவர்தான் பொறுப்பாக, முழுநேர ஊழியராகப் பணியாற்ற முடியும்.

நிதி நிலையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று முன்னரே குறிப்பிட்டோம். நிதி நிலையினைச் சரிப்படுத்துவதற்குரிய திட்டத்தினையும், அரசாங்கம் உடனடியாக வகுக்க வேண்டும். கிடைக்கின்ற நிதியினை ஆணைக் குழுவினர் மக்களுக்கு உதவும் வண்ணம் நூல்களையும் பருவ வெளியீடுகளையும் வாங்குவதில் செலவிடுகின்றனரா என்பதையும், நூலகக் கட்டிடம் கட்டுவதிலும், பிற பொருட்கள் வாங்குவதிலும் செலவிடப்படும் பொருள் ஒழுங்கான முறையில் நன்கு செலவிடப்படுகின்றதா என்பதையும் அரசினர் கவனித்தல் வேண்டும். மேலும் மாநில நூலகக்குழு (*State Library Committee*) அடிக்கடி கூட்டப் பெறுதல் வேண்டும். அது பெயரளவிற்கு இல்லாமல் நன்கு செயல்படுதல் வேண்டும்.

நமது கன்னிமாராப் பொது நூலகம், நமது மாநிலத் தலைமை நூலகமாகும். மேலும் இந்திய நாட்டின் தேசிய நூலகங்களில் ஒன்றாகவும் அது இன்று விளங்குகின்றது. சிறந்த நூலகக் கட்டிடம் ஒன்று தற்பொழுது கட்டப்பட்டு வருவதை நாம் அறிவோம். அக் கட்டிடம் விரைவில் முற்றுப் பெற்றால் அது அந்நூலகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும்

உதவும். இப்புதிய கட்டிடத்தில் தமிழ்மொழி—இலக்கிய ஆய்வுப் பகுதி ஒன்று நிறுவப்பட வேண்டும். தமிழ் மொழியில் வெளியான, வெளியாகும் எல்லா நூல்களையும், பருவ வெளியீடுகளையும், அங்கு சேகரித்து வைக்கப்பட வேண்டும். இப்பகுதி ஆராய்ச்சியாளர்க்கும், பேராசிரியர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பெரிதும் துணைபுரியும் வண்ணம் அமைக்கப்படுதல் வேண்டும். இந்நூலகம் இன்று பெயரளவில்தான் மாநிலத் தலைமை நூலகமாக உள்ளது. உண்மையாகவே மேலைநாட்டு மாநிலத் தலைமை நூலகத்தைப் போன்று இந்நூலகம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எல்லாப் பொது நூலகங்களும் இந்நூலகத்தோடு இணைந்து, பொது நூலக வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். அந்நாள் என்று வருகிறதோ அன்றே நமது தமிழகப் பொது நூலக வரலாற்றின் பொற்காலம் தொடங்குகிறது என நாம் திண்ணமாகக் கருதலாம். இந்நூலக வளர்ச்சிக்கும் நூலகத் துறையில் பயிற்சி பெற்றோர் பலர் தேவைப்படுகின்றனர்.

மேற்கூறிய திட்டங்களை எல்லாம் இன்றைய நமது தமிழக அரசு நிறுவும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் தமிழக மக்கள் உள்ளனர். நூலகத் துறையிலுள்ளோர் நம்பிக்கையும் அதுவே ஆகும். இத்திட்டங்களை எல்லாம் நமது அரசு திட்டிச் செயல்படுத்துமாகில் "நூலகமில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற நிலை தமிழ் நாட்டில் உறுதியாக ஏற்படும். அன்றுதான் மக்கள் குடியாட்சியின் பயன்களை உண்மையாகத் துய்க்க இயலும். குடியாட்சியும் முழு வெற்றியினைப் பெறும். அதனால் நாடு நாடாகத் திகழும். மக்கள் மகிழ்வர். நம்மை உலகம் போற்றும்.

## நூலகர் பரிமாற்றத் திட்டம்

நூலகர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் அமெரிக்கா செல்பவர்கள், அங்கு அறிமுகப் பயிற்சிக்காலத்தில் *(Internship period)* சில குறிப்பிட்ட துறைகளில் பயிற்சிபெற வாய்ப்பளித்தால், இத்திட்டம் இன்னும் பயனுடையதாக அமை

யும். நூலகத்தின் பல்வேறு துறைகளிலும் நமது நூலகர்கள் பல புதிய நுட்ப முறைகளை அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதற்கு அமெரிக்காவில் அவர்களுக்கு நல்ல வாய்ப்புக் காத்திருக்கிறது.

இதே திட்டத்தின் கீழ், அமெரிக்காவில் நல்ல அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களை இந்தியாவுக்கு வரவழைத்து அவர்களுடைய சேவையைப் பயன்தரும் முறையில் நமது பல்கலைக்கழகங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# 12. பிரயாண அனுபவங்கள்

## முருகன் அருள்

'உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்' என நற்றமிழ் நக்கீரன் நாவாரப் புகழ்ந்த திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில் உறையும் தமிழ்க் கடவுள் குமரன் அடியவர்க்கு அவர்கள் விரும்புவதை அளித்தருளும் அன்புக் கடவுள் என்பதை நாமறிவோம். அவ்வாறே திருநெல்வேலிச் சாலைக் குமரனும் அடியவர்களுக்கு அருள் சுரப்பவன் ஆவான். 'கந்த சஷ்டி' விழாவன்று மாலையில் திருநெல்வேலிப் பாலம் சாலைக் குமாரசாமி கோவில் முருகன் திருமுன் நின்று அவனருள் நினைந்து பிரார்த்தனை முடித்து நின்ற வேளையில், சென்னை அமெரிக்க நூல்நிலைய இயக்குநர் திருமதி. மெக்கேப் அவர்களிடமிருந்து நான் அமெரிக்கா செல்லவிருக்கும் நற்செய்தி தாங்கிய கடிதம் ஒன்று கிடைக்கப் பெற்றேன்.

## ஆயத்தம்

முருகன் அருளால் கிடைத்தற்கரிய பெரும்பேறு கிட்டியதே என எண்ணி மகிழ்ந்து, கடிதம் கிடைத்த மறுநாளே நெல்லையை விட்டுச் சென்னையடைந்தேன். அமெரிக்கத் தகவல் நிலைய அலுவலகம் சென்று, பண்பாட்டுறவு அதிகாரியைக் (*Cultural Officer*) கண்டு, அமெரிக்கத் தூதர் திரு. செஸ்டர் பௌல்ஸ் (*Chester Bowles*) அவர்கள் அனுப்-

பிலிருந்த அழைப்பைப் பெற்றுக் கொண்டேன். அவ்வழைப்பில் காணப்படும் வாசகத்தின் மூலம் அமெரிக்க மக்களின் உயர்ந்த உள்ளத்தையும், பிறர்மீது வைத்திருக்கும் அன்பையும், பிறரோடு இனிய முறையில் பழகும் பாங்கையும் அறிய முடிகிறது. எனவே அந்த அழைப்பின் அடக்கம் கீழே தரப்படுகிறது:

புது டில்லி,

அக்டோபர் 27, 1964.

அன்புமிகு திரு. முத்துசுவாமி,

எங்கள் நாட்டின் கல்வி–பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின்படி அளிக்கப்படும் மானிய உதவியின் கீழ், அமெரிக்க நூலகக் கழகத்தின் அனைத்து நாட்டு நல்லுறவுக் குழுவினால் நடத்த பெற விருக்கும் ஒரு திட்டத்தில் பங்கு பெறுவதற்கு அமெரிக்க அரசாங்கத்தின் சார்பாக நான் தங்களை அமெரிக்காவுக்கு வருகை புரியும்படி மகிழ்ச்சியுடன் அழைக்கின்றேன். இத்திட்டம் 1965 ஜனவரியில் தொடங்கி 1965 ஏப்ரல் வரை நடைபெற விருக்கிறது. இந்த அழைப்பைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்களென நம்புகிறேன். தங்களின் இசைவை உறுதி செய்து எனக்கு எழுத வேண்டுகிறேன்.

தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள இவ்வழைப்புப் பற்றி சென்னையிலுள்ள அமெரிக்கத் தகவல் நிலையத்தின் பண்பாட்டுறவுத்துறை அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உங்கள் பயணத்திற்கும், உங்கள் பயண அனுமதிச் சீட்டுகளுக்கும், இன்ன பிற உங்களுக்குத் தேவையான உதவிகளுக்கும் அவர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருவார்.

அவருடன் தாங்கள் உடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகவியல் துறை விரிவுரையாளராகப் பணிபுரியும் தங்களுக்கு உங்கள் சேவைக்கு மேலும் ஆக்கம் தரும் வகையில் தங்களின் அமெரிக்கப் பயணம் உதவியாக அமையும் என நம்புகிறேன். அமெரிக்காவில் நீங்கள் சந்திக்கும் உங்களுடைய சகாக்கள், உதவியாளர்களுடன் கலந்துரையாடி, இந்தியா—அமெரிக்கா நட்புறவு மேலும் வலுப்பெறச் செய்வதற்கு இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வீர்களென நம்புகிறேன்.

இந்தப் பயணத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு எத்தகைய உதவி தங்களுக்குத் தேவைப்படினும், தாங்கள் தயக்கமின்றி தூதரகத்திடம் கேட்கலாம். தங்களுடைய அமெரிக்கப் பயணம் மகிழ்ச்சியுடையதாகவும், பயன் தருவதாகவும் அமைய வேண்டுமெனத் தங்களுக்கு என்னுடைய தனிப்பட்ட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லா நலனும் பெறுக.

உண்மையுள்ள,
(ஒப்பம்) செஸ்டர் பௌல்ஸ்.

பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. ஏ. எல். முதலியாரவர்களையும், சென்னையிலுள்ள அமெரிக்க நூலக இயக்குநர் திருமதி. மெக்கேப் அவர்களைலம் சந்தித்து அவர்கள் ஆசியைப் பெற்றேன். பின்பு, அமெரிக்கத் தகவல் நிலையத்தில் பணிபுரியும் நண்பர்கள் திருவாளர்கள் கிருஷ்ணன், இராதாகிருஷ்ணன், திருவேங்கடம், வ. உ. சி. சுப்பிரமணியம் முதலியவர்களைக் கண்டு

பேசிய பின் பிரயாணத் திட்டம் உருவாகியது. அடுத்து பயணத்திற்குத் தேவையன சான்றுகளைத் (*Records*) தயாரிப்பதில் ஈடுபட்டேன்.

புறப்பாடு

வெளி நாட்டுப் பிரயாணம் இனிது நிறைவுறும் வண்ணம் 'தேனூர் பூஞ்சோலைத் திருவேங்கட'த்தில் உறையும் மல்லார்தோள் வடவேங்கடவனை'யும், செந்தில்வாழ் முருகனையும் கண்டு வணங்கி, பின்னர் எனது தந்தை, பெரிய தந்தை இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, எனது பேராசிரியர்கள் அ. மு. பரமசிவானந்தம், டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் முதலியோரின் ஆசியினைப் பெற்று 20-1-65 அன்று சென்னையினின்றும் மாலை 4 மணி அளவில் விமானம் மூலம் எனது பயணத்தைத் தொடங்கினேன். தந்தை, பெரிய தந்தை, திருமதி மெக்கேப், அவர்களது அன்னை, பேராசிரியர்கள் அ. மு. பரமசிவானந்தம், டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார், குடும்பத்தினர், ஏனைய உறவினர்கள், நண்பர்கள் உடன் வந்து வாழ்த்தி வழியனுப்பினர். விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் பிரயாணத்தையே நிறுத்திவிடலாமா என்ற எண்ணம் ஒரு கணம் மனதிலே தோன்றி மறைந்தது. குடும்ப பாசம் என்பது எவ்வளவு வலுவானது என்பதை இதுபோன்ற சமயங்களில்தான் உணர முடிகிறது. பின்னர் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு விமானத்தினுள் சென்று அமர்ந்தேன். எனினும், இனந்தெரியாத பயம் மனத்திலிருந்து கொண்டேயிருந்தது. எனவே, பம்பாய் செல்லும் வரையில் பேரச்சம் உள்ளத்தை வாட்டிப் பிழிந்தது. சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து விமானம் புறப்பட்டது. விமானம் ஓடுபாதையில் ஓடி, பிறகு திடீரென உயரக் கிளம்பி ஆகாயத்தில் பறக்கத் தொடங்கியதும் எங்களுக்குச் சுவையான சிற்றுண்டி வழங்கப்பட்டது. அந்தச் சிற்றுண்டியை நாங்கள் உண்டு முடித்த

போது காலம் ஒரு மணி நேரத்தை விழுங்கியிருந்தது. விமானமும் பம்பாயை அடைந்தது. பம்பாயிலேயே பெரிய விடுதியெனக் கருதப்படும் தாஜ்மகால் ஓட்டலில் விமான நிறுவனத்தினர் செலவிலேயே தங்கி அன்றிரவைக் கழித்தேன். அதிகாலையில் அங்கிருந்து விமான நிலையம் அழைத்துச் சென்றார்கள். அங்கு, சாமான்கள் சோதனை யிடுதல், சான்றுகள் பரிசீலனை செய்தல் முதலான 'சடங்கு கள், நடந்தன. இதற்கிடையில் என்னோடு அமெரிக்கா விற்கு உடன் வந்த பேராசிரியர் ஸ்ரீவத்சவா அவர்களையும் நூலகர் சிங்கர் அவர்களையும் தற்செயலாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர்களும் அதே விமானத்தில் அமெரிக்கா வருகிறார்கள் என்பதை அறிந்ததும் அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். நெஞ்சில் குடிகொண்டிருந்த இனந் தெரியாத பயமும் ஓரளவு மறைந்தது. சிறந்த துணை கிடைத்தமைக்காக இறைவனது கருணையைப் போற்றிப் புகழ்ந்தேன். பரிசீலனை முடிந்து வெளியே வந்ததும், 'இங்கு இன்சூர் செய்யலாம்' என்ற வரி பொறித்த பலகை கண் ணில் பட்டது. மீண்டும் குடும்பக்கவலை மனதில் குடிகொண் டது. ஏதாவது நிகழ்ந்துவிட்டால் குடும்பத்தின்நிலை என்ன வாகும் என்ற எண்ணம் தலை தூக்கியது. எனவே, ஓடோடி யும் சென்று விபத்துக்காப்பீடு (*Accident Insurance*) செய்து கொண்டேன். மறுபடியும் மனதில் புதிய தெம்பு குடி யேறியது. பின்னர், நமது இந்திய அரசினர் அனுமதித்த வெளிநாட்டுச் செலவாணியைப் (*Foreign Exchange*) பெற்றுக் கொண்டேன். இச்சடங்குகளெல்லாம் வரிசையாக முடிந்த பின்னர் நண்பர்களோடு விமானத்திற்குள் சென்று அமர்ந்து கொண்டேன். விமானம் புறப்பட்டகால் அனை வரும் இறைவனிடம் 'இன்னலேதுமில்லாமல் பயணம் இனிதே முடிவுற வேண்டும்' என மனமாரப் பிரார்த்தித் துக் கொண்டோம். வழியில் விமானம் சில முக்கிய ஊர் களில் ஒரு சில நிமிடங்கள் நின்றது. ஒவ்வொரு இடத்தி லும் நாங்கள் இறங்கிச் சென்று விமான நிலையத்தில் தங்கி,

அங்கிருந்த மக்களோடு அளவளாவி மகிழ்ந்தோம். விமானம் குறித்த காலத்தில் சிறிதும் இடையூறின்றிச் சென்றது. எங்களுடைய நற்பேறே என எண்ணி மகிழ்ந்தோம். வழியெல்லாம் அடிக்கடி சமைத்த காய்கறிகள், ரொட்டி, பிஸ்கட், பழரசம், காப்பி, தேநீர், சிறு அளவு சோறு, முட்டை, பால், இறைச்சி முதலானவற்றை விமானப் பணிவிடைப் பெண்கள் வழங்கி எங்கள் வயிற்றை வாடாமல் பார்த்துக் கொண்டார்கள். அப்பெண்மணிகள் மலர்ந்த முகத்தோடும், சுறுசுறுப்போடும், கவனத்தோடும் பிரயாணிகளது தேவைகளை யறிந்து அவர்களுக்கு உதவினர். உணவு உரிய நேரத்தில் ஒழுங்காகக் கொடுக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. அன்று என்னுடன் பிரயாணம் செய்தவர்களில் நான் ஒருவனே வீர சைவனாக விளங்கினேன். இறைச்சி, முட்டை ஆகியவற்றை நீக்கி, மதுபானம் எதனையும் தொடாமல், புகை பிடிக்காமல் இருந்த நான் மற்றவர்களுக்கு ஓர் அதிசயப் பொருளாகவே காட்சியளித்தேன். உடன்வந்த நண்பர்கள் இருவரும் "செல்லுகின்ற நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்றவகையில் உணவு, உடை, நடையுடை பாவனை அனைத்தையும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும், என்ற கருத்துக்கொண்டவர்கள். எனவே, விமானத்தில் வழங்கப்பட்ட அனைத்தையும் உண்டும் அருந்தியும் மகிழ்ந்தனர்.

நியுயார்க் நகரை விமானம் நெருங்கிக் கொண்டிருந்த பொழுது, "இந்நகரை அடையவிருக்கின்றோமே! அங்கு திசை தெரியாது திகைத்து நிற்க வேண்டியது வருமோ" என்ற எண்ணம் மனத்தை அலைக்கழித்தது. விமானத்தை விட்டு இறங்கி விமான நிலையத்தில் நுழைந்ததும், "வாருங்கள் முத்துசாமி! எங்கள் நாட்டுக்கு உங்களை வரவேற்கிறோம்! உங்கள் வரவு நல்வரவாகுக!" (*Hellow, Muthuswamy! you are welcome to our Country! Wish you best of luck!*) என்ற குரல் கேட்டுத் திகைத்து நின்றேன். என் அருகில் மலர்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்த

அமெரிக்க வெளி நாட்டுத் துறை அதிகாரிதான் (State Department officer) அச்சொற்களை உதிர்த்தவர் என்பதையறிந்து வியப்புக் கடலில் ஆழ்ந்தேன். முன்பின் அறியாத என்னை அவர் பெயர் சொல்லி அழைத்ததையும், அறிமுகமின்றியே இவர்தான் திருமலைமுத்துசாமியாக இருக்கவேண்டும் என்று உறுதி செய்த அவரது திறனையும் எண்ணி வியந்தேன். பல நாட்கள் பழகியவர்போல் உரிமையோடு நட்பு முறையில் பேசிக்கொண்டே என் கையிலிருந்த பெட்டியை வலிந்து பிடுங்கியவாறே, "வாருங்கள், போகலாம்! நாம் இங்கிருந்து வேறொரு விமான நிலையத்திற்குச் சென்று அங்கு வாசிங்டன் செல்லும் விமானத்தைப் பிடிக்கவேண்டும்!" (*Come on, let us go! We are going to another airport where you can catch a plane for Washington*) என்று கூறிக்கொண்டே சுங்கவரிப் பகுதிக்கு (*Customs*) என்னை அழைத்துச் சென்றார். அங்கிருந்த அதிகாரி புன்னகை புரிந்தபடி மேற் கூறியவாறே அன்பாக வரவேற்புரை கூறியபின், பெயர், சொந்தநாடு, அமெரிக்கா வந்ததற்குரிய காரணம், ஆகியவற்றைக் கேட்டறிந்து கொண்டு ஓரிரு நிமிடங்களில் பரிசீலனையை முடித்து வாழ்த்தி அனுப்பினார். அவ்விதமே ஒரு நிமிடத்தில் எனது பயணப் பத்திரமும் (*Pass port*) பரிசீலிக்கப்பட்டது. சுருங்கக் கூறின் ஏறத்தாழ 15 நிமிடங்களுக்குள்ளேயே விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டு விட்டேன். நம் நாட்டில், வெளி நாட்டிலிருந்து கப்பல்கள் வந்தவுடன் பரிசோதனை என்ற பெயரில் பிரயாணிகளைப் பலமணிநேரம் காக்க வைத்துப் படாதபாடு படுத்திவைப்பதைப் பற்றி அடிக்கடிக் கேள்விப்பட்டிருந்த எனக்கு நியுயார்க்கில் இவ்வளவு துரிதமாக இச்சடங்குகளெல்லாம் முடிவடைந்தமை மிகவும் வியப்பாக இருந்தது. 'காலம் இகழேல்' என்பது சுப்பிரமணிய பாரதியாரின் புதிய ஆத்திசூடி வரியாகும். காலத்தின் அருமையை முழுதும் உணர்ந்து அதனை இகழாது போற்றி வாழ்கின்ற மக்கள் அமெரிக்க மக்களே

அங்கிருந்த மக்களோடு அளவளாவி மகிழ்ந்தோம். விமானம் குறித்த காலத்தில் சிறிதும் இடையூறின்றிச் சென்றது. எங்களுடைய நற்பேறே என எண்ணி மகிழ்ந்தோம். வழியெல்லாம் அடிக்கடி சமைத்த காய்கறிகள், ரொட்டி, பிஸ்கட், பழரசம், காப்பி, தேநீர், சிறு அளவு சோறு, முட்டை, பால், இறைச்சி முதலானவற்றை விமானப் பணிவிடைப் பெண்கள் வழங்கி எங்கள் வயிற்றை வாடாமல் பார்த்துக் கொண்டார்கள். அப்பெண்மணிகள் மலர்ந்த முகத்தோடும், சுறுசுறுப்போடும், கவனத்தோடும் பிரயாணிகளது தேவைகளை யறிந்து அவர்களுக்கு உதவினர். உணவு உரிய நேரத்தில் ஒழுங்காகக் கொடுக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. அன்று என்னுடன் பிரயாணம் செய்தவர்களில் நான் ஒருவனே வீர சைவனாக விளங்கினேன். இறைச்சி, முட்டை ஆகியவற்றை நீக்கி, மதுபானம் எதனையும் தொடாமால், புகை பிடிக்காமல் இருந்த நான் மற்றவர்களுக்கு ஓர் அதிசயப் பொருளாகவே காட்சியளித்தேன். உடன்வந்த நண்பர்கள் இருவரும் "செல்லுகின்ற நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்றவகையில் உணவு, உடை, நடையுடை பாவனை அனைத்தையும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும், என்ற கருத்துக்கொண்டவர்கள். எனவே, விமானத்தில் வழங்கப்பட்ட அனைத்தையும் உண்டும் அருந்தியும் மகிழ்ந்தனர்.

நியுயார்க் நகரை விமானம் நெருங்கிக் கொண்டிருந்த பொழுது, "இந்நகரை அடையவிருக்கின்றோமே! அங்கு திசை தெரியாது திகைத்து நிற்க வேண்டியது வருமோ" என்ற எண்ணம் மனத்தை அலைக்கழித்தது. விமானத்தை விட்டு இறங்கி விமான நிலையத்தில் நுழைந்ததும், "வாருங்கள் முத்துசாமி! எங்கள் நாட்டுக்கு உங்களை வரவேற்கிறோம்! உங்கள் வரவு நல்வரவாகுக!" (*Hellow, Muthuswamy! you are welcome to our Country! Wish you best of luck!*) என்ற குரல் கேட்டுத் திகைத்து நின்றேன். என் அருகில் மலர்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்த

அமெரிக்க வெளி நாட்டுத் துறை அதிகாரிதான் (*State Department officer*) அச்சொற்களை உதிர்த்தவர் என்பதையறிந்து வியப்புக் கடலில் ஆழ்ந்தேன். முன்பின் அறியாத என்னை அவர் பெயர் சொல்லி அழைத்ததையும், அறிமுகமின்றியே இவர்தான் திருமலைமுத்துசாமியாக இருக்கவேண்டும் என்று உறுதி செய்த அவரது திறனையும் எண்ணி வியந்தேன். பல நாட்கள் பழகியவர்போல் உரிமையோடு நட்பு முறையில் பேசிக்கொண்டே என் கையிலிருந்த பெட்டியை வலிந்து பிடுங்கியவாறே, ''வாருங்கள், போகலாம்! நாம் இங்கிருந்து வேறொரு விமான நிலையத்திற்குச் சென்று அங்கு வாசிங்டன் செல்லும் விமானத்தைப் பிடிக்கவேண்டும்!'' (*Come on, let us go! We are going to another airport where you can catch a plane for Washington*) என்று கூறிக்கொண்டே சுங்கவரிப் பகுதிக்கு (*Customs*) என்னை அழைத்துச் சென்றார். அங்கிருந்த அதிகாரி புன்னகை புரிந்தபடி மேற் கூறியவாறே அன்பாக வரவேற்புரை கூறியபின், பெயர், சொந்தநாடு, அமெரிக்கா வந்ததற்குரிய காரணம், ஆகியவற்றைக் கேட்டறிந்து கொண்டு ஓரிரு நிமிடங்களில் பரிசீலனையை முடித்து வாழ்த்தி அனுப்பினார். அவ்விதமே ஒரு நிமிடத்தில் எனது பயணப் பத்திரமும் (*Pass port*) பரிசீலிக்கப் பட்டது. சுருங்கக் கூறின் ஏறத்தாழ 15 நிமிடங்களுக்குள்ளேயே விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டு விட்டேன். நம் நாட்டில், வெளி நாட்டிலிருந்து கப்பல்கள் வந்தவுடன் பரிசோதனை என்ற பெயரில் பிரயாணிகளைப்பலமணிநேரம் காக்க வைத்துப் படாதபாடு படுத்திவைப்பதைப் பற்றி அடிக்கடிக் கேள்விப்பட்டிருந்த எனக்கு நியுயார்க்கில் இவ்வளவு துரிதமாக இச்சடங்குகளெல்லாம் முடிவடைந்தமை மிகவும் வியப்பாக இருந்தது. 'காலம் இகழேல்' என்பது சுப்பிரமணிய பாரதியாரின் புதிய ஆத்திசூடி வரியாகும். காலத்தின் அருமையை முழுதும் உணர்ந்து அதனை இகழாது போற்றி வாழ்கின்ற மக்கள் அமெரிக்க மக்களே

என்றால் அதை யாரும் மறுக்க இயலாது. "காலத்தை வீணே கழித்தல் கூடாது. தொடங்குகின்ற பணியை விரைந்து முடிக்க வேண்டும்"—இதுவே அவர்களுடைய முக்கியக் குறிக்கோள். இதுவே அவர்களது வெற்றியின் இரகசியமுமாகும். விரைவு, விரைவு, விரைவு! எங்கும் எதிலும் ஒரே விரைவுதான். எல்லாத் துறையிலும் வேகத்தைத்தான் காண்கிறோம். எனவேதான் அவர்களுடைய நாடு நூறே ஆண்டுகளில் உலகம் வியக்கும் வண்ணம் வளர்ந்தோங்கி விளங்குகின்றது. இன்று அவர்கள் உலக அரங்கிலே முதன்மையாகத் திகழ்வதற்கு அவர்களிடையே இருக்கின்ற விரைவுதான் காரணம். விரைவோடு, எடுத்த பணிகளைச் செம்மையாகச் செய்து முடிக்கவேண்டும் என்ற ஆர்வமும் அவர்களிடம் காணப்படுகிறது. இத்தகைய மனப்பான்மை, செயல்திறன், விரைந்து முடிக்கும் ஆற்றல் ஆகியவை நமது இந்திய மக்களுக்கு இன்று அவசியம் தேவைப்படுகின்றன. அமெரிக்கரைப் போன்று, நாமும் காலத்தை 'அவமே போக்காது', கருத்துடன் எடுத்த காரியத்தை இடையே நிறுத்தாமல் தொடர்ந்து விரைந்து முடிப்போமானால் நம் நாடும் ஒரு நாள் உலக அரங்கிலே தலைமையிடத்தைப் பெறும் என்பது திண்ணம்.

பின்னர், அமெரிக்க நண்பர், எங்கள் மூவரையும் தனது ஊர்தியிலேயே அழைத்துச் சென்று, வேறொரு விமான நிலையத்தில் காத்துக் கொண்டிருந்த விமானத்தில் ஏற்றி வழியனுப்பி வைத்தார். நாங்கள் நியுயார்க்கை அடைந்த நேரம் இரவு தொடங்கிய நேரமாகும். ஒளி வெள்ளத்தில் மிதந்த நியுயார்க் நகரம் 'இந்திரலோகமோ, சந்திரலோகமோ' என்று எண்ணும்படியாகக் காட்சியளித்தது. புராணத்தில் அவை பற்றிப் படித்த நாம், நியுயார்க் நகரை இரவில் காண்கின்றபோது அதனைப் போன்றுதான் அவையும் விளங்கியிருக்க வேண்டும் என்ற எண்ணம்தான் எழும்.

அமெரிக்க நாட்டின் தலைநகரான வாசிங்டனுக்குச் செல்ல ஆயத்தமாக நின்றுகொண்டிருந்த விமானம், நாங்

கள் ஏறிய ஒரு சில நிமிடங்களில் புறப்பட்டது. அதுகால், இரண்டு பீஸ்கட்டுகளும் ஒரு கேக்கும் ஒரு குவளை தேநீரும் கொடுக்கப்பட்டன. அவற்றை நாங்கள் சாப்பிட்டு முடித்தவுடன் விமானம் கீழே இறங்கத் தொடங்கியது. 'வாசிங்டன் வந்து விட்டது' என்ற அறிவிப்பொலியும் கேட்டது. வாசிங்டன் விமான நிலையத்திலும் வெளி நாட்டுத் துறை உயர் அதிகாரி எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அவரும் முன்னர் கூறியது போன்றே எங்களுக்கு முகமன் உரை கூறி வரவேற்றுத் தனது ஊர்தியிலேயே எங்களுக்காக அமர்த்தப்பட்டிருந்த விடுதிக்கு அழைத்துச் சென்றார். வழியெல்லாம் ஒரே ஒளிமயமாக இருந்தது. ஒளிக்கடலில் நாங்கள் மிதப்பதாகவே நினைத்தோம். நெய்யாவி ஊர்தியில் சென்றுகொண்டிருக்கும்போதே தலைநகரின் சிறப்பையெல்லாம் அந்த அமெரிக்க நண்பர், கேட்டார் பிணிக்கும் வண்ணம் அழகாக, ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். அதிலிருந்து, அவருக்கிருந்த நாட்டுப் பற்றையும் பெருமிதத்தையும் எங்களால் அறிய முடிந்தது. தனது நாட்டின் சிறப்புக்களையெல்லாம் வெளிநாட்டினர் அனைவரும் அறிந்து மகிழ வேண்டும் என்று ஒவ்வொரு அமெரிக்கனும் விரும்புகிறான். எனவே, தனது நாட்டைப் பற்றிய எல்லா விவரங்களையும் நன்கு சேகரித்து வைத்துள்ளான். அயல் நாட்டவரைக் காண்கின்றபோது, தனது நாட்டைப் பற்றிச் சிறப்புற எடுத்துக் கூற அவாவுகின்றான். செவ்விய முறையிலே சிறப்புகளையெல்லாம் விரித்துரைக்கின்றான். அத்துடன் அவன் நின்று விடுவதில்லை. பிறரைப் பற்றியும், மற்ற நாடுகளைப் பற்றியும் அறிந்து கொள்ளத் துடிக்கின்றான். அதனால் கேள்விகளைப் போட்டுத் துளைத்தெடுத்து விடுகிறான். பிறரது நற் பண்புகளையெல்லாம் பாராட்டி மகிழ்கின்றான். இத்தகைய பண்பைப் பொதுவாக எல்லா அமெரிக்கர்களிடமும் சிறப்பாகப் பெண்களிடமும் காண முடிகிறது. இரண்டு விமான நிலையங்களிலும் நாங்கள் சந்தித்த அமெரிக்க நண்பர்கள் ஒரு சில நிமிடங்களில்

தங்களுடைய நாட்டைப் பற்றிய சிறந்த கருத்துக்களை எங்களுக்குக் கூறி மகிழ்ந்தனர். அவ்வாறே, எங்களிடமிருந்தும் சிலவற்றைத் தெரிந்து கொண்டனர். அவர்களிடம் நான் கண்ட மற்றொரு சிறந்த பண்பு தெரியாத விஷயங்களை தெரியாது என்று ஒப்புக் கொள்வதாகும். தெரியாததைத் தெரிந்ததாகப் பாவனை செய்தலும், அதன் பொருட்டுத் தவறான செய்திகளைக் கூறுதலும் அவர்களிடமில்லை. அதாவது பூசி மெழுகுகின்ற இயல்பு அவர்களிடம் இல்லையென்றே கூறவேண்டும்.

### இந்தியாவில் ஏன் உணவுப் பஞ்சம்?

வாஷிங்டனில் நான் தங்கியிருந்த பொழுது முதல் நாளன்று விடுதியைவிட்டு வெளியே செல்வதற்காக வாடகை நெய்யாவி ஊர்தியில் அமர்ந்தேன். அவ்வூர்தியை ஓட்டியவர் என்னைப் பார்த்ததும் இந்தியன் என்பதைத் தெரிந்து கொண்டார். மிகவும் பழகியவர்போல் பேசத் தொடங்கிய அவர், "நீங்கள் இந்தியாவிலிருந்து வருகிறீர்கள் எனக் கருதுகிறேன். உங்கள் காந்திஜியைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். கடந்த உலகப்போரின் போது நான் கொஞ்ச காலம் உங்கள் நாட்டிலிருந்தேன். உங்களுடைய நாட்டில் உணவு நெருக்கடி நிலவுவதாகக் கேள்விப் பட்டேன். உங்கள் நாட்டு மக்கள் எங்களைப் போன்று கடுமையாக உழைப்பதில்லை என்பதை வருத்தத்துடன் சொல்ல விரும்புகிறேன். எங்கள் நாட்டிலுள்ளது போல் உங்கள் நாட்டில் நீர்ப்பாசன வசதியைப் பெருக்கினால் உங்கள் உணவு நெருக்கடியை மிக எளிதில் தீர்த்து விடலாம். உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் நாடு வளமானதாக இருக்கவில்லை. பூமியும் செழிப்பானதாக இல்லை. ஆனால், கடுமையான உழைப்பினால் நாங்கள் பாலையைச் சோலையாக்கினோம். மேலும், நாங்கள் விவசாயத்திற்கே முதலிடமளிக்கிறோம். அமெரிக்காவின் இன்றைய முன்னேற்றமெல்லாம் கடந்த 100 ஆண்டுகளின் சாதனையே. உங்களுக்குக்கூட இப்போது

காலதாமதமாகிவிடவில்லை. உங்களிடம் ஆள்பலம் ஏராளமாக இருக்கிறது. எங்கள் நாட்டைவிட உங்கள் நாட்டில் மக்கள் அடர்த்தியாக வாழ்கிறார்கள். எங்களைப் போல் நீங்களும் கடுமையாக உழைத்து, உணவு நெருக்கடியை நீங்களாகவே ஏன் தீர்த்துக்கொள்ளக் கூடாது?'' என்று ஒரு நீண்ட சொற்பொழிவையே ஆற்றிவிட்டார். அவருடைய சொற்கள் என்னுள்ளத்தில் ஈட்டிபோல் தைத்தன. இறுதியாக அவர் கேட்ட கேள்வி, என் உள்ளத்தைக் கொக்கி போல் சுண்டி இழுத்தது. மேலும் அவர் பிற நாட்டைப் பற்றி எந்த அளவுக்கு அளந்து, அறிந்து வைத்திருக்கிறார் என்ற வியப்பு மேலிட சிந்தனை வசப்பட்டேன். இந்தியர்கள் அனைவரும் சிந்திக்க வேண்டிய வினாவல்லவா இது?

அன்று நண்பகல். உணவு விடுதி (*Cafeteria*) ஒன்றில் நான் பகலுணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இரண்டு அமெரிக்க இளைஞர்கள் என்னிடம் ஓடோடியும் வந்து, ''நீங்கள் இந்தியாவிலிருந்துதானே வந்திருக்கிறீர்கள்?'' (*Are you from India?*) என்று கேட்டார்கள். 'ஆம்'' என்றதும், ''இந்தியாவில் உணவுப் பஞ்சமாமே? மக்களெல்லோரும் வீதிகளில் உணவில்லாமல் வாடிவதங்கிக் கிடக்கிறார்களாமே?'' என்று கேட்டனர். அவ்விருவரில் மிகவும் இளைஞராக இருந்த ஒருவர், ''உங்கள் நாட்டில் பசுக்கள் அதிகமாமே? அவைகளைக் கும்பிடுகிறீர்களாமே? அவ்வாறு செய்வது தவறு! அவற்றைக் கொன்று இறைச்சியைத்தின்றால் உங்கள் நாட்டு உணவுப் பஞ்சம் தீர்ந்துவிடுமே?'' என்றார். அவரிடம் நான் அமைதியாக, ''நீங்கள் கூறுவதுபோல் எங்கள் நாட்டில் உணவுப் பஞ்சம் கிடையாது. ஆனால் பற்றாக்குறை உண்டு. அதையும், உங்கள் நாட்டிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களின் துணை கொண்டு நீக்கிக் கொள்கிறோம். வேறு சில நட்பு நாடுகளும் உங்களைப் போன்று எங்களுக்கு உதவி புரிகின்றன. மக்கள் உணவில்லாமல் செத்து மடிகின்ற அளவுக்கு எங்கள் நாட்டில் உணவுப் பஞ்சம் என்றுமே ஏற்பட்டதில்லை. தவறான

முறையில் உங்கள் நாட்டில் ஒருசிலரால் எங்களைப் பற்றி அவதூறாகவும் மிகைப்படுத்தியும் பிரசாரம் செய்யப் பெற்றிருக்கிறது என எண்ணுகிறேன். எங்கள் நாடு சமயத்தை உயிர்போன்று கருதும் நாடு. பசுவினால் எத்தனையோ பலன்களைப் பெறுகின்றோம். முதியோர்களுக்கும் பாலர்களுக்கும் அது தரும் பால் உணவாகப் பயன்படுகிறது. விவசாயம் நன்கு நடைபெற அதன் வயிற்றிலுதிக்கும் கன்றுகள் துணை செய்கின்றன. அதன் சாணம் எருவாகப் பயன்படுகிறது. சுருங்கச் சொன்னால் மனிதனுக்குத் தாயைப்போல் பயன்படுவது பசு. தாயை யாராவது கொன்று புசிப்பார்களா? அது எவ்வளவு பெரிய பாவம்? ஆகவே, பசுவிற்கு எவ்விதத் தீங்கும் செய்யக் கூடாது என்று எண்ணி அதனைப் போற்றிப் பாதுகாப்பதுடன் அன்னையாக மதித்து வணங்குகிறோம். இவ்வாறே மக்களுக்குப் பயன்படக் கூடிய இயற்கை தந்த செல்வங்கள் அனைத்தையும் போற்றிப் புரக்க வேண்டும் என்று எங்களது சமய நூல்கள் கூறுகின்றன'' என்று அவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினேன். அவர்களும் ''பசுவின் பெருமையை இன்றுதான் அறிந்து கொண்டோம்'' என்று கூறி நன்றி தெரிவித்துச் சென்றனர்.

மற்றொரு நண்பர், ''நீங்கள் ஏன் அரிசியை மட்டும் சாப்பிடுகிறீர்கள்? அதனால்தானே பஞ்சம் ஏற்படுகிறது? எங்களைப் போல் நிறைய ஆப்பிள், ஆரஞ்சு போன்ற கனிகளை உங்கள் நாட்டவரும் உணவோடு உட்கொண்டால் உங்களுடைய உணவுப் பஞ்சம் தீர்ந்துவிடுமே?'' என்று கேட்டார். இதைக் கேட்டதும், உணவில்லாமல் வாடிய மக்களைப் பார்த்து ஒரு மன்னன், ''ரொட்டி கிடைக்காவிட்டால், கேக் சாப்பிடுங்கள்'' என்று சொன்னானாமே, அந்த நிகழ்ச்சிதான் எனக்கு நினைவுக்கு வந்தது. எனினும் அந்த எண்ணத்தை அடக்கிக்கொண்டு சிரித்துக்கொண்டே ''உங்கள் நாட்டைப் போல எங்கள் நாட்டில் கனிவகைகள் அளவுக்கு மிஞ்சிக் கிடைப்பதுமில்லை. இப்பொழுது

கிடைக்கின்ற கனிகளைப் பொதுமக்கள் அதிக அளவுபெற்று உண்பதற்கு அவர்களது பொளாதாரம் இடந்தருவது மில்லை'' என்று பதிலளித்தேன்.

சமையல் கற்றேன்!

நான் வாசிங்டனில் ஏறத்தாழ இருவாரங்கள் தங்கியிருந்தேன். முதலிரண்டு நாட்களும் பழங்கள், பழரசம், ரொட்டி, பிஸ்கட், உருளைக்கிழங்கு, உப்பு, காரம்போடாமல் அவிக்கப்பட்ட காய்கறிகள் ஆகியவற்றையே உண்டு வந்தேன். இருநாட்களும் அரிசிச் சோறு சாப்பிடாதது என்னவோ போலிருந்தது. மனத்தில் ஓர் ஏக்கமே குடி கொண்டுவிட்டது. ஆனால், இரண்டாம் நாளிரவு வாய்ஸ் ஆப் அமெரிக்கா (*Voice of America*) அலுவலகத்தில் பணிபுரியும் நண்பர்கள் திரு. சின்னராஜும், திரு. அருணும் என்னைப் பார்க்க வந்தார்கள். நண்பர் சின்னராஜ் எனது முகக் குறியிலிருந்தே எனது ஏக்கத்தைத் தெரிந்து கொண்டு, ''நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம். எனது வீட்டின் கதவுகள் உங்களுக்காக என்றும் திறந்திருக்கும்'' என்று கூறி அத்துடனில்லாது அவரில்லத்திற்கு அன்றே அழைத்துச் சென்று சுவையான தமிழ் நாட்டு உணவை, சிறப்பாகச் சாம்பாரை, வடை பாயசத்துடன் அளித்தார். இவ்வாறே ஒரு சில நாட்கள் அவர்களும் அவர்களது மனைவியாரும் எனக்கு விருந்தளித்தனர். நண்பர் அருண் 'அபயம்' அளித்தார் என்றே சொல்ல வேண்டும். ''நான் தனிவீடு (*Apartment*) எடுத்துள்ளேன். தனியாகவே இருக்கின்றேன். நீங்கள் என்னுடனேயே தங்கலாம். சமைப்பதற்குரிய வசதிகளனைத்தும் இருக்கின்றன. நாமிருவரும் சமைத்துச் சாப்பிடலாம். ஆனால், எனக்குச் சமையல் புதிது'' என்று கூறி அருண் வரவேற்றார். நான் அதற்கிணங்கி சில நாட்கள் அவருடனேயே தங்கினேன். சில நாட்களில் இரவு மாத்திரம் அங்கு சென்று சமைத்துச் சாப்பிட்டு மகிழ்ந்து திரும்பினேன். எனக்கும் சமையல்

அனுபவம் கிடையாது. ஆனால், தேவையின் காரணமாக இருவரும் சிறிது சிரமப்பட்டுச் சமைக்கக் கற்றுக்கொண்டோம். இது புதிய அனுபவமே. ஆனால், மின்சாரம் எல்லாவற்றுக்கும் பயன்படுகின்ற காரணத்தாலும், உணவுப் பொருள்கள் அனைத்தும் பக்குவப்படுத்தி வைக்கப்பட்ட நிலையில் எளிதில் கிடைப்பதாலும் சில நிமிட நேரத்தில் சமையலை முடித்துக்கொள்ள முடிந்தது. சோறு சமைக்க 15 நிமிடங்கள்; சாம்பார் ஆக்க 15 நிமிடங்கள். ஏறத்தாழ 35–40 நிமிடத்திற்குள் ஒரு சிறந்த விருந்தையே நாங்கள் தயாரிக்க முடிந்தது எனலாம். "இத்தகைய வசதிகள் நம் நாட்டிலிருந்தால் பெண்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்களே; அவர்களது சிரமம் குறையுமே" என்றெல்லாம் எண்ணினேன். இக்கருத்தை நான் அளித்த விருந்திற்கு வந்திருந்த ஒரு அமெரிக்கப் பெண்மணியிடம் கூறியபோது அவர் சிரித்துக்கொண்டே வேடிக்கையாக, "நான் உங்கள் நாட்டிற்கு வந்திருக்கிறேன். உங்கள் நாட்டுப் பெண்களில் பலர் தங்கள் காலத்தை வறிதே பேசிக்கழிக்கின்றனர்கள். எனவே, இவ்வசதிகளைப் பெற்றால் அவர்கள் மேலும் சோம்பேறிகளாகிவிடுவார்கள். வீண் பேச்சிலேயே காலத்தை அவர்கள் கழிக்க நேரிடலாம். எங்கள் நாட்டில் நாங்கள் ஆண்களைப் போல் அலுவலகங்களில் பணிபுரிவதோடு வீட்டுப் பணிகளையும் செய்கின்றோம். நாங்கள் நேரத்தைப் பொன்னேபோல் போற்றுகின்றோம். நேரச்சிக்கனம் அவசியம் எங்களுக்கு வேண்டும். எனவே, இத்தகைய வசதிகள் எங்களுக்கு இன்றியமையாது தேவைப்படுகின்றன" என்று கூறினார். ஒருவாரத்தில் சமையற்கலை ஒருவாறு கைவரப் பெற்றேன். அதற்கு என்னுடைய இந்திய நண்பர்களும் ஜப்பான் நாட்டிலிருந்து வந்திருந்த மனுக்கா என்ற நண்பரும் சான்று பகர்வர். இந்திய நண்பர்கள் சாம்பாரை அள்ளி அள்ளிக் குடித்து மகிழ்ந்தனர். ஜப்பான் நண்பரோ, "ஓ! முத்துசாமி! உங்கள் சாம்பார் அபாரம். எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதை எப்படி ஆக்குவது என்று எனக்குத் தயவுசெய்து சொல்லித் தாருங்கள். தாயகம்

சென்றவுடன், உங்களுடைய அற்புதமான சாம்பாரை என் மனைவியிடம் கூறிச் செய்யச் சொல்வேன்!" (O! Muthuswamy! I like your Sambar very much! Please teach me how to prepare it. When I go home, I will certainly ask my wife to prepare your wonderful Sambar.) என்று அடிக்கடிப் பாராட்டுரை பகர்ந்தார்.

### லாஸ் ஏஞ்சல்சில்...

பின்னர் தலைநகரை விட்டு உலகின் மூன்றாவது பெரிய நகராக விளங்கும் எழில் மிக்க லாஸ் ஏஞ்சல்சை நான் அடைந்தேன். பசிபிக் பெருங்கடலின் கரையில் அமைந்திருக்கும் இம்மாநகர் அளவில் பெரிதாக இருப்பினும் அமைதி தவழும் நகராகத் திகழ்கின்றது. எங்கும் பசுமையைக் காணலாம். கனிமரங்கள் தரும் பல்வகைக் கனிகள் இங்கு மிகவும் மலிவாகக் கிடைப்பது சிறப்புக்குரியது. இந்நகர மக்களும் அமைதியாக வாழ்கிறார்கள். எனவே, இந்நகரம் என்னை மிகவும் கவர்ந்தது. எனினும், அரிசிச் சோறு கிடைக்காத காரணத்தால் எனக்குச் சிறிது கவலை ஏற்பட்டது. முதலிரு நாட்களிலும் கனிகளையும் பாலையும் காய்கறிகளையும் ரொட்டியுடன் உண்டு வந்தேன். மூன்றாவது நாள் இந்த உணவு சலிப்பை உண்டாக்கியது. அதனால் எனது பலத்தில் பாதியை இழந்தது போன்ற உணர்வு தோன்றியது. சோர்ந்து உற்சாகம் குன்றிக்கிடந்த என் நிலைமையை முகபாவத்திலிருந்தே அறிந்து கொண்ட பேராசிரியர் லுபெட்ஸ்கியும் (Lubetzky) டாக்டர். வாஸ்பரும் (Vosper) ஓடோடியும் வந்து எனக்குப் பரிவுரைகள் பகர்ந்தார்கள். அத்துடனில்லாமல், என் சிரமத்தைத் தங்களுடைய சிரமமாகவே கருதி, ஒருநாள் முழுவதும் அரிசிச் சோறு அளிக்கும் உணவு விடுதி ஏதாவது இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்க முயன்றனர். ஆனால், அவர்களது முயற்சி பலனளிக்காது போகவே பெரிதும் வருந்தினர். எனினும், அம்முயற்சியினை அவர்கள் விடாது

தொடர்ந்தனர். அப்பொழுது அவர்கள் காட்டிய அன்புள்ளத்தையும், எனக்காக அவர்கள் பட்டபாட்டையும் நினைக்க நினைக்க என் உள்ளம் இன்றும் நெக்குருகுகிறது.

அன்று மாலை பேராசிரியர் லுபெட்ஸ்கி என்னைத் தேடிப் புன்னகையுடன் ஓடிவந்தார். எனது சோற்றுப் பிரச்சினைக்கு ஏதோ தீர்வு கண்டுவிட்ட பெருமித உணர்வு அவரது முகத்தில் பிரதிபலித்தது. அகமும் முகமும் மலர வந்த அவர்கள் என்னிடம், "அருமையான அரிசிச் சோறு உங்களுக்குக் கிடைக்கப் போகிறது! வேறெங்குமில்லை, எங்கள் வீட்டிலேயே! புறப்படுங்கள், போவோம்!" என்று உற்சாகமாகக் கூறியவாறே என்னை அழைத்தார்கள். நானும் மனமகிழ்ச்சியோடு அவர்களுடன் சென்றேன். போகும் வழியில், பால்போல் வெண்மையான கலிபோர்னியா அரிசியையும், காய்கறிகளையும், பருப்புவகைகளையும் பேராசிரியர் அவர்களே வாங்கிக்கொண்டு வந்தார்கள். இல்லம் சென்றதும், விரைந்து என்னைச் சமையலறைக்கு அழைத்துச் சென்றார்கள். சமையல் செய்யும் கருவிகளையெல்லாம் காட்டி, அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் விளக்கிக்கூறி என்னை அவ்வறையில் விட்டுவிட்டுப் பேராசிரியர் விரைந்து வெளியே சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் தமது துணைவியாருடன் அவர் திரும்பி வந்தார். "உங்களுக்கு உதவி செய்ய என் மனைவியை அழைத்து வந்திருக்கிறேன்" என்று கூறி இருவரையும் அறிமுகம் செய்து வைத்தார். நானும் அந்த அம்மையாருமாகச் சேர்ந்து ஒருமணி நேரத்தில் ஒரு சிறந்த தமிழ்நாட்டு விருந்தைத் தயாரித்து முடித்தோம். அந்த விருந்தை அவர்களுக்கும் படைத்து நானும் உண்டு மகிழ்ந்தேன். பேராசிரியரும் அவரதுமனைவியாரும் எனது 'நளபாக'த்தை வெகுவாகப் புகழ்ந்தார்கள். முக்கியமாக, அரிசிச் சோற்றில் பாலைப் பெய்து உண்ணுவதைப் பேராசிரியர் பெரிதும் போற்றினார். சுவைத்துச் சுவைத்து உண்டார். இவ்விதம் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை பேராசிரியரின் இல்லம்

சென்று இனிய உணவைப் பெற்று உண்டு மகிழ்ந்தேன். நான் சுத்தச் சைவனாக விளங்கியதைப் பேராசிரியரும் அவரது மனைவியும் போற்றாத நாட்களே இல்லை. இதற்கிடையில், டாக்டர். வாஸ்பர் அவர்களும் நான் நடுப்பகலில் பொறிஇயல் பகுதி நூலகத்தில் உணவு சமைத்துச் சாப்பிடுவதற்குரிய வசதியைச் செய்து தந்தார்கள். அங்கிருந்த மின்சார அடுப்பை ஒருமணி நேரத்திற்குப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்கியதோடு சோற்றை ஆக்குவதற்குரிய காற்றழுத்த ஏனத்தையும் (Pressure Cooker) கரண்டிகளையும் வேறு சில ஏனங்களையும் அவர்களுடைய வீட்டிலிருந்தே கொண்டுவந்து கொடுத்து உதவினார்கள். சில நாட்களில் சாம்பாரின் இனியமணம் அந்த அறை முழுவதும் பரவியபோது, அந்த மணத்தினால் கவரப்பட்ட மாணவ மாணவியர் அங்குவந்து என்னைச் சூழ்ந்து கொண்டு "ஆகா! உங்கள் இந்தியக் கறி எங்களுக்கு மிகவும் பிடிக்கிறது. எவ்வளவு சுவையாக இருக்கிறது!" என்று ஆளுக்கு ஆள் பாராட்டுரை கூறினார்கள். நான் சமைத்த உணவை பல நாட்கள் அவர்களுக்கெல்லாம் பகிர்ந்தளித்து மகிழ்ந்தேன்.

## மாலையும் மகிழ்ச்சியும்!

கடைசி நாளன்று லாஸ் ஏஞ்சல்சில் நடந்த பிரிவு விழாக் கூட்டத்தில் நான் பேசி முடித்ததும், சென்னையில் எனக்கு நண்பர்கள் அளித்த ஜரிகை மாலைகளைப் பேராசிரியர் லுபெட்ஸ்கி, டாக்டர். வாஸ்பர், பேராசியர் பவல் (Powell) ஆகிய மூவருக்கும் அணிவித்தேன். அதுகால் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மாலைகளை அணிந்து கொண்டு அவர்கள் ஆடியும் பாடியும் குதித்தும் மகிழ்ந்தனர். நான் அளித்த பரிசு சிறியதாக இருந்தாலும் அதனை அவர்கள் பெரிதாகப் பாராட்டி மதித்தனர். இது அமெரிக்கரிடம் காணப்படுகின்ற சிறந்த பண்புகளில் ஒன்றாகும்.

கூட்டம் முடிந்ததும் மாலையைக் கழற்றி அம்மூவரும் கைகோர்த்தவாறு கட்டிடத்திற்கு வெளியே வந்து நின்று எல்லா மாணவர்களையும் பேராசிரியர்களையும் அழைத்து, "பாருங்கள், பாருங்கள்! இந்தியாவிலிருந்து எங்களுக்கு வந்திருக்கும் அற்புதமான பரிசைப் பாருங்கள்! எவ்வளவு அழகான பரிசு, பார்த்தீர்களா?" என்று கூறிப் பரவசமடைந்தார்கள். மேலும், அம்மாலையில் கண்ட வேலைப்பாடுகளையும் பெரிதும் பாராட்டியதோடு அதனை எவ்வாறு செய்கிறார்கள் என்பதையும் என்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

அடுத்து பெர்க்கிளே என்னுமிடத்திற்கு வந்து சேர்ந்தேன். இங்கு விளங்குகின்ற கலிபோர்னியா பல்கலைக்கழகம் பழமைச் சிறப்புடையதாகும். இங்கிருக்கின்ற நூலகப் பணிப் பள்ளி அளவில் பெரியது. பேராசிரியர்களனைவரும் கற்றுத் துறைபோய நல்லறிஞர்களேயாவர். இப்பள்ளியின் தலைவராகப் பணிபுரியும் டாக்டர். சுவாங் (*Swank*) என்ற பெரியாரும் இப்பள்ளியில் பணியாற்றும் பேராசிரியை பூஜே (*Fuje*) அவர்களும் என்னிடம் காட்டிய பரிவும் அன்பும் என்றும் என் மனதில் பசுமையாகக் காட்சியளிக்கின்றன. திருமதி. பூஜே அம்மையார் ஒரு சிறந்த ஆசிரியராவார்கள். அவர்களது நெடிதுயர்ந்த உயரம், கம்பீரமான குரல், கண்ணில் காணும் கருணை, பேச்சு வன்மை ஆகியன யாரையும் எளிதில் கவர்ந்துவிடும். அவ்வம்மையார் இங்கிலாந்திலிருந்து அமெக்காவில் குடியேறிய ஆங்கிலப் பெண்மணி ஆவார். ஒரு நாள் அவர்களுடைய வகுப்பிற்குச் சென்று "இந்திய நாட்டில் பொது நூலக வளர்ச்சி" என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினேன். நான் வேகமாக, சரளமாக, தடைபடாது ஆங்கிலம் பேசுவதைக் கண்ட அவர்கள் இடையில் எழுந்திருந்து, "சிறிது வேகத்தைக் குறைத்துக் கொண்டால் நல்லது. என்றால் நன்கு புரிந்துகொள்ள முடியும்" என்று வெளிப்படையாகக் கூறினார்கள். பின்னர் வகுப்பு முடிந்த

தும் என்னிடம் வந்து மலர்ந்த முகத்துடன், "நீங்கள் இங்கிலாந்துக்குச் சென்று படித்தீர்களா?" என்று கேட்டார்கள். அத்துடன் நில்லாது, "அங்கு உள்ளவர்களும் அங்கு சென்று படித்வர்களுந்தான் இவ்வாறு ஆங்கிலத்தில் பேச இயலும்" என்று கூறினார்கள். அவர்களது தாய் நாட்டுப் பற்றையும் தாய் மொழிப் பற்றையும் எண்ணி நான் வியந்தேன். நான் சிரித்துக்கொண்டே, "நாங்களெல்லோரும் இந்தியப் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்றவர்கள் எனினும், ஆங்கிலேயரைவிட ஆங்கில மொழியைப் பேசுவதிலும் எழுதுவதிலும் சிறந்த இந்தியர்கள், சிறப்பாகத் தமிழர்கள் பலர் எங்கள் நாட்டில் இருக்கின்றார்கள். இதற்குக் காரணம், ஆங்கிலேயர் ஆட்சியிலே பல ஆண்டுகள் எங்கள் நாடு இருந்தமையாகும்" என்று கூறினேன். மேலும், "எங்கள் மாநிலத்திலே பேராசிரியர் சீநிவாச சாஸ்திரியார் என்ற ஒரு தலை சிறந்த பெரியார் இருந்தார். அவர் இங்கிலாந்திற்கு அரசாங்க அழைப்பின் பேரில் சென்றிருந்தபோது அவரது சொற்பொழிவுகளை ஆங்கிலேய மக்கள்—அதாவது உங்கள் நாட்டு மக்கள்—கட்டணம் செலுத்திச் சீட்டுப் பெற்றுச் சென்று கேட்டு மகிழ்ந்தனர்" என்றும் நான் தெரிவித்தேன். இதைக் கேட்ட அவ்வம்மையார் மூன்று தடவை, "உண்மையாகவா? உண்மையாகவா? உண்மையாகவா?" (*Really! Really!! Really!!!*) என்று வியப்புடன் கேட்டார்கள். பின்னர் அவ்வம்மையார் ஐந்து நாட்கள் தனது வகுப்புகளை எனக்குத் தந்து நூற்பட்டியியல் பற்றிச் சொற்பொழிவாற்றச் செய்தார்கள். என்னைப் பாராட்டிப் பல விருந்துகள் நடத்தினார்கள். தான் எழுதிய நூற்களையெல்லாம் அன்புடன் தந்தார்கள். நூற்பட்டியியல் வளர்ச்சிபற்றி இருவரும் பல நாட்கள் உரையாடினோம். அதன் வளர்ச்சிக்குரிய சில திட்டங்களையும் தீட்டினோம். நான் அங்கிருந்து புறப்பட்ட போது அவர்கள் மிகவும் வருந்தி "மீண்டும் எங்கள் நாட்டுக்கு வரவேண்டும்" என்று விரும்பி வேண்டினார்கள். அவர்கள்

எழுதிய கடிதம் ஒன்றில், "உங்கள் நாடு, சிறந்த அறிஞர்களைப் பெற்றிருக்கிறது. நீங்கள் எங்களோடு தங்கியிருந்த பொழுது சில நல்ல கருத்துக்களை எங்களுக்கு அளித்து உதவினீர்கள். அக்கருத்துக்களை எங்கள் மாணவர்கள் தங்களுடைய மனதிலே நன்றாக இருத்தி வைத்திருக்கிறார்கள். அவைகளைப் பற்றிச் சில கட்டுரைகளும் எழுதச் சொல்லியிருக்கிறேன். சுருங்கக் கூறின், எங்களிடமிருந்து நீங்கள் கற்றுக் கொண்டதைவிட, உங்களிடமிருந்து நாங்கள் பெற்றுக்கொண்டதே அதிகம்" என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

பேராசிரியர் டாக்டர். சுவாங்க் அவர்களும் என்னை நல்ல முறையில் வரவேற்றுப் பேராசிரியர்களனைவரிடமும் அறிமுகப்படுத்தி, நான் சிரமம் ஏதுமின்றி தங்குதற் பொருட்டு எல்லா வசதிகளையும் தானே நேரில் கவனித்துச் செய்து உதவினார்கள். மேலும், பல சொற்பொழிவுகளாற்றுவதற்கும் அவர்கள் வசதி செய்து தந்தார்கள். பேராசிரியர் சுவாங்கும் அவரது மனைவியாரும் நம் நாட்டிற்கு வந்து சென்றவர்களாவர். எனவே, நம்மைப் பற்றி அவர்கள் நன்கறிந்துள்ளார்கள். பேராசிரியர் சுவாங்க் அவர்களுக்கு நமது நாட்டு இசையின்மீது தணியாத காதல் உண்டு. சில இரவுகள் அவர்கள் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று விருந்தூட்டி மகிழ்ந்ததோடு, இசைப் பயிற்சியில்லாத என்னைத் தமிழ்ப் பாடல்கள் பலவற்றைப் பாடச் செய்து, தமிழிசையைப் போற்றிப் புகழ்ந்தார்கள். நான் பாடிய பாடல்கள் அனைத்தையும் டேப் ரெக்கார்டரில் பதிவு செய்து வீட்டில் வைத்துக் கொண்டார்கள். தமிழ்நாட்டு வில்லிசை அவர்களுடைய மனதை மிகவும் கவர்ந்தது. பொதுவாக அமெரிக்க மக்களனைவரும் நாடோடிப் பாடல்களைப் பெரிதும் விரும்புகின்றனர். நான் சென்றவிடமெல்லாம் என்னை நாடோடிப் பாடல்களைப் பாடச் சொல்லித் திரும்பத் திரும்பக் கேட்டு மகிழ்ந்தனர்.

## ஊறுகாய்க்கு ஓடினேன்!

நான் பெர்க்கிளேயில் இருந்த பொழுது சில இந்திய நண்பர்களைக் காணுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது. அவர்கள் என்னை அவர்களுடைய இல்லங்களுக்கு அழைத்துச் சென்று அளவளாவி விருந்தும் படைத்தனர். ஒரு நாள் ஒரு நண்பர் எனக்குப் பிடித்தமான மாங்காய், எலுமிச்சங்காய் ஊறுகாய்களை உணவோடு படைத்தார். அதைக் கண்டதும் சொல்ல முடியாத பேரின்பத்தைப் பெற்றேன். காரத்தையே பல நாட்கள் கண்டறியாத நாக்கு அதனைச் சுவைக்கத் துடித்தது. நண்பரிடம் "எவ்வாறு ஊறுகாய் கிடைத்தது?" எனக்கேட்டேன். அவர் ஒரு தெருவின் பெயரைக்கூறி, "அங்கு ஒரு கடை இருக்கின்றது. அங்கு பெரும்பாலும் இந்தியர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அனைத்தும் கிடைக்கின்றன. சிறப்பாகப் பரோடா மாங்காய் ஊறுகாயும் ஏனைய ஊறுகாய் வகைகளும் அங்கு கிடைக்கின்றன" என்று கூறினார். நான் நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டு ஒரே ஓட்டமாக அந்த வீதிக்குச் சென்று, கடையைக் கண்டுபிடித்து, இரண்டு சிறிய ஊறுகாய்ப் புட்டிகளை வாங்கி வந்தேன். இரண்டு வாரங்களுக்கு அவற்றை வைத்துக் கொள்ள வேண்டுமென எண்ணினேன். ஆனால், அன்றைக்கு வந்ததும் இரண்டு புட்டி ஊறுகாய்களையும் ஒரே மூச்சில் காலி செய்துவிட்டு மூன்று குவளை தண்ணீர் பருகினேன். மனதில் பெரிய நிம்மதி தோன்றியது. தமிழ் நாட்டில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

## சொதியோ சொதி!

பெர்க்கலேயிலும் சான்பிரான்சிஸ்கோவிலும் தங்கியிருந்த பொழுது, அங்கு மிகுதியாகத் தேங்காய்ப் பால் மலிவாகக் கிடைப்பதைக் கண்டேன். உடனே, தமிழ் நாட்டுச் சுவையான கறி வகைகளில் ஒன்றான சொதியினைச் செய்து நுகர வேண்டுமென்ற ஆவல் எழுந்தது.

தூய்மையான தேங்காய்ப் பாலை டின்களில் அடைத்து எல்லாக் கடைகளிலும் விற்கின்றனர். எனவே சொதி சமைப்பது எளிதாக இருந்தது. நம் ஊரைப்போல் தேங்காயைத் துருவி அரைத்துப் பாலெடுக்க வேண்டிய சிரமம் அங்கு இல்லை. உருளைக் கிழங்கு, வெங்காயம், பச்சை மிளகாய், பீன்ஸ், இஞ்சி, "*Egg Plant*" என்று அமெரிக்கரால் அழைக்கப்படும் கத்திரிக்காய் ஆகியவற்றை அரிந்து, ஒன்றுக்கு மூன்று மடங்கு தண்ணீர் கலந்த தேங்காய்ப் பாலில் போட்டுப் பின்னர் எலுமிச்சம்பழச்சாற்றையும், உரிய அளவு உப்பையும் கலந்து 30 நிமிடங்கள் கொதிக்க வைத்ததும் நறுமணங் கமழும் சுவைமிகு சொதி கிடைக்கப் பெற்றது. அதை வெண்ணெயில் தாளிதம் செய்ய அதன் மணம் மேலும் மிகுந்தது. சொதியின் சுவையினை நான் நுகர்ந்ததோடு, நண்பர்களையும் அமெரிக்கப் பேராசிரியர்களையும் அழைத்து அவர்களையும் அதைச் சுவைக்கச் செய்தேன். இவ்வாறே சான்பிரான்சிஸ்கோவிலிருந்தபொழுது அங்கு கிடைத்த கனி வகைகள், தேன், பால் ஆகியவற்றைக் கலந்து பஞ்சாமிர்தம் தயாரித்து அமெரிக்க நண்பர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தேன். இவற்றை உண்டு சுவைத்த அமெரிக்க நண்பர்கள், "இவ்வளவு சுவையுடன் மரக்கறி உணவு எங்களுக்குக் கிடைக்குமானால், நாங்கள் இறைச்சி உணவை ஏறெடுத்தும் பாரோம். நீங்கள் உண்கின்ற சைவ உணவும், அதனைத் தயாரிக்கும் முறையும் அதன் சுவையும் நீங்கள் சிறந்த நாகரிகமுடையவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன" என்று வாயாரப் பாராட்டினர். சில அமெரிக்கப் பெண்கள் என்னிடமிருந்து சொதி செய்யும் முறையினைக் கற்றுக் கொண்டனர்.

### பரந்த உள்ளம்!

நான் பெர்க்கலேயில் தங்கியிருக்கையில், அங்கு நூலகவியல் பட்டப் படிப்பு மாணவி ஒருவரைச் சந்திக்க நேர்ந்

தது. அவர்களது பெயர் திருமதி. ஆர்த்ரா (*Ardra*) ஆகும். அவர்கள் சிறந்த குடும்ப வாழ்க்கையை அமைதியாக இனிமை பொங்க நடத்த வேண்டும் என்ற பெருவிருப் புடையவர்கள். அவர்களது கணவரான பொறியியல் வல்லுநர் திரு ஜெர்ரி பிட்ஜெரால்டு (*Jerry Fitzerald*) அவர்களும் அதே நோக்கமுடையவர்கள். இருவரும் சிறந்த உழைப்பாளிகள். பிறரை இனிமையாக வரவேற்று, அவர் களுக்கு உதவி புரிவதில் பேரின்பம் காண்பவர்கள். அவர் களுக்கு சான்பிரான்சிஸ்கோவிலும் ஓர் இல்லம் (*Apartment*) இருந்தது. நான் சான்பிரான்சிஸ்கோவில் 10 நாட் கள் தங்கவிருக்கின்றேன் என்பதை அறிந்ததும் அவர்க ளாகவே தங்கள் இல்லத்தில் நான் தங்கலாமென்று கூறி, நான் சான்பிரான்சிஸ்கோவிற்குப் புறப்பட்ட நாளன்று அவர்களிருவரும் வந்து மலர்ந்த முகத்துடன் வரவேற்புக் கூறி, தங்களது ஊர்தியிலேயே என்னைச்சான்பிரான்சிஸ்கோ விற்கு அழைத்துச் சென்று, அவர்களுடைய இல்லக் கத வினைத் திறந்து இடமளித்தனர். ஒருநாள் முழுவதும் என்னுடனிருந்து வீட்டு அறைகளையும் சாமான்களையும் பிற கருவிகளையும் காட்டி அவற்றைப் பயன்படுத்துவது பற்றியும் விளக்கிச் சென்றனர். விலை உயர்ந்த பொருள் கள் பல வீட்டிலிருந்தும் அவர்கள் என்னை முழுக்க முழுக்க நம்பி இல்லத்தை எனது பொறுப்பிலேயே விட்டுச் சென்றமை இன்றும் என் மனதில் பசுமையாக விளங்கு கின்றது. அவர்களது பேருள்ளத்தை, பிறருக்கு உதவ வேண்டுமென்ற பேரார்வத்தை என் சொல்லி வாழ்த்து வது?

நான் சான்பிரான்சிஸ்கோவை விட்டு நீங்கிய நாளன்று கூட அவர்கள் திரும்பி வந்து எல்லாம் சரியாக இருக்கின் றனவா என்றுகூடப் பார்க்கவில்லை. வீட்டுச் சாவியை முகப்பிலிருந்த தபால் பெட்டியில் போடச்சொல்லி ஒரு கடிதம் மட்டுமே எனக்கு எழுதி இருந்தார்கள். பிறரிடம்

அவர்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அளவு அளவிடற்கரியதாகும்.

### தலை தப்பியது!

சிகாகோவிலிருக்கின்ற பொழுது ஒருநாள் மாலை நெய்யாவி ஊர்தி விபத்துக்காளாக விருந்த ஓர் அமெரிக்க மூதாட்டியைக் காப்பற்ற நான் முயல்கையில் விபத்துக்கு ஆளாக நேர்ந்தது. ஆனால் இறைவனருளால் பலத்த அடியோடு உயிர் தப்பினேன். கையில் அடிபட்ட காரணத்தால், கை முழுவதும் வீங்கவே, அமெரிக்க நூலகக் கழக வெளி நாட்டுத்தொடர்புத் தலைமை அதிகாரியாகப் பணியாற்றும் டாக்டர். ஆஷம் (*Asheim*) அவர்கள் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டிருந்தபோதிலும் உடனடியாக என்னை மருத்துவமனையில் சேர்ப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். அத்துடனில்லாது, விருந்து முடிந்ததும் நள்ளிரவு என்றுகூடப் பாராது மருத்துவ மனைக்கு வந்து ஆறுதல் கூறி இரவு முழுவதும் என்னோடு இருந்தார்கள். அங்கு மருத்துவர்கள் நோயாளிகளைக் கவனிக்கின்ற முறை பாராட்டுதற்குரியதாகும். நான் சேர்க்கப்பட்ட சில நிமிடங்களிலேயே ஏறத்தாழ 4 மருத்துவர்கள் தனித்தனியே வந்து பார்வையிட்டுப் பின்னர் அவர்களுக்குள் கலந்தாலோசித்துச் சிகிச்சையைத் தொடங்கினார்கள். நான்கு முறை ஒரே இடத்தை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தனர். நான் 10 டாலர் கொடுத்து மருத்துவ இன்சூரன்ஸ் செய்திருந்ததால், எல்லாச் சிகிச்சைகளும் இலவசமாகவே நடைபெற்றன. இச்சிறுவிபத்தின் காரணமாகக் கையில் கட்டுப்போட்டிருந்த காரணத்தால், உடை உடுப்பதற்கும், உணவு உண்பதற்கும் சிலவேளைகளில் சிரமப்பட்டதுண்டு. அச்சமயங்களில் ஜப்பான் நண்பர் யூச்சி மொனக்காவும், திருமதி. ராபர்ட்சனும், திரு. ஸ்ரீவத்சவாவும் உடனிருந்து உதவிகள் பல புரிந்தனர். நான் முழு நலமடையும்வரை என் நலனில் டாக்டர். ஆஷம்

அவர்கள் மிகுந்த அக்கறை காட்டினார்கள். அது நோய் வாய்ப்பட்டிருந்த எனக்குப் பெரும் ஆறுதலையும் உரனையும் தந்தது.

## விருந்தோம்பல்

பொதுவாக, அமெரிக்க மக்கள் முன்னர்க் கூறியது போன்று பிறரோடு அன்போடு பழகுகிறார்கள். பிறர் துன்பத்தைத் துடைக்கத் தங்களாலியன்றதை மனமுவந்து செய்கின்றார்கள். தங்களைப் பற்றி பிறர் நன்கு அறிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறார்கள். அவ்வாறே பிறரைப் பற்றியும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். இதன் காரணமாகக் குறிப்பிட்ட நாளிலே விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்து, பிறரை அன்போடு வரவழைத்து விருந்து படைத்து, இரவு வெகுநேரம் பேசி மகிழ்கிறார்கள். நான் அங்கிருந்த 120 நாட்களில் ஏறத்தாழ 30 இல்லங்களுக்குச் சென்று விருந்துண்டு மகிழ்ந்தேன். அவர்களது வாழ்க்கையைப்பற்றி ஓரளவு நன்றாக அறிந்து கொள்வதற்குப் பெரும் வாய்ப்பாக ஒவ்வொரு விருந்தும் அமைந்தது.

பொன்விளையும் பூமியாக இருந்தாலும் கணவனும் மனைவியும் அடுத்த ஆண்டில் ஏற்படும் செலவு பற்றி முந்திய ஆண்டே சிந்தித்து அதற்கேற்ற வகையில் தங்களுடைய பொருளாதார நிலையைச் சரிசெய்து கொள்கிறார்கள். இல்லையெனில் அடுத்த ஆண்டுக்குரிய வருமானத்தை முன்னரே அறிந்து அதற்கேற்ற வகையில் தங்களின் செலவுத் திட்டத்தை அமைத்துக்கொள்கின்றனர். சில அமெரிக்கப் பெண்கள் நிறையப் படித்திருந்தும் கூட வேலைக்குச் செல்லாமல் குடும்பப் பணியிலேயே முழுக்க முழுக்க ஈடுபட்டுள்ளனர். அதனைப் பெருமையாகவும் கருதுகின்றனர். வேறு சில பெண்கள் சைவ உணவையே உண்டு வருகின்றனர். அதனைப் பெருமையோடு என்னிடம் கூறவும் செய்தனர்.

## அருகில் இருக்கிறார்!

ஒரு வீட்டுக்குச் சென்றிருந்தபொழுது, "முதியோரை இளையோர்தான் எங்கள் நாட்டில் பாதுகாக்க வேண்டும். உங்கள் நாட்டில் ஏன் அவ்வாறில்லை?" என்று அவ்வில்லத் தலைவரிடம் வினவினேன் அவர் சிரித்துக்கொண்டே, "அவர்களை எங்கள் அரசாங்கம் கவனித்துக் கொள்கிறது" என்று கூறிவிட்டு, "எங்களது பெற்றோர்கள் எங்களுடனேயே இருப்பதாக நாங்கள் நினைக்கின்றோம்" என்று கூறி, தொலைபேசி மூலம் 2000 மைல்களுக்கு அப்பாலிருந்த தனது தந்தையை ஒரு நிமிட நேரத்தில் அழைத்துப் பேசிக் காட்டிவிட்டு "தந்தை அருகில்தான் இருக்கின்றார்!" என்று கூறிச் சிரித்தார். மேலும், "எங்கள் பெற்றோர்களை நாங்கள் பார்க்க விரும்பினால் சில மணி நேரத்தில் விமானத்தில் பறந்து சென்று பார்த்துவிட்டு வந்து விடுவோம்" என்றும் கூறினார்.

அமெரிக்கர்களுக்கு இடம் விட்டு இடம் பெயரும் தன்மை இயற்கையாகவே அமைந்துள்ளது. வாழ்க்கையை எந்த இடத்தில் நல்ல முறையில் அமைத்துக்கொள்ள முடியுமோ, அதாவது எங்கு நிறைந்த செல்வத்தை ஈட்ட முடியுமோ அங்கு சென்று வாழ்க்கையை நடத்துகின்றனர். அவ்வாறு அவர்கள் செல்லும்பொழுது தூரத்தைப் பற்றி எண்ணுவதில்லை. உறவினர்களைப் பிரிந்து செல்கிறோமே என்று வருந்துவதுமில்லை. பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் தங்களை விட்டுப் பிரிந்து செல்கிறார்களே என்று எண்ணிக் கொஞ்சங்கூட வருந்துவதில்லை. மாறாக, வயதுவந்த குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே சென்று, தாங்களாகவே வாழ்க்கைக்கு வழி வகுத்துக்கொள்ள வேண்டுமென்றே விரும்புகிறார்கள். அதனை ஊக்குவிக்கவும் செய்கின்றனர். எனவே, அமெரிக்க இளஞ்சந்ததியினரில் பெரும்பாலோர் 16 வயதை எட்டியதும் வீட்டை விட்டு வெளியே சென்று ஏதாவது ஒரு அலுவலில் அமர்ந்துகொண்டு தங்கள் படிப்

யையும் கவனித்துக் கொள்கின்றனர். இது அவர்களிடம் காணப்படும் மிகச் சிறந்த பண்பாகும்.

ஆனல், அவர்கள் எங்கிருந்தாலும், ஆண்டுக்கு ஒரு முறை கட்டாயமாகப் பெற்றோர்களைச் சென்று பார்த்து வரவேண்டும் என்பதைக் கடைப்பிடித்து வருகின்றனர். கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது, பெற்றோர்களிருக்குமிடத்துக்குப் புதல்வர்கள் தங்கள் குடும்பத்தோடு சென்று சிலநாட்கள் தங்கி அவர்களது ஆசியைப் பெற்றுத் திரும்புகின்றனர்.

### தலைப்பாகை எங்கே?

சில முக்கிய நகரங்களில் வாழ்கின்ற குறிப்பிட்ட சிலர் தான் நமது நாட்டைப்பற்றி நன்கறிந்திருக்கின்றார்கள் எனலாம். பலர் என்னைக் கேட்ட கேள்விகள் விந்தையாக இருந்தன.

"உங்கள் நாட்டில் மகாராஜக்கள்தானே இருக்கிறார்களாம்? அவர்களுக்குப் பெரிய தலைப்பாகை உண்டே, நீங்கள் ஏன் அணியவில்லை?"

"உங்கள் நாட்டில் வீதியில் புலி வருமாமே? உங்களுக்குப் பயமில்லையா?"

"குடிசை என்பது எப்படியிருக்கும்? உங்கள் நாட்டு மக்களின் பெரும்பாலோர் அதில்தானே வசிக்கிறார்களாம்!"

"வீதியில் பாம்புகள் எவ்வாறு நடமாடுகின்றன? பாம்பு பிடிப்பவர்களது உருவப் படம் எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது! உங்களுக்குப் பாம்பு பிடிக்கத் தெரியுமா?

"உங்கள் நாட்டில் நிறைய யானைகள் இருக்கக் காரணமென்ன?"

இத்தகைய கேள்விகளை, மாணவ, மாணவியரும் பொதுமக்களில் ஒரு சிலரும் கேட்டனர். நமது நாட்டின்

வரலாற்றுச் சிறப்பினையும் பண்புநலன்களையும் பற்றி அமெரிக்க மக்கள் போதிய அளவு அறிந்திருக்கவில்லை என்பது வருந்துதற்குரியதே. எனவே நமது அரசினரும் அங்கு செல்கின்ற நம் நாட்டவரும் இதற்கு வேண்டிய வழிவகைகளைக் கடைப்பிடித்து நம்மைப் பற்றி மேலும் அறியச் செய்தல் வேண்டும். மேலும் அமெரிக்க நாட்டுக்கு அழைப்பின்பேரில் செல்கின்றவர்கள், போவதற்கு முன் நம் நாட்டைப்பற்றி நன்கு அறிந்து கொண்டு சென்றால் அது நமக்கும் நம் நாட்டிற்கும் நல்ல பயனை அளிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனவே, அழைப்பின்பேரிலும், பணியின் பொருட்டும், கல்வி பயிலவும் வெளிநாடு செல்கின்றவர்களுக்கு மத்திய அரசினரே ஒரு வாரக்காலம் பயிற்சியளித்து, நமது நாட்டின் வரலாற்றுச் சிறப்பை, சிறந்த பண்புகளை, நாகரிகம், இலக்கிய வளம், அறிவு வளர்ச்சி முதலியவற்றை அவர்கள் நன்கு அறிந்து செல்வதற்குரிய நிலையை ஏற்படுத்த வேண்டும். இதனால் நமக்கு நன்மை உண்டு; நாம் செல்கின்ற நாட்டுக்கும் நன்மை உண்டு. அதாவது இருவரும் முழுப்பயனையும் துய்க்க கூடியும்.

# நூலகவியல்

## சொற்பட்டி

### ஆங்கிலம் - தமிழ்

## நூலகவியற் சொற்பட்டி

Accessioning - நூல் வரிசைப் பதிவு செய்தல்
Accession Number – நூல் வரிசைப் பதிவெண்
Accession Register – நூலடங்கல் ( நூல் வரிசைப் பதிவேடு)
Adult Section – முதியோர் பகுதி
American Libraries – அமெரிக்க நூலகங்கள்
American Library Association - அமெரிக்க நூலகக் கழகம்
Archives Department - பொதுப் பத்திரங்கள் காப்புக்கூடம்
Assistant Director of Libraries (or Library Service) - உதவி நூலக இயக்குநர்
Audio-visual Aids - செவி-கட்புலச் சாதனங்கள்
Automation - தானியக்கம்
Bibliography - நூல் விவரத் தொகுதி
Bill Register (or Invoice Book) விலைச் சீட்டு ஏடு
Binding - நூல் வடிவாக்கம்
B. Lib. Sc. - நூலகவியல் இளங்கலைப் பட்டம்
Book Card – நூல் அட்டை (அல்லது சீட்டு)
Book Issue Method (or Charging System) – நூல் வழங்கும் முறை
Book List - நூற்பட்டி
Book Mobile (or Mobile Library) - நூல் ஊர்தி (ஊர்தி நூலகம், நடமாடும் நூலகம், இயங்கு நூலகம்)
Book Nnmber – நூல் எண்
Book Ordering - நூல் வாங்கல்
Book Pocket - நூல் பை

Book Selection – நூல் தேர்வு
Borrower's Ticket - நூலக உறுப்பினர்ச் சீட்டு
Branch Library - கிளை நூலகம்
Call Number - வகைப்படுத்திய எண்
Call Slip - கோரிக்கைச் சீட்டு
Catalouge Cabinet - நூலக நூற்பட்டி இழுப்பறைப் பெட்டி
Catalouge Cards - நூலக நூற்பட்டி அட்டைகள்
Cataloguer – நூலக நூற்பட்டியாளர் (நூலக நூற்பட்டி அலுவலர்)
Catalogue Room-நூலக நூற்பட்டி அறை (அல்லது பகுதி)
Cataloguing Section - நூலக நூற்பட்டிப் பகுதி
Childrens's Library - குழந்தை நூலகம்
Children's Library Specialist – குழந்தை நூலக நிபுணர்
Children's Literature - குழந்தை இலக்கியம்
Children's Literature Workshop - குழந்தை இலக்கியப் பண்ணை
Children's Section - குழந்தைகள் பகுதி
Circulation Section - நூல் பரிமாற்றப் பகுதி
City Library - நகர நூலகம்
City Library System - நகர நூலக அமைப்பு
Classify - நூல்களை வகைப்படுத்து
Class Number – பொருள் எண்
Class of Positions - பணிநிலை வகுப்பு
Collation - நூல்களைச் சரிபார்த்தல்
Commercial Library - வணிக நூலகம்
Commissioners for Libraries - நூலக ஆணையாளர்கள்
College Library – கல்லூரி நூலகம்
Colon Classification - கோலன் வகுப்பீடு முறை
Content Analysis - பொருளடக்க ஆய்வு
Coordinator - ஒருங்கிணைப்பு அதிகாரி (அல்லது அலுவலர்)
Cost Accounting - அடக்கக் கணிப்பு

Counter Section - நூல் வழங்கும் பகுதி
County Library - மாவட்ட நூலகம்
County Library System - மாவட்ட நூலக அமைப்பு முறை
Date Slip – நாள் சீட்டு
Delivery Station – வழங்கு நூலகம்
Departmental Libraries - (பல்) துறை நூலகங்கள்
Department of Library Science – நூலகவியல் துறை
Deputy Director of Libraries (or Library Service) - துணை நூலக இயக்குநர்
Director of Libraries (or Library Service) - நூலக இயக்குநர்
Director of Public Libraries – பொது நூலக இயக்குநர்
Divisional Pattern of organisation - பெரும் பொருட் பிரிவு அமைப்பு முறை
Documentalist (or Documentation Officer) - பருவ வெளியீட்டுக் கட்டுரை விவரத் தொகுப்பாளர் (அல்லது அலுவலர்)
Documentation – பருவ வெளியீட்டுக் கட்டுரை விவரத் தொகுப்பியல்
Document List (or Document Bibliography) - பருவ வெளியீட்டுக் கட்டுரை விவரத் தொகுதி
Donation Register – நன்கொடைக் குறிப்பேடு
District Central Library - மாவட்டத் தலைமை (அல்லது மத்திய) நூலகம்
District Library – மாவட்ட நூலகம்
Elementary School Library - தொடக்கப் பள்ளி நூலகம்
Extension Activities – நூலக விரிவுப் பணிகள்
Extension Department - நூலக விரிவுப் பணித்துறை
Extension Service – நூலக விரிவுப் பணி
Film Box – திரைப்படப் பெட்டி
Free Public LIbrary -இலவசப் பொது நூலகம்
Gate Register – நுழைவுப் பதிவேடு

General Reading Room – பொதுப் படிப்பறை
Head of the Department of Library Science – நூலகவியல் துறைத் தலைவர்
Historical Library – வரலாற்று நூலகம்
Indian National Bibliography – இந்திய தேசிய நூல் விவரத் தொகுதி
Information Service – செய்தி வழங்கும் பணி
Information Storage Computer – செய்தி சேகரிப்புக் கருவி
In Service Training – உள்சேவை
Invoice – விலைச் சீட்டு
Issue Register – நூல் வழங்கும் ஏடு
Job Analysis – பணிப் பகுப்பு
Joint Director of Libraries (or Library Service) – இணை நூலக இயக்குநர்
Land of Libraries – நூலக நாடு
Law Library – சட்ட நூலகம்
Lecturer in Library Science – நூகவியல் விரிவுரையாளர்
Librarian – நூலகர் (நூலகத் தலைவர்)
Library – நூலகம்
Library Act – நூலகச் சட்டம்
Library Administration – நூலக ஆட்சி இயல்
Library Administrative Records – நூலக ஆட்சி ஏடுகள்
Library Annual Report – நூலக ஆண்டறிக்கை
Library Bill – நூலக மசோதா
Library Board of Trustees – நூலகப் பொறுப்பாளர் குழு
Library Budget – நூலக வரவு செலவுத் திட்டம்
Library Bulding – நூலகக் கட்டிடம்
Library Catalogue – நூலக நூற்பட்டி
Library Cataloguing – நூலக நூற்பட்டி இயல்
Library Cess – நூலக வரி
Library Classification – (நூல்களைப் பொருள் வாரியாக) வகைப்படுத்தும் இயல்

Library Committee – நூலகக் குழு
Library Education - நூலகவியற்கல்வி
Library Endowment -- நூலக நிதி வைப்பு
Library Funds – நூலக நிதி
Library Gift – நூலக நன்கொடை
Library of Congress – காங்கிரஸ் நூலகம்
Library Office – நூலக அலுவலகம்
Library Officer – நூலக அதிகாரி (அல்லது அலுவலர்)
Library Organisation – நூலக அமைப்பியல்
Library Publicity – நூலக விளம்பரம்
Library Publicity Methods – நூலக விளம்பர முறைகள்
Library Profession - நூலகத்துறைத் தொழில்
Library Professional Assistants -- நூலகத்துறைத் தொழில் உதவியாளர்கள் (அல்லது பயிற்சி பெற்றோர்)
Library Rules - நூலக விதிகள்
Library Scientist - நூலகவியல் அறிஞர்
Library Service - நூலகப் பணி
Library Service Act – நூலகப் பணிச் சட்டம்
Library Services Bill – நூலகப் பணி மசோதா
Library Standards - நூலகத் தரங்கள்
Library Statistics - நூலகப் புள்ளிவிவரம்
Library System - நூலக அமைப்பு
Library Trust - நூலக நிதி நிறுவனம்
Local Library Authority for Madras City – சென்னை நகர நூலக ஆணைக் குழு
Local Library Authority for District - மாவட்ட நூலக ஆணைக் குழு
Long Range Reference Service - தொடர் நிலை (அல்லது நீண்டகால) ஆய்வு உதவுப் பணி
Madras Public Libraries Act – சென்னை மாநிலப் பொது நூலகச் சட்டம்
Main Library - தலைமை நூலகம்

Main Reading Room - தலைமைப் (அல்லது முக்கிய) படிப்பறை
Mending - நூல்களைப் பழுது பார்த்தல்
Metropolitan Library - மாநகர் நூலகம்
Metropolitan Library System – மாநகர் நூலக அமைப்பு
Microfilms - நுண் சுருள்கள்
Microprints - நுண் அச்சுக்கள்
M.Lib.Sc. - நூலகவியல் முதுகலைப் பட்டம்
Mu!ti-area Group Librarian Programme - பலவட்டார நூலகர் குழு நிகழ்ச்சி
Municipal Library - நகராட்சி நூலகம்
National Bibliography – தேசிய நூல்விவரத் தொகுதி
National Library - தேசிய (அல்லது) நாட்டு நூலகம்
National Library of Medecine - தேசிய மருத்துவ நூலகம்
N.tional Library Week - தேசிய நூலக வாரம்
National Union Catalogue – தேசிய ஒன்றிப்பு நூலக நூற்பட்டி
Newspaper Room (or Section) - நாளிதழ் அறை (அல்லது பகுதி)
New York Public Library - நியுயார்க் பொது நூலகம்
One Women Library – ஒரு பெண் நூலகம்
Open Access System - திறந்த நூலக அமைப்பு முறை (விரும்பிய வண்ணம் படிக்கும் முறை)
Open Shelves - திறந்த நூல் அலமாரிகள்
Panchayat Library - ஒன்றிப்பு நூலகம்
Periodical Room (or Section) - பருவ வெளியீட்டு அறை (அல்லது பகுதி)
Periodicals – பருவ வெளியீடுகள்
Periodical Card – பருவ வெளியீட்டு அட்டை
Preparation of Books - நூல்களைப் பயன்பெற ஆக்குதல்
Process Recording – வழிமுறைகளைப் பதிவு செய்தல்
Professional Organization – நூலகத் தொழில் நிறுவனம்

Professor of Library Science - நூலகவியற் பேராசிரியர்
Public Libraries Commission - பொது நூலக விசாரணைக் குழு
Public Library - பொது நூலகம்
Public Library Service - பொது நூலகப் பணி
Public Relations Department - பொது உறவுத் துறை
Public Relations Work - பொது உறவுப் பணி
Reader in Library Science - நூலகவியல் ஆய்வுத் துணைப் பேராசிரியர்
Reading Classes - வாசிப்பு வகுப்புக்கள்
Reading Room - படிப்பறை
Ready Refernce Service - உடன் (அல்லது குறுகிய கால) ஆய்வு உதவுப் பணி
Reference Book - ஆய்வு உதவு நூல்
Reference Department - ஆய்வு உதவுத் துறை
Reference Librarian - ஆய்வு உதவு நூலகர்
Reference Library - ஆய்வு உதவு நூலகம்
Reference Section - ஆய்வு உதவுப் பகுதி
Reference Service - ஆய்வு உதவுப் பணி
Regional Library - வட்டார நூலகம்
Regional Library System - வட்டார நூலக அமைப்பு
Routine Operations - அன்றாட (அல்லது நடைமுறை) அலுவல்கள்
Rural Library - கிராமிய நூலகம்
Rural Library Service - கிராமிய நூலகப் பணி
Rural Library System - கிராமிய நூலக அமைப்பு
Serial - தொடர்கள்
School Library - பள்ளி நூலகம்
Shelf List - நூல் அலமாரி நூற்பட்டி
Specialisation - சிறப்புப் பயிற்சி (அல்லது ஆய்வு)
Special Colletions - சிறப்பு நூற் திரட்டுகள்
Special Librarian - சிறப்பு நூலகர்

Special Library - சிறப்பு நூலகம்
Special Officer for Libraries - சிறப்பு (அல்லது தனி) நூலக அதிகாரி
Special Union Catalogue - சிறப்பு ஒன்றிப்பு நூலக நூற்பட்டி
Stack Room - நூலகக் கருவூலம்
State Bibliography - நூல் விவரத் தொகுதி
State Central Library - மாநிலத் தலைமை நூலகம்
State Library Service - மாநில நூலகப்பணி
State Librarian - மாநில நூலகர்
State Library - மாநில நூலகம்
State Library System - மாநில நூலக அமைப்பு
State Trav'ling Library - மாநில நூலக அதிகாரிகள்
Stock Verification - நூல் கணக்கெடுப்பு
Subject Bibliography - பொருள் வாரி நூல் விவரத்தொகுதி
Subscription Library - சந்தா நூலகம்
Suggestion Register - கருத்து ஏடு
Tax Supported Library - வரி வழி நூலகம்
Technical Processes - தொழில் நுட்ப முறைகள்
Time and Motion study - நேர-இயக்க ஆய்வு
Title Page - தலைப்புப் பக்கம்
Travelling Library Commission - மாநில நூலக விசாரணைக் குழுவினர்
Union Catalogue - ஒன்றிப்பு நூலக நூற்பட்டி
University Library - பல்கலைக்கழக நூலகம்